# தகராறு

## கடந்து சென்றிடும் வழிவகையும் மாற்றியமைத்திடும் நெறிமுறையும்




பேராசிரியர் **யொஹான் கால்டுங்**

முனைவர் **சுப. உதயகுமாரன்**



விகடன் பிரசுரம்

# தகராறு

கடந்து சென்றிடும் வழிவகையும்
மாற்றியமைத்திடும் நெறிமுறையும்

மூலம்:

**பேராசிரியர் யொஹான் கால்டுங் (Johan Galtung)**

Transcend and Transform: An Introduction to Conflict Work
(London: Pluto Press, 2004)

மொழிமாற்றம், அறிமுகவுரை, திருக்குறள் கட்டுரை:

**முனைவர் சுப. உதயகுமாரன்**

விகடன்
பிரசுரம்

Title: THAGARARU
© S.P.UDAYAKUMARAN

ISBN: 978-81-8476-528-1

விகடன் பிரசுரம்: 762

நூல் தலைப்பு:
தகராறு

ஆங்கிலம்:
© யொஹான் கால்டுங்

தமிழாக்கம், அறிமுக உரை,
திருக்குறள் கட்டுரை:
© சுப.உதயகுமாரன்

கருத்துப் படங்கள்:
வெங்கடேஷ் பாபு

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2013

விலை : ₹ 85

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044&28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044&42634283 / 84
e&mail: books@vikatan.com

# பதிப்புரை

இரு மனிதர்களுக்கிடையே அல்லது இரு குழுக்களுக்கு இடையேயான கருத்து முரண்பாட்டின் அடுத்த நிலையே தகராறு. ஆக, தகராறு முற்றும்போது தீர்வு என்று ஒன்று உருவாகும். சமாதானம் அல்லது சண்டை என்ற நிலையில் இருந்து முடிவாக என்ற சொல்லுக்கு தீர்ப்பு என்ற வார்த்தையே சரியானதாக இருக்கும். அப்படி தீர்ப்பு தருபவர் யார்? அவர் சொல்லும் தீர்ப்பு நடுநிலையானதா? யார் பக்கம் நின்றாவது தீர்ப்புச் சொல்லப்படுகிறதா? தகராறுகளுக்கு நிவாரணம் என்ன? பேச்சுவார்த்தை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? என்பதைப்பற்றி எல்லாம் சிறப்பாகவே சொல்கிறது இந்தப் புத்தகம்.

பொதுமக்களுக்கு எதிரான ஒரு தகராறில் அரசின் நிலைப்பாடு என்ன? மக்களுக்கு ஆதரவான நிலையையா அரசு எடுக்கிறது? இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்வது மட்டுமல்லாமல், சமாதான முயற்சி என்ற பெயரில் அரசின் கருத்துக்கள் திணிக்கப்படுவதை தோலுரித்துக் காட்டுகிறது இந்த அற்புதமான புத்தகம்.

‘ஆராய்ந்துணர்தல்--முன்னறிவித்தல்--நிவாரணம்’ ஆகியவற்றைத் தேர்ந்து, தகராறுகளை எப்படி மாற்றி அமைத்துக்கொள்வது, சமாதானத்தை எப்படி உருவாக்குவது என்பது பற்றித் தெரிந்து கொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

உலககின் பெரும்பான்மையான நாடுகளில் தகராறு என்னும் சொல் ‘ஹலோ’ சொல்வது போலாகிவிட்டது. நாம் அன்றாடம் சந்திக்கும் மனிதர்கள் குறிப்பாக, பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்து பணிபுரிபவரிடமிருந்து தொடங்கி - பக்கத்து தெருவரை, அண்டை மாநிலம் தொடங்கி - அண்டை நாடுவரை யாரிடம் நாம் தகராறு செய்யவில்லை? யார் நம்மிடம் தகராறுக்கு வரவில்லை?!

எதற்காக தகராறுகள் உருவெடுக்கின்றன? தீர்வுக்கு வழிதான் என்ன? என்று நீங்கள் கேட்டால் அத்தனைக்கும் பதில் உண்டு

இந்தப் புத்தகத்தில். கடந்து சென்றிடும் வழிவகையையும், அதை மாற்றியமைத்திடும் நெறிமுறையையும் தருகிறார் பேராசிரியர் யொஹான் கால்டுங். தமிழ் வாசகர்களுக்காக இந்தப் புத்தகத்தை மொழிமாற்றம் செய்து தந்திருக்கிறார் சுப.உதயகுமார். அவருடைய எளிமையான மொழிநடை வாசிப்புக்குச் சுவை கூட்டுகிறது.

இன்றைய சூழலில் வாசிக்கத் தேவையான புத்தகம் இதுவே. ஏனெனில் காதல் தகராறுகள், கணவன்--மனைவி தகராறுகள், சாதி தகராறுகள், அரசுக்கு எதிரான தகராறுகள் என தகராறுசூழ் தருணத்தில் உலாவரும் நம் நெஞ்சுக்கு நீதி சொல்கிறது இந்தப் புத்தகம். வாசித்துப்பாருங்கள். எந்த தகராறும் உங்களிடம் நெருங்காது.

இந்த நூல்...

தகராறு தவிர்க்கும், தீர்க்கும்,
நிர்வகிக்கும், கடக்கும் கலைக்கு
என்னை அறிமுகப்படுத்திய
எனது தந்தையார்
திரு. சு.பரமார்த்தலிங்கம் அவர்களுக்கு...

# உள்ளே...


தகராறு என்பது தவறானது அல்ல

மொழிபெயர்ப்பாளர் முன்னுரை

தகராறு: ஓர் அறிமுகவுரை

ஆசிரியர் முன்னுரை

1. சிறு தகராறுகள்: மனிதனுக்குள் மற்றும் மனிதருக்கிடையே எழும் முரண்பாடுகள் 33

2. குறுந்தகராறுகள்: சமூகங்களுக்கிடையே எழும் பிணக்குகள்

3. பெருந்தகராறுகள்: அரசுகளுக்கும், மக்களுக்கும் இடையே எழும் தகராறுகள்

4. மாபெரும் தகராறுகள்: பிராந்தியங்களுக்கும், நாகரீகங்களுக்கும் இடையேயான சண்டைகள்

5. ஆழ்கலாச்சாரம், ஆழ்செயல்பாடு, ஆழ்கட்டமைப்பு

6. படைப்பாற்றல், கருத்துப்பரிமாற்றம், பேச்சுவார்த்தை

7. டிரான்சென்ட் முறை: ஒரு மேலோட்டப் பார்வை

8. திருக்குறளும் தகராறுத் தீர்வுகளும்: வள்ளுவரோடு ஓர் அளவளாவல்

அருஞ்சொற்றொடர்

பிற நூல்கள்

# தகராறு என்பது தவறானது அல்ல

தகராறு என்பது தவறானது அல்ல. உண்மையைச் சொல்லப் போனால் மனித வாழ்க்கைக்கு தகராறு மிகவும் இன்றியமையாதது. எந்த உறவு ஆழமானதோ, நெருக்கமானதோ, அதில்தான் தகராறுகள் எழும், எழ வேண்டும். தகராறுகள் அந்த உறவுகளை இணைக்கும் பாலமாக, பசையாக பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருக்கிறோம். அருகிலே அமர்ந்திருப்பவருடன் ஒரு தகராறு வருகிறது. அதை நம்மில் பெரும்பான்மையோர் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை, எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. காரணம் அந்தப் பயணம் முடிவடையும்போது, அவருக்கும், நமக்கும் எந்தத் தொடர்பும் இருக்கப் போவதில்லை. அவருக்கும் நமக்கும் ஒட்டோ உறவோ கிடையாது. ஊர், பேர் கூடத் தெரியாத நிலையில் அவரவர் திசையில் அப்படியேப் பிரிந்து போவது மிக எளிதானது.

நேர்மாறாக, உங்கள் பெற்றோர், உடன்பிறந்தோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள், அல்லது உடன் பணிபுரிபவரோடு ஒரு பிணக்கு வந்தால், மேற்கூறியபடி இறங்கிப் போகமுடியாது. ஏனென்றால் ஒருவருக்கொருவர் உறுதியானத் தொடர்பு இருக்கிறது. உங்களிருவரின் பின்னே ஒரு வரலாறு இருக்கிறது. நினைவுகள் இருக்கின்றன. உணர்வுகள் இருக்கின்றன. எதிர்காலம் இருக்கிறது. உதாரணமாக, கணவன்-மனைவி உறவினை எடுத்துக்கொள்வோம். இது ஓர் ஆழமான அன்னியோன்னியமான உறவு. அனுபவங்கள், ஆசைகள், கனவுகள், நம்பிக்கைகள், குழந்தைகளின் எதிர்காலம், குடும்ப உறவுகள் என எத்தனையோ விடயங்களை இருவருமாக இணைந்துக் கையாளும் உறவுக்குள் தகராறுகள் எழுவது எளிது, இயற்கை, மரபு. கணவன்-மனைவிக்குள் தகராறு ஏதும் நிகழவில்லை என்றால்தான் பிரச்சினை. கணவன் தன் மனைவியோடு தகராறு எழாமல் பார்த்துக்கொண்டு, அம்மணி சொல்வதற்கெல்லாம் ‘ஆமாம்’ போட்டாரென்றால், ஏதோ மாற்று ஏற்பாடு செய்துவிட்டார் என்றே கொள்ளவேண்டும்.

## கருத்துப் பரிமாற்றம்

உறவுகள் ஓர் உரிமையைத் தருகின்றன. தகராறுகள் அந்த வலிமையை நிலைநாட்டும், புதுப்பிக்கும், மாற்றியமைக்கும் வாய்ப்புக்களாக அமைகின்றன. ஓர் உறவை முற்றிலுமாகப் புறக்கணிப்பது, அல்லது வன்முறையால் முறித்துக்கொள்வது எனும் இரு துருவநிலைகளுக்குத் தள்ளாமலிருக்கும் வரை, அந்த உறவோடு நீங்கள் உறவாடித்தான் தீரவேண்டும். உறவாடுதல் என்பது நெருக்கமானதாகவோ அல்லது தூரமானதாகவோ இருக்கலாம். மொத்தத்தில் ‘பேசி வாங்கி இருப்பது’ என்று வழக்காற்றில் சொல்வது முக்கியமான ஒன்று. கருத்துப் பரிமாற்றம் நிகழ்ந்தால்தான் பேசி வாங்கி இருக்கிறோம் என்று அர்த்தம்.

கருத்துப் பரிமாற்றம் பல நிலைகளில் நிகழலாம். எதிராளியைச் சிறுமைப்படுத்தும், கேவலப்படுத்தும், தோற்கடிக்கும் ஒரே நோக்கோடு தனது கருத்துக்களை, எண்ணங்களை, சிந்தனைகளை எடுத்துவைத்து வாதிடுவது, தர்க்கிப்பது (தர்க்கம் செய்வது), சண்டை போடுவது, முரண்டுபிடிப்பது, முறுக்கிக்கொண்டு நிற்பது - இவையெல்லாம் பகுத்தறிவின்றி முரட்டுத்தனமாக ஓர் உறவை முறிக்கும் நோக்கில் செயல்படுவதாகும். கருத்துப் பரிமாற்றம் என்பது கருத்துக்களை மேற்கூறியபடி திணிப்பதல்ல, மாறாக பரிமாறிக்கொள்வது. இருவரும் (அல்லது இரண்டுக்கும் மேற்பட்டோராகவும் இருக்கலாம்) சமமான நிலையில் நின்று, ஒருவருக்கொருவர் மரியாதை கொடுத்து, எதிரெதிர் கருத்துக்களை எடுப்பதும்-கொடுப்பதும், கவனமாகக் கேட்பதும்-கடிதில் விளக்குவதும் தான் பரிமாற்றம் ஆகும்.

நான்கு வகை கருத்துப் பரிமாற்றங்களை நாம் கண்டுணர முடிகிறது. முதலாவதாக, டீக்கடையில், முடித் திருத்தகத்தில், சாலையோரத்தில் நண்பர்களுடன் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை குறித்தும், அடுத்த தெருவில் நடந்த கலாட்டாக் கல்யாணம் குறித்தும் அரட்டை அடிப்பதும் ஒருவித கருத்துப் பரிமாற்றம்தான். இங்கே பெரிய அளவில் பொருளடக்கமோ, உறவு முறியும் ஆபத்துக்களோ இருப்பதில்லை. இரண்டாவதாக, அலுவலகத்தில் உங்கள் மேலதிகாரிக்கும் உங்களுக்கும் இடையே நடப்பதும் கருத்துப் பரிமாற்றம்தான். இங்கே சமத்துவம் இல்லாத நிலையைப் பார்க்கலாம். உயரதிகாரி உத்தரவிடுகிறார், நீங்கள் அதை ஏற்று நடக்கிறீர்கள்; அதிகார வேறுபாடு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. உங்களிருவரிடையே பரிமாறப்படும்

ஆணைகளில் பொருளடக்கம் ஓரளவு உள்ளது; ஆனால் உறவு முறியும் ஆபத்து அதிகமாக இருக்கிறது. மூன்றாவதாக, ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு ஓர் அறிஞரிடமோ, ஆய்வாளரிடமோ கலந்துரையாடுகிறீர்கள் என்றால், அங்கே பொருளடக்கம் அதிகமாக இருக்கிறது, ஆனால் உறவு முறியும் ஆபத்து ஓரளவே உள்ளது.

நான்காவதாக, கணவன்-மனைவி, அண்ணன்-தம்பி, அக்கா-தங்கை, பெற்றோர்-குழந்தை போன்ற உறவுகளுக்குள் ஒரு பிரச்சினை குறித்து கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடும்போது பொருளடக்கமும் அதிகம், உறவு முறிந்துவிடும் ஆபத்தும் அதிகம். நேருக்கு நேர் நின்று, "உங்களோடு ஒரு முக்கியமான விடயம் பற்றி நான் பேச வேண்டும்" என்று துவங்கி, எதிர் தரப்பு கோபப்படாமலிருக்கச் செய்து, உங்கள் நிலையினை தெளிவான மொழியில் எளிதான விதத்தில் விளக்கிச்சொல்லி, முன்னிற்பவர் தனது நிலையினை விளக்கிச் சொல்லும்போது 'அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்' இவை நான்கையும் விடுத்து, அவரது கருத்துக்களை, உண்மைகளை, உணர்வுகளை வெறுமனே கேட்காமல் உன்னிப்பாக செவிமடுத்து, அவற்றை உள்வாங்கி, மொத்தப் பிரச்சினையை அவர் நிலையில் நின்று நோக்கி, உங்கள் எதிர்வினையை தெளிவுபடுத்தி - இப்படியான ஒரு கொடுக்கல்-வாங்கலில் ஈடுபடுவதுதான் கருத்துப் பரிமாற்றம்.

எவ்வளவு கடினமாகப்படுகிறது. வியப்பே இல்லை. காரணம் எந்தப் பள்ளியிலும், கல்லூரியிலும் இதை - வாழ்வின் அடிப்படையான இந்த வித்தையை - எந்த ஆசிரியரும் சொல்லித்தருவதில்லை. எந்த பாடப்புத்தகமும் இதுபற்றிப் பேசுவதில்லை. படிக்கவும், எழுதவும், எண்ணவும் மட்டுமே நமது கல்வித்திட்டம் கற்பிக்கிறது. சிந்திக்கவோ, செவிமடுக்கவோ, சீர்தூக்கிப் பார்க்கவோ, கருத்துப் பரிமாற்றம் செய்யவோ, நமது கல்வி முறை உதவுவதில்லை. வீடுகளிலும், பள்ளிகளிலும், கோவில்களிலும், எங்குமே கருத்துப் பரிமாற்ற பயிற்சி இல்லாமல் இருக்கும்போது, 'இந்த அனுபவத்தை சொல்லித்தரப் பள்ளியில்லையே' என்று 'வியட்நாம் வீடு' அந்தணர் அப்பாவித்தனமாகச் சொல்வது போலத்தான் திகைக்க வேண்டியிருக்கிறது.

'பேசி வாங்கி இருப்பது' என்பது போல 'பேச்சுக்கால்' என்றும் ஒரு சொல் வழக்காற்றில் உள்ளது. பேச்சுவார்த்தை, பேரப்பேச்சு,

சமரசப் பேச்சு என்றும் பலவாறாகக் குறிப்பிடப்படுகிறது இது. கருத்துப் பரிமாற்றத்தில் சம்பந்தப்பட்ட நபர்கள் மட்டுமே ஈடுபடுவர். ஆனால் பேச்சுவார்த்தையில் பிறரும் (அனுமதியோடு அல்லது அனுமதியின்றி) தலையிடுவர். அப்படி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோர் நீதிமான்களாகவும், நியாய உணர்வு கொண்டவர்களாகவும் இருப்பது அவசியம். அய்யா வைகுண்டர் அழகாகச் சொல்கிறார்:

வலியோருக்கு ஓர் வழக்கு வைத்து நீ பேசாதே,

மெலியோருக்கு ஓர் வழக்கு வீணாய் பறையாதே!

பணம் படைத்தவர், அதிகாரம் மிக்கவர், வலிமையுடையவர் என்றும் ஏழ்மையில் இருப்பவர், அதிகாரம் இல்லாதவர், வலிமையில்லாதவர் என்றும் பாகுபாடு இல்லாமல் நடுநிலைமை வகுத்தே வழக்குப் பேசவேண்டும் என்பது கருத்து. நமது சமுதாயத்தில் ‘கண்ட வழக்கு’, ‘காணா வழக்கு’ என்றெல்லாம் வகைப்படுத்துகிறோம். எல்லா வழக்குகளையும் நாம் நேரில் கண்டு, சரி-தவறு சரியாக உணர்ந்து பேசித்தீர்க்க முடியாது. ஆனால் ‘காணா’ வழக்குகளையும் மனக்கண்ணால் பார்த்து, மாந்தநேயத்தில் தோய்த்து, நடுவு நிலை தவறாது ‘கண்ட’ வழக்குகளாக மாற்றிக் கையாள்வது சிறப்பு.

பேச்சுக்காலில் ஈடுபடுவோர் ஒரு தரப்புக்கு சார்பாக, அநியாயமாக வழக்குப் பேசினால், விபரீத விளைவுகளும் வரலாம்:

ஆரா மீனுக்கும் அயிர மீனுக்கும்

நடு ஏரியிலே சண்ட,

வெலக்கப் போன வெறா மீனுக்கு

ஒடஞ்சு போச்சாம் மண்ட.

சமரசம், பஞ்சாயத்து, மத்தியஸ்தம் பண்ணுவதிலுள்ள ஆபத்துக்களை இது தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. மூன்றாவது நபரிடம் ஒரு தகராறு சிக்கும்போது அந்தத் தகராறு இன்னும் சிக்கலாகிப் போவதால்தான், ‘சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல்’ என்றெல்லாம் பேசுகிறோம்.

### குழும நிலை அம்சங்கள்

தனிமனித வாழ்வில் நடக்கும் கருத்துப் பரிமாற்றம் குழும

நிலைகளில் எப்படி நடக்கும்? முதலில் நமது குழுமத் தன்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். ‘தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு’ என்று பாடிக்கொண்டிருந்தாலும், இந்த இனக்குழும உணர்வு நம்மில் மிகக் குறைவுதான். சாதி அடையாளம்தான் நம்மில் விஞ்சி நிற்கிறது. அடுத்ததாக மத அடையாளம், வட்டார அடையாளம் இப்படித்தான் போகின்றன நமது குழும அடையாளங்கள். தமிழகத்தை (குறைந்தபட்சம் தமிழக வரைபடத்தையாவது) ஒரே அலகாகப் பார்ப்பதில்லை நாம்.

நமது இன உருவாக்கக் கதை என்று ஒன்று கிடையாது. தமிழகமெங்கும் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரே நினைவு, ஒரே வரலாறு, ஒரே பார்வை கிடையாது. முத்தமிழ், முக்கனி, மூவேந்தர், நான்மறை, ஐவகை நிலம், ஆறுமுகம் என்று பன்முகப் பரிணாமங்கள்தான் நமது கலாச்சாரத்தில் அதிகம். கோவில்களில்கூட அறுபடைவீடு என்றுப் பிரித்து ஆங்காங்கேதான் கட்டிவைத்திருக்கிறோம். தமிழர் திருநாளாம் பொங்கலைக்கூட அனைத்துத் தமிழரும் கொண்டாடுவதில்லை; அது ஓர் இந்துப் பண்டிகையாகத்தான் இன்றும் பார்க்கப்படுகிறது. மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட ‘தமிழ்நாடு’ எனும் மாநில அடையாளம்தான் உருப்படியான ஒரே தமிழ் அடையாளம். எனவே ‘நாம் ஒருவர்’ எனும் நிலையை உருவாக்கும் வேலையைத் தொடங்கவேண்டும்.

அடுத்து நம் வீட்டை சுத்தப்படுத்தவேண்டும். அன்பு-வீரம் எனும் துருவ நிலைகளைக் கொண்டு, அன்பு மென்மையானது, வீரம் வன்மையானது என வலியுறுத்தி, அன்பு பெண்களுக்கும், வீரம் ஆண்களுக்கும் லட்சணம் என்று இட்டுக்கட்டி ஓர் அசிங்கமான கலாசாரத்தை நாம் கட்டிக் கொண்டிருக்கிறோம். அகம்-புறம் எனப் பிரித்து, அகநானூறு, புறநானூறு பாடும் நாம், ‘இடை’ என்பதை விடுத்து நானூறுகளுக்கிடையே உள்ள பதினெண்ணாயிரத்தை மறந்தது நமது தவறுதானேயொழிய, நமது கலாச்சாரத்தின், பண்பாட்டின் குறையல்ல. அகத்தில் கூடல் மட்டுமல்ல ஊடலும் நடக்கிறது. புறத்தில் போராடல் மட்டுமல்ல, தேடலும் நடக்கிறது. இந்த முழுமையைத் தெரிந்துகொள்ள மறுப்பது நமது அறியாமையே தவிர, நமது கலாச்சாரத்தின் தெரியாமையல்ல.

தமிழ் திரைப்படங்களிலே கதாநாயகன் எப்போதாவது தனது

எதிரிகளோடு கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறாரா? அப்படி பிரச்சினைகளைப் பேசி தீர்த்துக்கொண்டால், படம் வெற்றி அடையுமா? கதாநாயகன் அடி அடி என்று அடித்து, மிதித்து, தூக்கி எறிந்து, ரத்தம் பீறியெழப் பிய்த்தெறிந்து பிரச்சினையைத் தீர்க்கிறார். நாம் மெய்மறந்து மெச்சுக்கிறோம். இப்படி எதிரிகளை அடித்துப் போட்டால்தான், கதாநாயகிக்கும் காதல் வருகிறது. பிரச்சினைகளை பேசித்தீர்த்துக் கொள்பவனை ஏறிட்டும் பார்க்கமாட்டாள் இன்றைய நாயகி. இப்படிப்பட்ட இழிந்த நிலையில் மாட்டிக்கொண்டிருக்கும் நாம், ஏதாவது செய்தாக வேண்டும். என்ன? கருத்துப் பரிமாற்றத்தை வீடுகளில் பெற்றோர் கற்பிக்க வேண்டும்; அன்றாடம் செயல்படுத்தி வாழ்ந்துகாட்ட வேண்டும். பள்ளி கல்லூரிகளில் பயிற்றுவிக்க வேண்டும். வீதிகளில், சாலைகளில் முதியோர் இளையோருக்கு உதாரணமாய்த் திகழ வேண்டும். இப்படி ஐந்தில் வளையும் தலைமுறை ஐம்பதில் அழகாக வளையும். வளைந்து கொடுத்து செல்வதுதான் வாழ்க்கை என உணரும், உணர்ந்தபடி நடக்கும்.

கடலாடி, கண்காணா தேசங்களுக்குக் கப்பலில் சென்று, திரை கடலோடி திரவியம் தேடி வாழ்வாங்கு வாழ்ந்த இனம் நமது தமிழினம். இன்றைக்கு நம்மில் பலருக்கு நீச்சலடிக்கக்கூடத் தெரியாது. கவிதையிலேயே கருத்துப் பரிமாற்றம் செய்தவர்கள் நம் முன்னோர். இன்று நமக்குப் பிறமொழி கலப்பின்றி ஓரிரு வாக்கியங்கள்கூட உரைநடையிலேயேப் பேசத் தெரியாது. ‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’ என்பது எவ்வளவு வீரமிக்க நிலை! ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்பது எத்தனை தீரமிக்க நோக்கு. நம்மை, நமது மொழியை, இலக்கியத்தை, வரலாற்றை, பண்பாட்டை, கலாச்சாரத்தை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் நாம். இந்த வீட்டை சுத்தம்செய்யும் பணிகளை முடுக்கிவிட்டாலே, நமக்கு ஒரு தெளிவு பிறக்கும், தீர்க்கம் உருவாகும். பின்னர் நாம் வீதியில் இறங்கலாம். அண்டை அயலாருடனான உறவுகள், தகராறுகளைக் கையாளத் துவங்கலாம்.

அண்டை மாநில மக்களுடன் நாம் நெருங்கிய உறவு கொண்டிருக்கிறோம் என்பதையும், இங்கிருந்து நமது மாநிலத்தைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு வேறு எங்கும் போகமுடியாது என்பதையும் நாம் முதலில் உணர வேண்டும். இந்த உண்மையை அவர்கள் உணர வேண்டாமா என்று

கோபப்படுவதற்கு முன்னால், இம்மாதிரியான யதார்த்தங்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் எனது வாதம். தனிமனித உணர்வுகளும், அனுபவங்களும் மற்றும் குழும உணர்வுகளும், அனுபவங்களும் ஒரே தன்மையன என்றாலும், பின்னவை சிக்கல்கள் அதிகமானவை. குழும நினைவுகள், சமூகக் கதைகள், பிரபலங்களின் பேச்சுக்கள், ஊடகங்களின் வெளியீடுகள், இவர்கள் அனைவரின் நினைவூட்டல்கள் என பற்பல அம்சங்கள் கொண்டவை. அண்டை அயலாரோடு இருக்கிற உறவின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களோடு நாம் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டாக வேண்டும், இந்த கருத்துப் பரிமாற்றம் பரந்த, ஆழமான சமூக, அரசியல், பொருளாதாரப் பரிணாமங்கள் கொண்டது. இதை நாமும் அறிந்து, எதிர்தரப்புக்கும் சுட்டிக்காட்ட வேண்டும்.

எடுத்துக்காட்டாக, கேரளாவுடனான நமது உறவை எடுத்துக்கொள்வோம். கடந்தகாலப் பின்னணி, நிகழ்கால சமூக, அரசியல், பொருளாதாரப் பரிணாமங்கள், எதிர்கால போக்குப் பற்றியெல்லாம் ஆழமானப் புரிதல் இல்லாமல், உணர்ச்சிப் பெருக்கில், கோபத்தில், வெறுப்பில் பேசுவது ஆபத்தாகவே முடியும். உண்மைப் பிரச்சினையை விட்டுவிட்டு உருப்படாததை, உதவாததைப் பேசிவிடுகிறோம். அம்மாதிரியான சூழலில் எந்தவிதமான கருத்துப் பரிமாற்றமும் நடப்பதில்லை. கைகலப்புத்தான் நடக்கிறது. சூடு பறக்கிறது, ஆனால் எந்த ஒளியும் பிறப்பதில்லை. மேற்கண்ட கோட்பாடுகளோடு ஒரு சில தகராறுகளைத் தேர்ந்து விவாதிப்போம்.

### தமிழகத் தகராறுகள்

இன்றையத் தமிழ்ச் சமூகம் ஏராளமான தகராறுகளை சந்தித்துக் கொண்டிருக்கிறது. வாழ்வுரிமைத் தகராறுகள், வாழ்வாதாரத் தகராறுகள், வாழ்க்கை முறைத் தகராறுகள் என அனைத்துமே வாழ்க்கையோடு தொடர்பு கொண்டவை. மூன்று தமிழர் தூக்கு, நான்கு தமிழர் தூக்கு, ஈழத் தமிழர் பிரச்சினை, நதிநீர்த் தகராறுகள், அணைத் தகராறுகள், கச்சத்தீவுப் பிரச்சினை, தமிழ் மீனவர் படுகொலை, கடற்கரைப் பிடுங்கல், மணற்கொள்ளை, மலையழிப்பு, காடழிப்பு, மனிதன்-மிருகம் தகராறுகள், கூடங்குளம், கல்பாக்கம், தேவாரம் போன்ற ‘வளர்ச்சி’ தழுவிய தகராறுகள் என ஒரு மிக நீண்ட பட்டியல் நம்மை அச்சுறுத்துகிறது.

இந்த தகராறுகளைப் பொறுத்தவரை நம்மில் பலருடைய அணுகுமுறை கண்டுகொள்ளாமலிருப்பது அல்லது கழுத்தைப் பிடிப்பதைப் பற்றி மட்டும் கவலைப்படுவது என்றமைகிறது. உள்ளூர் தகராறுகளைப் பற்றி நாம் ஓரளவு தெரிந்துகொள்கிறோம், ஆனால் வெளியூர் பிரச்சினைகளைப் பற்றி பெரிதாக கரிசனம் கொள்வதில்லை. தமிழக அளவிலான பிரச்சினையாக, தமிழர்கள் ஒட்டுமொத்தமாய் எதிர்கொள்ளும் பிரச்சினையாக எதையுமே பார்ப்பதில்லை. சமூக-அரசியல்-பொருளாதாரத் தகராறுகள், சுற்றுச்சூழல் தகராறுகள் சுருக்கிப் பார்க்கப்படக்கூடாது. நேர்மாறாக இம்மாதிரியான தகராறுகளின் ஆழத்தை, அகலத்தை அதிகரிக்க வேண்டும். எப்படி ஒரு கணவன்-மனைவி தகராறுக்குப் பின்னால் மாமியார், நாத்தனார் என்று பலரும், பல பிணக்குகளும் மறைந்து கிடக்கின்றனவோ, அதுபோல சமூக-அரசியல்-பொருளாதாரத் தகராறுகள், சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் எண்ணற்றக் கட்சிகளும், சிக்கல்களும் இணைந்திருக்கின்றன.

தமிழகத் தகராறுகளை எப்படிப் பார்ப்பது, எப்படி புரிந்து கொள்வது, எப்படி ஒரு நிலைப்பாடு எடுப்பது? இந்தத் தகராறுகளை அலசி, ஆராய்ந்து, புரிந்துகொண்டு, ஒரு நிலைப்பாடு எடுக்க அறிஞர் யொஹான் கால்டுங்க் (Johan Galtung) பின்பற்றும் ‘ஆராய்ந்துணர்தல்-முன்னறிவித்தல்-நிவாரணம்’ (Diagnosis&Prognosis&Therapy) எனும் அணுகுமுறையை கைக்கொள்ளலாம் என நினைக்கிறேன். ஒரு மருத்துவர் போன்று சிந்தித்து, செயல்படுவதை கால்டுங்க் DPT Analysis என்று அழைக்கிறார்; நாம் ஆமுநி அலசல்’ என்றுக் குறிப்பிடுவோம். உடல்நலத்துக்கான மருத்துவ அணுகுமுறைகளை திருவள்ளுவரும் பல இடங்களில் குறிப்பிடுகிறார்; அவை சமூகநலனுக்கான அணுகுமுறைகளாகவும் அமைவதை எளிதில் விளங்கலாம்:

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல். (குறள் 948)

நோய் இன்னதென்று கண்டறிந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதை தணிக்கின்ற வழியைத் தேர்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாக சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்

கற்றான் கருதிச் செயல். (குறள் 949)

நோயாளியின் வயது, நோயின் தன்மை, மருத்துவ தலையீட்டிற்கான நேரம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு மருத்துவம் கற்றவர் செயல்பட வேண்டும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செய்வானென்று

அப்பால் நாற்கூற்றே மருந்து. (குறள் 950)

நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து மருந்து கொடுப்பவர் என மருத்துவம் நான்கு வகையாக அமைந்துள்ளது.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று. (குறள் 941)

மருத்துவ நூலோர் கணித்துள்ள காற்று முதலான மூன்று முக்கியமானவற்றுள் ஒன்று அளவுக்கு அதிகமானாலும், குறைந்தாலும் நோய் உண்டாகும்.

தனிமனித உடலுக்கு சீக்கு வரும்போது, ‘நோய்க்கும் பார், பேய்க்கும் பார்’ என்பது தமிழ் சமூகத்தில் வழங்கப்படும் அறிவுரை. அறிவியல்படி நோயைக் கண்டறிந்தாலும், நமது புத்திக்கும், சக்திக்கும் மீறிய சில விடயங்கள் இதில் புதைந்து கிடப்பதால் கண்ணால் காண முடியாத, அறிய முடியாத பேயைப் பற்றிப் பேசுகிறோம். சீனத்தில் வாய் வழியாகத்தான் நோய் வருகிறது என நம்புகின்றனர். அதையேதான் வள்ளுவர் சொல்கிறார்:

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது

அற்றது போற்றி உணின். (குறள் 942)

உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றி தக்க அளவு உண்டால், உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்

நோயள வின்றிப் படும். (குறள் 947)

பசித்தீயின் அளவு தெரியாமல், ஆராயாமல் மிகுதியாக உண்டால், அளவற்ற நோய்கள் ஏற்படும்.

ஒரு சமூக நோயை, பிரச்சினையை அலச ‘ஆராய்ந்துணர்தல் - முன்னறிவித்தல்-நிவாரணம்’ (Diagnosis-Prognosis-Therapy) எனும்

அணுகுமுறையைப் பின்பற்றும்போது, நோய் இன்னதென்று கண்டறிவது, நோயின் காரணம் ஆராய்வது, நோயாளியின் வயது, நோயின் தன்மை, மருத்துவ நூலோர் கணித்துள்ள காற்று முதலான மூன்று முக்கியமானவற்றுள் ஏதாவது ஒன்று அளவுக்கு அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கிறதா என்று அறிவது முக்கியம். அதுபோல, நோயாளி, மருத்துவர், மருந்து, அருகிருந்து மருந்து கொடுப்பவர் என மருத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் ஆராய வேண்டும். மருத்துவ தலையீட்டிற்கான நேரம் அறிந்து, நோயைத் தணிக்கின்ற வழியைத் தேர்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாக சிகிச்சை செய்ய வேண்டும்.

இந்தத் தகராறு நோயின் தன்மையை ஓர் எளிய கவிதையில் கவிஞர் கண்ணதாசன் அழகாக விளக்குகிறார்:

“உன் கூட டூ”
என்று இரண்டு விரலை
சுட்டிக்காட்டி துவங்குகிறது
பிள்ளை பிராயத்து சண்டைகள்.

கொஞ்ச நேரத்துக்குள்ளாகவே,
“உன் கூட பழம்” என்று
புன்னகைப்பூ பூக்க சமாதானப் பேச்சு...

பிள்ளை பிராயத்தில்
எல்லாமே
சுலபமாகத்தான் உள்ளது.
சண்டையானாலும் சரி,
சமாதானங்களானாலும் சரி...

வருஷக்கணக்காய்
பார்த்தும், பார்க்காமல்
போகும் முன்னாள் நண்பன்...

சோறாக்கியாச்சு -
சாப்பிட வரலாம்...
விட்டத்தைப் பார்த்து சொல்லும் மனைவி.

சிறிய கடனுதவி -
செய்ய மறுத்ததால்
முகத்தை தூக்கி
வைத்துக் கொண்டிருக்கும் சகோ...

எழுதும் எழுத்துக்கள்
கோணலாக இருந்தாலும் -
நேராக உள்ளது
பிள்ளை பிராயத்து சிந்தனைகள்.

வளர வளர எல்லாமே
வளர்கிறது...
மனஸ்தாபங்களும், பேதங்களும்...
அறிவு மட்டும் குறைவாக.

யாரிடமும்
சுலபமாக
சொல்ல முடியாமலே போகிறது -
"பழம்" என்று.

கவிஞரின் ஆதங்கத்தைப் புரிந்து, தகராறுகளைக் கடந்து செல்லும் கலையினைத் தெளிந்து,

பழகும் மனிதரிடமெல்லாம் பழம் என்று சொல்வோம்!

பழம் நழுவி பாலில் விழும் வளம் பெற்று வாழ்வோம்!!

**- முனைவர் சுப. உதயகுமாரன்**

# மொழிபெயர்ப்பாளர் முன்னுரை

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்,
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் ”

என்ற மகாகவியின் பணித்தலுக்கு தலைவணங்கிய முயற்சிதான் இது. தகராறுகளைக் கடந்து செல்வது பற்றியும், மாற்றியமைத்துக் கொள்வது குறித்தும் எனது ஆசிரியர் பேராசிரியர் யொஹான் கால்டுங் தமது புத்தகத்தினை வெளியிட்ட உடனேயே, அதனை தமிழாக்கம் செய்யும் உரிமையை அவரிடம் கேட்டுப் பெற்றேன்.

அகில இந்திய வானொலியின் தில்லி நிலைய வெளிநாட்டுச் சேவையில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் அறிவிப்பாளராக பணிநியமனம் பெறுமளவு மொழிபெயர்ப்புத்துறையில் பாண்டித்தியமும் ஈடுபாடும் கொண்டிருந்தாலும், இந்நூலை மொழிபெயர்ப்புச் செய்வது எளிதானதாக இருக்கவில்லை. அரசியல், சமாதான ஆய்வு போன்ற துறைகளில் எனது உயர்கல்வி ஆங்கில மொழியிலேயே அமைந்திருந்ததாலும், இவ்விடயங்கள் பற்றி தமிழில் சிந்திக்காதிருந்ததாலும், சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் திணற வேண்டியதாயிற்று. ஓரிரு ஆங்கில தமிழ் அகராதிகளின் உதவியோடு ஏற்புடைய வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து எழுதியிருக்கிறேன்.

இந்நூலாசிரியர் யொஹான் கால்டுங் கற்றுணர்ந்த மாமேதை. ஆழமான ஒரு கருத்தை நறுக்கென நான்கு வார்த்தைகளில் சொல்லும் சூட்சுமம் அறிந்தவர். வார்த்தைச் சித்தர். வரலாறு, அரசியல், பொருளாதாரம் என பல துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர். அவரது மாணவனாக, ஆராய்ச்சி உதவியாளராக, நண்பராக, உடனெழுதும் ஆசிரியராக 15 வருடங்களுக்குமேல் பழகும் எனக்கு அவரது கொள்கைகள், சிந்தனைகள் எண்ண வோட்டங்கள் தெளிவாய் தெரிந்திருந்தாலும், தந்தி வடிவில் அமையும் வாக்கியங்களை, கருத்துக்களை மொழிபெயர்ப்பது சிரமமாகவே இருந்தது. என்னால் இயன்றவரை அவரது

கருத்துக்களை சிதைக்காது, “செம்மைப்படுத்துகிறேன் பேர்வழி” என்று மாற்றியமைக்காது அப்படியே எழுதிட முயன்றிருக்கிறேன்.

ஓரிரு இடங்களில் நேரடியாக மொழிமாற்றம் செய்யப்பட முடியாத சொற்களை, கருத்துக்களை தந்திச் செய்தி போன்று இரத்தினச் சுருக்கமாக எழுதியிருக்கும் உரைநடையை, சிக்கலான சரித்திர நிகழ்வுகளை, வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்த்து வாசகர்களைக் குழப்புவதற்கு பதில், சொல்லப்பட்டிருக்கும் விடயத்தின் சாரத்தை எழுதியிருக்கிறேன்.

மொழிபெயர்ப்பு ஒரு கலை. மொழிபெயர்ப்பாளருக்கும், பிற கலைஞர்களுக்குள்ள படைப்பாற்றல் உரிமைகளும், கடமைகளும் உண்டு. அவற்றை மிதமாகக் கையாண்டு, எனது உரைநடை சுவாரசியமானதாக, படிப்பவருக்கு பயனுள்ளதாக இருக்க உண்மையாக முயன்றிருக்கிறேன்.

இந்நூலை வாழ்வின் பலதுறைகளிலும், நிலைகளிலும் உள்ள தங்கள் உற்றார், உறவினரின் கவனத்திற்கு கொணர்ந்து, தகராறுகளை மாற்றியமைக்கும் நெறிமுறைகளையும், கடந்து சென்றிடும் வழிவகைகளையும் அவர்களெல்லாம் அறியச்செய்து, தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் “அன்பும், அறனும்” தழைத்தோங்க உதவுங்கள்.

தமிழ் மொழிமாற்றம் மற்றும் வெளியீட்டு உரிமைகளை எனக்குத் தந்த பேராசிரியர் யொஹான் கால்டுங் (Johan Galtung), இம்முயற்சியில் என்னை ஊக்குவித்த நண்பர் பேராசிரியர் டீட்ரிக் ஃபிஸ்ஷர் (Dietrich Fischer) ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாக்கத்தில் உதவிபுரிந்த மு. சேகர், மு. மங்கையர்க்கரசி, க. சுபா, சு. பொன் சுந்தரி மற்றும் தமிழ் தட்டச்சு செய்து தந்த அ. கலைச்செல்வி, த. காயத்திரி ஆகியோருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். புத்தகத்தின் இறுதிப்படியினை படித்து கருத்துக்கள் சொன்ன சகோதரர் பீட்டர் யெரோணிமூஸ் அவர்களுக்கும், பேராசிரியர் மு.இ. மாணிக்கவாசகம் அவர்களுக்கும் என் நன்றிகள். கருத்துப் படங்கள் வரைந்து தந்த நண்பர் வெங்கடேஷ் பாபு, பல உதவிகள் செய்த நண்பர் பிரேம் ஆனந்த் ஆகியோருக்கும் எனது ஆழமான நன்றிகள். இம்முயற்சியில் என்னை ஊக்குவித்து, உறுதுணையாயிருந்த எனது பெற்றோர், மனைவி, குழந்தைகளுக்கும் என் நன்றிகள்.

அருமையான இந்த நூலை வெளிக்கொணரும் விகடன் பிரசுரத்துக்கும் அன்பின் நன்றிகள்.

**சுப. உதயகுமாரன்**


நாகர்கோவில், சுப. உதயகுமாரன்
ஆகஸ்ட் 2013

# தகராறு: ஓர் அறிமுகவுரை


முனைவர் சுப. உதயகுமாரன்

தகராறு (conflict) என்பது மனப்பாங்கு (attitude), செயல்பாடு (behaviour), முரண்பாடு (contradiction) என்பனவற்றின் சேர்க்கை என்கிறார் அறிஞர் யொஹான் கால்டுங். ஒருவரின் மனப்பாங்கு எதிர்மறையாக இருக்கும் போது, அவரின் செயல்பாடுகளில் பிரச்சினைகள் எழுந்து, வாழ்வில் முரண்பாடுகள் உருவாகலாம். அதேபோல, ஒருவரின் செயல்பாடுகள் வன்முறை வயப்பட்டவை யாகயிருந்தால், முரண்பாடுகள் எழுவது தவிர்க்க முடியாதது. முரண்பாடுகள் கோபம், வெறுப்பு, பழிவாங்குதல் போன்ற எதிர்மறை மனப்பாங்கையே உருவாக்கும் என்பது தெளிவு. முரண்பாடு ஒன்றினை சந்தித்து கொண்டிருக்கும் ஒருவர் எதிர்மறை மனப்பாங்குகளையும், வன்முறை தோய்ந்த எதிர்மறை செயல்பாடுகளையும் கொண்டிருப்பது சாத்தியமே.

மேற்கண்ட மூன்று அம்சங்களில் எது ஆதாரமாகயிருந்தாலும், தகராறு என்பது ஒன்றுக்கும் மேற்பட்ட இலக்குகளின் ஒவ்வாமை என்று விவரிக்கலாம். சீன மொழியில் தகராறைக் குறிக்க இரண்டு எழுத்து கொண்ட ஒரு வார்த்தையை உபயோகிக்கிறார்கள். அதில் முதல் எழுத்து அபாயம் என்பதையும், இரண்டாவது எழுத்து வாய்ப்பு என்பதையும் குறிப்பிடுகின்றன. மனித உறவுகளுள் ஒரு தகராறு எழுந்து சரியாக நிர்வகிக்கப்படாத பட்சத்தில், அவ்வுறவுகள் முறிந்து போகும் ஆபத்து எழுகிறது. அந்தத் தகராறை சாதுர்யமாக கையாண்டு அதில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் தீர்வு செய்தால், அந்த உறவு இன்னும் பலப்படும் வாய்ப்பினையும் உருவாக்குகிறது.



தனிமனித உறவுகளுள் ஊடல், வழக்குகள், பிணக்குகள், சண்டை சச்சரவுகள் பற்றியும், மனித சமூகங்களுக்குள் சமர், போர், படையெடுப் புகள் பற்றியும், தமிழ் இலக்கியங்கள் நிறையவே பேசுகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என பறைசாற்றும் தமிழ் கூறும் நல்லுலகம் அன்பு எனும் அஸ்திவாரத்தின் மேல் தான் கட்டப்பட்டுள்ளது. இந்த ஆழமான கோட்பாடு பல்வேறு உறவுகளுள் பலவிதமாக பரிணமிக்கிறது. காதலன் காதலி உறவுக்குள் ஊடல் எழுந்து, அது கூடலாய் மாறும்போது, அன்பு இன்னும் ஆழமாகிறது. கற்றுணர்ந் தோருக்கிடையே நடக்கும் விவாதங்கள், சொற்போர்கள் நிறைவடையும் போது, நட்பாக மலர்கின்றது. பக்தனுக்கும், இறைவனுக்கும் இடையே எழும் கோப, தாபங்கள் கூட சோதனைகளுக்குப் பிறகு தரிசனங்களாகவும், தகைமைசால் வரப்பிரசாதங்களாகவும் நிறைவு பெறுகின்றன.



இப்படி "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்" என அன்பை அடிப்படையாகக் கொண்ட தமிழ் கலாச்சாரம், மனித சமூகங்களின் உறவுகளில் எழும் போட்டிகள், போர்கள் பற்றியே அதிகம் குறிப்பிடுகிறது. அன்பு புறந்தள்ளப்பட்டு, வீரம் முன்னிறுத்தப்படுகிறது. சாகசங்களும், விழுப்புண்களும், வீரமரணங்களுமாய் வன்முறை போற்றப்படுகிறது. கருத்துப் பரிமாற்றம், பேச்சுவார்த்தை, சமரசம் போன்ற கோட்பாடுகள் ஆங்காங்கே போற்றப்பட்டாலும், அனைத்திற்கும் மேலாகத்

தகராறு தீர்க்கும் ஊடகமாக போர்களே இருந்து வந்திருக்கின்றன. வெஞ்சமர் புரிந்து வன்முறை வயப்படுவது தான் வீரம் என்ற நிலை நிகழ்ந்தது.

நவீன அரசியலில் சமாதான ஆய்வு, எதிர்காலவியல், பெண்ணியம், தலித்தியம் போன்ற அறிவுத்துறைகளில் பேசப்படும் பல கோட்பாடுகளும், சொற்களும், கருத்துக்களும் மிகப் புதியன. உதாரணமாக, பிணக்கம் பற்றியும், இணக்கம் பற்றியும் எவ்வளவோ பேசும் தமிழ் இலக்கியத்தில், மீளிணக்கம் (reconciliation) பற்றி அதிகம் பேசப்படவே இல்லை. காலத்தின் தன்மைக்கும், தேவைக்கும் ஏற்றவாறுதான் இலக்கியமும், கலாச்சாரமும், கருத்துக்களும் உருவாகி நிலைக்கின்றன. வன்முறை தோய்ந்த வீரத்தை விட, மென்முறை போற்றும் விவேகம் சிறந்தது எனக் கொள்ளும் இன்றைய உலகில், இந்நாளைய தேவைக்கான கருத்துக்களும், சொற்களும், அர்த்தங்களும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன.

பிரச்சினைகளை வீரத்தோடு அடித்து தீர்த்துக் கொள்வதற்குப் பதிலாக, விவேகத்தோடு பேசி தீர்த்துக் கொள்வதுதான் சிறந்தது என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்வோம். வாய்சண்டை, வரப்புச்சண்டை, வாழ்நாள் முழுவதும் ஆட்படுத்தும் சாதிச்சண்டை, மதச்சண்டை என அனைத்து சண்டைகளையும் அலசி ஆராய்ந்து, அவற்றைப் புதிய புரிதலுடன், அகிம்சை வழி படைப்பாற்றலுடன் மாற்றியமைத்து, முரண்பாடுகளை கடந்து சென்று, ஆக்க வழிகளிலே தொடர்வது காலத்தின் கட்டாயமாகியிருக்கிறது.

தமிழில் ஊடல், புலவி, துனி, சர்ச்சை, பிணக்கு, சண்டை, வழக்கு, வாக்குவாதம், கைகலப்பு, அடிதடி, படையெடுப்பு, ஆக்கிரமிப்பு, போர், சமர், இடையூறு, இடர்பாடு, முரண்பாடு, மோதல், கலவரம், பிரச்சினை, சிக்கல் என பல்வேறு வார்த்தைகளிருந்தாலும் “தகராறு” என்ற வார்த்தையே Conflict எனும் ஆங்கில சொல்லுக்கு நிகரானதாக இருக்கிறது எனக் கொள்ளலாம்.

வரலாறு (வரல்+ஆறு) எனும் சொல் எப்படி வருகின்ற ஆறு (வழி) பற்றி குறிப்பிடுகிறதோ அதுபோல, ஓர் உறவு தகர்ந்ததன் ஆறு பற்றி குறிப்பிடுகிறது தகராறு(தகர்+ஆறு). எதிர்மறை மனப்பாங்குகளும், வன்முறை செயல்களும், முரண்பாடுகளும்

மனித உறவுகளைத் தகர்ப்பதால், அதனைக் குறிப்பிடும் பதம் தகராறு என்றுதான் இருக்க முடியும் எனலாம். இந்த தகர்ப்பு, தகர்வு, தகர்ந்த தன்மை பற்றி ஆழமாகத் தெரிந்து கொண்டால்தான், அந்த உறவில் எழுந்திருப்பது விரிசலா, கீறலா அல்லது உடைதலா என அறிய முடியும். வரலாறு பயின்றவர்கள் வரலாற்று ஆசிரியர்கள் என அழைக்கப்படுவது போன்று, தகராறு பற்றி ஆய்பவர்களை தகராற்று வல்லுநர்கள் என அழைக்கலாம். இந்தப் புத்தகத்தில் அவர்கள் சமாதான சேவகர்கள் அல்லது தகராறு தீர்க்கும் சேவகர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.

தகராறு பல நிலைகளில் எழலாம். ஒரு தனிமனிதனுக்குள் ஒன்றைச் செய்வதா, வேண்டாமா என்னும் தர்மச்சங்கடமும் ஒரு விதத்தில் தகராறுதான். இரு நபர்களுக்குள் எழும் தகராறுகள், சிறுதகராறுகள் (micro-conflicts) என்று அழைக்கப்படுகின்றன. பால், தலைமுறை, வகுப்பு, இனம், மொழி, சாதி, தேசியம் இவற்றின் அடிப்படையில் ஒரு சமூகத்திற்குள் எழும் தகராறுகள் 'குறுந்தகராறுகள்" (meso-conflicts) எனக் கொள்ளலாம். இரு சமூகங்களுக்குகிடையே அல்லது இரு நாடுகளுக்கிடையே எழும் தகராறுகளை பெருந்தகராறுகள் (macro-conflicts) என்று அழைக்கலாம்.இன்னும் ஆழமான இரு நாகரீகங்களுக்கிடையே எழும் தகராறுகளை மாபெரும் தகராறுகள் (mega-conflicts) என்று அழைக்கலாம்.

தகராறுக் கையாளுதலை பல்வேறு நிலைகளில் பார்க்கலாம். தகராறு தீர்வு (conflict resolution) ஒருதகராறை முற்றிலுமாக தீர்வு செய்து அதனை மறையச் செய்து விட முயல்கிறது. தகராறு மேலாண்மை (conflict management) என்பது தகராறுகளைக் கட்டுப்படுத்தி, சரியாக நிர்வகிப்பதில் கவனம் செலுத்துகிறது. தகராறு மாற்றியமைத்தல் (conflict transformation) மேற்கண்ட முறைகளிலிருந்து மாறுபட்டு, ஒரு தகராறை எப்படி மாற்றியமைத்து அதனை நேர்மறையாகக் கடந்து செல்லலாம் எனப் பார்க்கிறது.

தகராறுகளைக் கையாள நாம் பல முறைகளை பின்பற்றுகிறோம். முதலாவது, பேச்சுவார்த்தை அல்லது பேரப்பேச்சு (negotiation). தகராறு கட்சிகள் நேருக்கு நேர் சந்தித்து, ஒருவரோடொருவர் நேரடியாகப் பேசி, தமது ஈடுபாடுகள் பற்றி விவாதித்து, தங்கள் இலக்கு (goal) வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதுதான் பேச்சுவார்த்தை. இரண்டாவது, இணக்கமுறை

(conciliation). இந்த இணக்க முறையினில் ஈடுபடும் தகராற்று வல்லுநர் எந்த அதிகாரத்தையும் தன்வசம் வைத்துக் கொள்ளாது, தகராறு கட்சிகள் ஒருவரோடு ஒருவர் பேசி இணக்கமாகிக் கொள்ளத் தேவையான ஒழுங்குமுறைகளையும், சூழ்நிலைகளையும் உருவாக்கிக் கொடுப்பார். மூன்றாவது, சமரசம் (mediation). சமரசம் செய்பவர் தகராறு கட்சிகளோடு தனித்தனியாகப் பேசி அவர்களிடையே ஒரு தொடர்பு பாலமாக செயல்பட்டு, தகராறுக்கு தீர்வு காண உதவுவார். நான்காவது, நடுவர் மன்றம் (arbitration). தகராறு கட்சிகள் தங்கள் தரப்பு வாதத்தை நடுவரிடம் சொல்ல, நடுவர் அவற்றை அலசி ஆய்ந்து, ஏதேனும் ஒருவருக்கு சாதகமாக தீர்ப்பு அளிப்பதுதான் நடுவர் மன்றத் தீர்வு. ஐந்தாவது, வழக்காடுமன்றம் (litigation). தகராறு கட்சிகள் தம் சார்பாக வாதாடுவதற்கு வழக்குரைஞர்களை நியமித்து, அவர்கள் மூலம் வழக்காடு மன்றத்தை அணுகி, தீர்வு பெறுவது. இந்தத் தீர்வுக்கு எதிராக உயர்நீதி மன்றங்களில் மேல் முறையீடு செய்யலாமேயொழிய, இந்தத் தீர்ப்பை ஒத்துகொள்ளாமல் இருக்க முடியாது.

மேற்கண்ட முறைகளுள், நேரடி பேச்சுவார்த்தையில் மட்டுமே தகராறு கட்சிகள் தங்கள் சுதந்திரத்தை, இறையாண்மையை தக்க வைத்துக் கொள்ள முடியும். மூன்றாவது நபர் ஒருவரை தலையிட அனுமதிக்கும் போது, தகராறு அக்கட்சிகளின் கட்டுக்குள்ளிருந்து விடுபட்டு இன்னொருவர் ஆதிக்கத்திற்குள்ளாகிறது.

ஒரு கணவன் மனைவிக்குள் தங்களுக்குப் புதிதாய் பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்டுவதில் தகராறு எழுந்தது, இருவரும் ஒரு தீர்வினை எட்டமுடியாத நிலையில், பக்கத்து வீட்டுக்காரர் தலையிட்டார். கணவனும், மனைவியும் தங்கள் தந்தையர் பெயரையே குழந்தைக்கு வைக்க வேண்டுமென வாதிட்டனர். கணவனது தந்தையார் பெயர் ஸ்ரீனிவாஸ் என்றும், மனைவியின் தந்தையார் பெயர் கிருஷ்ணா என்றும் கேட்டு தெரிந்து கொண்ட அந்த மூன்றாவது நபர், “இதற்குப் போய் ஏன் இத்தனை தகராறு செய்கிறீர்கள்” என்று கண்டித்து, குழந்தைக்கு “ஸ்ரீனிவாஸ் கோபால கிருஷ்ணா” என்று பெயர் வைத்துவிடலாம் என அறிவித்தார்.

இதைக்கேட்ட கணவனும், மனைவியும் கோபால் என்ற பெயர் எங்கிருந்து வந்தது எனக் கேட்டனர். அதற்கு அந்த மூன்றாவது நபர் சொன்னார்: “அது எனது தந்தையின் பெயர்.” மூன்றாவது

நபர் தலையீடு தகராறை அந்நியரின் ஆதிக்கத்திற்கு கீழ் கொண்டு வருவதால் இயன்றவரை அதைத் தவிர்ப்பதே சிறந்தது. ஆனால் தகராறு கட்சிகள் ஒருவரோடொருவர் நேரடியாக பேசிக் கொள்ளும் சூழ்நிலை இல்லாத நிலையில், சமரசம் பேச தேர்ந்த நடுநிலையாளர் ஒருவரை பயன்படுத்துவதில் தவறேதுமில்லை.


தகராறு மாற்றியமைத்தல் என்பது, தகராறுச் சூழலை மாற்றியமைப்பதாகும். ஒரு புதிய யதார்த்தத்தை உருவாக்கி, ஒரு புது தோற்றத்தினை எழச் செய்கிறது. ஒவ்வாதிருந்த சூழல், ஒத்திருக்கதக்கதாய் மாறுகிறது. மாற்றியமைத்தல் என்பது ஓரிடத்திலிருக்கும் செடியை பிடுங்கி, வேறொரு இடத்தில் நடுவதற்கு ஒப்பானது ஆகும். தகராறு கட்சிகள் உருவாக்கி வைத்திருக்கும் கடினமான நிலையிலிருந்து மென்மையான, சாதகமான ஒரு நிலைக்கு மாற்றுவதுதான் தகராற்று வல்லுநரின் குறிக்கோள். தகராறுக் கட்சிகளின் இலக்குகளைத் தெரிந்து கொண்டு, அந்த இலக்குகளை படைப்பாற்றலுடன் சற்றே மாற்றியமைத்து, கட்சிகள் அனைவருக்கும் ஏற்புடைய விதத்தில் தீர்வு செய்வதே மாற்றியமைத்தலின் நோக்கம்.

இப்படி மாற்றியமைப்பதற்கு மேல்மட்டத் தகராறை (meta conflict) மட்டுமே பார்க்காது, அடிப்படைத் தகராறை (root conflict) கவனமாக அலசி ஆராய வேண்டும். தகராறில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருக்கும் கட்சிகள் அனைவரையும் சேர்த்துக் கொண்டு, அவர்களது இலக்குகளையும் கருத்திற் கொண்டு, தகராறின் பரந்துபட்ட நிலையை உணர்வது இன்றியமையாதது. இப்படி மாற்றியமைக்கப்பட்ட தகராறுக்கு உகந்த தீர்வினைத் தேடுவது நலம் பயக்கும். அழிவுக்குக் காரணமாகயிருந்த தகராறை ஆக்கத்திற்கு சாதகமாக மாற்றுவதே மாற்றியமைத்தலின் குறிக்கோள். இதில் நமது படைப்பாற்றல் திறன் முழுமையாக உபயோகிக்கப்பட வேண்டும்.

வன்முறையைத் தவிர்ப்பது மட்டுமே இதன் நோக்கமல்ல, தனிமனித மற்றும் சமூகத்தின் மொத்த வளர்ச்சிக்காக பாடுபடுவதே இதன் நோக்கம். “நான்-நீ” என்பதற்கு பதிலாக “நாம்-நாம் எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினை” என்று பரந்துபட்ட நிலையில் தகராறைக் கண்ணுறுவதே மாற்றியமைத்தலின் சாரம். மாற்றியமைத்தலுக்கு முக்கிய கருவியாய் அமைவது கருத்துப் பரிமாற்றம் (dialogue). இன்றைய உலகில், தகராறு மாற்றியமைத்தல் என்பது இவ்வுலகில் உயிர் வாழத் தேவையான

அடிப்படைத் திறமைகளுள் ஒன்று எனக் கருதலாம். மிரட்டுகின்ற மொழியினை தவிர்த்து, அன்புடன் பேசி, எதிர்தரப்பு வாதங்களை ஆழமாகக் கேட்டு, எதிர்மறை உணர்வுகளை வெளிக்கொணர்ந்து, சிறந்த புரிதலுடன், அனைவருக்கும் வெற்றி கிடைக்கும் விதத்தில் நீதிக்காக போராடுவதுதான் மாற்றியமைத்தலின் அடிப்படை. நம்பிக்கை, தீங்கு செய்யாமை, மதிப்பளித்தல், நல்லுணர்வு - இவை தகராறு மாற்றியமைத்தலில் போற்றப்படும் நற்குணங்கள்.

அருகில் உள்ள படத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு தகராறுக்கு, குறைந்தபட்சம் ஐந்து தீர்வுநிலைகளை நாம் காணலாம். ஒன்று, எதிர்தரப்பு மிக உறுதியாகயிருப்பதைப் பார்த்து பயந்தோ அல்லது பிரச்சினை வேண்டாம் என்றோ ஒதுங்கிப் போவது. இதனை பின்வாங்குதல் (withdrawal) எனலாம். இரண்டு, வன் முறையை உபயோகித்து ஒரு கட்சி தனக்கு சாதகமாக தகராறைத் தீர்த்துக் கொள்வது. மூன்று, நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அடிபணிந்து வழக்கினைத் தீர்த்து கொள்வது. நான்கு, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சமரசமாய் தகராறை தீர்த்துக் கொள்வது. ஐந்தாவது, தகராறை மாற்றியமைத்து அதனைக் கடந்து செல்வது. இது மேற்கண்ட நான்கு நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஒரு கருத்துப் பரிமாற்றத்தினை ஏற்படுத்தி, தகராறுக் கட்சிகளின் இலக்குகளை சரியாகத் தெரிந்து கொள்வது தகராறை மாற்றியமைத்து கடந்துசெல்ல பெரிதும் உதவும்.



இன்றையத் தமிழகத்தில் தகராறுகளைக் கையாள்வதில், காவல்துறையும், நீதிமன்றங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. காவல்துறையைப் பொறுத்தவரை இலஞ்சமும், அரசியல்வாதிகளின் தலையீடும் இத்துறையின் தகராறு தீர்க்கும் சாதுர்யத்தை மழுங்கடித்துவிட்டன. பல திறமையான காவல்துறை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் தகராறுகளைச் செவ்வனே தீர்த்து வைக்கின்றனர். ஆனால், காவல்நிலையங்களுக்கு வரும் பெரும்பான்மையான தகராறுகள் பணப்புழக்கத்தாலும், பதவியிலுள்ளோர் தலையீட்டாலும் நீதி பெறுவதில்லை. நேரமின்மை, வேலைப்பளு, நிதிப்பற்றாக்குறை போன்ற பல்வேறு காரணங்களால் காவல்துறை அதிகாரிகளும் திறம்பட செயல்பட முடிவதில்லை. தகராறு கட்சிகளுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் நடத்தி, கடந்து செல்வதற்கு உதவிட காவல்துறை அதிகாரிகளால் எப்போதும் முடிவதில்லை. "நான் சொல்வது போல் செய்" என்பது தான் இவர்களது பொதுவானத் தீர்வாக அமைகிறது.

நீதிமன்றங்களும் கிட்டத்தட்ட இதே நிலையில் தான் இயங்குகின்றன. நீதித்துறையிலும் போதிய அளவு நீதி மன்றங்கள், ஊழியர்கள், பிற வசதிகள் இல்லாத நிலையில், வேலைப்பளு, நேரமின்மை, கட்சிகளின் காலந்தாழ்த்தல், வழக்குரைஞர்களின் தந்திரங்கள் எனப் பல்வேறு காரணங்களால் வழக்குகள் பல ஆண்டுகள் நீடிக்கின்றன. தெளிவற்ற நிலையும், தேக்கநிலையும் ஆட்கொண்டிருக்கும் நீதிமன்றங்களால் காலவிரையமும், பணவிரையமும், மனச்சங்கடங்களுமே அதிகமாகின்றன. சென்னை மாநகரில் மட்டும் நான்கு இலட்சம் வழக்குகள் தேங்கிக் கிடப்பதாய் ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இப்படி பல சங்கடங்களுக்கும், சிரமங்களுக்கும், மன நெருக்கடிக்கும் ஆளாகி, நீதி மன்றத்தின் வாயிலாகப் பெறும் தீர்வு பெரும்பாலான நேரங்களில் ஒருதலைபட்சமாகவே அமைகிறது. இங்கே பெறப்படுகின்ற தீர்வு "வென்றவர்-தோற்றவர்" என்ற ரீதியில் தான் கட்சிகளைப் பார்க்கிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகளின் சாட்சியங்கள் தான் இங்கே முக்கியமேயொழிய கட்சிகளின் நிலைப்பாடுகளோ, கருத்துப்பரிமாற்றங்களோ அல்ல.

அரசுசாரா நிலையில், தகராறுகள் ஊர் பஞ்சாயத்துகளாலும், கட்டப் பஞ்சாயத்துகளாலும், முக்கியமான மூன்றாம் நபர் தலையீடுகளாலும் தீர்த்து வைக்கப்படுகின்றன. தமிழகத்தின்

கிராமப்புறங்களில் ஊர் பஞ்சாயத்துகளின் கொடுங்கோல் ஆட்சி இன்றும் நிலவி வருகிறது. பெரும்பான்மையான ஊர் பஞ்சாயத்துகள், சாதிவெறி, பெண்ணடிமை, பாரபட்சம் என பல கொடூரங்களுக்கு ஆட்பட்டே செயல்படுகின்றன. ஊர் பஞ்சாயத்துகளின் தகராறு தீர்வில் கருத்துப் பரிமாற்றத்திற்கோ, மீளிணக்கத்திற்கோ இடம் ஏதுமில்லை. எந்தவிதமான அறிவியல் அடிப்படையுமின்றி, தான்தோன்றித்தனமாகத் தீர்ப்பளித்து, அந்தத் தீர்வினை கொடூரமான முறையில் நிறைவேற்றுகின்றனர். ஊரிலிருந்து நீக்கி வைப்பது, ஊர்க்காரர்களுடன் பேசவிடாமல் செய்வது, தண்ணீர் தர மறுப்பது, பலவிதங்களில் அவமானப்படுத்துவது, சில நேரங்களில் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் கொடுமைப்படுத்துவது என இவர்களின் அட்டூழியங்களுக்கு அளவேயில்லை.

ஊர் பஞ்சாயத்துக்களைவிட கொடூரமானவை கட்டப் பஞ்சாயத்துக்கள். இவையும் சட்ட பூர்வமானவை அல்ல. அரசியல் அதிகாரம், அடியாள் பலம், பணபலம் என்பன போன்ற உபாயங்களை வைத்துக் கொண்டு, ஒரு தனிநபரோ அல்லது ஒரு சிறு குழுவோ தகராறுகளில் தலையிட்டு, பலவீனமான கட்சிக்கு எதிராக ஒருதலைப் பட்சமாக தீர்ப்பு சொல்லி, பலனடை வோரிடமிருந்து பணமும், பல்வேறு இனாம்களும் பெறுவதே கட்டப்பஞ்சாயத்து என அழைக்கப்படுகிறது. சமூக எதிரிகளான இந்த அராஜகவாதிகள் கையில் சிக்காமலிருப்பதே சிறப்பு.

தகராறுகளில் சிக்கியிருப்போர் தமக்குத் தெரிந்த, தாம் மரியாதை வைத்திருக்கும் அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசு அதிகாரிகள் போன்றோரிடம் முறையிட்டு எதிர்தரப்பையும் அழைத்துப் பேசி சமரசம் செய்து வைக்கக் கேட்டுக் கொள்வதும் வாடிக்கை. இந்த மூன்றாம் நபர் சமரசம் கட்டப் பஞ்சாயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இதில் மிரட்டலோ, வன்முறையோ, பணம் கைமாறலோ நடப்பதில்லை. ஆனாலும், இம்மாதிரி சமரசத்தில் ஈடுபடுவோர் தகராறு தீர்வு பற்றியோ, சட்ட நுணுக்கங்கள் பற்றியோ, பேச்சுவார்த்தை நடத்துவது மற்றும் ஒப்பந்தங்கள் ஏற்படுத்துவது பற்றியோ பெரிதாக அறிந்திருப்பதில்லை. தகராறு தீர்க்கும் பயிற்சிப் பற்றி நமது பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ எவ்விதமான பாடங்களோ, பயிலரங்கங்களோ நடத்தப்படுவதில்லை. தகராறுகளைக் கையாள்வது பற்றி நமது புராணக்கதைகளிலிருந்தும்,

காவியங்களிலிருந்தும், கவிதைகளிலிருந்தும் மறைமுகமாகவே நாம் படிக்கிறோம். உதாரணமாக, பாரதியார் சொல்கிறார்:

ஐந்துதலைப் பாம்பென் பான்அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லி விட்டால்,
நெஞ்சு பிரிந்திடு வார்பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்.

“பாரத சனங்களின் தற்கால நிலைமை” பற்றிய அந்தக் கவிதையில் பாரதியார் இன்னும் சொல்கிறார்:

ஆத்திரங் கொண்டே இவன் சைவன்இவன்
அரிபக்தன் என்றுபெருஞ் சணடையிடுவார்.

இதுபோன்ற கவிஞர்களின் சாடல்கள், அங்கலாய்ப்புகள், ஏளனங்கள் மூலம் தகராறு அணுகுமுறைகள் பற்றி மறை முகமாகப் படிக்கிறோமேயொழிய, சரியான கையாளுதல் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள இயல்வதில்லை. தமிழின் நன்னெறி நூல்களான திருக்குறள், நாலடியார், பழமொழி போன்றவை தகராறு சம்பந்தமாக எண்ணற்ற அருங்கருத்துக்களைச் சொன்னாலும், அவை பிற கருத்துக் குவியல்களின் கீழே புதைந்தே கிடக்கின்றன.

குரங்கு அப்பம் பங்குவைத்த கதை, குறுகிய பாலத்தை ஒரே நேரத்தில் கடக்க முனைந்த ஆடுகள் ஆற்றில் விழுந்த கதை போன்ற நல்வழிக் கதைகள் கூட தகராறு கையாளுதல் பற்றியக் கருத்துக்களை மறைமுகமாகவேச் சொல்கின்றன. நமது பழமொழிகளும், அன்றாட வாழ்வில் உபயோகிக்கும் அடை மொழிகளும்கூட சூட்சுமமான கருத்துக்களைச் சுற்றி வளைத்தேச் சொல்கின்றன. உதாரணமாக, ‘எரிவதை இழுத்தால், கொதிப்பது அடங்கும்,’ ‘பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுவது’ போன்ற பல வாசகங்களைச் சொல்லலாம்.




தன் கன்றை இழந்த பசு ஆராய்ச்சி மணியை அடித்தவுடன், தனது மகன்தான் தேரினை ஏற்றி அந்தக் கன்றினைக் கொன்றவன் எனத் தெரிந்ததும், மகனையே பலியிட்டு நீதியை நிலை நாட்டியிருக்கிறான் மனுநீதிச் சோழன். இதுபோன்ற கதைகள் தகராறு பற்றிய பல பாடங்களை நமக்குப் புகட்டுகின்றன. தமிழரின் தகராறு கையாளும் தகைமைக்கு தக்க எடுத்துக்காட்டுகள் நிறைய உள்ளன. மனிதனுக்கும்-மிருகத்துக்கும் இடையே எழுந்த தகராறுபற்றிக் கூட நமது முன்னோர் சிந்தித்திருக்கின்றனர்.

இவை தவிர, தெனாலிராமன், பீர்பால், முல்லா நஸ்ருதீன் போன்ற பிறமொழி, பிற கலாச்சாரக் கதைகளும் உதவுகின்றன. எனினும் பல்வேறு மதங்களைச் சார்ந்த, பல நூறு மொழிகள் பேசும், பற்பல இன, சாதிகளைச் சார்ந்த, நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் வாழும் நமது நாட்டில் தகராறு தீர்வுகள் பற்றிய கல்வி மிகவும் இன்றியமையாதது. “வேற்றுமையே வாழ்வின் நியதி” என்ற அடிப்படை சித்தாந்தத்தில் அமைக்கப்பட்டுள்ள நமது சமூகத்தில், தகராறு கையாளுதல் பற்றிய பயிற்சி மிக முக்கியமானதாக அமைகிறது. சாதி மதக் கலவரங்கள், மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பங்கீட்டு பிரச்சினைகள், அண்டை நாடுகளுடனான எல்லைத் தகராறுகள், காஷ்மீர் போன்ற நீண்டநாள் பிரச்சினைகள், இவை அனைத்திற்கும் மேலாக, தீவிரவாதம், அபாயகரமான அணுகுண்டுகள் குவிப்பு என பல்வேறு வன்முறைகள் தலைதூக்கி நிற்கும் நமது சமூகத்தின் நாளைய தலைவர்களுக்கு, உரிய தகராறு தீர்க்கும் பயிற்சி அளிப்பது நமது தலையாய கடமை.

தகராறு தீர்க்கும் கலையில் நமது தமிழ் சமூகம் ஏனைய

தெற்காசிய சமூகங்களைப் போல பின்தங்கியே இருக்கிறது. தமது தரப்பை குறைகள் ஏதுமற்ற பத்தரை மாற்றுத் தங்கம் எனக் கொள்வதும், எதிர் தரப்பை நிறைகள் ஏதுமற்ற பைத்தியக்காரக் கூட்டமென்றும் கொள்கிறோம். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமும் கிடையாது, அது மல்லிகையும் அல்ல என்னும் முரட்டுவாதமே மேலோங்கி நிற்கிறது. கோபமாக குரலை உயர்த்திப் பேசுவதால், சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்வதால், தமது தரப்பு வாதம் நியாயமாகிவிடும் என்றே பலரும் கருதுகின்றனர். வெற்றுவார்த்தைகளால் வீராவேசமாகப் பேசுவதை விடுத்து, எதிர்தரப்பின் நியாயங்களைப் புரிந்து, அவற்றை அங்கீகரித்து, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதுதான் உண்மையான வீரம் என்பதை உணர மறுக்கிறோம். எதிர்தரப்பின் உண்மைகளை, நியாயங்களை உணர்ந்து, அவர்களை மனிதர்களாக பாவித்து, அவர்களோடு கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபடுவது பலவீனமான செயல் என்று அஞ்சுகிறோம்.

“சிறியோர் செய்த சிறுபிழையெலாம் பெரியோராயின் பொறுத்தற் கடனே” என்ற பெருந்தன்மை, விட்டுக் கொடுக்கும் இயல்பு, மறப்போம், மன்னிப்போம் என்னும் மனப்பாங்கு மறைந்து, வெட்டு, குத்து, கொலை போன்ற வெறிச் செயல்களுக்குள் புதைந்து கொண்டிருக்கிறோம். தமிழக அரசியலிலும், தமிழ் திரைப்படங்களிலும், சின்னத்திரைத் தொடர்களிலும், ஏனைய கலாச்சார வெளிப்பாடுகளிலும், முரட்டுத்தன்மையும், உரத்தகுரலும், அடிபிடி சண்டையுமே மேலோங்கி நிற்கின்றன. இந்த அசிங்கமானக் கலாச்சாரப் போக்கினை தடுத்து நிறுத்தி, தமிழ் இளைஞர்களின், தமிழ் கூறும் நல்லுலகின் தலைவிதியை மாற்றியமைப்பது இந்நூலின் முக்கியமான குறிக்கோள்களுள் ஒன்று.

தகராற்று வல்லுநர்களுக்கும், சமூக அறிவியலாளர்களுக்கும், காவல்துறை, நீதித்துறை போன்றவற்றில் பணிபுரிபவர்களுக்கும், பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மனோதத்துவ நிபுணர்களுக்கும், மதகுருமார்களுக்கும்மொத்தத்தில் மனிதராய் பிறந்த அனைவருக்குமே உபயோகப்படுவதுதான் இந்நூல். இந்நூலைப் பயிலும் ஒவ்வொருவரும் தகராறு தீர்க்கும் பயிற்சியை தனதாக்கிக் கொண்டு, பிறரையும் பயிற்றுவித்து, ஏனையோருக்கும் இது பற்றி சொல்லித் தர அன்புடன் கேட்டுக்

கொள்கிறேன்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னது போல,
“புதியதோர் உலகம் செய்வோம் கெட்டப்
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்”.

# ஆசிரியர் முன்னுரை

## முனைவர் யொஹான் கால்டுங்

தகராறு என்பது குறைந்தபட்சம் இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படும் நோக்கங்களின் முரண்பாடு ஆகும். வாழ்க்கையும் நோக்கங்களும் இணைபிரியாதவை. வாழும் உயிரினங்களுக்குத்தான் நோக்கங்கள் இருக்க முடியும். நோக்கங்கள் இல்லாத பட்சத்தில் வாழ்க்கை முடிவடைந்துவிடுகிறது அல்லது தேங்கிவிடுகிறது. நமது நோக்கங்களை அடையும் பொருட்டே நாம் வாழ் நாள் முழுவதும் பாடுபடுகிறோம்.

எங்கே நோக்கங்கள் இருக்கின்றனவோ, அங்கே முரண்பாடுகள் எழுவது இயல்பு. சில நோக்கங்கள் மிகவும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. அவை பூர்த்திசெய்யப்படாத பட்சத்தில் வாழ்க்கையும் மனித நேயமும் சாத்தியமற்றுப் போகின்றன. உயிர் வாழ்தல் (survival), நல்வாழ்வு (well-being), அடையாளம் (identity), சுதந்திரம் (freedom) என்பன மனிதனின் இன்றியமையாத தேவைகள். இந்தத் தேவைகளுக்கு ஊறு விளையும் போது தகராறுகளுக்கான வாய்ப்புகள் உருவாகின்றன.

தனிமனிதனுக்குள் எழும் தர்மசங்கடங்கள், இருநபர் களுக்கிடையே ஏற்படும் பூசல்கள் போலவே, இருபாலர் (genders), வகுப்பார் (classes), இனத்தார் (races), அரசுகள் (states), நாடுகள் (nations), பிராந்தியங்கள் (regions), நாகரீகங்கள் (civilizations) இவற்றுக்கிடையே தகராறுகள் ஏற்படுகின்றன. இதை நாம் ஊடகங்கள் வழியே அன்றாடம் கேள்விப்படுகிறோம். இன்றைய உலகில் அரசுகளும் முதலாளித்துவமும் ஒரு பக்கம் நின்று, உலகமயமாதல் என்ற பெயரில் பொது மக்களோடு பிணங்கி நிற்பதையும் காண்கிறோம். ஒரு தகராறு என்று எடுத்துக் கொண்டால், குறைந்தபட்சம் இரண்டு நோக்கங்களை காண

முடியும். நோக்கங்களுக்கிடையே எழும் முரண்பாடுகள், உறவுகளுக்கிடையே விரிசலை உருவாக்குகின்றன. உறவுகளுக்குள் விரிசல் ஏற்படும்போது, கோபம், கடும் வெறுப்பு, இட்டீடு, அலட்சியம், பாராமுகம் போன்ற உணர்வுகளுக்கு ஆளாகிறோம்.

இவ்வாறாக தகராறு நம்மை, நமது உணர்வுகளை, நமது எண்ணங்களை முழுமையாக ஆட்கொள்கிறது. சில சமயங்களில் உணர்வுகளுக்கு அடிமையாகி சொற்போர்களிலும், கை கலப்புகளிலும் ஈடுபட்டுவிடுகிறோம். இந்தப் புத்தகத்தில் நிஜ வாழ்க்கையிலிருந்து நாற்பது நிகழ்வுகளை எடுத்துச் சொல்கிறேன். முதலில், புகழ்பெற்ற ஆரஞ்சு பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். ஒரு சிறுவனும், ஒரு சிறுமியும் ஒரே ஆரஞ்சு பழத்திற்காக தகராறு செய்வதுதான் பிரச்சினை.

நான் ஒரு முறை லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டோரிடம் இந்த ஆரஞ்சு பிரச்சினைக்கு தீர்வுகாண சொன்னேன். அதில் 8 வயதான ஓர் ஆங்கில பள்ளிச் சிறுமி ஆரஞ்சை உரித்து அதிலுள்ள சுளைகளை எண்ணி சரி பாதியாக பங்கிட்டு கொள்ளலாம் எனச் சொன்னாள். சில ஆண்கள் கத்தியால் வெட்டி ஆரஞ்சைப் இரண்டாக பிரித்து கொள்வதாகச் சொன்னார்கள். இன்னும் சிலர் ஆரஞ்சைப் பிழிந்து சாறு எடுத்து அதை சமமாக பங்கிட்டு கொள்வதாகச் சொன்னார்கள். சிலர் நாணயத்தை பூவா தலையா போட்டு தகராறை தீர்த்துக் கொள்ளலாம் எனக் கருதினார்கள். சிலர் ஆரஞ்சை சிறுமியிடம் விலைகொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என்றார்கள்.

சிறிய கால அவகாசத்திற்குப் பிறகு படைப்புத்திறன் கொண்ட தீர்வுகள் வெளிவரத் துவங்கின. சில குழந்தைகள் அந்த ஆரஞ்சை வெறும் விளையாட்டுப் பொருளாக உபயோகிக்கலாம் என்றார்கள். இரு இந்திய சிறுமிகள் வெறுமனே ஆரஞ்சை பார்த்துக் கொண்டிருக்கலாம், சேர்ந்து அந்த அழகினை ரசிப்பது அதை பகிர்ந்து கொள்வதற்கு சமம் என்றார்கள். சிலர் அந்த ஆரஞ்சு தோலைக் கொண்டு குவளைகள் செய்யலாம் என்றும், கேக் செய்யலாம் என்றும், ஆரஞ்சை ஏலத்தில் விற்கலாம் என்றும், துண்டு குலுக்கிப்போட்டு முடிவு செய்யலாம் என்றெல்லாம் தீர்வுகளைச் சொன்னார்கள்.

இறுதியாக, ஆரஞ்சு விதைகளை விதைத்து சில

வருடங்களுக்குள் அதன் பலனை அனைவரும் அனுபவிக்கலாம் என்ற அருமையான தீர்வை எடுத்துச் சொன்னார்கள். எவ்வளவு அதிகமான தீர்வுகளை நாம் கண்டு கொள்ள முடிகிறதோ, அந்த அளவுக்கு தகராறுகளில் வன்முறையை தவிர்க்க முடியும். தகராறுகளால் வன்முறை எழாமல் இருக்கவும், தகராறு தரும் உத்வேகத்தைப் படைப்புத் திறன் மிக்க தீர்வுகளாக மாற்றுவதற்கும், அதிகமான தீர்வுகளை கண்டு கொள்ள வேண்டியது அவசியம்.

# 1

## சிறு தகராறுகள்:

### மனிதனுக்குள் மற்றும் மனிதருக்கிடையே எழும் முரண்பாடுகள்

ஒரு தகராறினை எதிர்கொள்ளும் போது நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, உங்களுக்குள் எவ்வளவு அமைதி அல்லது மனபக்குவம் இருக்கிறது என்பதைச் சொல்ல முடியும். எல்லாவற்றையும் இலகுவாக எடுத்துக்கொண்டு வெளியே எந்த உணர்வுகளையும் காட்டிக் கொள்ளாது இருக்கும் பட்சத்தில், அனைவரும் உங்களை விரும்புவார்கள். அதுவே ஒரு பழக்கமாகிப் போகும்போது, உங்களின் நிச்சலமான தன்மை உங்களுக்கே தலைவலியாக மாறும் வாய்ப்பு உள்ளது. அடையமுடியாத நோக்கங்களால் எழும் மாற்றங்கள், வருத்தங்கள் உங்களுக்குள்ளும், உங்களுக்கு அருகிலுள்ளோரோடும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம். வேறு சிலர் தகராறுகளை கண்ணுற்று எரிமலை போல வெடித்துச் சீறலாம். அந்தச் சீற்றத்துக்கு பலியாவோரை எண்ணிப்பார்த்தால், இச்சீற்றம் இவ்விருவருக்குமே பிரச்சினைகளை உருவாக்குவதாக அமையும்.

ஒருவரின் தகராறு பாணி (conflict style) என்பது இவ்விரு முறைகளையும் தாண்டி எத்தனையோ உணர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கும். எரிமலை போன்றும், பாராமுகமாகவும், ஒரு தகராறினைக் கையாள்வது

தோல்விகரமான அணுகுமுறை. தகராறு தரும் சவாலை எடுத்தாள்வதும் அந்த முரண்பாட்டினை நிவர்த்தி செய்வதும் தகராறினை தீர்த்துக் கொள்வதும்தான் உரிய வழி. இதைச் செய்வதற்கு தேவை நமது புத்திசாலித்தனம். தகராறுகளை அலசி, ஆராய்ந்து புரிந்து கொள்வது முக்கியம். உணர்வுகள் நம்மை ஆட்கொள்வதற்கு முன், நாம் அவற்றை சரிவர கைக்கொள்வது அவசியம். இந்த மாதிரியான தடுப்பு நடவடிக்கைகளுக்கான உத்திகளை வழங்குவதே இப்புத்தகத்தின் நோக்கம். நமது அன்றாட வாழ்வில் நிகழும் சில உதாரணங்களை எடுத்துக்கொள்வோம்.



அடிக்கடி நீண்டதூரம் விமானப் பயணம் செய்யும் ஒரு கணவன் மனைவிக்கிடையே ஒரு தகராறு எழுகிறது. இருவரும் அருகருகே உட்கார விரும்புகிறார்கள். ஆனால் அதேநேரம் கால்களை நீட்டிக்கொள்ளவும், கழிப்பறைக்குச் செல்லவும், பாதையோர இருக்கை (aisle seat) தான் உன்னதமாக இருக்கும். கணவன், மனைவி இருவருக்கும் யார் அந்த இருக்கையில் அமர்வது என்பது பிரச்சினை ஆகிறது. அதற்கு தீர்வு, பாதி பயணத்தில் சன்னலோர நாற்காலியில் அமர்பவர் பாதையோர நாற்காலிக்கும், பாதையோர நாற்காலியில் அமர்பவர் சன்னலோர நாற்காலிக்கும் மாறிக்கொள்ளலாம். ஒவ்வொரு பயணத்தின் போதும் ஒருவர் பாதையோர இருக்கையில் அமர்வது, விமான

பயணத்தை தவிர்ப்பது போன்ற தீர்வுகளும் உள்ளன. அப்படி என்றாலும் இருவருள் ஒருவர் அதிருப்தியுடனேயே பயணம் செய்ய வேண்டியதாகின்றது. இந்தப் பிரச்சினையை உன்னிப்பாக அலசும் போது, இருவரையுமே திருப்தி அடையச்செய்யும் தீர்வு தென்படுகிறது. நடைபாதையின் இருபக்கமும் உள்ள நாற்காலிகளில் இருவரும் அமரும் போது, அருகருகே அமர்ந்து அளவளாவும் வாய்ப்பும் கிடைக்கிறது. தோன்றும் போதெல்லாம் எழுந்து செல்லும் வாய்ப்பும் கிடைக்கிறது. அந்த தம்பதியரின் இருக்கைகளுக்கு இடையே இருக்கின்ற இடைவெளி ஒரு தடையாக அல்லாது, ஒரு நேர்மறை அம்சமாக மாறிடும் வாய்ப்பும் உள்ளது.

உடை:

ஒரு 43 வயதான தாய் தனது உயர்நிலைப் பள்ளி வகுப்பின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவிற்காக புறப்படுகிறார். தனது வயதிற்கு பொருந்தாத, சற்றே இளமையாக தோற்றம் தரும் ஆடையை அணிந்திருக்கிறார். அவருக்கு 18 வயதில் ஒரு மகளும் இருக்கிறார்.


மகளை மிகவும் பரிவான அதே நேரத்தில் உண்மையான குணநலத்துடன் வளர்த்திருக்கிறார். இந்நிலையில் விழாவிற்கு புறப்படும் தாய், அந்த ஆடையை அணிந்து கொண்டு மகளின் ஆமோதிப்புக்காக அவளைப் பார்க்கிறார். மகளின் பதில் பரிவுடனும் உண்மையுடனும் இருக்க வேண்டும் என எதிர் பார்க்கிறார். மகளுக்கோ என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அம்மா "நீங்கள் அழகாக இருக்கிறீர்கள்" என்று ஒப்புக்கு சொல்லலாம் அது உண்மையான பதிலாக இருக்க முடியாது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு அணிய வேண்டிய உடையை இப்போது அணிந்திருக்கிறீர்களே என்று உண்மையான பதிலைச் சொல்லலாம். ஆனால் அதில் பரிவு ஏதும் இருக்க முடியாது. உண்மையான பதிலை மகள் சொன்னால் அம்மாவுக்கு வேதனையாகவும், விரக்தியாகவும் இருக்கலாம். கோபம் கூட வரலாம்.

இந்நிலையில் மகள், "அம்மா, நீங்கள் அம்சமான பெண். அந்த நீல உடை உங்களுக்கு இன்னும் பொருத்தமாக இருக்கும்" என்று பொருத்தமான உடையைச் சொல்லலாம். இந்தமாதிரியான அணுகுமுறை நேர்மறையாகவும், ஆக்கப்பூர்வமான ஆலோசனை

கொண்டதாகவும், தாய்மகள் உறவின் எதிர்கால பரிணாமத்தை பலப்படுத்துவதாகவும் உள்ளது. இந்த மாதிரியான தகராறு தீர்க்கும் திறமையை வளர்த்துக் கொள்வது எப்படி என்பதைப் பார்ப்போம். இந்தப் பிரச்சினையை X அச்சு Y அச்சு வரைபடத்தைக் கொண்டு குறியீடு செய்யும் போது கீழ்காணும் நிலைகளை நாம் கண்டறிய முடிகிறது.

முதல் இரண்டு நிலைகளைப் பார்க்கும் போது, ஒருவருக்கு வெற்றியும் மற்றொருவருக்கு தோல்வியும் என்பது உறுதியாகிறது. தோற்றவர் தமது தோல்விக்கு பழிவாங்க முற்படும்போது, வெற்றி அர்த்தமற்றதாகி விடுகிறது. மூன்றாவது நிலை பல விஷயங்களைக் குறிப்பிடுகிறது. பிரச்சனையின் தீர்வுக்கு இன்னும் காலம் கனியவில்லை அல்லது தற்சமயம் பிரச்சனைக்கு தீாவு காண நம்மால் இயலவில்லை அல்லது பிரச்சினையை சற்று தள்ளிப்போடலாம் என்பது போன்ற பல விதங்களில் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். நான்காவது நிலை இரு தகராறு கட்சிகளும் ஓரளவு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற ஒத்திசைவினை (compromise) குறிக்கிறது. ஐந்தாவது நிலை தகராறைக் கடந்து, ஒரு நேர் மறை அணுகுமுறையைக் குறிப்பிடுகிறது. இது 50-50 என்ற சமரச அணுகுமுறை போலல்லாமல், வெற்றி நிலை போன்றுமல்லாது, கற்பனைத் திறனும், படைப்புத் திறனும் கொண்ட ஒரு நிலை. இந்நிலையில் சமரசம் மற்றும் பேரப்பேச்சு இவைகளை முற்றிலுமாக நிராகரிக்கவில்லை. ஆனால் முரண்பாடுகளை கடந்து செல்லும் காலாதீதம் (transcendence), கருத்துப்பரிமாற்றம் (dialogue) முக்கியமானவை. இந்த கடந்து செல்லும் முறையினால் ஒரு தகராறை நிர்வகிக்கும் முறையை மாற்றியமைக்க முடிகிறது. ஒரு தகராறைப் பள்ளிக்கணக்கு போன்று முற்றிலுமாக தீர்வு செய்துவிட முடியாது. ஏனென்றால் நிஜ வாழ்க்கை மிகவும் சிக்கலானது.





ஒரு தகராறைக் கடந்து செல்வது என்பது நோக்கங்களை சற்றே மாற்றியமைத்து, அதனை ஏற்றுக் கொண்டு, தீர்வினைத்தேடி, நீடித்த, நிலைத்த தன்மையதாக்கிக் கொள்வதாகும்.

சூரியன்:

ராமு, சோமு என இருவர் ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வீடுகளும், தோட்டங்களும் கீழ்காணும் படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அமைந்திருந்தன.

ராமு ஒரு தோட்டக்காரர். தனது வீட்டின் முன்பு ஒரு பெரிய தோட்டத்தை அமைத்திருந்தார். சோமு என்பவர் மாலை வேளைகளில் சூரியன் மறைவை ரசித்தவாறே தேநீர் அருந்தும் பழக்கம் கொண்டவர். ராமு வீட்டு தோட்டம் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருக்கிறது. அது சோமு மாலை வேளைகளில் சூரியன் மறைவை பார்ப்பதற்கு தடை ஏற்படுத்துகிறது.




இந்த நிலையில், இந்த தகராறை கடந்து செல்வதற்கு பல தீர்வுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று சோமு மாலையில் தேநீர் அருந்துவதற்குப் பதிலாக காலையில் அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். இருவருமே விட்டுக் கொடுக்க வேண்டும் என்னும் பாரம்பரிய முறைக்குப் பதிலாக, தகராறு கட்சிகளுக்குள் ஒருவர் தமது ஈடுபாட்டை மாற்றி அமைத்துக் கொள்வது சிறந்தது தான். இன்னும் ஒரு தீர்வு தேநீர் மேசையை தோட்டத்தின் வடகிழக்குப் பகுதிக்கு மாற்றி, ராமுவும் சோமுவும் சேர்ந்தே மாலை வேளையில் தேநீர் அருந்துவதாகும். மேசையை இரண்டு பேர் சொத்துக்களின் எல்கையில் போட்டு ராமு அந்தப் பக்கமும் சோமு இந்த பக்கமும் அமரும் போது இருவரது தேவையும் பூர்த்தியாகின்றன. இந்த அமைப்பின் படி ராமு தனது தோட்டத்தை ரசிக்க முடியும். சோமு சூரிய அஸ்தமனத்தை கண்டுகளிக்க முடியும். இருவரும் சிறந்த நண்பர்களாக மாறக்கூட வாய்ப்பு உள்ளது.



ஒரு தகராறு தீர்வில் கருத்துப் பரிமாற்றம் முக்கியப் பங்கேற்கிறது. கருத்து பரிமாற்றம் என்பது ஒரு தொடர்ச்சியான தேடல், வினவுதல். இவை அனைத்தும் ஒரு குறிப்பிட்டத் திசையை நோக்கி நகர்வதாக இருக்கும். பிரச்சினையின் தன்மைப் பற்றியும், தகராறின் விவரங்கள் அடங்கிய வரைபடத்தை உருவாக்குவது பற்றியும், தகராறுக்கு என்னென்னத் தீர்வுகள் இருக்கின்றன என்பது பற்றியும் தேடுவது, ஒரு தகராறின் எதிர்கால போக்கு குறித்து சிந்திப்பதாக அமையும்.

கருத்து பரிமாற்றத்தில் கட்சிகளின் நிலைப்பாடுகள் குறித்த ஆச்சரியக் குறிகள் கேள்விக்குறிகளாக மாறுவது ஒரு திருப்பு முனையாக இருக்கும். அதாவது தத்தம் நிலைகளில் உறுதியாக இருக்கும் கட்சிகள் அவை குறித்து கேள்விகள் எழுப்பத் துவங்கும் போது கருத்து பரிமாற்றம் வலுப்பெறுகிறது. ஒரு தகராறு தீர்வுக்காக நீதி மன்றத்திற்கு செல்லும் போது எந்த கட்சி சரியானவர், குற்றமற்றவர், பொறுப்பானவர் என்பதை தீர்மானிப்பது தான் வழக்காடு மன்றத்தின் பணியாக இருக்கும்.

நீதிமன்ற வழக்கில் ஒத்திசைவு, காலாதீதம் (transcendence) அசாதாரணமானவை. கட்சி ஒன்று சரியானவர், கட்சி இரண்டு தவறானவர். அல்லது கட்சி ஒன்று தவறானவர், கட்சி இரண்டு சரியானவர் என்னும் இரண்டு நிலைகளை மட்டுமே நீதிமன்றம் பார்க்கிறது. மூன்றாவதாக, வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதும் அல்லது கட்சிகள் நீதிமன்றத்திற்கு வெளியே ஒரு தீர்வைக் கண்டுகொள்வதுமான ஒரு நிலையும் உள்ளது.

இப்படியாக நீதிமன்றம் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே

இயங்குகிறது. நீதி என்பது தகராறின் தீர்வைப் பற்றி கவலைப்படாது, சட்டத்தை மட்டுமே பார்க்கிறது. வழக்கில் தோற்பவர் மேல்முறையீடு செய்யலாம். அதிலும் தோல்வி அடையும் போது, நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதி முடிவாகிறது. இதில் எழும் தீர்வு நீடித்த நிலைத்த உறவுக்கு வழிவகுப்பது அரிது.

அலமாரி:

இந்த மூலநூல் ஆசிரியருக்கும் அவர் மனைவிக்கும் ஸ்பெயின் நாட்டில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டின் முன்பக்கம் நண்பர்கள் தங்குவதற்கு ஒரு சிறிய குடிலை அமைத்தனர். ஒரு கட்டில், ஒரு மேசை, இரண்டு நாற்காலி, ஒரு சிறிய சமையல் மேசை, சிறிய கழிப்பறை இவை மட்டுமே அந்த குடிலில் அமைக்கப்பட்டன.

இதை பார்த்த அவரது மனைவி துணிகளை எங்கே தொங்க விடுவது என்று கேட்டார். இதைப் பற்றி சிந்திக்காத நூல் ஆசிரியரோ தனது தவறை ஒத்துக் கொள்வதற்குப் பதிலாக, ஸ்பெயின் நாட்டில் எதற்கு துணி வேண்டும் என்று வினவினார். மனைவிக்கு அந்த பதில் ஏற்புடையதாக இல்லை.

நூல் ஆசிரியர் சொன்னார்: துணிகளை ஒரு பெட்டியில் வைத்து கட்டிலுக்குக் கீழே தள்ளி விடலாம் என்று. மனைவியார் ஏற்றுக் கொள்ளாத நிலையில், அருகில் உள்ள வாகன அறையில் (garage) துணிகளைத் தொங்க விடலாம் என்று சொன்னார். பிரச்சனைக்குத் தீர்வு எழாத நிலையில், என்ன செய்வது என சிந்தித்துக் கொண்டிருந்தனர். இந்நிலையில் குடிலில் வேலை செய்வதற்காக தச்சர் வந்தார். நிலைமையை அவரிடம் சொன்ன போது, “இதில் என்ன பிரச்சினை இருக்கிறது, எளிதாக தீர்த்து விடலாம்” என்றார். இந்த தீர்வு எதுவாக இருக்க முடியும்?

நூலாசிரியர் வெற்றி பெறுவதாக இருந்தால் துணி வைப்பதற்கு அலமாரியே தேவை இல்லை என்றாகும். மனைவியார் வெற்றி பெறுவதாக இருந்தால், மேசை, நாற்காலிகளை நீக்கிவிட்டு அலமாரியை நிறுவுவதாக அமையும். ஓத்திசைவு ஏற்பட்டால் மேசைகளின் அளவை குறைத்து ஒரு சிறிய அலமாரியை உள்ளே புகுத்துவதாகக் கொள்ளலாம். எந்தத் தீர்வு ஏற்றுக் கொள்ளப் படுவதாக இருந்தாலும், அனைவருக்குமே முழு திருப்தியை ஏற்படுத்துவதாக இருக்காது. இந்தப் பிரச்சினைக்கு காலாதீதமான தீர்வு என்பது அந்த தச்சர் கண்களுக்கு மட்டுமே இலகுவாகத் தென்பட்டது. மேசைகளுக்கு மேலே உள்ள சுவரில் ஒரு

அலமாரியை நிறுவி, ஒரு நீளமான இரும்புக் கம்பியால் துணிகளைத் தொங்க விட்டுக் கொள்ளலாம் என்று சொன்னார்.

இந்த மாதிரி பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது படைப்பாற்றல் முக்கிய பங்காற்றுகிறது. இந்த படைப்பாற்றல் முந்தைய தகராறு தீர்வு அனுபவங்களிலிருந்து பெறப்படலாம். இரண்டாவதாக, தகராறு கட்சிகள் இருவருமே பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ள எண்ணங்கள் படைப்பாற்றலைத் தடுக்கின்றனவா எனப் பார்ப்பது முக்கியம். தகராறு சேவகர் (conflict worker) கண்ணுக்கு புலனாகாதவற்றைப் பார்க்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

விசுவாசமின்மை:

ஒரு கணவன்மனைவிக்குள் சிறு விரிசல் ஏற்படுகிறது. மனைவியின் நெருங்கிய தோழியோடு கணவர் தகாத உறவு வைத்திருக்கிறார். அந்தத் தோழி தொலைபேசியில் கூறிய செய்தியைக் கேட்ட மனைவி, கணவரின் நடவடிக்கைகளை அவதானித்தபோது இது தெரியவருகிறது. மணவாழ்க்கை, குடும்ப அமைதி, குழந்தைகளின் நலம் என அனைத்துமே பறிபோய்விடுமோ என்ற நிலையில், மனைவி கடும் கோபம் அடைகிறார். ஆனால் கணவரோ தான் செய்த காரியம் மனைவிக்கு எதிரானது அல்ல என்று நினைக்கிறார். ஒரேநேரத்தில் இரண்டு பெண்களை நேசிப்பது முற்றிலும் சாத்தியமானது என்பது அவர் கூற்று. சமூகம் இதை ஏற்றுக் கொள்ளாது என்பதைத் தெரிந்திருந்தாலும், தான் செய்தது மிகப்பெரிய தவறு அல்ல என்று நினைக்கிறார். இந்தத் தொலைபேசியினால் தனது குடும்பம், குழந்தைகள் நலம், தனது தோழி என அனைத்தையுமே இழக்கும் நிலை ஏற்பட்டு விட்டதே என வருந்துகிறார்.

அந்த இரண்டாவது பெண் தனது நெருங்கிய தோழியை ஏமாற்றிவிட்டோமே என வருந்துகிறார். மனைவிக்கு கணவர் செய்த துரோகத்தை விட இது பெரியது அல்ல என்றாலும், தான் செய்த தவறால் தன்னை ஓர் இழிந்த பிறவியாக எண்ணி வேதனைப் படுகிறார். ஆனால் அதேநேரம் தனது தோழியின் கணவர் தன்னை அன்புடனும் பரிவுடனும் நடத்துவதை விரும்பியிருக்கிறார். அவரும் அவரது தோழியும் ஒரே ஆணுடன் வாழ்க்கை நடத்த முடியும் என்று கனவு கண்டு கொண்டிருந்த

நிலையில், அனைத்துமே சரிந்து போன சங்கடத்தில் பரிதவிக்கிறார்.

மனைவியின் தோழியை விட்டுவிட்டு இந்தத் தம்பதியரை மட்டும் பார்க்கும் போது, ஒரு தெளிவான முரண்பாட்டைக் காண முடிகிறது. விசுவாசத்திற்கும் விசுவாசமின்மைக்கும் உள்ள முரண்பாடு மிகப் பெரிதாக இருப்பதால், எந்த ஒரு தீர்வும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகி உள்ளது. இந்த மாதிரியான ஒரு தகராறை தீர்க்க மிகவும் தவறான வழி இத்தம்பதியரை அழைத்து என்ன நடந்தது எனச் சொல்லுங்கள் என்று கேட்பது. முதலில் இப்படி கேட்பது இருவருக்கிடையே பெரிய வாக்குவாதத்தை எழச்செய்யும். இரண்டாவதாக, இத்தம்பதியர் நேர்மைதவறி பேசக்கூடும். ஏமாற்றப்பட்ட பெண் உணர்ச்சி வயப்பட்டு உரத்தக் குரலில் பேசும் போது, கணவர் இதுதான் திருமணத்தில் பிரச்சினை என்று தப்பிக்கக் கூடும்.

நேர்மாறாக, மனைவி கணவரை முதலில் பேசச்சொல்லி, பின்பு அவர் அமைதியாக உட்கார்ந்திருப்பதைச் சுட்டிக்காட்டி இதுதான் பிரச்சினை என்று நழுவக்கூடும். மூன்றாவதாக, அண்மைக்காலப் பிரச்சினைகளின் மீது கவனம் செலுத்தி, நேர்மறையான ஆக்கப்பூர்வமான எதிர்காலத்தில் இருந்து மிகவும் விலகிச்செல்லக்கூடும். இப்பிரச்சினையைப் பொறுத்தவரையில், காலாதீதமான வழிமுறை இத்தம்பதியரிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதுதான். தகராற்று வல்லுநர் இத்தம்பதியரிடையே ஓர் உண்மையான கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே உள்ள உடல் மற்றும் ஆன்ம சேர்க்கைதான் காதல் எனப்படுகிறது. இதோடு புதிய இலக்குகள் அமைத்து வாழ்க்கையை நடத்தும் உயிர்ப்பும் இன்றியமையாததாகும். அப்படிப்பட்ட பொதுத் திட்டங்கள் ஏதுமற்ற நிலையில், வாழ்க்கை வழிதவறிப் போக வாய்ப்பு உள்ளது. தனிப்பட்ட திட்டங்களும், பிறரோடு சேர்ந்து செய்கின்ற காரியங்கள் இருந்தாலும் சமூக, கலாச்சார, பொருளாதார, ஆன்மீக நிகழ்வுகள் கணவன் மனைவிக்கிடையே இல்லாமலாகும் போது, ஆன்மீக விசுவாசமின்மை எழுந்து விடுகிறது. வெறும் பாலியல் பிரச்சினைகள் மட்டுமே ஒரு திருமணத்தை நிலைகுலையச் செய்வதில்லை.

இப்படி பாலியல் பிரச்சினையை கடந்து, இன்னும் ஐந்து விதமான விசுவாசமின்மையை கண்டுகொள்ள முடிகிறது. அவை உடல், ஆன்மா, உயிர்ப்பு (spirit), பொருளாதார விடயங்கள் மற்றும் சமூகநிகழ்வுகள். இவற்றோடு கணவன், மனைவி என இரு மனிதரை சேர்க்கும் போது, (5x2) பத்து நோக்கங்களைக் கண்டறிய முடியும். இப்படி அலசும் போது, பாலியல் விசுவாசமின்மை பின்தள்ளப்பட்டு, எதிர்மறை உணர்வுகள் முக்கியத்துவம் இழக்கின்றன.

இரண்டாவதாக, விசுவாசம் என்பதை மையப்படுத்தி ஒரு நல்ல திருமணம் எப்படி இருக்க வேண்டும் என்று நேர்மறையாக சிந்திக்க முடிகிறது. இதே போன்று ஒரு மோசமான திருமணம் எப்படி இருக்கலாம் என்பதைக் கண்டுணரவும் முடிகிறது. இந்த அடிப்படையில் ஒரு சில ஆணித்தரமான அறிவுரைகளைச் சொல்ல முடியும். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, வாழ்வில் பொதுத் திட்டங்களைக் கொண்டு, குடும்பத்தை ஒளிவு மறைவின்றி நடத்திக் கொண்டிருந்தால், விசுவாசமின்மை உங்கள் திருமணத்தை நரகமாக்க அனுமதிக்க வேண்டாம்.

ஏகபத்தினி விரதம் மட்டுமே ஒரு திருமணத்தை வெற்றியடையச் செய்வதில்லை. விசுவாசத்தின் பிற அம்சங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில், பெரிய பிரச்சினைகள் எழுவதற்கு முன் இத்தம்பதியர் பிரிந்து விடுவது நல்லது. இல்லாவிட்டால் இருவரின் வாழ்வுமே வீணாகிப் போகும்.

அந்த இரண்டாவது பெண்ணின் நிலையைப் பற்றி சற்று சிந்திப்போம். திருமணமான தம்பதியரை பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டு, இரண்டாவது பெண்ணை வேண்டத்தகாதவராக விட்டுவிடுவது வாடிக்கை. தகராறு சேவகர் திறமைமிக்கவராய் இருந்தால், அந்த மூவருக்குள்ளுமே ஒரு கருத்து பரிமாற்றத்தை ஏற்படுத்த முடியும். நடந்தவற்றை மறந்து விட்டு, இரு பெண்களும் மீண்டும் நண்பர்களாக மாற முடியும் என்ற குறிக்கோளோடு இயங்கலாம்.

நட்பு என்பது திருமணபந்தத்தைவிட எளிதானது. ஒரு நட்புறவிலும் விசுவாசங்கள் இருக்கத்தான் செய்கின்றன. உண்மை, மன்னிப்புத்திறன், மீளிணக்கம் என்னும் நிலைகளுக்குள் கடந்து சென்று ஒரு புதிய துவக்கத்தை மூவருமே

அமைத்துக்கொள்ள முடியும்.

விருந்தும் ஓய்வும்:

ஜப்பானியர் ஒருவர் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்ணை திருமணம் புரிந்து, ஜப்பான் தலைநகரமாகிய டோக்கியோவில் வாழ்ந்து வருகிறார். திங்கள் கிழமை முதல் சனிக்கிழமை வரை கடுமையாக உழைக்கிறார்கள். அப்போது அவர்களுக்குள் எந்தப் பிரச்சினையும் எழுவதில்லை. ஆனால் ஞாயிற்றுக்கிழமை கடும் பூகம்பம் வெடிக்கிறது. வாரம் முழுவதும் கடுமையாக உழைத்த கணவர் ஞாயிற்றுக்கிழமை சாய்வு இருக்கையில் படுத்தவாறே தொலைக்காட்சி பார்க்க விரும்புகிறார்.ஆனால் மனைவியோ ஆறுநாள் கடுமையான உழைப்புக்கு பிறகு ஆயாசமாக உணவு, மது, இசை, நடனம் என கேளிக்கையோடு இருக்க விரும்புகிறார்.

கணவரைப் பொருத்தவரை, பெரும்பாலான ஜப்பானிய ஆண்கள் இப்படித்தான் ஓய்வு எடுக்கின்றனர். தாங்கள் வாழ்வதும் ஜப்பான் நாட்டில். இதற்கு மேலாக ஜப்பானில் ஆண்களே முடிவு எடுக்கிறார்கள் என நினைக்கிறார். மனைவியோ தனது நாடான பிலிப்பைன்சில் தனது முறைபடித்தான் செய்கிறார்கள் என வாதிடுகிறார். வாரத்தில் ஆறு நாட்கள் ஜப்பானிய பெண் போன்று உழைக்கும் தான், ஒரு நாளாவது தனது முறைப்படி வாழ விரும்புகிறார். ஆண் ஆதிக்கத்தை விலக்கி, வாரத்தில் ஒரு நாளாவது தனது விருப்பப்படி இயங்க விழைகிறார்.



இந்தச் சூழ்நிலையில் அடுத்த ஞாயிற்றுக்கிழமையன்று மனைவியின் நண்பர்கள் வரும் முன்னரே படுக்கை அறைக்கு சென்று விடுகிறார் கணவர். இந்தத் தகராறில் விருந்துக்கு அரை நாள், ஓய்வுக்கு அரை நாள் என்றோ, அல்லது அடுத்தடுத்த ஞாயிறுகளில் விருந்து, ஓய்வு என்றோ ஒத்திசைவு (compromise) செய்வது இருவருக்குமே திருப்தி அளிக்காது. காலாதீதமான தீர்வு என்பது தொலைக்காட்சிப் பெட்டியை அறையின் ஒரு மூலையில் வைத்து, சாய்வு இருக்கையை அதன் அருகில் போட்டு, மனைவியின் விருந்து கேளிக்கைகள் சாய்வு இருக்கையின் பின்னால் நடப்பது போன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இருவரது நடவடிக்கைகளிலும் இருவரும் ஓரளவு பங்கேற்றாலும் தமக்கு வேண்டியதை அடைய முடிந்தது.

இரவு உணவு விருந்தினர்:

புத்திசாலியான ஒரு ஜப்பானிய ஹவாயி மாணவியின் கதை. அவரது தந்தை பேர்ல் கார்பர் (Pearl Harbour) யுத்தத்திற்கு பிறகு அமெரிக்கக் கைதிகள் முகாமில் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டவர். அந்த யுத்தத்தில் தீவிரமாகக் கலந்து கொண்ட தந்தையார், தான் ஜப்பானிய வம்சாவழியினர் என்றாலும், ஓர்

அமெரிக்கக் குடிமகன் என்பதில் பெருமை அடைந்தவர்.

ஒரு குறிப்பிட்ட நாளன்று, இந்த மாணவி தனது காதலனை இரவு உணவிற்கு அழைத்திருப்பதாகச் சொன்னார். அவர் ஒரு கருப்புஇன அமெரிக்கர். இராணுவத்தில் பணிபுரிந்த அவர், வியட்னாம் போருக்கு போக மறுத்து மாணவரானவர்.

காதலன் வருகை புரிந்த அன்று கதவைத் திறந்த அவரது தந்தையார் “இவனா உனது காதலன்” என்று கத்திக் கொண்டு, “இருவரும் வீட்டை விட்டு வெளியே போங்கள்” என்று ஆணையிட்டார். இருவரும் வீட்டை விட்டு வெளியேறினார்கள். தன்னால் ஒரு பிரச்சினை வரக்கூடாது என்று காதலன் நினைத்தாலும், எதற்காகவும் அவரை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை என்று அந்தப் பெண் உறுதியாக இருந்தார். தந்தை மற்றும் காதலன் இருவரில் ஒருவரை மட்டும் தேர்ந்தெடுக்கும் தர்மசங்கடத்திற்கு தள்ளப்பட்டார்.

இருவரில் ஒருவரை தேர்ந்தெடுப்பதோ அல்லது இருவரையும் அவ்வப்போது சந்தித்துக் கொள்ளுவதோ நடைமுறைக்கு சாத்தியமாகாது. காலாதீதமான தீர்வினை தேடும் போது, சில கருத்துக்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அமெரிக்க அரசாங்கத்தின் இனவாதத்தினை எதிர்க்கும் தந்தையார், தானே ஒரு இனவாதியாக மாறி, தனது மகளின் கருப்பினக் காதலனை வெறுத்து ஒதுக்குவது வினோதமாக இருக்கிறது. ஆனால் அவரோ தனது மகள் ஒரு ஜப்பானிய பெண்ணாக வளர்ந்து, ஜப்பானிய மொழியைப் பயின்று, ஜப்பானிய கலாச்சாரத்தில் வாழ விரும்பினாரே தவிர, அவர் ஓர் இனவாதி அல்ல என்பது தெரிய வந்தது. அவரிடம் மேலும் பேசி, கருப்பு அமெரிக்க மக்களும் இரு கலாச்சாரங்களில் தான் வாழ்கிறார்கள். எனவே அவர் மகளின் காதலன், அவரது மகள் இரு கலாச்சாரத்தில் வாழ்வதற்கு உதவ முடியும் என்று எடுத்துரைத்த போது, மனம் மாறி மகளையும் அவனையும் ஏற்றுக் கொண்டார்.

பெற்றோர், குழந்தைகள், நல்லவீடு:

பத்திரிக்கையில் எழுதும் ஆன் லாண்டார்ஸ் (Ann Landers) என்பவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் “எனது பெற்றோரை என்ன செய்வது என்று தெரியவில்லை. என்னை அடிக்கடி நச்சரிக்கிறார்கள். சமாதானமாக வாழவிடுவதில்லை. நான் என்ன செய்வது? எனக்கு உதவி செய்யுங்கள்” எனக் குறிப்பிட்டிருந்தது.

அதற்கு பதில் எழுதிய ஆன் லாண்டார்ஸ், பெற்றோர் சொல்வது போலவே கேட்டுவிடுங்கள் என்று பதில் எழுதினார்.

பெற்றோர் கோணத்திலிருந்து பார்க்கும் போது, அது ஒரு சரியான பதில். ஆனால் அந்த இளைஞரின் கோணத்திலிருந்து பார்க்கும் போது, பெற்றோரின் பிக்கல், பிடுங்கல் இன்றி, தன் காரியங்களை தானே நிர்வகிப்பது சிறந்ததாகப்படுகிறது. வாலிபக் குழந்தைகள் தாங்கள் எப்படி உடை அணிகிறோம், யாரோடு வெளியே செல்கிறோம், எத்தனை மணிக்கு வீட்டிற்கு திரும்புகிறோம், எந்த நேரத்தில் தூங்கப்போகிறோம் என அனைத்தையும் பெற்றோர் நிர்வகிக்க முயல்வதை ஒரு பெரிய எரிச்சல் தரும் குறுக்கீடாகக் கருதுகிறார்கள்.

பெற்றோரைப் பொறுத்தவரை, வாலிபக் குழந்தைகள் முதிர்ச்சியற்றவர்களாக இருக்கிறார்கள் என்றும், தங்களுக்கு எது சிறந்தது என்பதை தேர்வு செய்யும் பக்குவம் வரவில்லை என்றும் கருதுகிறார்கள். அவர்களையே அவர்களின் வாழ்க்கையை தீர்மானித்துக் கொள்ள விடுவது பெரும் இடராக முடியும் என்றும் நினைக்கிறார்கள்.

இந்த மாதிரியான விடயங்களில் வாலிபக் குழந்தைகள் சுதந்திரமாக நடக்க விரும்புகிறார்கள். ஆனால் பெற்றோர் தமது குழந்தைகள் மீதானக் கட்டுப்பாட்டை இழந்து விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள். குழந்தைகள் தன்னிச்சையாக செயல் படுவதற்காக இடைவெளியை விரும்பும் போது, பெற்றோர் கட்டுப்பாட்டிற்காக நெருக்கத்தை நாடுகிறார்கள். இதற்கு தீர்வு, வீட்டிற்குள்ளேயே அடிப்படை வசதிகள் கொண்ட ஒரு பகுதியை வாலிபக் குழந்தைகளுக்கு ஒதுக்கி விடுவது தான். குழந்தைகள் தனியாக சென்று வாழ்வதை விட, இது செலவு குறைந்ததாகவே இருக்கும். பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு உரிய மரியாதை அளித்து, அவர்களை சமமாகப் பாவித்து, அவர்கள் சொல்வதையும் கேட்டு செயல்படும் போது, பெற்றோரின் அறிவுரைகள் அவர்களால் எளிதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**பெண், ஆண் நல்வாழ்க்கை:**

ஒரு கல்லூரியில் பேராசிரியராக பணிபுரியும் பெண் ஆய்வு செய்யவும், அதிகமாக படிக்கவும், எழுதவும், மாநாடுகளுக்கு செல்லவும் விரும்புகிறார். பிறருக்கு அரசியல் ரீதியாகப் பணிபுரிய விரும்புகிறார். ஒரு நல்ல வசதியான வீட்டினை அமைத்துக்

கொண்டு கலை, இலக்கியம், இசை என ஓர் உயர்ந்த வாழ்க்கை வாழ விரும்புகிறார். தனது விருப்பங்களுக்கு ஒரு தடையாக இருக்காத கணவரும், புத்திசாலித்தனமான குழந்தையும் வேண்டும் என விரும்புகிறார்.

ஆனால் அவரின் கணவரோ, ஒரு வெற்றிகரமான தொழிலதிபராக வரவிரும்புகிறார். மற்ற நிறுவனங்களை தோற்கடித்து பலம் வாய்ந்தவராக இருக்க விரும்புகிறார். பணத்தை விட தனது தொழில் செல்வாக்கு அதிகமாக இருக்க வேண்டும் என நினைக்கிறார்.

இந்தமாதிரி சூழ்நிலையில் தகராற்று வல்லுநர் என்ன செய்ய முடியும்? இந்த ஆண் "தான்" என்ற கர்வம் பிடித்தவராக இருக்கிறார். மனைவிக்கு குழந்தைகளோடு அதிக நெருக்கம் இருந்தாலும், அவரும் கிட்டத்தட்ட கணவர் போலவே சிந்திக்கிறார். இருவருமே செல்வந்தமான புறவாழ்க்கை வாழ்ந்தாலும், அகவாழ்க்கை இனிமையற்றதாகவே இருக்கிறது.

பணம், நேரம், சக்தி, சுய நிர்வாகம் போன்ற பல்வேறு வாழ்வின் நோக்கங்களை நெறிப்படுத்தி, அவை அனைத்தும் ஒரே நேரத்தில் ஆட்கொண்டு, நம்மை ஒரு வெற்று நிலமாக ஆக்கிவிடாமல் பார்த்துக் கொள்வதுதான் வாழ்க்கை. வாழ்வின் அனைத்து நோக்கங்களும் ஒரு புறம் இருக்க, திருப்தியும், மகிழ்ச்சியும் மற்றொருபுறம் இருக்க, இவற்றைத் தேர்ந்து, தெளிந்து நிகழ்காலத்தில் வாழ்வதுதான் நிம்மதியான வாழ்க்கை. இந்திய கலாச்சாரப்படி வாழ்க்கையை அறம், பொருள், இன்பம், வீடு என்று நான்கு பிரிவுகளாகப் பிரிக்கின்றனர். வாழ்வின் ஒவ்வொரு காலகட்டத்திலும், இவை வாழ்வின் நோக்கங்களாக அமைந்து மனிதனை வழிநடத்துகின்றன.

இந்திய கலாச்சாரப்படி நான்கு நோக்கங்களையுமே மனிதன் எப்போதும் கொண்டிருக்க வேண்டும். ஒன்றை மட்டுமே பிடித்துக் கொண்டிருந்தால், அதைக் கூட அடைய முடியாது. ஏனென்றால் நான்குமே ஒன்றுக்கொன்று பிண்ணிப் பிணைந்தவை. நான்கு நோக்கங்களுள், வாழ்வின் எந்த நிலையில் இருக்கிறீர்கள் என்பதை பொறுத்து, அதற்கேற்ற நோக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்வதே முறையாக கொள்ளப்படுகிறது. ஒரு நோக்கத்தை மட்டுமோ அல்லது அனைத்து நோக்கங்களையுமோ பிடித்துக் கொண்டிருப்பது கூடாது.

# 2

## குறுந்தகராறுகள்:

### சமூகங்களுக்கிடையே எழும் பிணக்குகள்

தனிமனிதருக்கிடையே எழும் சிறு தகராறுகளிலிருந்து இனம், வகுப்பு போன்ற சமூக அமைப்புகளுக்கிடையே எழும் தகராறுகளைப் பற்றி பார்க்கலாம். இதில் உள்ள எட்டு சமூக முரண்பாடுகளையும் அவற்றில் எழும் நிலைப்பாடுகளையும் குறித்து சிந்திப்போம். இப்பிரச்சினைகளுக்கு காலாதீதமான தீர்வு எதுவாக இருக்கும் என பார்ப்போம்.

நிற பேதமற்ற பள்ளி:

1954 மே 17 ஆம் தேதி அமெரிக்க உச்ச நீதிமன்றம் கருப்பின மக்களுக்கும் வெள்ளை இன மக்களுக்கும் தனித்தனி பள்ளிகள் கூடாது என்றும், பள்ளிக் கூடங்கள் அனைத்தும் இன பேதமின்றி இணைக்கப்பட வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது. 1958ஆம் ஆண்டு தாமஸ் ஜெபர்சனின் சொந்த ஊரான சார்லட்ஸ்வில் (Virginia State) வெடித்து சிதறும் அளவுக்கு பதற்றமாய் இருந்தது. பொதுமக்கள் மூன்று அணியினராய் பிரிந்து நின்றார்கள்.

கருப்பின மக்கள் உச்சநீதிமன்றத் தீர்வை அமுல்படுத்தி பள்ளிகளை இணைக்க வேண்டும் என்றார்கள். வெள்ளை இன மக்களில் ஒரு சாரார் அதை ஆமோதிக்க, இன்னொரு பிரிவினர் அத்தகைய இணைப்பிற்கு உடன்பாடில்லை என்று எதிர்த்தனர்.

இம்மூன்று தரப்புக்கு இடையே இரு நோக்கங்களுடன் நடந்த இந்தத் தகராறில், பெரும்பான்மையான பொதுமக்கள் மதில்மேல் பூனைகளாய் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இணைப்புக்கு ஆதரவாய் இருந்த வெள்ளை இன மக்கள் பெரும்பாலும் நாட்டின் வட பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்தவர் ஆவார். தனித்தனி பள்ளிகள் வேண்டுமென்றோர் நாட்டின் தென்பகுதிகளில் நீண்ட காலமாக வசித்து வந்த விவசாயிகளும் உழைப்பாளிகளும் ஆவர். அவர்களது பார்வையில் அவர்கள் சொந்த ஊர்க்காரர்களாகவும், இணைப்பு வேண்டுவோர் வந்தேறிகளாகவும், கருப்பின மக்கள் தேவையற்ற தீய சக்திகளாகவும் தென்பட்டனர். அடிமைத்தனம், உள்நாட்டு கலகம், தீண்டாமை போன்ற பல தீய நினைவுகள் தந்த உணர்வுகளின் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. பிரிவினை வாதிகளின் நிலைப்பாடு உச்சநீதிமன்ற தீர்ப்பிற்கு பிறகு, சட்டத்திற்கு புறம்பானதாகிவிட்டது. இணைப்பினை ஆதரிப்போர் பல்வேறு இன மக்கள் ஒன்றுபட்டு வாழ முடியும் என்றக் கொள்கையை உலகுக்கு உணர்த்துவதில் உறுதியாய் இருந்தனர். ஆனால் கருப்பின மக்களோ எந்தவிதமான உரிமைகளும் இன்றி செய்வதறியாது திகைத்தனர். பல்கலைக்கழகங்கள் போன்ற சாத்தியமான உயர்கல்விக் கூடங்களிலிருந்து இவ்விணைப்பினை துவங்கலாம் என்ற ஒரு ஒத்திசைவும் முன் மொழியப்பட்டது.

இந்தப் பிரச்சினையில் வன்முறையற்ற காலாதீதமான தீர்வினை சமூகப் பிரிவினை வாதிகளே முன் மொழிந்தனர். அரசு பள்ளிகளில் இணைப்புக்கு தங்கள் குழந்தைகளை ஆளாக்க விரும்பாத இவர்கள், தனியார் பள்ளிகளைத் துவங்கினார்கள். இனங்களின் இணைப்பு தவிர்க்க முடியாதது என்றும், யாருமே வன்முறையை விரும்பவில்லை என்றும், தனியார் பள்ளிகளை தொடங்குவது ஓர் இடைநிலை தீர்வாக அமையும் என்றும் கொள்ளப்பட்டது.

வகுப்பு பேதமற்ற நிறுவனம்:

ஒரு முதலாளியும் ஒரே தொழிலாளியும் கொண்ட ஒரு நிறுவனம். பொருட்களின் விற்பனைக்கு ஏற்றப்படி தொழிலாளருக்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. மோசமான நாற்றமும், அபாயகரமான கழிவுப் பொருட்களும், சுகாதாரமற்ற சூழ்நிலையும், பணிச்சூழலை வேகமாகப் பாதிக்கின்றன. பணியாளர் விடுப்பெடுக்கும் போது தொழிற்சாலை முடங்கிப்

போகிறது. ஒரு சிறிய ஊதியமாவது கிடைக்கிறதே என்று பணிக்கு வந்தாலும், வேலைக்கானப் பணிச்சூழல் மிகவும் மோசமாக இருக்கிறது என்று ஆதங்கப்படுகிறார். உரிமையாளரோ தனக்கு வந்திருக்கும் வருமானத்தைக் காட்டி பணிச்சூழலை நிவர்த்தி செய்ய போதிய வருமானம் இல்லை என்று வாதிடுகிறார்.

இந்த தகராறைத் தீர்வு செய்ய கம்பெனியை இழுத்து மூடிவிடலாம். உரிமையாளருக்கோ, உழைப்பாளருக்கோ இதில் வெற்றி கிடைக்காது. காலாதீதமான தீர்வு இவ்விருவரையும் தவிர வாடிக்கையாளர் களுக்கும், கச்சாப்பொருளை விற்பவருக்கும் ஏற்றதாக இருக்க வேண்டும். தகராற்று வல்லுநர் இந்நாலு பேரோடும் பேசினால், இவ்வனைவருக்குமே நிறுவனம் தொடர்ந்து இயங்க வேண்டும் என்பதில் முழு ஈடுபாடு இருக்கிறது என்பதைக் கண்டுணர முடியும்.

இந்நிலையில் உரிமையாளர், உழைப்பாளர் என்ற வேறுபாட்டை களைந்து, நிறுவனத்தை ஒரு கூட்டுறவாய் மாற்றியமைத்து உழைக்கும் போது, இருவருமே பயன்பெற வாய்ப்பிருக்கிறது. உரிமையாளர் இயந்திரங்களை ஓட்டி உழைக்கும் போது, உழைப்பாளரின் சிரமங்களைப் புரிய முடியும். அதைப்போல, உழைப்பாளரும் தொழிலை நிர்வகிக்கிறபோது, நிறுவனத்தின் கஷ்ட, நஷ்டங்களை உணர முடியும். இதன் விளைவாக நிறுவனத்தின் உற்பத்தித் திறனும், இலாபமும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருதரப்பினரிடமும் வளர்ந்திடவும் வாய்ப்பு உள்ளது. இப்படிப்பட்ட காலாதீதமான தீர்வு அனைத்து தகராறுகளுக்கும் ஏற்படாது என்றாலும், சிறிய நிறுவனங்களில் இதற்கு வாய்ப்பு உள்ளது. பொதுவாகவே பொருளாதார சுழற்சியில், எல்கைகளை இலகுவாக்கும் போது அனைத்து தரப்பினருக்குமே ஆதாயம் ஏற்பட வழி உண்டு.

மாற்றுப் பொருளாதாரம்**:**

உற்பத்தித் திறன் மற்றும் முதலீடு ஆகியவற்றின் உரிமை தனியார் அல்லது கூட்டுறவு அல்லது பொதுத்துறை இவற்றில் யாரிடம் இருக்க வேண்டும் என்பது நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டு வரும் ஒரு பொருளாதார சித்தாந்தம். ஒரு முதலாளி எங்கே, எப்படி தனது மூலதனத்தை முதலீடு செய்கிறார் என்பது முக்கியம். உற்பத்தித் துறையிலோ அல்லது

நிதித்துறையிலோ முதலீடு செய்து, சந்தையில் தனது இலாபத்தை அதிகரிக்க வழிச்செய்யலாம். அல்லது அடிப்படை மனிதத் தேவைகளை கருத்தில் கொண்டு முதலீடு செய்யலாம். இந்த பிரச்சினையில் இரு பொருளாதரத் துருவங்களை நம்மால் கண்டு கொள்ள முடியும்.

தனியார்மயம், சந்தை, இலாபம் ஒரு புறமும், அரசுதிட்டம் மக்கள் தேவைகள் இன்னொரு புறம் இருப்பதையும் காணலாம். இவற்றை வலது சாரி மற்றும் இடது சாரி சிந்தனை என்றும் கொள்ளலாம். தனியார் மயம் சந்தை இலாபம் என்னும் நிலையை எடுத்துக் கொண்டு, பலவீனமான அரசு பொது நலத்துக்காக இலாபம் தேடுவது என்னும் மூன்றாம் நிலையையும் நாம் கண்டுணர முடியும். இருபதாம் நூற்றாண்டின் அரசியல் எனும் ஊசல் சந்தையில் இருந்து திட்டத்திற்கும், கலப்பு பொருளாதாரத்திற்கும் தாவி மீண்டும் சந்தைப் பொருளாதாரத்திற்கு வந்து நிற்கிறது. அது மீண்டும் திட்டப் பொருளாதாரத்திற்கு வரும் நிலையும் எழலாம்.

இந்த பிரச்சினைக்கு காலாதீதமான தீர்வு எதுவாக இருக்க முடியும்.

இந்த பிரச்சினையில் இருந்து பின்வாங்குவது என்பது பாரம்பரிய கிராமிய பொருளாதாரத்திற்கு திரும்புவதாகத்தான் இருக்க முடியும். அல்லது அமெரிக்காவின் தலையீடுக்கு முந்தைய ஜப்பானிய, கிழக்கு ஆசிய பொருளாதாரக் கொள்கையாக இருக்கலாம். திட்டங்கள் மூலமாகவும் மற்றும் ஊக்குவிப்புகள் மூலமாகவும், அரசு சந்தைப் பொருளாதாரத்தை தன்கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பது தான் ஜப்பானிய அமைப்பு. உள்நாட்டு பொருளாதார சுழற்சியில் சந்தையும், வெளிநாட்டு பொருளாதார சுழற்சியில் அரசும் ஓங்கி நிற்கின்றன. உழைப் பாளர்களின் நலம் சந்தையாலும், அரசாலும் பாதுகாக்கப்படுகிறது. ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் இந்த ஜப்பானிய பொருளாதார அமைப்பு சந்தைப் பொருளாதாரத்தை விட மக்கள் நலனை பேணிக்காத்தது. அதேபோல, திட்டப் பொருளாதாரத்தை விட தனிநபர் முதலீடு மற்றும் தொழில் வளர்ச்சியைத் தூண்டியது. ஓரிரு வருடங்களில் இத்தகைய ஓர் அமைப்பினை ஜப்பான் மீண்டும் கொண்டு வரக்கூடும்.

இப்பிரச்சனையில் காலாதீதமான தீர்வு என்பது மூன்று

நிலைகளை உள்ளடக்கியதாக இருக்கும். முதலாவதாக, பாரம்பரிய உள்ளூர் பொருளாதாரம் பணம் அல்லாது பண்ட மாற்று முறையில் அமையப் பெறும். அடிப்படைத் தேவைகளை பூர்த்திச் செய்வதாக அமையும். இரண்டாவது, உள்நாட்டு தேவைகளுக்கான உற்பத்திப் பொருட்களை தயாரித்து, உள்நாட்டு நுகர்வினை ஊக்குவிக்கும் கலப்புப் பொருளாதாரமாக இருக்கும். மூன்றாவது, ஏற்றுமதியை ஊக்குவிக்கும் உலகப் பொருளாதார அமைப்பாக இருக்கும்.

மாற்று அரசியல்:

சந்தைப் பொருளாதாரத்திற்கும், திட்டப் பொருளாதாரத்திற்கும் நடக்கும் போட்டியில் சந்தைப் பொருளாதாரம் வென்று விட்டதாக பலரும் கருதுகின்றனர். சனநாயகம், எதேச்சாதிகாரம் இவற்றுக்கிடையே நடந்த போட்டியில் சனநாயகம் வெற்றிப்பெற்று விட்டதாகக் கூறலாம். எதேச்சாதிகாரம் சட்டத்திற்கு புறம்பானது. ஆணாதிக்கமும், மதவாதமும் கூட எதேச்சாதிகாரம் தான்.

அரசியல் அமைப்புகளை (polities) உன்னிப்பாக பார்க்கும் போது, இரு துருவங்களை எளிதாக கண்டு கொள்ள முடிகிறது. அவை அனைவராலும் ஆளப்படும் சனநாயகம் மற்றும் ஒருவரால் ஆளப்படும் எதேச்சாதிகாரம். இன்றைய உலகில் சனநாயகத்தில் முக்கிய உதாரணமாக விளங்குவது சுவிட்சர்லாந்து நாட்டின் நேரடி சனநாயகம் தான். இங்கே கருத்துக்கணிப்புகள் (referendum) வழியும், கருத்துக்கணிப்பு நடத்தக்கூறியும் தங்களது குரலை எழுப்ப முடியும். பிற சனநாயகங்களில், நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் தோதல்களில் தான் குரல் எழுப்ப முடியும்.

இம்மாதிரியான மறைமுக சனநாயகங்களில் ஒர் அரசியல் வகுப்பார் அதிக அதிகாரங்களுடன் இயங்குகின்றனர். எதேச்சாதிகாரம் சட்டத்திற்கு புறம்பானது என்பதால், அதை நாம் அலச தேவை இல்லை. ஒரு நாடு சிக்கலுக்கு உள்ளாகி இருக்கும் போது, அனைத்து அதிகாரங்களையும் ஒருவர் கையில் கொடுத்து, அனைவரது ஆதரவோடு நடக்கும் சனநாயகம் இன்னொரு விதமானது. சனநாயகமும், எதேச்சாதிகாரமும் இல்லாத அமைப்பை, நெறிமுறைகளுக்கு உட்படாத தன்னிச்சையான அரசு (anarchy) எனச் சொல்லலாம். இப்படியாக சனநாயகம் சர்வாதிகாரம் இவற்றிற்கிடையேயான போட்டியில் நேரடி

சனநாயகம், மறைமுக சனநாயகம், அவதார புருடர் சனநாயகம், தன்னிச்சை அரசு என்னும் நிலைகளைக் காணலாம். உன்னதமான சனநாயகம் என்பது ஒரு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அரசு தான். உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் கொடுத்து, மக்கள் பிரதிநிதிகளுக்கு பிரதிபலன் குறைவாகவே அளிக்கும். உள்ளூர் மற்றும் தேசிய அளவில் கருத்து கணிப்புக்கள் நடத்தி, மக்களே முக்கியமான முடிவுகளை எடுக்கும் படியான அமைப்பாக இருத்தல் வேண்டும்.

மாற்றுப் பாதுகாப்பு:

நாட்டு மக்களின் உடல், பொருள், மனம் மற்றும் உணர்வுகளுக்கு ஊறு விளைவிக்கப் படாமலிருப்பதே பாதுகாப்பு. பாதுகாப்பின்மையை எப்படி தவிர்ப்பது என்பது பல்வேறு தகராறுகளுக்கு வழிவகுக்கிறது. பாரம்பரிய பாதுகாப்பு விவாதத்தில் பூரணமான இராணுவ பாதுகாப்பு, மற்றும் அகிம்சா வழி பாதுகாப்பு என இரண்டைக் காணலாம். இராணுவ பாதுகாப்பை நான்கு வகையாகப் பிரிக்கலாம்: எதிரி ஒரு மோசமானவன் என்பதால் எந்தவித முகாந்திரமும் இன்றி தாக்குவது, எதிர்காலப் போரை தடுப்பதற்காக தாக்குவது, எதிரியின் நாட்டிற்குள் நுழைந்து அவரது தாக்குதலை சமாளித்து வெற்றி காண்பது, தமது மண்ணில நின்றவாரே போர் புரிவது, இவற்றில் பெரும்பான்மையான தாக்குதல் முறைகளுக்கு நீண்டதூர தாக்குதல் ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. இம்மாதிரியான ஆயுதங்களை சேர்த்து வைப்பதே போரைத் தூண்டுவதாக அமையும். தகராறுகளுக்கு மூலக்காரணமாகவும் அமையக்கூடும். பூரணமான இராணுவ பாதுகாப்பு உலகின் 170 நாடுகளில் கடைபிடிக்கப்படுகிறது. 30 நாடுகளில் இராணுவம் இல்லை. இவற்றில் சரிபாதி நாடுகள் இன்னொரு நாட்டுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

இராணுவ பாதுகாப்புக்கு எதிரான அகிம்சா வழி பாதுகாப்பில் மூன்று அடிப்படை வழிகளை காண முடியும். ஒன்று, மாற்றுக்கட்சியின் சமூக, பொருளாதார, அரசியல் நோக்கங்களோடு ஒத்துழைக்காமலும், தவறான சட்டத்திட்டங்களுக்கு கீழ்படியாமலும் எதிர்ப்பது. இரண்டு, அடிப்படைத் தேவைகளை எதிரியால் தீங்கு செய்யப்பட முடியாத முறையில் பேணுதல். மூன்று, எதிரியை துன்புறுத்தாது, மனித நேயத்துடன் நட்புகலந்த கருத்துப் பரிமாற்றத்தில் சந்திப்பது.

ஆனால் பூரண அகிம்சா வழி பாதுகாப்பு எந்த நாட்டிலும் கடைபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிஸ் நாட்டு மனோ தத்துவ நிபுணர் ஜான் பியாகே (Jean Piaget)) எதிரிகளை ஒட்டுமொத்த எதிரி என்றும், எதிர்வினை (reciprocal) எதிரி என்றும் பார்க்கலாம் என்கிறார். ஒட்டுமொத்த எதிரி என்பவர் முழுக்க முழுக்க தீமையே உருவானவர். எதிர்வினை எதிரி என்பவர் ஓரளவு பண்பட்ட எதிர்தரப்பின் கருத்துக்களைக் கேட்கும் திறன் பெற்றவராக இருப்பார். விவாதத்தை விட கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது ஒரு தகராறைக் கடந்து செல்வதற்கு வழிவகையாக அமையும். தகராறு வன்முறை வயப்பட்டுவிட்டால், கடினமான மீளிணக்கத்துக்கு தேவை ஏற்படுகிறது.

பள்ளிகளும் மாற்றுப்பள்ளிகளும்

பள்ளிப்படிப்பை விரும்பாத ஒரு முரட்டு பையன் ஆசிரியர்களையும், அங்கு தரப்படும் கல்வியையும் வன்முறையாக நினைக்கிறான். பள்ளியை எதிர்க்க திராணியற்ற முரட்டுச் சிறுவன், பலவீனமான மாணவர்களை துன்புறுத்துகிறான் இந்தச் சூழ்நிலையில் பள்ளிக்கூடம் ஒரு பிரச்சனையாக இருக்கிறது. ஒரு பாரம்பரிய பள்ளி நன்றாக படிக்கும் மாணவர்களுக்கு வாய்ப்புக்களை கொடுப்பதோடு, முரடர்களை வெளியேற்றி விடுகிறது. கண்டிப்பான ஆசிரியர் முரட்டு சிறுவர்களையும், அவர்களிடம் சிக்கித்தவிப்போரையும் அழைத்து, பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்கிறார். அனைத்துமே இவ்விரு தரப்பு மாணவர்களைச் சுற்றியே நடக்கிறது. இப்பிரச்சனைக்கு காலாதீதமான தீர்வு என்பது ஒரே வளாகத்திற்குள் பாரம்பரிய பள்ளிகளோடு வால்டார்ஃப் (Waldorf) போன்ற பரீட்சார்த்தப் பள்ளியையும் நிறுவி மாணவர்களை அவரவருக்கு பிடித்த பாடங்களை தேர்வு செய்து ஒரு மாற்றுக் கல்வி திட்டத்தை அமைப்பது தான்.

மாற்று மருத்துவ முறை:

மருத்துவக் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் மருத்துவம் நவீன மருத்துவம் என்றும், அதற்கான மாற்று, மாற்றுமருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. இரண்டு அமைப்புகளுமே நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டன. ஆராய்ந்துணர்தல்-முன்னறிவித்தல்- நிவாரணம் (diagnosis-prognosis- therapy)

என்னும் திட்டத்தையே இரு அமைப்புகளும் கொண்டுள்ளன. எனினும் நவீன மருத்துவம் ஒரு நோயாளியை, குறிப்பிட்ட அறிகுறிகள் கொண்ட ஒரு அஃறிணைப் பொருளாகவே கருதுகிறது எனலாம். மாற்று மருத்துவம் முழு மனிதனையே கருத்தில் கொள்கிறது. நவீன மருத்துவம், மனித உடலை பல அங்கங்களின் கூட்டாகக் கருதி பாதிக்கப்பட்ட அங்கங்களை மட்டுமே குறிவைத்து செயல்படுகிறது. ஆனால் மாற்று மருத்துவம் உடல், மனம், ஆன்மா அனைத்துமே ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையதாகக் கொள்கிறது.

ஆய்ந்துணர்வு-முன்னறிவித்தல்-சிகிச்சைமுறை இவை மூன்றுமே ஒருங்கிணைந்து செயல்படுகின்ற ஒரு முழுமையானப் போக்கையே மாற்று மருத்துவம் கடைப்பிடிக்கிறது. எப்படி செயல்படுவது என்பதில் மட்டுமல்லாமல், எப்படி சிந்திப்பது என்பதிலேயே இவ்விரு மருத்துவங்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது. நவீன மருத்துவம, மாற்று மருத்துவர்களை அரைகுறை மருத்துவர்களாக கருதும் போது, மாற்று மருத்துவம் நவீன மருத்துவத்தை பணத்திற்காகவும் பலத்திற்காகவுமே இயங்குவதாய் நினைக்கிறது.

நவீன மருத்துவம் இயற்கைக்கு எதிரான தலையீடுகளின் மூலம் பணம் சம்பாதித்து, நல்வாழ்வு அம்சங்களின் மூலமாக பலம் சேர்த்துக் கொள்கிறது. அரசு மற்றும் மருந்து தயாரிக்கும் துறைகளுடனும் கைகோர்த்து இலாபமும், பலமும் சம்பாதிக்கிறது. இந்த பிரச்சனையில் காலாதீதமான தீர்வு என்பது நோயாளிகளுக்கும் முடிவெடுக்கும் உரிமையைக் கொடுப்பதாகும். இரண்டு மருத்துவ முறைகளையுமே ஒரே இடத்தில் இருக்கச்செய்து, நோயாளிகளின் விருப்பப்படி அவர்களையே தீர்மானிக்கவிடுவதுதான் சிறப்பு. இயலும்பட்சத்தில் மருத்துவர்களும் இவ்விரண்டு முறைகளிலுமே பயிற்றுவிக்கப்படுவது நல்லது.

பாலியல் வன்முறை **(Gender conflict):**

ஆண், பெண் உறவில் இரு வேறு விடயங்களை காண முடியும். ஒன்று, சமூக ஆளுமை (social power) மற்றும் தலைமைத்துவம். இரண்டாவது, ஆணியம், பெண்ணியம் எனும் இரண்டு சமூக கலாச்சாரங்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடு. முதலாவது விடயத்தை எடுத்துக் கொண்டால், ஆணாதிக்கம்,

பெண்ணாதிக்கம் என இரண்டு எதிர் துருவங்களை எளிதில் அடையாளம் காணலாம்.

ஆணாதிக்கம் பரந்து விரிந்திருந்தாலும், ஒரு சில இடங்களில் பெண் ஆதிக்க சமூகங்களும் உள்ளன. ஆணுக்கும் பெண்ணுக்கும் நூறுசதவீதம் அதிகாரம் கொடுப்பது இயலாத ஒன்று. அதிகாரத்தை பகிர்ந்து கொடுப்பதுதான் சரியான வழியாகும். ஜப்பானிலும், இந்தியாவிலும் உள்ளது போல, சமூகத்தில் ஆண்கள் அதிகாரம் உடையவர்களாக இருந்தாலும், வீடுகளில் பெண்களே அதிக அதிகாரம் பெற்றிருக்கிறார்கள். குடும்ப வரவுசெலவு, குடும்பக் கட்டுப்பாடு, குடும்பத்தின் வெளியுறவுத் தொடர்புகள் அனைத்தையுமே பெண்களும் நிர்வகிக்கிறார்கள். ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணாதிக்க குடும்பங்கள்!

மேற்காணும் அம்சங்கள் அனைத்திலுமே பெண்கள் ஆண்களைவிட பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்கள் சிறந்த தகராற்று சேவகர்களாகவும் இருக்கிறார்கள்.

சுவிட்சர்லாந்து:

ஐரோப்பிய ஆல்ப்ஸ் மலைத் தொடரிலிருந்து ரைன் (Rhine), டனுயூப் (Danube), போ (Po), ரோன் (Rhone) என்னும் ஆறுகள் உற்பத்தியாகின்ற இடத்தில் மூன்று இன விவசாய பெருங்குடிமக்கள் வாழ்ந்து வந்தனர். ஆஸ்திரியா, ஜெர்மனி, இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தால், தமக்குள் தகறாறுகள் வரக்கூடாது என்பதற்காக இம்மக்கள் தம்மீது சில கட்டுப்பாடுகளை விதித்த வண்ணம் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு போர்கள் தடுக்கப்பட்டு, உலகின் முதல் நடுநிலைநாடாக சுவிட்சர்லாந்து உதயமாகியது.

தமது நாட்டைப் பாதுகாக்க விரும்பிய சுவிஸ் மக்கள், அதே நேரம் தனது அண்டை நாட்டாரை பயம் காட்டவும் விரும்பவில்லை. எனவே உள்நாட்டு பாதுகாப்புக்குத் தேவையான குறுகிய தூர ஆயுதங்களை மட்டுமே கொண்டு தமது பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொண்டனர். இவ்வமைப்பில் இராணுவ சேவை கட்டாயமாக்கப்பட்டது. நான்கு மாதப் பயிற்சிக்கு பிறகு ஒவ்வொரு வருடமும் இரண்டு வாரங்கள் மொத்தம் 12 வருடங்களுக்கு இராணுவ சேவை செய்ய வேண்டும். இராணுவ வீரர்கள் ஆயுதங்களை தங்கள் வீட்டிற்குள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டதால், வகுப்பு பேதமற்ற இராணுவமாக

இயங்கியது.

ஐரோப்பிய யூனியன் நாடுகள் தங்களை ஆளுவதையும் இவர்கள் விரும்பவில்லை. எனவே ஐரோப்பிய நாடுகளுடன் ஒத்துழைத்தாலும், அக்கூட்டமைப்பில் உறுப்பினராகச் சேரவில்லை. உள்நாட்டு அரசியலில் பெரும்பான்மை ஜெர்மன் மொழி பேசும் மக்களுக்கு மற்ற இனத்தவர்கள் அடிமைகளாகி விடக்கூடாது என்பதிலும் கவனமாக இருந்தார்கள். எனவே 70% ஜெர்மன் மொழி பேசுபவர்களும், 25% பிரெஞ்சு மொழி பேசுபவர்களும், 4% இத்தாலிய மொழி பேசுபவர்களும் ஏனைய பூர்வீக மக்களும் தன்னாட்சி அமைப்பினை ஏற்படுத்தி, கூடி வாழும் ஒரு நிலையை உருவாக்கியுள்ளனர். பல்வேறு இன மக்கள் சமத்துவத்துடன் கூடி வாழும் முதல் நாடாக சுவிட்சர்லாந்து உருவாகியுள்ளது.

உலகின் 1% மக்கள் மட்டுமே இந்த நாட்டில் வாழ்ந்தாலும், இருபதாம் நூற்றாண்டில் நடந்த தேசிய கருத்துக்கணிப்புக்களில் 60% இங்கேதான் நடத்தப்பட்டுள்ளன. ஒரு லட்சம் மக்கள் சேர்ந்து, ஒரு தேசிய கருத்துக்கணிப்பை நடத்த கோரிக்கை வைக்க முடியும். உள்ளூர் முடிவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது, உள்ளாட்சி அமைப்புகள் மிகப்பெரியதாக இருக்கக்கூடாது என்பதற்காக, சுவிட்சர்லாந்து 23 பிரிவுகளாக (cantons) பிரிக்கப் பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இன மக்கள் அமைச்சரவையில் அதிகாரம் செலுத்தக்கூடாது என்பதற்காக, அதிலுள்ள 7 உறுப்பினர்களும் நான்கு இன மக்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இது ஒரு நிரந்தர கூட்டணி அரசு போன்றே இயங்குகிறது. அரசியல் காலாதீதத்திற்கு சுவிட்சர்லாந்து ஒரு பெரும் பங்களிப்பாக திகழ்கிறது.

# 3

## பெருந்தகராறுகள்:

### அரசுகளுக்கும், மக்களுக்கும் இடையே எழும் தகராறுகள்

அரசுகள் என்பன பூகோள ரீதியில் குறிப்பிடப்பட்ட நாடுகளை ஆட்சி செய்யும் அமைப்புகள். மக்கள் என்பவர் கலாச்சார ரீதியில் வரையறுக்கப்பட்ட குழுவினர். இவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவராக இருக்கலாம். ஒன்றுக்கும் மேற்பட்ட மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதி நிலத்திற்கு உரிமை கொண்டாடும் போது, நாம் ஒரு பெரும் தகராறினை எதிர்பார்க்கலாம்.

இன்றைய உலகில் 200 நாடுகளும் 2000 மக்கள் பிரிவுகளும் உள்ளன. இவற்றில் இருபது நாடுகளில் மட்டும் ஒரே ஒரு இன மக்கள் வாழ்கின்றனர். அதாவது 1980 மக்கள் குழுவினர் 180 நாடுகளில் தகராறுகளோடு வாழ்ந்து வருகின்றனர் சுவிட்சர்லாந்து மட்டுமே இந்த தகராறை வெற்றிகரமாக தீர்த்திருக்கிறது. இம்மாதிரி தகராறுகள் பெரும்பாலும் வன்முறையிலேயே முடிகின்றன. பொதுவாகவே மக்கள் தம்மில் ஒருவராலேயே ஆட்சி செய்யப்பட விரும்புகின்றனர். கிட்டத்தட்ட 170 அரசுகள் இராணுவங்களை வைத்திருக்கின்றன. 1648 அக்டோபர் 24 வெஸ்ட்பேலியா (Westphalia) உடன்படிக்கையின் படி, ஒரு நாடு தாக்கப்படும்போதுதான் போருக்குச் செல்ல முடியும். அரசியல்

தலைவர்களும், அயல்நாட்டு தூதர்களும், சமாதான பேச்சு வார்த்தைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். தமது தேசிய நலன்களை பாதுகாப்பது அவர்களது கடமையாய் இருக்கிறது. ஓர் அரசின் குறிக்கோள்களில் மேட்டுக்குடியினரால் தீர்மானிக்கப்பட்ட தேசிய நலன்கள் இடம் பெறுவதை பார்க்கலாம். பொதுவாக அவற்றை வன்முறையைப் பயன்படுத்தியாவது அடைவதற்கே அரசு முயல்கிறது. சமாதான ஈடுபாடு இருந்தாலும் தமது தேசிய நலன்களைச் சார்ந்தே அது இருக்கிறது. சர்வதேச கௌரவத்திற்காகவும் சில நேரங்களில் சமாதானக் கொள்கை பறைசாற்றப்படுகிறது.

இச்சமாதான முயற்சிகளை அரசே முற்றிலுமாக ஆட்கொண்டு விடுகிறது. ஓர் அரசின் இந்த ஏகபோக ஆக்கிரமிப்பை மாற்றி அமைப்பதே இந்த புத்தகத்தின் குறிக்கோள்களில் ஒன்று.

ஆராய்ந்துணர்தல்-முன்னறிவித்தல்-நிவாரணம் (diagnosis – prognosis- therapy) ஆகியவற்றைத் தேர்ந்து, தகராறுகளை எப்படி மாற்றி அமைத்துக் கொள்வது, சமாதானத்தை எப்படி உருவாக்குவது என்பது பற்றித் தெரிந்து கொள்ளலாம். தகராறு கட்சிகளைப் பற்றி நல்லது கெட்டது பேசாது, தகராறு கட்சிகளோடு கருத்துப்பரிமாற்றம் செய்வதன் மூலம் இது சாத்தியமாகும். நமது பல்கலைக்கழகங்கள் ஆராய்ந்து அறிவதோடு நிறுத்திக் கொள்கின்றன. முன்னறிவித்தல் என்பது எதிர்காலத்தைப் பற்றிய அனுமானங்கள் தான். இவை அரசியல் வாதிகளாலும் தூதர்களாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன. தகராறு ஆராய்ச்சியில் கடந்தகால நிகழ்ச்சிகள் பெரும்பங்காற்றுகின்றன. சில தகராறுகள் கரைந்து போகின்றன அல்லது எப்படி இருக்கிறதோ அந்த நிலையிலேயே தீர்க்கப்படுகின்றன. எந்த நிலையில் தீர்க்கப் பட்டிருக்கலாம் என்பது பற்றி பெரிதாக நாம் சிந்திப்பதில்லை. ஆழமான புரையோடிப்போன நீண்டகாலமாக வன்முறைக் குள்ளாகியிருக்கும் தகராறுகளை தீர்க்க, கடந்தகாலம் பற்றிய அறிவு மட்டுமே போதாது.

தகராறுகளின் நிவாரணத் திட்டங்கள் பற்றிய கருத்து பரிமாற்றங்கள், கேள்விகேட்கும் தன்மையனவாகவும் தேடும் தன்மையனவாகவும் இருக்கும். ஆனால் அவை பெரும்பாலும் தற்காலிகமானவையாகவே இருக்க முடியும். சீரிய எதிர்காலத்திற்காக உருவாக்கப்படும் திட்டங்கள் தோய்ந்த ஒரு சமாதன கலாச்சாரத்தினை உருவாக்க, இக்கருத்துப்

பரிமாற்றங்கள் பங்களிப்பு செய்யலாம்.

பசிபிக் பெருங்கடலில் இருந்து மத்திய தரைகடல் வரை உள்ள பகுதிகளில் நடக்கின்ற தகராறுகளை சற்றே பார்க்கலாம். இந்தத் தகராறுகளின் கடந்த காலத்தைப் பற்றி பேசுவதை விட, தீர்வுகள் குறித்தே நாம் அலசுகிறோம். நமது கலாச்சாரத்தில், குறிப்பாக உலக கலாச்சாரத்தில், தகராறுகள் பற்றி மேலோட்டமாகத்தான் விவரிக்கிறோம். வெறுப்பு, கோபம் போன்ற எதிர்மறை உணர்வுகளில் அதிக கவனம் செலுத்தி, தகராறுகளின் முரண்பாட்டு வேர்களை ஊன்றி கவனிப்பதில்லை. தகராறுகளின் வேர்களை ஆய்ந்துணர்வதோ, முன்னறிவிப்பதோ, நிவாரணத் தீர்வுகளோ, நமது கலாச்சாரத்தில் பெரிதாகப் போற்றப்படுவதில்லை.

ஊடகங்கள் வன்முறை பற்றியே அதிகம் பேசுகின்றன. பொதுவாக, தகராறுகளின் இரு துருவநிலைகளை அடையாளம் காணுகிறோம். அந்த இரண்டு தெளிவுகளோடு மட்டுமே தகராறை தீர்க்க முயல்கிறோம். தகராறு கட்சிகள் பேரப்பேச்சில் ஈடுபடுவதை விட, தகராறுக்கு வெளியே உள்ள ஒருவரோடு கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடவே முயல்கின்றனர். அக்கருத்துப் பரிமாற்றத்தில் புதிய பார்வைகள் வெளிப்படுகின்றன. இந்த இருதுருவ அணுகுமுறையிலிருந்து வெளிவருவதே தகராறு தீர்க்கும் வழியாக இருக்கும்.

கருத்துப் பரிமாற்றம் என்பது, கேள்விகள் கேட்பதும், தேடலும் ஆகும். தகராறு பார்வைகள் ஆணித்தரமானவையாக இருந்தாலும், அவை தற்காலிகமானவைதான். புதிய தகவல்களும், விளக்கங்களும், கருத்து பரிமாற்றங்களும் எழும் போது, கட்சிகளின் பார்வைகள் மாறும். இந்த கருத்துப் பரிமாற்றங்கள் அனைத்துமே, சமாதானம் தோய்ந்த ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கு தேவையான முன்மொழிதல்கள் ஆகும். பசிபிக் பிராந்தியத்திலிருந்து மத்திய தரைகடல் பகுதி வரையில் நிகழ்ந்த பல தகராறுகளை இப்போது சுட்டிக் காட்ட விரும்புகிறோம். டிரான்சென்ட் (Transcend) அமைப்பு சமரசம் செய்த சுமார் 50 குருந்தகராறுகள் மற்றும் பெருந்தகராறுகளிலிருந்து இவற்றைத் தேர்ந்தெடுக்கிறோம். இத்தகராறுகளின் தீர்வுகளைப் பற்றியே நாம் இங்கே அலசுவதால், வரலாற்று பின்னணிகளுக்கு வேறு புத்தகங்களை படித்து தெரிந்துகொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

நமது கலாச்சாரத்தில், குறிப்பாக ஊடகங்களின் செய்தி வெளியீடுகளில், மேலோட்ட தகராறுகளைப் பற்றியே விவரிக்கிறோம். தகராறுகளின் அடிப்படை, பின்னணி, வேர்கள் பற்றி விவாதிப்பதில்லை. வெறுப்பு, கோபம், சுயஇரக்கம் போன்ற எதிர்மறை உணர்வுகளையும், வன்முறை, கடுஞ்சொல் போன்ற எதிர்மறை செயல்பாடுகளையும் இவை பெரிதாக்குகின்றன. நமது கலாச்சாரம் தகராறுகளின் மூலத்தினை கண்டுபிடிப்பதிலும், ஆய்ந்துணர்வதிலும், இனி என்ன நடக்கலாம் என்ற முன் அறிவித்தலிலும், தீர்வுக்கான திட்டங்களிலும் முழுமை பெற்றதாக இல்லை.

ஊடகங்கள் வன்முறையையேச் சார்ந்து இயங்குகின்றன. பல பத்திரிகையாளர்களுக்கு குண்டு வெடிப்புகளே தூக்கத்திலிருந்து எழுப்பிவிடும் கருவிகளாகயிருக்கின்றன. ஒரு தகராறை எடுத்துக் கொண்டால், அதிலுள்ள இரு கோடி முனைகளை மட்டுமே பெரும்பாலும் தேர்ந்து கொள்கிறோம். இந்த இரு நிலைகளை வைத்துக்கொண்டே தகராறு கட்சிகள் தங்களது புரிதலை, தேவைகளை வகுத்துக் கொள்கின்றன. மேற்கண்ட நிலைகளில் இரண்டுமே இல்லாத, அல்லது இரண்டையுமே உள்ளடக்கிய நிலைகளை கண்டுணரும் போது பல நேரங்களில் “ஆஹா! இப்படி ஒரு தீர்வு இருக்கிறதோ” என்று கட்சிகள் வியப்புறும் நிலையும் உள்ளது.



பேச்சுவார்த்தைகளின் போது, தங்களது வாத பிரதிவாதங்களை கட்சிகள் பகிர்ந்து கொள்கின்றன. எதிர்கட்சியோடு நேரடியாக பேசுவதை விட ஒரு மூன்றாவது

நபரின் உதவியோடு எளிதாக தங்கள் கருத்துக்களை முன்வைக்க முடிகின்றது. புதிய பார்வைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன. அப்படி நடக்கவில்லையென்றால், இன்னும் கூடுதலான நடுநிலையாளர்களோடு அதிகமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம். வெற்றிகரமான தகராறு தீர்க்கும் முயற்சியில் வெறும் இரண்டு கோடிமுனைத் தெரிவுகளை மட்டுமே வைத்துக் கொண்டு செயல்படுவது உதவாது. ஓவ்வொரு கட்சியின் நிலைப்பாடுகளிலும் ஏதோ ஒரு உண்மையிருப்பது இயல்புதான். உன்னதமான தீாவு என்பது, எந்த ஒரு கட்சியையும் தூண்டிவிடுவதாக அமையக் கூடாது.

விடுதலைக்காகப் போராடும் ஒர் அடிமையின் போராட்டத்தில் மட்டுமே சமரசத்திற்கு பெரிதாக இடமில்லை. அமைதி வழியில் சமாதானத்தை அடைவதே நமது நோக்கமாகும். தகராறு கட்சிகளின் நிலைப்பாடுகளிலுள்ள நியாயமான சாராம்சங்களைத் தேர்ந்து, அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க நீடித்த நிலைத்த மாறுதலை உருவாக்குவதே நமது நோக்கம். இந்த புதிய பார்வைகள், உழப்படாத ஒரு தரிசு நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளாய் இருக்கும். சில விதைகள் உடனடியாக முளைக்கலாம். சில விதைகளில் உயிர்சக்தி இல்லாமல் இருக்கலாம். சில விதைகளுக்கு தண்ணீர் விட வேண்டிய நிலை இருக்கலாம். சில நேரங்களில் பழமைவாதிகள் புதிய கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

ஓர் உண்மையான சமாதான கலாச்சாரம், அமைதிப் பார்வைகள் பூத்துக் குலுங்கும் ஒரு பூந்தோட்டமாக அமையும். ஒரு சனநாயக அமைப்பில் நாம் அனைவருமே தோட்டக்காரர்கள். இன்றைய சமூக சூழலில், நல்ல செய்தியும், கெட்ட செய்தியும் இருக்கின்றன. கெட்டசெய்தி, ஆட்சியாளர் தரப்பில் படைப்பாற்றலுக்கும், புதுமைத் திறன்களுக்கும் பெரும் பற்றாக்குறை உள்ளது என்பதாகும். நல்ல செய்தி, இந்தத் திறமைகளை பெறுவது மிகவும் சுலபம் என்பதுதான். நாம் அலசப்போகும் குறுந்தகராறுகளில் சில பொதுவான அம்சங்களைப் பார்க்கலாம்.

தகராறு தோய்ந்த ஒரு சமூகத்தில் வாழும் போது, வன்முறை பற்றிய பயம் எழுவது இயற்கை. தீமை பயப்பவர் தனது கருத்துக்களை திணிக்க முயலலாம். அமைதியான குடிமக்களை இந்த வன்முறை துன்புறுத்தலாம். பயமும், பயங்கரவாதமும்

தலைவிரித்து ஆடலாம். எந்நேரமும், எங்கேயும், யார் வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம் என்ற நிலை உண்டாகலாம். பல விதமான தீமை பயப்பவர்களை கண்டுணர முடியும். அரசுக்கு ஆதரவாகவும், அரசுக்கு எதிராகவும் இயங்கும் தீவிரவாதிகளையும், அரசு தரப்பு தீவிரவாதிகளையும் காணலாம். தீமை பயப்பவர் மற்றும் துன்புறுபவரிடையே எழும் வன்முறை, மொத்த வன்முறையில் ஒரு சிறு பகுதிதான்.

காவல்துறை அல்லது இராணுவ தலைமை நிலையம் இறந்தவர் எண்ணிக்கை, காயமடைந்தவர் எண்ணிக்கை, பொருட்சேதம், பொருளாதார பாதிப்புக்கள் போன்றவை பற்றிய தகவல்களைத் தந்து பொதுமக்களை சமாதானப்படுத்த முயலும். நேரடியாக பாதிக்கப்பட்டவரின் குடும்பங்கள், நண்பர்கள், அண்டை அயலார், சக ஊழியர்கள் பற்றி கவலைப்படுவதில்லை. ஒரு தனி நபர் கொல்லப்படும்போது, குறைந்தது பத்து பேராவது அதனால் பாதிக்கப்பட்டு, அத்துன்பத்தை எதிர்காலத்திற்குள் தங்களோடு சுமந்து செல்கின்றனர். பத்து பேராவது வெறுப்புக்கு ஆளாகின்றனர். பத்து பேராவது இயலாமை, துக்கம், பழிவாங்குதல் போன்ற உணர்வுகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். இப்படியாக அந்த வன்முறை நிகழ்வு மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கிறது.

இதைத் தவிர சாவிலிருந்து தப்பித்துக் காயப்படுத்தப்பட்ட அகதிகள், இடம்பெயர்ந்தோர், பாலியல் பலாத்காரத்துக்கு ஆட்படுத்தப்பட்ட பெண்கள் என பாதிக்கப்பட்டோர் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இந்த வெறுப்பைச் சுற்றியே இவர்கள் தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும். இது ஓர் ஆக்கப்பூர்வமான வாழ்க்கையாக இருக்காது. இப்படியே அநீதியால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்மறை மனப்போக்கு கொண்டவராய் எந்தவித நல்வழிகாட்டுதலும் இன்றி முடங்கி போகின்றனர். வன்முறையின் சரித்திரம் என்பது இயற்கையை குண்டு போட்டு அழிக்கும், எளியவரை சிறுமைப்படுத்தும், பெண்களை பலாத்காரப்படுத்தும் ஓர் இராணுவ சரித்திரமாகவே இருக்கும். இந்த வன்முறையின் மீது எழுப்பப்படும் சமுதாயம் தீவிரவாதி களினால் அல்லது அரசு தீவிரவாதத்தால் பாதிக்கப்படுகிறது. ஆழமான காயங்களையும், மோசமான நினைவுகளையும் சுமந்துக் கொண்டு நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கி நடைபோடுகிறது. வன்முறை மீளிணக்கத்திற்கும்,

ஒன்றுகூடலுக்கும் இயலாத ஒரு தன்மையை மக்களுக்குள் ஏற்படுத்துகிறது. மீண்டும் தாக்குவதிலேயே அவர்களின் நினைப்பு செல்கிறது. தகராறிலுள்ள முரண்பாடுகள் அப்படியே நீடிக்கின்றன. அரசியல் வாழ்க்கை செயல் இழந்து போகிறது.



உடலில் எழும் ஒரு கட்டி ஊட்டச்சத்துக்களையும், சக்திகளையும் தனக்காக உறிந்து கொள்வது போல், ஒரு தகராறு அந்த சமூகத்தை பாதிக்கிறது. பொருளாதாரம் நிலைகுலைந்துப் போகிறது. பாதிக்கப்பட்டோர் பழிவாங்கு வதற்காக துடிக்கின்றனர். பாதிப்பு செய்வோர் அதே போன்று இன்னமும் வெற்றி களை குவிக்க வேண்டும் என விரும்புகின்றனர். தனிப் பட்ட மற்றும் சமூகப் பெருந் தன்மை சுருங்கி போய் தான்தோன்றித் தனமாய், தன்னலமாய், ஈவு இரக்கமின்றி, கொடூரமாய் மாறுகிறது. புதிய வன்முறையின் மூலம் ஒரு வழிபிறக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்கிறது சமூகம். காலம் ஸ்தம்பித்து நிற்கிறது. சமூகங்கள் முன்னேறாது முடங்கிப் போகின்றன. மக்களும் கூட வளர்ச்சி ஏதுமின்றி வெறுப்பு, வீராவேசம், அழிவு என்னும் பாதையில் திசை மாறிச் செல்கின்றனர். சமூகத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு, மந்தமாகி போன மக்கள் முடங்கிப் போகின்றனர். புரிதல், ஆக்கசக்தி, அகிம்சை என்ற மூன்றுமே மக்களிடமிருந்து மறைந்து போகின்றன. வன்முறையினால் எழும் பாதிப்புகளுக்கு மக்கள் மழுங்கிப் போகின்றனர். கூடவே வளர்ச்சியும், நல்வாழ்வும் தரும் சந்தோசங்களை மக்கள் இழந்து விடுகின்றனர்.

எனவே தகராறுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். தகராறு கட்சிகள் வன்முறையின்றி அகிம்சை வழியில் ஆக்க சக்தியுடன் வாழ அது உதவும். எதிரும் புதிருமாக இருக்கும் நிலையை மாற்றி, கருத்துப் பரிமாற்றத்திற்கும், சமாதானத்துக்கும் அது உதவும். ஒரு வேளை வன்முறை தலைதூக்கிவிட்டால், ஒரு புதிய துவக்கத்திற்கு மீளிணக்கம் மிகவும் அவசியம். கடினமான செயலாக அது இருந்தாலும், ஒரு தகுந்த தீர்வினைத் தேடாமைக்கு இது காரணமாக இருக்க முடியாது.

எக்குவதார்-பெரு **(Ecuador-Peru)**

இந்த இரு நாடுகளுக்கிடையே உள்ள சுமார் 500 சதுர கிலோமீட்டர் நிலத்திற்காக இரு நாடுகளும் மூன்றுமூறை போர் மேற்கொண்டன. இந்தப் பகுதியை இரு நாடுகளுக்குமான பொது நிலமாக அறிவித்து அங்கே ஒரு தேசிய பூங்காவினை அமைக்க நூலாசிரியர் கால்டுங் முன்மொழிந்திருந்தார். ஆனால் எக்குவதார் நாட்டு அதிபர் “இந்த தீர்வு மிக அதிகமான ஆக்க சக்தியோடு உள்ளது. இதைப் புரிந்து கொள்ளவே 30 ஆண்டுகள் ஆகும். இதை நடைப்முறைபடுத்த மேலும் 30 ஆண்டுகள் தேவை” என்று பதிலளித்தார்.

இந்த இரு நாடுகளுமே ஒதுங்கிப்போவது, தள்ளிப்போடுவது என்று 54 வருடங்களைக் கழித்திருந்தன. இராணுவ பலத்தின் மூலமும் பிரச்சினையை தீர்க்க முயன்றிருக்கின்றன. புதிய சர்வதேச எல்லையை வகுத்தும் பார்த்து விட்டன. இந்நிலையில் இந்தத் தகராறை எப்படி கடந்து செல்வது என்று கால்டுங் சிந்தித்தார். அவரது வழிமுறை சற்றே மாறுதலானது. அதாவது பேசப்படாத, காதுகளில் விழாத வார்த்தைகளை அவர் கேட்க முயன்றார். பூமியில் ஒவ்வொரு சதுர மீட்டர் நிலமும் ஏதாவது ஒரு நாட்டுக்கு மட்டுமே சொந்தம் என்னும் ஆழமான நம்பிக்கையில் இருந்த கட்சிகளை அசைக்க முடியாமல் போயிற்று. எந்த விதத் தீர்வும் இன்றி பேச்சுவார்த்தை முடிந்தது.

ஆனால் கால்டுங் முன்னர் சொன்ன அதே தீர்வு 1998ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. எக்குவதார் அதிபர் சொன்னது போல 60 ஆண்டுகள் தேவைப்படவில்லை. வெறும் மூன்று ஆண்டுகளிலேயே தகராறு தீர்க்கப்பட்டது. 1941ம் ஆண்டு முதல் இரு நாடுகளும் சட்ட ரீதியான தீர்வுகளையும், இராணுவத் தீர்வுகளையும் நம்பி தோற்றுப் போனது, இந்த தீர்வுக்கு

உதவியாக இருந்தது. அவர்களது முயற்சிகள் சில குறிப்பிட்டத் தீர்வுகளைச் சுற்றியே வலம் வந்தன. வழக்குகளை தள்ளுபடி செய்வது, போர்நிறுத்த ஒப்பந்தம், யாராவது ஒருவர் வெற்றி பெறுவது என்னும் தீர்வுகளை மட்டுமே நம்பி இருந்தார்கள். எல்லைக் கோடுகள் வரைவதிலேயே கவனமாக இருந்ததால், இந்தத் தகராறைத் கடந்து செல்லும் வழிமுறைகள் கண்களில் தென்பட வில்லை. தீர்வுக்கான காலம் கைகூடி வந்தது இன்னொரு சிறப்பம்சம்.

இரு நாட்டு மக்களும் இந்தத் தகராறினால் சோர்ந்து போய் விட்டார்கள். இந்தத் தகராறு ஒரு மடமைச் செயலாக மாறிவிட்டது. வெற்றிகரமாக ஒரு தகராறை மாற்றி அமைப்பதற்கு ஆக்க சக்தி அவசியம். இது மிகவும் மலிவானதாக இருந்தது. கிற்றோ (Quito) நகரில் ஒரு நாள் இரவு உணவு விடுதியில் தங்கி எக்குவதார் அதிபரை சந்திப்பதற்கும், பேசுவதற்கும் வெறும் 125 டாலர்களே செலவானது. இராணுவ நடவடிக்கையின் மூலம் இந்தத் தகராறை தீர்க்க முயன்றிருந்தால், கோடிக்கணக்கான டாலர் தேவைப் பட்டிருக்கும். சமாதானகரமான தகராறு மாற்றி அமைத்தலும், முன்னேற்பாடு நடவடிக்கைகளும் பல உயிர்களை பாதுகாத்ததோடு, சமூகம் தொடர்ந்து முனனேறிச் செல்ல உதவியது.

### கிழக்கு கிரீன்லாந்து **(Greenland)**

1933ம் ஆண்டு நார்வே மற்றும் டென்மார்க் நாடுகளுக்கிடையே கிழக்கு கிரீன்லாந்து பகுதியில் வாழும் இனுயிட் (Inuit) மக்கள் குறித்த ஒரு வழக்கு உலக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தது. நார்வே நாட்டைப் பொறுத்தவரை, அந்த நிலம் தமது என்றும் தாங்கள்தான் முதலில் கண்டுபிடித்தோம் என்றும் வாதிட்டார்கள். டென்மார்க் மக்கள் வந்தேறிகள் என்றாலும், இந்த இனுயிட் மக்களை நாங்கள் தான் மதமாற்றம் செய்து, எழுத்தறிவித்து, சட்டம் நீதி புகட்டி நவீன வாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தினோம் என்றார்கள். எழுத்து, மொழி, வீடுகள் கட்டுவது, ஊட்டமிக்க உணவு தயாரிப்பது போன்றவற்றை நாங்கள் செய்ததால், இந்தப் பகுதி எங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடினர். இரு நாடுகளுமே தங்களது நிலைகளை மட்டுமின்றி, அதற்கான நியாயங்களையும், உரிமைகளையும், தெளிவாகக் கூறினர். உலக நீதி மன்றம் டென்மார்க் நாட்டிற்கு ஆதரவாக தீர்ப்பளித்தது.

எக்குவதார், பெரு தகராறைப் போன்று, இந்த பிரச்சினையில் நார்வே மற்றும் டென்மார்க் நாடுகளும் மற்றும் இதர ஸ்கேன்டிநேவிய நாடுகளும் சேர்ந்து ஒன்றாய் உரிமை பாவித்து அந்த பகுதியை நிர்வகிக்கலாம். ஒரு தகராறினை ஆய்வு செய்யும் போது, தகராறு கட்சிகள், அவரது இலக்குகள் மற்றும் முரண்பாடுகள் இவற்றை தேர்ந்த பின்னர், நியாயமான மற்றும் அநியாயமான இலக்குகளைக் கண்டுகொள்வது முக்கியம். இதை எப்படித் தெரிந்து கொள்வது என்பது ஒரு முக்கியமான கேள்வி. கட்சிகள் அடைய விரும்பும் ஓர் இலக்கு, அடிப்படை மனித தேவைகளுக்குத் தொடர்புடையன எனலாம். அடிப்படைத் தேவைகள் உயிர்வாழ்வதும், நல்வாழ்வும், சுதந்திரமாய் வாழ்வது மற்றும் அடையாளமும், அர்த்தமும் உள்ள வாழ்வினை கொணடிருப்பதாகும். டென்மார்க் நாடு இனுயிட் மக்களுக்கு முதல் இரண்டு அடிப்படைத் தேவைகளை அளித்திருந்தாலும், அம்மக்களின் சுதந்திரம், அடையாளம், அர்த்தம் போன்றவை அவர்கள் கலாச்சாரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

நார்வே மற்றும் டென்மார்க் என்னும் இரு நாடுகளும் உரிமை கொண்டாடும் போது, இனுயிட் மக்கள் ஈரடுக்கு காலனி ஆதிக்கத்திற்கு ஆளாகக் கூடும். நார்வே நாட்டோடு சேராதிருப்பது, டென்மார்க் நாட்டோடு சேராதிருப்பது, இரண்டு நாடுகளுடனுமே சேராதிருப்பது என்பன போன்ற தீர்வுகளை அலசும் போது, இனுயிட் மக்களுக்கு தன்னாட்சி வழங்குவது, கிழக்கு கிரீன்லாந்து பகுதியை ஐக்கிய நாடுகள் (United Nations) சபையின் மூலம் நிர்வகிப்பது போன்ற தீர்வுகள் தென்படுகின்றன. சட்ட ரீதியாக இந்தத் தகராறை தீர்க்க முயலும் போது, இரு கட்சிகளுக்கிடையே யார் வெற்றி பெறுவது என்பது போன்ற சிந்தனையோட்டம் செல்கிறது.

விட்டுக் கொடுப்பதும், கடந்து செல்வதும் சட்ட ரீதியான தீர்வுகளில் பொதுவாக கணக்கிடப்படுவதில்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்படும் போது, தகராறு தீர்வு தேடும் தகுதியை நீதிமன்றம் இழக்கிறது. இந்த இனுயிட் தகராறை மாற்றி அமைப்பது என்பது, கடைக்கோடி (extreme) நிலைகளை தவிர்த்து, பிற தீர்வுகளை உள்ளடக்கியதாகவே இருக்க முடியும். இனுயிட் மக்களின் சுதந்திரம் இலக்காக இருந்தாலும், அதை அடைந்திட உலக நாடுகள் சபையில் நார்வே மற்றும் டென்மார்க் நாடுகளின்

ஒத்துழைப்பு இன்றியமையாதது. உதாரணத்திற்கு, நார்வே மீன்வளத் துறையில் உதவும்போது, டென்மார்க் விவசாயத்தில் உதவலாம்.

## ஹவாய் **(Hawaii)**

ஹவாய் தீவுகளின் பூர்வீக குடிமக்களை பொறுத்தவரை, இந்த தீவுக் கூட்டத்தில் உள்ள எட்டுத் தீவுகளுமே அவர்களுக்கு சொந்தமானவை. 1778ஆம் ஆண்டு வெள்ளையர்கள் இந்தத் தீவுக் கூட்டத்தைக் கண்டுபிடித்ததிலிருந்து கைப்பற்றி வைத்திருக் கிறார்கள். அமெரிக்க கடற்படை வீரர்களும், வர்த்தகர்களும் 1893ஆம் ஆண்டு ஹவாய் மன்னரிடமிருந்து இராணுவ புரட்சி மூலம் அதிகாரத்தை கைப்பற்றினர். 1898ஆம் ஆண்டு ஹவாய் தீவுகளை ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் இணைத்து 1959ஆம் ஆண்டு 50வது மாநிலமாக அறிவித்தனர். இவை அனைத்துமே சட்டத்திற்கு புறம்பான, ஹவாய் பூர்வீக மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஆகும்.

ஹவாய் மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டோர் பூர்வீகக்குடிகளாக இருந்திருந்தால் 1945ஆம் ஆண்டு ஹவாய் தனி நாடாக மாறியிருந்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளைக்காரர்கள் ஹவாய் மக்களை பல வழிகளில் கொன்றனர். தம் இனத்தையும், மஞ்சள் நிற மக்களையும் அதிக அளவில் குடியேற்றினர். பூர்வீக மக்களின் நிலங்களை விலைக்கு வாங்கி, அவர்களது வாழ்க்கை முறைகளை சீரழித்தனர். அறிமுகம் இல்லாத நோய்களை சமூகத்திற்குள் கொண்டு வந்து, அதை கடவுளின் செயல் என்று ஏமாற்றி பெரும் சேதத்தினை ஏற்படுத்தினர். கிருஸ்தவ பாதிரியார்கள் பெற்றோரிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து, ஆங்கில வழி கல்வி பெறுவதற்காக அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்தனர்.

நாடிழந்து, வீடிழந்த ஹவாய் மக்கள் தங்கள் கலாச்சாரத்தையும் இழந்தனர். குடிப்பழக்கம், போதைபொருள், திருட்டு, சிறைவாசம் என சிக்கிக் கொண்ட ஹவாய் மக்கள் குறுகிய சந்தோசமற்ற வாழ்க்கையை வாழ்ந்தனர். வெள்ளைக்காரார்கள் இம்மக்களை கண்டுபிடித்ததாக சொல்லிக் கொண்ட போது 8,00,000 பேர் இருந்தனர். ஆனால் இறுதியில் 100% ஹவாய் இரத்தம் கொண்ட பூர்வீக மக்கள் வெறும் 8,000 பேரே மிஞ்சினர். 20% மக்கள் தங்களை ஹவாய் மக்கள் என்று அழைத்தாலும், மொத்த மக்களில்

25% வெள்ளைக்காரர்களாகவே இருந்தனர். எஞ்சியவர்கள் கிழக்கு ஆசியாவிலிருந்து விவசாய கூலிகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள். வெள்ளைக்கார வந்தேறிகள் ஹவாய் நிலத்தை பெரும் பண்ணைகளாக மாற்றினர். இவர்களது இராணுவ தளத்தின் காரணமாக ஹவாய் தீவு ஜப்பானிய தாக்குதலுக்கு உள்ளானது. இவர்களின் சுற்றுலாத் துறை ஹவாய் மக்களின் கலாச்சாரத்தை சிறுமைப்படுத்துகிறது. தங்களது நிலத்தை திரும்பக் கோரும் ஹவாய் மக்கள், பிற மக்களை நன்றாக நடத்துவோம் என்று உறுதியளிக்கிறார்கள். ஆனால் வெள்ளைக்கார வந்தேறி மக்களோ, தாங்கள் வராமல் இருந்திருந்தால் ஹவாய் மக்கள் இன்னும் மரம் ஏறிக்கொண்டுதான் இருப்பார்கள் என்று வாதிடுகிறார்கள். சில வந்தேறிகள் வரைமுறைக் கடந்து நடந்து கொண்டாலும், அவர்களது எண்ணம் பூர்வீக மக்களை முன்னேற்றுவதுதான் என்றும் கூறுகிறார்கள். சட்டத்திற்குட்பட்டு கடினமாக உழைத்தால் பூர்வீக மக்கள் முன்னேறலாம் என்பது அவர்களின் வாதம்.

வரலாற்று அடிப்படையில் ஹவாய் தீவுகள் பூர்வீக மக்களுக்கு சொந்தம் என்றாலும், சனநாயக முறையில் பார்க்கும் போது, பெரும்பான்மை வந்தேறி மக்களின் வசமாகி விடுகிறது. பூர்வீக குடிமக்கள் இரண்டாம் தர குடிமக்களாகி விடுகின்றனர். இந்நிலையில் 1993 நவம்பர் மாதம் அமெரிக்க அதிபர் கிளின்டன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஹவாய் தீவுகளில் நடத்திய இராணுவ புரட்சிக்காக மன்னிப்புக் கோரினார். ஹவாய் மக்கள் மகிழ்ந்தாலும், செவ்விந்திய மக்களுக்காக உருவாக்கப்பட்டது போன்ற “நாட்டுக்குள் ஒரு நாடு” என்ற அமைப்பினை உருவாக்க எத்தனிக்கலாம். பேச்சளவில் மன்னிப்புக் கூறுவதும், ஒரு சில பூர்வீக மக்களுக்கு கொஞ்சம் நிலம் கொடுத்து விடுவதும் பிரச்சனைக்குத் தீர்வாக முடியாது. புலம் பெயர்ந்து வந்த மக்களைத் தூக்கி எறிந்து விடுவது என்பதும் இயலாது.

ஹவாய் பிரச்சினைக்கு என்ன தான் தீர்வு என்று சிந்திக்கும் போது இரு முடிவுகள் எழுகின்றன. இந்தத் தீவுக் கூட்டத்தினை “மகாணங்களாக” பிரிக்கலாம் என்பது ஒரு தீர்வு. ஆனால் அனைத்து மக்களுமே, மொத்த தீவுகளுக்கும் உரிமை கொண்டாடுவதாலும், அனைவருமே சேர்ந்து வாழ்வதாலும், இந்தத் தீர்வினை நடைமுறைப்படுத்த இயலாது. அனைத்து

மக்களுமே சேர்ந்து சொந்தம் கொண்டாடும் அதே வேளையில், பூர்வீக மக்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது நல்ல தீர்வாக அமையலாம். அமெரிக்க நாட்டோடான உறவினையும், பூர்வீக மக்களுக்கும் வந்தேறி மக்களுக்கும் இடையேயான உறவினையும் திறம்பட நிர்வகிப்பது முக்கியமானது.

சீன நாட்டோடு ஹாங்காங் பகுதி கொண்டிருக்கும் உறவினை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். சுதந்திர நாடாகவும் இன்றி, கூட்டமைப்பு ஏற்பாடுகளுமின்றி ஹாங்காங் இயங்குவது போல, அமெரிக்க ஐக்கிய நாடுகளுடனும், பாலினேசியா (Polynesia) நாடுகளான தகிதி (Tahiti), சமோவா (Samoa), நியூசிலாந்து (New Zealand), ஈஸ்டர் தீவுகளுடன் (Easter Islands) ஒரு கூட்டமைப்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம். இரண்டு அவைகள் கொண்ட ஒரு சட்டமன்றத்தினை நிறுவி, ஒன்று அனைத்து மக்களுக்குமாகவும், இன்னொன்று பூர்வீக மக்களுக்குமாகவும் வைத்துக் கொள்ளலாம்.

ஹவாய் தீவுக் கூட்டத்தின் புனிதத் தலங்களை மீண்டும் கண்டெடுத்து, தங்களது கலாச்சாரத்தை புணர்நிர்மாணம் செய்து, சரித்திர வடுக்களை மறந்து, ஹவாய் மற்றும் ஆங்கில மொழிகளை ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொண்டு, ஒரு புதிய துவக்கத்திற்கு முயலலாம். பூர்வீக குடிமக்களல்லாதோர் ஹவாய் கலாச்சாரத்தின் அடிப்படை சாராம்சங்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நிதிநிலைப் பொருளாதாரம் மற்றும் தேவைகள் சார்ந்த சுயசார்பு உற்பத்திப் பொருளாதாரம் கலந்த ஒர் அமைப்பினை ஏற்படுத்தி, பசிபிக் பிராந்தியத்தோடான தொடர்புகளை துவக்கிக் கொள்ளலாம். அந்த நல்லுறவின் மீது எழுப்பப்படும் பாதுகாப்போடு இராணுவத்தை தடை செய்து, இராணுவ தளங்களை ஐ.நா. வீரர்களுக்காக உபயோகிக்கலாம்.

### கொலம்பியா **(Colombia)**

அடித்தட்டு எழுபது சதவீத கருப்பு இனத்தைச் சார்ந்த கொலம்பிய மக்கள் அன்றாடத் தேவைகளை பூர்த்திச் செய்வதற்குக் கூட சம்பாதிக்க இயலாதநிலையில் உள்ளனர். வேலையில்லா திண்டாட்டம், கடினமான வாழ்க்கை, ஏழ்மை, நோய், வன்முறை என அமைதியின்றி உழல்கின்றனர். பாதுகாப்பான கண்ணியமான வாழ்க்கையை விரும்புகின்றனர். குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக போதை பொருள் உற்பத்திச்

செய்வது அல்லது பணக்காரர் களிடமிருந்து திருடுவது போன்ற எதையுமே செய்யத் துணிந்தவர்கள்.

உயர்மட்ட முப்பது சதவீத வெள்ளை இன மக்களைப் பொறுத்தவரை, தங்களது வாழ்க்கை வன்முறையால் பாதிக்கப்படுவதையும், இந்த வன்முறை நாளுக்குநாள் அதிகமாவதையும் உணருகிறார்கள். போதைப் பொருள் உற்பத்தி மற்றும் வினியோகமும், திருட்டு, கொலை போன்ற குற்றங்கள் தலைவிரித்து ஆடுவதும், காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள் செயலிழந்து போயிருப்பதும் இவர்களை பயமுறுத்துகின்றன. அமெரிக்க உதவியுடன் நாட்டின் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்றால், அமெரிக்காவின் இராணுவ தலையீட்டைக் கூட சகித்துக் கொள்ளலாம் என்பது இவர்கள் நிலை.

கொலம்பியா இன, வகுப்பு அடிப்படையில் பிளவுபட்டிருக்கும் ஒரு சமூகம். அதிகாரவர்க்கம் அடிமட்டத்தில் உள்ளோரை சுரண்டி வாழும் ஒரு வகுப்புவாத சமூகம் இது. தொழிற்சங்கத்தைச் சார்ந்தோரை நில உரிமையாளர் வெளியேற்றிவிடுவதும், இராணுவத்தினர் கொல்வதும், மத குருக்கள் சபிப்பதும் வாடிக்கை. இதன் காரணமாக அடிமட்ட மக்கள் தீவிரவாதிகளாக மாறுவதும், அரசு இதனை ஒடுக்க மேலும் வன்முறையை உபயோகிப்பதும் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நாட்டில் 19ஆம் நூற்றாண்டு திட்டங்களோடு, இரு கட்சி அரசியலமைப்பு இயங்கிவருகிறது. நவீன கொள்கைகளான சமூக சனநாயகம், பசுமைத்துவம், பொதுவுடைமை போன்றவற்றை ஜீரணிக்கும் தன்மையற்றதாய் இருக்கிறது. 1948 ஏப்ரல் 9ம் தேதி கைதான் (Gaitan) என்ற தொழிற்சங்கவாதி கொல்லப்பட்டதிலிருந்து, ஓர் உள்நாட்டு கலவரம் நடந்துகொண்டிருக்கிறது. போதைப்பொருள் உற்பத்தி செய்து கடத்துவதால், அதிகாரவர்க்கம் பெரும் லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. மக்கள் மன்றம் மேற்கண்ட களங்கமுற்றக் குழுக்களின் போர்க்களமாக காட்சியளிக்கிறது. இவை அனைத்திற்கும் மேலாக அமெரிக்க ஐக்கியநாடுகளின் இராணுவ நடவடிக்கை அபாயமும் தொற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அரசுக்கும் தீவிரவாதக் குழுக்களுக்குமிடையே உடன்படிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். உடன்படிக்கையை ஒரு மார்க்கமாக கருதாது, அதையே ஓர் இறுதி நிலையாகக் கணக்கிடுகின்றனர். பலகட்சி அரசியல் அமைப்பில் தேர்தல்கள் திருவிழாக்களாகவும்,

பாராளுமன்றம் முக்கியத்துவம் குறைந்தும் காணப்படும் அபாயம் உள்ளது. அதிகமான அரசு தலையீடு, கடுங்காவல் கண்காணிப்பு, மற்றும் கடுமையான தண்டனை மூலம் நிலையான கட்டமைப்பையும் கலாச்சாரத்தையும் உருவாக்கலாம் என்பது இயலாததாக இருக்கிறது. போதைப் பொருள் ஒழிப்பு என்பது மொத்தப் பொருளாதார சீரமைப்பினாலும், அமெரிக்கா போன்ற நாடுகளில் போதைப்பொருள் தேவை இல்லாமல் ஆக்குவதாலும் மட்டுமே முடியும். போதைப்பொருள் போன்ற இலாபகரமான பொருளாதார நடவடிக்கை ஒன்றை கண்டுபிடிப்பது கடினமானது. களங்கமுற்ற காவல் துறை மற்றும் இராணுவத்தினால் நேர்மையான, திறமையான நிறுவனங்களை உருவாக்கி செயல்படுத்த முடியாது. அமெரிக்கத் தலையீட்டின் மூலம் ஒரு நிரந்தர சார்பு தன்மையையும், காலனி ஆதிக்கத்தையும் உருவாக்கும் அபாயம் உள்ளது.

ஒரு சமுதாயத்தை எப்படி எழுப்புவது என்பதுதான் அடிப்படை பிரச்சினை. சமூகக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் உருவாக்குவதில் குடும்பம், கல்வி நிறுவனங்கள், தேவாலயங்களின் பங்கு மிகவும் இன்றியமையாதது. மக்கள் மன்றத்தில் அரசுசாரா நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் இடையே ஒரு வலைப்பின்னலை ஏற்படுத்தி, சமூக அமைப்பினை உருவாக்குவது அவசியம்.

நல் தீர்வுகளுக்கான சில வழிமுறைகள்:

1. சமுதாயத்தின் அனைத்து மட்டங்களிலும் தகராறுகளைக் கையாளும் திறனை வளர்ப்பது, தேவாலயங்கள், பள்ளிகள் மற்றும் தொலைக்காட்சி வகுப்புகள் மூலமாக தகராறுகள் குறித்த அறிவின்மையை நீக்குவது.
2. பெண்கள் மற்றும் இளஞர்களை சமாதானப் பணியாளர் களாக, நடுநிலையாளர்களாக பயிற்றுவிப்பது.
3. சமாதானம் மற்றும் தகராறுக் கல்வியினை பள்ளிகளில் அறிமுகப்படுத்தி, வெற்றிகரமான, வன்முறையற்ற, ஆக்கப்பூர்வமான தகராறு கையாளும் தகவல்களை உள்ளடக்கிய கையேடுகளை வெளியிடுவது.
4. ஊடகங்களில் சமாதான இதழியல் பயிற்சிகள் அளிப்பது, தகராறுகளின் அடிப்படை காரண காரியங்களில் கவனம்

செலுத்தி, மேலோட்டமான வன்முறைச் சம்பவங்களில் குறைவான கவனம் செலுத்துவது.

5. ஆயுத நீக்கம் செய்த நகர்மன்றங்களின் கூட்டமைப்பான சமாதானப் பகுதிகளை உருவாக்கி பின்னர் அவற்றுக்குத் தேவையான சர்வதேச பாதுகாப்பு அளிப்பது.

6. அண்டைநாடுகளின் உதவியோடு சர்வதேச சமாதானப் பேணலில் (Peace-Keeping) ஈடுபடுவதும் அதிகம் பெண்களை கொண்ட வன்முறையற்ற மத்தியஸ்த பயிற்சிகளுடன், காவல்துறை முறைகளுக்கு உட்பட்டு இதனை மேற்கொள்வது.

7. தென்ஆப்பிரிக்கா மற்றும் அமெரிக்க நாடுகளில் கடைபிடிக்கப்பட்டது போன்ற உண்மை மற்றும் மீளிணக்க குழுக்கள் (Truth and Reconciliation Commission) அமைப்பது.

8. தொழிலாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் அதிக இலாபம் கிடைக்கும் வகையிலும், இடைத்தரகர்களின் சுரண்டுதல் இல்லாத முறையிலும் வியாபாரம் நடத்த உதவுவது.

9. வளர்ச்சி பொருளாதாரத்தோடு கூடுதலாக சிறு கடன் உதவி, பொருத்தமான தொழில்நுட்பம், கூட்டுறவு போன்ற அம்சங்கள் கூடிய நீடித்த நிலைத்த பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவது.

10. ஆணாதிக்கம், வன்முறை போன்ற கலாச்சார கோட்பாடுகளை நேரடியாக தாக்குவது.

11. மேற்கண்ட நடவடிக்கைகளுக்காக, காவல்துறை மற்றும் இராணுவத்தினை மறுசீரமைத்து உள்நாட்டு பாதுகாப்பினை ஊக்கப்படுத்துவது.

12. பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளை ஓர் உயரிய சனநாயக சமூகத்தின் கோட்பாடுகளாய் உபயோகிப்பது.

இவையனைத்துமே ஒன்றன்பின் ஒன்றாக அல்லது ஒரே நேரத்தில் இணையாக செய்து முடிக்கப்பட வேண்டும்.

ருவாண்டா **(Rwanda)**

1994 இனப்படுகொலைக்குப் பின்னால் நிறைய விடயங்கள்

இருக்கின்றன. டுட்சி (Tutsi), குட்டு (Hutu), மிதவாத குட்டு (Moderate Hutu), என்னும் அடையாளங்கள் இனம், வகுப்பு, அதிகார வர்க்கத்தினை குறிப்பவையாகும். இவற்றின் வேர் ஜெர்மானிய காலனி ஆதிக்கத்தில் புதைந்து கிடக்கின்றன. குட்டு மக்களைவிட டுட்சி மக்களை அவர்கள் ஆதரித்தனர். ஐரோப்பாவில் எழுந்த கருத்து வேறுபாடுகளும் ஆப்பிரிக்காவிற்குள் கொண்டு வரப்பட்டன.

ஆங்கிலேய ஆதரவாளர்களான யூகான்டா (Uganda), டுட்சி (Tutsi), மற்றும் கபிலா (Kabila), பிரெஞ்சு ஆதரவாளர்களான குட்டு (Hutu) மற்றும் மொபுட்டு (Mobutu) ஆகியோரை எதிர்த்து நின்றனர். பிரச்சினையின் இன்னொரு அம்சமாக வளர்ச்சி உதவிகள் மற்றும் சுவிஸ் நாட்டு உதவி அமைந்தது. இம்மாதிரியான வளர்ச்சி நிறுவனங்கள் வெற்றியை விரும்புவதால், பெரும்பான்மை இன மக்களோடே வேலை செய்ய விரும்புகின்றனர். அப்படிச் செய்யும்போது சமூகத்தில், ஏற்கனவே நிலவும் வகுப்புவாதம் போன்ற பிரச்சினைகளை ஆழப்படுத்தி விடுகின்றனர். ஒடுக்கப்பட்ட மக்கள் இடம் பெயர்ந்து போவதைத் தவிர வேறுவழி தெரியாமல் தவிக்கின்றனர். சக்தி வாய்ந்த பிரிவினர் தம் செல்வாக்கை நிலைப்படுத்திக்கொள்ள அடக்குமுறைகளை நாடுகின்றனர். இதன் விளைவாக புலம்பெயர்தல், படையெடுப்பு, இனப்படுகொலை நிகழ்கின்றன. டுட்சி, குட்டு மக்களுக்கிடையே எழுந்த தகராறை பார்க்கும்போது ஐந்து தீர்வுகளைக் கண்டுணரலாம்.

1. குட்டு மக்களுக்கே அனைத்து அதிகாரத்தையும் வழங்குவது (இதுதான் முன்னர் நடைமுறையில் இருந்தது).
2. அனைத்து அதிகாரங்களையும் டுட்சி மக்களுக்கும், மிதவாத குட்டு மக்களுக்கும் பகிர்ந்து வழங்குவது (இதுதான் தற்போது நடக்கின்றது).
3. அனைத்தையுமே சர்வதேச அல்லது ஆப்பிரிக்க ஒற்றுமை நிர்வாகத்தின் கீழ் விடுவது.
4. சமரசம், தேர்தல், கூடவே மேற்கண்ட 1 அல்லது 2 ஏற்பாடுகள்.
5. ஓர் ஒட்டுமொத்த ருவண்டா நாட்டு அடையாளத்தை வெளிக் கொணர்வது.

இவற்றில் 5வது தெரிவு அடைய முடியாத அளவிற்கு உன்னதமானது. 4வது தெரிவு ஏற்கனவே நிலவும் இன அடையாளங்களை ஆழப்படுத்தி விடும் அபாயம் உள்ளது. 1 மற்றும் 2 தீர்வுகள் இரண்டு மக்களில் ஒருவரை ஆதரிப்பதால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. இந்நிலையில் ஓர் எதிர்மறை கடந்து செல்லுதலுக்கே நாம் தள்ளப்படுகிறோம்.

ருவாண்டா சமூகத்தில் வெறுப்புகள் அதிகமாக மேலோங்கி நிற்பதால், அந்நாட்டிற்கு வெளியேதான் தீர்வினைத் தேடவேண்டியிருக்கிறது. இந்துமகா சமுத்திரத்திலிருந்து அட்லாண்டிக் மகா சமுத்திரம் வரை வியாபித்திற்கும் உகாண்டா, டான்சானியா, ருவாண்டா, புருண்டி, காங்கோ போன்ற நாடுகளை இணைத்து ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்துவதே சிறந்த தீர்வாக இருக்கும். இந்தக் கூட்டமைப்பில் மக்களும், கருத்துக்களும், பொருட்களும், சேவைகளும் தங்கு தடையின்றி சென்றுவர வாய்ப்புகள் உருவாகும். அதன்மூலம் மக்கள் தங்கள் விரோதங்களை மறந்து, அவர்தம் குறுகிய வட்டங்களில் இருந்து வெளிவர முடியும்.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகள் கிழக்கு, மேற்காக ரயில் பாதை, சாலைவசதிகள் செய்து தந்து, இந்த புதிய அமைப்பை வளமுறச் செய்ய முடியும். தென் ஆப்பிரிக்க நாடு போன்று, இந்த புதிய கூட்டமைப்பும் பல துறைகளில் மிளிரமுடியும். ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐ. நா. சபை ருவான்டா நாட்டில் நடந்த இனப்படு கொலையில் தங்களின் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு அந்த சமூகத்தின் மீளிணக்கத்திற்கு தங்களாலான பங்களிப்பைச் செய்யலாம். அதன்மூலம் ஒரு சிறிய நாடு, ஒரு பெரிய சுமையை தாங்குவதை தவிர்க்க முடியும்.

### உல்ஸ்டர் (Ulster)

வட அயர்லாந்தில் வாழும் பிராடஸ்டண்ட் மக்கள் இங்கிலாந்து நாட்டை ஆதரிக்கின்றனர். பகுத்தறிவு, தேர்ந்த தெளிந்த வார்த்தைகள், பாடல்கள், இசை போன்றவற்றை விரும்புகின்றனர். ரோமன் கத்தோலிக்க மதம் நம்பிக்கை, சிந்தனை, பேச்சு அனைத்திலுமே ஒரே போக்கான தன்மையைக் கொண்டிருப்பதால் வேற்றுமை, விவாதம் இவற்றை விரும்பும் இம்மக்களுக்கு ஏற்புடையதாக இல்லை. ரோமன்

கத்தோலிக்கர்கள் அதிகாரத்திற்கு வந்தால், வேற்றுமைகளற்ற பகுத்தறிவற்ற ஒரு சர்வாதிகார ஆட்சியைத்தான் அமைக்க முடியும் என கருதுகின்றனர். கத்தோலிக்கர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு பிராடஸ்டன்ட் மக்கள் தங்கள் குழந்தைகளை அனுப்புவதில்லை.

வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்கள் அயர்லாந்து நாட்டை விரும்புகின்றனர். கவிதைகளிலும், இசை, பாடல்களிலும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த அஞ்சாத கத்தோலிக்க மக்களை இவர்கள் ஆதரிக்கிறார்கள். இவர்கள் தங்கள் குழந்தைகளை பிராடஸ்டன்ட் பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை. அதிகாரத்தில் இருக்கும் பிராடஸ்டன்ட் மக்களுக்கு பின்னால் ஆங்கில காலனி ஆதிக்கம் இருப்பதாக வாதிடுகின்றனர். காவல் துறையில் 93% இடம்பிடித்துள்ள இவர்கள் ஆங்கிலேய இராணுவத்தை தமது நாட்டிலேயே குவித்து இருப்பதைப் பற்றி வருத்தம் தெரிவிக்கின்றனர். தங்களை பாதுகாத்துக் கொள்ள தமக்கு ஆயுதம் தேவை என்று நினைக்கின்றனர்.

உல்ஸ்டர் பகுதி மிதவாதிகள், கத்தோலிக்கர்களாக இருந்தாலும், பிராடஸ்டன்ட்களாக இருந்தாலும், அனைவருக்குமே இந்த நிலம் சொந்தம் என்று நினைக்கின்றார்கள். அடிப்படைவாதிகள் இம்மக்களுக்கிடையே மிகக்குறைந்த சதவீதத்தினர்தான். உல்ஸ்டர் மிதவாதிகளைப் பொறுத்தவரை, அகிம்சையில் நம்பிக்கை கொண்டுள்ளனர். அனைவரது வாழும் உரிமையை மதிக்கும் இம்மக்கள், ஒரு புதிய உல்ஸ்டர் சமுதாயத்தை கட்டி எழுப்ப விரும்புகின்றனர்.

ஊடகங்கள் செய்கின்ற முக்கியமான தவறு இம்மாதிரியான சிக்கலான தகராறுகளை எளிமைப்படுத்திவிடுகின்றனர். இரண்டு தகராறு கட்சிகளை மட்டுமேத் தெரிந்துகொண்டு, முரண் பாடுகளுக்கு மதவர்ணம் பூசி, வகுப்பு வேறுபாடுகளை மறந்து, எளிமைப்படுத்தி மக்களுக்குச் சொல்கின்றனர். கிரேட் பிரிட்டன் மற்றும் வட அயர்லாந்தில் வாழும் பிராடஸ்டன்ட் மக்களை ஐக்கியவாதிகள் (unionists) என்றும், அயர்லாந்து நாட்டில் தெற்கில் உள்ள 26 மாவட்டங்களையும், வடக்கில் உள்ள 6 மாவட்டங்களை சேர்த்து ஒன்றுப்பட்ட ஐரிஷ் குடியரசை நிறுவ முயல்பவர்களை குடியரசுவாதிகள் (republicans) என்றும் ஊடகங்கள் குறிப்பிடுகின்றன. சிக்கலான பெரும் பிரச்சினை இப்படிச் சிறிதாக்கப்படும் போது, பல தீர்வுகளும் கண்ணுக்கு

தெரியாமல் போய்விடுகின்றன.

இங்கிலாந்தைப் பொறுத்தவரை, அயர்லாந்து அவர்களது முதல் காலனி, வட அயர்லாந்து கடைசி காலனியாக இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். வட அயர்லாந்தை இழப்பது ஒரு பேரிழப்பாகத் தோன்றுகிறது. ஆனால் அயர்லாந்து நாட்டிலோ, ஒன்றுபட்ட அயர்லாந்தை உருவாக்குவது ஒரு கனவாகவே இருக்கிறது. அமெரிக்காவில் வாழும் ஐரிஷ் மக்களும் இந்தத் தகராறில் ஒரு முக்கியமான கட்சி என்பதை மறந்து விடக்கூடாது. உல்ஸ்டரில் வாழும் 85% மிதவாத மக்களும் ஒரு முக்கியமான கட்சி என்பதை கருத்தில் கொள்ளவேண்டும். தகுதியற்ற பத்திரிகையாளருக்கு குண்டுகளும், வன்முறையும்தான் கண்ணில் படுகிறதேயொழிய, கடினமான உண்மைகளை அவர்கள் கண்டுகொள்வதில்லை. 1997 ஆகஸ்ட் மாதம் டப்ளின் நகரிலும், 1998 மார்ச் மாதம் லண்டனிலும் சமர்பிக்கப்பட்ட நூலாசிரியர் கால்டுங்கின் தீர்வுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. ஓர் இடைக்கால ஆங்கிலேய-ஐரிஷ் கூட்டாட்சியினை நிறுவி, சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு பிறகு உல்ஸ்டர் பகுதிக்கு சுயாட்சி வழங்குவது.

2. 6 மாவட்டங்களைக் கொண்ட உல்ஸ்டர் பகுதியில் உள் எல்கைகளை நீக்கிவிட்டு, இடைக்கால ஏற்பாடாக இங்கிலாந்தும், அயர்லாந்தும் உரிமைக்கொண்டாடும் ஒரு பகுதியாக இதை அறிவிப்பது.

3. உல்ஸ்டர் மக்களின் தன்னாட்சி உரிமைகளை அங்கீகரிப்பது, உல்ஸ்டர்காரர்களை இரத்தத்தின் அடிப்படையிலோ, கலாச்சார அடிப்படையிலோ, வாழும் காலத்தின் அடிப்படையிலோ அல்லாமல் அந்தப்பகுதியை யார் யார் தமது தாய்நாடு என்று கருதுகிறார்களோ அவர்களை மட்டுமே உல்ஸ்டர்காரர்கள் எனக் கொள்ளவேண்டும்.

4. உல்ஸ்டர் பகுதி பாராளுமன்றத்தில் பிரிவினைவாதமற்ற தலைவர்களின் பங்கு கூடுதலாக வேண்டும்.

5. கத்தோலிக்க மற்றும் பிராடஸ்டண்ட் மக்களுக்கு என இரண்டு அவைகளை நிறுவி, மரபுவழி சொத்துக்களில், ஆளுமைவிடயங்களில் ‘வீட்டோ’ (Veto) உரிமை

கொடுப்பது.

6. ஐந்து உறுப்பினர்கள் கொண்ட ஓர் ஆட்சிக்குழுவினை நிறுவி லண்டன், டப்ளின், பிராடஸ்டன்ட் சமூகம், கத்தோலிக்க சமூகம், உல்ஸ்டர் பாராளுமன்றம் இவற்றிலிருந்து அந்த அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுப்பது. தத்தம் சமூகங்களில் பணியாற்றும் இந்த உறுப்பினர்கள் படிப்படியாக தன்னாட்சிக்கு உதவுவது.

7. உல்ஸ்டர் மெதுவாக சர்வதேச அடையாளத்தைப் பெறுவது. பிரிட்டன், ஐரிஷ் கடவுச்சீட்டுகளைப் (Passport) போன்று உல்ஸ்டர் கடவுச்சீட்டும் வெளியிடலாம். பிரிட்டானிய பவுண்ட் மற்றும் ஐரிஷ் யூரோ போன்ற பணங்களை புழங்கவிடுவது. யூரோவைப் போன்று ஓர் உள்ளூர் பணம் வெளியிட்டு, உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிப்பது, வாட் (VAT) போன்ற வரிகளை விதித்து ஐரோப்பிய யூனியன் உதவிகளைப் பெற்றுக்கொள்வது. லண்டன் மற்றும் டப்ளின் அரசுகளுடன் சேர்ந்து பணியாற்றத் தனித்தனி ஒப்பந்தங்கள் செய்து கொள்வது, உல்ஸ்டர் பகுதியில் ராணுவங்களை அகற்றி தனிப்படை அமைக்கும் உரிமையையும் விட்டுவிடுவது, இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து நாடுகள் சேர்ந்து பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுவது, பிரிட்டானிய ராணுவத்தை விலக்கிக் கொள்வது, உள்ளூர் குழுக்களில் ஆயுத நீக்கம் செய்வது, இன பேதமற்ற காவல்துறையை உருவாக்குவது, ஐரோப்பிய யூனியனிலும் பிற சர்வதேச நிறுவனங்களிலும் உல்ஸ்டருக்கு பார்வையாளர் தகுதி வழங்குவது, மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஏராளமான பொருளாதார உதவி செய்வது, முழு சுதந்திர வாய்ப்புக்களை மறுக்காமல் இருப்பது, சர்வதேச உள்நாட்டு எல்லைகளை மாற்றி அமைத்துக் கொள்ள தயாராயிருப்பது.

இந்த சமாதான முயற்சியை வழிநடத்த கீழ்காணும் கொள்கைகளைக் கையாளலாம்:

1. ஆயுத குவிப்பிற்கும், வன்முறைக்கும் இடம் கொடுக்காது தகராறு தீர்க்கும் வழி முறைகளுக்கு முதலிடம் கொடுப்பது சிறந்தது. நீண்டகாலம் தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரு

தகராறு வன்முறையைத் தூண்டும் என்பது உண்மை. தகராறு தேற்றங்களிலும் (theories), செயல்பாடுகளிலும் பரிபூரண உண்மை என்று எதுவும் கிடையாது என்பதை உணர வேண்டும். வன்முறைக் களைதல் என்பதற்கு முதலிடம் கொடுக்கும்போது, வன்முறை கட்சிகளின் கட்டுக்குள் தகராறுத் தீர்வு அடங்கி போகும் அபாயம் உள்ளது. சிக்கலான ஒரு தகராறிலிருந்து மீள்வதற்கான வழிகளை கண்டுபிடிக்கும்போது, அவை அனைத்துக் கட்சிகளுக்கும் ஏற்புடையதாகவும், நீடித்த நிலைத்த தன்மையதாகவும் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் போதுதான் வன்முறையாளர்கள் வன்முறையின் மீது ஒட்டிக்கொண்டிருக்காது, மென்முறைகளைக் கையாள மனம் திருந்த வாய்ப்புக்கள் உள்ளன. வன்முறைக் கட்டுப்பாடு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும்போது, அனைத்துக் கட்சிகளும் இன்னும் தீவிர போக்கினையே கடைபிடிக்கும் அபாயம் உள்ளது.

2. ஆயிரம் கருத்துப்பரிமாற்றங்கள் ஆங்காங்கே நிகழ வேண்டும். லட்சம் மக்களை நேரடியாக பாதிக்கின்ற தகராறுத் தீர்வினை ஒரு சில அரசியல்வாதிகள், சர்வதேச தூதர்கள் கைகளில் விடுவது நல்லதல்ல. சனநாயக அரசியல் அமைப்பில் மக்களே வாக்கெடுப்புகள் மூலமாக நல்ல தீர்வினை தேர்ந்துகொள்ள உரிமை இருக்க வேண்டும். வெறுமனே வாக்களிப்பு என்பது படைப்புத்திறனற்றதால், கருத்துப்பரிமாற்றங்களிலேயே கவனம் செலுத்துவது சிறந்தது.

3. மிதவாத பெரும்பான்மை மக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது சிறந்தது. இவர்கள்தான் எதிர்மறையான எண்ணங்களை கடந்த காலத்திலிருந்து எதிர்காலத்திற்கு அதிக அளவில் எடுத்துச் செல்லாதவர்கள்.

4. வன்முறையைத் தூண்டும் வகுப்புவாத “ஆரஞ்சு ஆர்டர்” என்னும் ஊர்வலங்களை தடைசெய்துவிட்டு, பசுமைச் சிந்தனைகள் தோய்ந்த “கிரீன் ஆர்டர்” ஊர்வலங்களை நடத்தலாம்.

5. ஆற்றுப்படுத்தலுக்கும், குழுக்களின் மீளிணக்கத்திற்கும் பாடுபடும் பல அமைப்புக்கள் தேவைப்படும்.

ஒருவருக்கொருவர் மோதிக்கொள்ளும் குழுக்களை, எதிர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செய்து, அவரவர் கரிசனங்களை, பயங்களை, உணர்வுகளை பகிர்ந்துகொள்ளச் செய்யலாம். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தகர்க்கப்பட்டிருக்கும் கட்டுமானங்களை திருப்பிக் கட்டி யெழுப்பலாம். உடல் ரீதியிலும், உளரீதியிலும், ஆன்மீக ரீதியிலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு புணர்நிர்மாண சேவைகள் செய்யலாம். தகராறின் முரண்பாடுகளையும், அவற்றிற்கான தீர்வுகளையும், தகராறு கட்சிகள் சேர்ந்து எதிர்கொள்ளலாம். அசம்பாவிதங்கள், வன்முறைகள் நடந்த இடங்களில் தகராறு கட்சிகள் ஒன்றாய் கூடி எப்படி இந்த எதிர்மறைச் செயல்களை தவிர்த்திருக்கலாம், இனி என்ன பரிகாரம் செய்ய முடியும் என்பதைப் பற்றி சிந்திக்கலாம். பெரும் இழப்புகளைச் சந்தித்திருக்கின்ற பாதிக்கப் பட்டோரின் சாட்சியங்களையும், அனுபவங்களையும் திரட்டி, எதிர்கால சந்ததிகள் இவற்றிலிருந்து உன்னதமான பாடங்கள் பெற உதவலாம். தென்ஆப்ரிக்க நாட்டில் செய்தது போன்று உண்மை மற்றும் மீளிணக்கக் குழுவினை அமைக்கலாம்.

யூஸ்காடி **(Euskadi):**

முன்னர் குறிப்பிட்டது போன்று பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் ஒரு தகராறில் இரண்டு கட்சிகளை மட்டுமே பார்க்கிறார்கள். ஸ்பெயின் அரசாங்கத்திற்கும் இ.டி.ஏ (ETA) என்னும் தீவிரவாதக் குழுவிற்கும் இடையே எழுந்த தகராறிலும் விடுதலைக் கோரிக்கைகளையும், அரசின் எதிர்ப்பையும் மட்டுமே கண்ணுற்றார்கள். ஸ்பானிய பாஸ்க் (Basque) பகுதியிலுள்ள பிரெஞ்சு மொழி பேசும் மக்கள், பிரான்ஸ் அரசாங்கம், ஸ்பானிய பாஸ்க் பகுதியிலுள்ள ஸ்பானிய மக்கள், பிரெஞ்சு பாஸ்க் பகுதியிலுள்ள பிரெஞ்சு மக்கள் இரண்டு பகுதிளிலுமே உள்ள தம்மை ஸ்பானியர்களாக மட்டுமே அடையாளம் காணும் மக்கள் என எத்தனையோ கட்சிகள் இந்தத் தகராறில் பங்கேற்கிறார்கள்.

பாஸ்க் மக்களின் குறிக்கோள் ஸ்பெயின் நாட்டிலுள்ள நான்கு பிராந்தியங்களையும் ஒருங்கிணைத்து “யூஸ்காடி” எனும் ஐக்கிய பாஸ்க் நாடு ஒன்றினை ஏற்படுத்துவதாகும். இ.டி.ஏ. தீவிரவாதக்குழு வன்முறையில் ஈடுபட்டு வருகிறது. பிலிப்பே

கோன்ஸாலஸ் (*Felipe Gonzales*) தலைமையிலான ஸ்பானிய அரசும் எண்ணற்றோரைக் கொன்று குவித்திருக்கிறது. சமாதானக் கலாச்சாரமற்ற ஜல்லிக்கட்டு போன்ற வன்முறை விளையாட்டுகள் அதிகமான சமூகத்தில், சமரசத்திற்கும், கடந்து செல்லும் வழிமுறைகளுக்கும் பெரிய வரவேற்பில்லாமல் இருக்கிறது. ஆக்கசக்தி ஏதுமின்றி அடித்துக் கொள்ளும் இந்த கலாச்சாரம், இன்னும் பல தலைமுறைகள் தொடரும் அபாயம் உள்ளது. இந்தத் தகராறின் தீர்வுக்கான வழிமுறைகளைப் பார்க்கலாம்.

1. பாஸ்க் மக்களின் சுய ஆட்சி உரிமையினை அங்கீகரிப்பது, இன மற்றும் மொழி தகுதிகளல்லாது கலாச்சார மற்றும் பூர்வீக அடையாளங்கள் அடிப்படையில் யார் பாஸ்க் மக்கள் என்பதைத் தீர்மானிக்கலாம்.

2. யூஸ்காடியிலுள்ள ஏழு பிராந்தியங்களுக்கும் இடையே உட்பிரிவுகள் ஏதுமின்றி, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் நாடுகளில் அங்கமாக இருந்தவாறே, ஐரோப்பிய யூனியனிலும் ஓர் அங்கத்தினராக செயலாற்ற வாய்ப்பு அளிக்கலாம்.

3. யூஸ்காடியில் யூஸ்காரா (Euskara) மொழியினை அதிகாரபூர்வ மொழியாகவும், ஸ்பானிஷ் மற்றும் பிரஞ்சு மொழிகளை ஆட்சி மொழிகளாகவும் கொள்ளலாம்.

4. தற்போது இயங்கிவரும் உள்ளாட்சி அமைப்புகளே தொடர்ந்து செயல்படலாம்.

5. யூஸ்காடி சமூகத்திற்காக ஒரு பாராளுமன்றம் நிறுவப்பட்டு, அதன்கீழ் செயல்படும் அரசு ஒன்றும் அமைக்கலாம்.

6. யூஸ்காடியில் வாழும் ஸ்பானிய, பிரஞ்சு மக்களுக்கு தனித்தனி சட்டமன்றங்கள் அமைக்கலாம்.

7. படிப்படியாக யூஸ்காடி சர்வதேச அடையாளத்தினைப் பெறலாம். பிரான்ஸ், ஸ்பெயின், ஐரோப்பிய யூனியன் அனைத்துமே அங்கீகரிக்கும் கடவுச்சீட்டினை உருவாக்கலாம். மக்கள் யூஸ்காடியிலும் ஸ்பெயின் அல்லது பிரான்ஸ் நாட்டில் வாக்குரிமைப் பெற்றிருக்கலாம். யூரோவைப் போன்று யூஸ்காடி பகுதியில் ஓர் உள்ளூர் பணத்தினை அறிமுகப்படுத்தலாம். பாரிஸ் மற்றும் மாட்ரீட் அரசாங்கங்களுடன் விசேட உடன்படிக்கைகள் மூலம் அரசு

உறவுகளைத் தொடரலாம். தனித்தனியாக ராணுவம் அமைத்துக் கொள்ளும் உரிமையினை விட்டுக்கொடுத்து, யூஸ்காடி பகுதியை ஆயுதநீக்கம் செய்யலாம். இப்பகுதியின் பாதுகாப்பிற்கு ஸ்பெயின் மற்றும் பிரான்சு அரசாங்கங்களும் (OSCE), ஐ. நா. சபையும் உதவலாம். ஐரோப்பிய யூனியனிலும், ஐ. நா. சபையிலும் யூஸ்காடி பார்வையாளர் தகுதியினைப் பெறலாம். காலம் கனியும்போது யூஸ்காடி தனது வெளியுறவுக் கொள்கையினை வகுத்துக் கொள்ளலாம். இரு நாட்டுக் குடியுரிமை இம்மக்களுக்கு வழங்கப்படலாம். ஒரு சில உள்நாட்டு எல்லைகள் உள்ளூர் மக்களின் கருத்து களுக்கிணங்க மாற்றி அமைக்கப்படலாம்.

8. இந்த நடவடிக்கைகளின் வெளிப்பாடு எப்படி அமையலாம் என்பதைத் திறந்தே வைத்திருக்கலாம்.

9. மீளிணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளும் மேட்டுக்குடியினரையும் பொதுமக்களையும் உள்ளடக்கியவையாக இருக்க வேண்டும். மாட்ரீட் மற்றும் பாரீஸ் அரசாங்கங்கள் யூஸ்காடி சுதந்திரமாக போய்விடுவதால் உலகம் அழிந்துவிடாது என்பதை உணர வேண்டும். அதுபோல இ.டி.ஏ. தீவிரவாதக் குழுவும் வன்முறையை கைவிடுவதால் எவ்வளவோ சாதிக்கலாம் என்பதை உணர வேண்டும்.

### யூகோஸ்லாவியா **(Yugoslavia):**

இந்த நாட்டில் வாழும் ஸ்லோவின் (Slovene) மக்கள் தங்களை ஒரு தேசிய இனம் என்றும், மற்ற மக்களைப் போலவே தங்களுக்கும் தன்னாட்சி உரிமை உண்டு என்றும் கோருகின்றனர். தாங்கள் பெல்கிரேடு (Belgrade) அல்லது வியன்னா (Vienna) நகரங்களிலிருந்து ஆளப்படுவதற்கு பதிலாக லிபுலியான (Ljubljana) எனும் தங்களது ஊரில் இருந்தே ஆளப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். இதே போன்று குரோவாட் (Croat) மக்கள் தங்களுக்கும் தன்னாட்சி உரிமை உண்டு தாங்களும் பெல்கிரேடு, வியன்னா நகரங்களில் இருந்து ஆளப்படுவதற்கு பதிலாக சாக்ரெப் (Zagreb) நகரில் இருந்து ஆளப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். குரோயேசியா (Croatia) நாட்டில் உள்ள செர்பு (Serb) மக்கள், குரோவாட்கள் வேண்டுமென்றால் தனி நாடு

அமைத்துக் கொள்ளட்டும். ஆனால் அங்குள்ள செர்பு மக்களை தங்களுடன் இழுத்துச் செல்லக் கூடாது என நினைக்கின்றனர். இரண்டாம் உலகப்போரில் நாசி (Nazi) ஜெர்மனியுடன் சேர்ந்து எங்களைக் கொன்ற குரோவாட் மக்களுடன் சேர்ந்து வாழ முடியாது என்பது செர்பு இன மக்களின் வாதம்.


பாஸ்னிய (Bosnia) மக்களும் தங்களுக்கு தன்னாட்சி உரிமை உண்டு தாங்களும் வியன்னா, பெல்கிரேடு, இஸ்தான்புல் நகரங்களில் இருந்து ஆளப்படுவதற்கு பதிலாக, சரஜேவோ (Sarajeavo) நகரில் இருந்து ஆளப்பட வேண்டும் என விரும்புகின்றனர். பாஸ்னியா நாட்டில் உள்ள செர்பு மக்கள் பாஸ்னியர்களின் தனி நாட்டு உரிமையை அங்கீகரித்தாலும், அங்கே வாழும் செர்பு மக்களை தம்மோடு இழுத்துச் செல்ல இவர்களுக்கு உரிமை இல்லை என்று வாதிடுகின்றனர். பாஸ்னியாவில் உள்ள குரோவாட் மக்களும் தாங்கள் குரோவேசியாவோடு இருப்பதை விரும்பு கின்றனர். செர்பியா நாட்டில் உள்ள செர்பு மக்கள் தாங்கள் சாக்ரெப், சரஜேவோ அல்லது பிறிஸ்டினா (Pristina) நகரங்களில் இருந்து ஆளப்படுவதை விரும்பவில்லை.

கொசாவோ (Kosovo) நாட்டில் உள்ள அல்பேனிய (Albania) மக்கள் இஸ்தான்புல், பெல்கிரேட் நகரங்களில் இருந்து ஆளப்படுவதை விட, தங்களது பிறிஸ்டினா நகரில் இருந்து ஆளப்படுவதையே விரும்புகின்றனர். கொசோவாவில் உள்ள செர்பு மக்கள், அல்பேனியர்களுடன் சேர்ந்து வாழ்வதை விரும்பவில்லை.

மெசடோனிய (Mecedonia) மக்களும் தாங்கள் தனித்து வாழ்வதையே விரும்புகின்றனர். மெசடோனியாவில் வாழும் அல்பேனிய மக்களும் தன்னாட்சிக் கோருகின்றனர். மான்டிநக்ரோ (Montenegro) மக்களும் அவர்களது சுய ஆட்சிக் கோரிக்கைகளை முன்னிறுத்தி, இஸ்தான்புல் மற்றும் பெல்கிரேடு அரசுகளுக்குப் பதிலாக பொட்கோரிக்கா (Podgorica) அரசே தங்களை ஆள வேண்டும் என விரும்புகின்றனர். மான்டிநெக்ரோவில் உள்ள அல்பேனிய மக்களும் தன்னாட்சியோடு வாழ விரும்புகின்றனர்.

இப்படி குறைந்தபட்சம் 13 கட்சிகளை இந்தத் தகராறில் கண்டுணர முடிகிறது. மேற்கத்திய அரசாங்கங்களிலும்,

ஊடகங்களிலும் செர்பு மக்களும் அவர்களுக்கு எதிரானவர்களும் என்ற முறையில் இந்தத் தகராறு எளிமைபடுத்தப்படுவது, ஏற்புடையது அல்ல. கத்தோலிக்கர்களும், மற்ற கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும், ஆஸ்திரியா, ஜெர்மனி, ரஷ்யா, துருக்கி, சவுதிஅரேபியா போன்ற நாடுகளும், ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்காவும் இந்தத் தகராறை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்திருக்கின்றனர்.



இந்தத் தகராறை புரிந்து கொள்வதற்கு, பல்வேறு கட்சிகளின் இலக்குகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த இலக்குகளை சட்ட ரீதியானவை, அல்லாதவை எனப் பிரித்து சட்டரீதியான இலக்குகளைத் தேர்ந்து, தகராறைக் கடந்து செல்லும் தீர்வுகளை காண்பதே சிறப்பு. யூகோஸ்லாவியா தகராறில் அடிப்படையானது இனங்களின் அடையாளம். இதில் ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் தம்மக்களால் தாங்கள் ஆளப்பட வேண்டும் என்ற உள் ஆர்வம் தான்.

காப்ஸ்பர்க் (Habsburg) மற்றும் ஆட்டமன் (Ottoman) பேரரசுகளால் சுமார் தொள்ளாயிரம் வருட காலம் மேற்கண்ட பால்கன் (Balkan) மக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். 1990ம் வருடத்தில் இருந்து யுகோஸ்லாவியாவில் நடக்கின்ற நிகழ்வுகள் வன்முறைத் தலையீடுகளின் நீண்ட சரித்திரத்தில் ஒரு புதிய அத்தியாயம். கத்தோலிக்க திருச்சபையை மீண்டும் உயர்த்துவது, முதல் மற்றும் இரண்டாம் உலகப்போர்களின் தோல்விகளுக்கு பழிவாங்குவது என பல்வேறு இலக்குகள் இந்தத் தகராறில் இழையோடிக் கொண்டிருக்கின்றன. இவற்றோடு அமெரிக்க நாட்டின் இராணுவ

தளம் அமைக்கும், எண்ணெய்க் கிணறு தோண்டும், யூரேசியா (*Eurasia*) பகுதியை அடக்கி ஆழும் எண்ணங்களும் பிரச்சினையைப் பெரிதாக்குகின்றன. இந்தத் தகராறுக்கு தீர்வு காணும்போது, அனைத்து வெளிப்புற சக்திகளின் சட்டரீதியற்ற இலக்குகளை இனம் கண்டு கொள்ள வேண்டும்.

மேற்கண்ட 13 கட்சிகளின் இலக்குகள் ஒன்றோடு ஒன்று ஒத்துபோகுமா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். “தன்னாட்சிக்கான சம உரிமை” என்னும் பொதுவிதியின்கீழ் சுதந்திரமான ஸ்லோவேனியா, செர்பிய பகுதிகளற்ற குரேவேசியா, சரஜேவோவைத் தலைநகராகக் கொண்ட சுதந்திர பாஸ்னியா, செர்ப்ஸ்கா குடியரசு, செர்பியா என்னும் தனிநாடு, கொசாவோ என்னும் தனி நாடு, சுதந்திரமான மெசடோனியா, சுதந்திரமான மான்டநெக்ரோ என தீர்வு காணலாம். தன்னாட்சிக்கான சமஉரிமை என்னும் விதி, ஒரு நாட்டை ஒன்றுக்குள் ஒன்றாக அடுக்கப்படும் ‘சீனப் பெட்டிகள்’ போன்று கணக்கிடுகிறது. ஒரு நாட்டிற்கு தன்னாட்சி உரிமை இருக்கும் அதே வேளையில், அந்த நாட்டில் உள்ள சிறுபான்மை மக்களுக்கும் அதே உரிமை இருக்கிறது. மேற்குறிப்பிட்டது போன்ற நாடுகளை உருவாக்கிய பின்னரும், ஒட்டு மொத்த ஸ்லாவ் (slav) இன மக்களிடையே அதிக நெருக்கம் இல்லாத, அதே சமயம் நீண்ட இடைவெளியுமற்ற ஒருவித மென்சமுதாயத்தினை (soft community) உருவாக்க வேண்டும்.

இன்றுள்ள நிலையில் ஸ்லோவேனியா நாடு மட்டுமே அமைதியில் வாழ்கிறது. பிற பகுதிகள் அனைத்தும் வன்முறை, வெறுப்பு, மனத் தழும்புகள் கொண்ட சமுதாயங்களாகவே வாழ்ந்து வருகின்றன. 1992ம் ஆண்டு டிரான்செண்ட் கீழ்காணும் திட்டத்தை முன்மொழிந்தது:

1. தென்கிழக்கு ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு பற்றிய ஒரு மாநாட்டைக் கூட்டி, இப்பகுதியில் உள்ள அனைத்து நாடுகளையும், சிறு, பெரு அரசுகளையும் பங்கேற்க அழைப்பது. வெளிப்புற சக்திகளுக்கு பார்வையாளர் அந்தஸ்து கொடுத்து, 3 முதல் 5 வருடங்கள் வரை கடினமாய் உழைத்து, தென் கிழக்கு ஐரோப்பியக் கூட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்தலாம்.

2. இந்த மாநாட்டில் பாஸ்னியா கெர்சகோவினா (Bosnia

Herzegovina) என்னும் மும்முனைக் கூட்டமைப்பு ஏற்படுத்துவதும், கோசாவோ குடியரசு உருவாக்குவதும், முன்னர் இருந்த யூகோசுலாவியா நாட்டை கூட்டமைப்புக் கொள்கையின் படி திரும்ப உருவாக்குவதும் முக்கியமான அம்சங்களாக கொள்ளப்படலாம்.

3. 50% பெண்கள் கொண்ட, சமாதானம் பேணும் இராணுவத்தை உருவாக்கி போர் நிறுத்தத்திற்காய் உழைக்கலாம். இந்த வீரர்கள் காவல் கண்காணிப்பு, அகிம்சை, கருத்துபரிமாற்ற பயிற்சிகள் போன்றவற்றைப் பெற்றிருக்க வேண்டும். இந்த பகுதியின் சரித்திரத்தில் முன்னர் இடம் பெற்றிருந்த நாடுகளும் வல்லரசுகளும் தவிர்க்கப்பட வேண்டும்.
4. அனைத்து நகரங்களின் வலைப்பின்னல் ஒன்றை ஏற்படுத்தி, அகதிகள் நிவாரண உதவிகள், புணர்நிர்மானம் போன்றவைகளில் பங்குபெறச் செய்யலாம்.
5. உள்ளூர்களில் சமாதான மாநாடுகள் நடத்தப்பட்டு, அவர்களிடையே தகவல் பரிமாற்றங்கள் மேம்பட உதவலாம்.
6. ஆயுதம் ஏந்தாத வெளிநாட்டவரும், மருத்துவர்களும் ஏனையோரும் ஒன்றாய், சாந்தி சேனா (Shanti Sena) போன்ற இயக்கங்கள் வழியில் அமைதிக்காக உழைக்கலாம்.
7. சர்வமதக் கொள்கையுடன் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.
8. மக்களுக்கிடையேயும், குழுக்களுக்கிடையேயும், அரசுகளுக்கி டையேயும் தொடர்புகளை ஏற்படுத்தி புது கருத்துக்களை விதைக்கலாம்.
9. ஊடகங்களை பொதுமக்கள் மற்றும் அவர்தம் சமாதான முயற்சிகள் பற்றி அதிகம் எழுதக் கோரலாம்.
10. மீளிணக்கத்தினை உருவாக்கும் பொருட்டு, பொருளாதாரத் தடைகளை நீக்கி பழிவாங்கும் மற்றும் தண்டிக்கும் போக்கினை தவிர்த்து, சிறப்பு நிபுணர்கள் மூலம் நடந்தேறிய தவறுகளை அலசி, ஓர் உன்னதமான பொதுவான எதிர்காலத்துக்கு மக்களை தயாரிக்க

உதவலாம்.

இஸ்ரேல்/பாலஸ்தீனம் **(Israel/Palestine):**

இஸ்ரேலிய மக்கள் தங்களுக்கு தனிநாடு கொண்டிருக்கும் உரிமை உண்டு என்றும், யூத மக்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட சரித்திர நாடுதான் இஸ்ரேல் என்றும் கூறுகின்றனர். மனித உரிமைகள் மற்றும் சனநாயகம் தோய்ந்த இந்த நாட்டிற்கு உலகின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் யூத மக்கள் வந்து குடியேறலாம் என்பது இவர்கள் எண்ணம். ஆனால் பாலஸ்தீனர்கள் தங்களுக்கும் தனிநாடு கொண்டிருக்கும் உரிமை உண்டு, பாலஸ்தீன மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட சரித்திர நாடுதான் பாலஸ்தீனம் என்று கூறுகிறார்கள். கிழக்கு ஜெருசலம் நகரை தலைநகராகக் கொண்டு இந்த நாடு அமைய வேண்டும் என்பது அவர்களின் விருப்பம். இப்படி சுருக்கமாக இந்த தகராறைப் பற்றிச் சொல்லலாம். இரு மக்களும், ஒரு நிலப்பகுதியும் கொண்ட தகராறுகளில் 5 விதமான தீர்வுகளை காணமுடியும்.

1. இஸ்ரேலிய மக்கள் மட்டுமே கொண்ட ஒரே அரசு.
2. பாலஸ்தீனிய மக்கள் மட்டுமே கொண்ட ஒரே அரசு.
3. மூன்றாவது கட்சியின் ஆதிக்கம்.
4. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் என இரு நாடுகள் உருவாக்கப்படுவது.
5. இரு நாடுகளும் சேர்ந்து சுவிட்சர்லாந்து பாணியில் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்துவது அல்லது ஒரே அரசாக செயல்படுவது.

மேற்கண்டவற்றுள் முதல் இரண்டு தீர்வுகள் நடைமுறைக்கு ஒத்து வராதவை. மூன்றாவது தீர்வு பழைய நிலைமைக்கே திரும்பிப் போவதால் அதுவும் நடைமுறை சாத்தியமற்றது. ஐந்தாவது தீர்வு எதிர்காலத்தில் மிகத் தொலைவில் உள்ள ஒரு சாத்தியமாக உள்ளது. நான்காவது தீர்வுதான் 1988ல் நவம்பர்15 ஆம் நாள் பாலஸ்தீன தேசியக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. வெஸ்ட் பாங்க் (West Bank), காசா (Gaza), கிழக்கு ஜெருசலம் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய தனி பாலஸ்தீன நாடு உருவாக்க அந்த தீர்மானம் கோரியது. ஆனால் இஸ்ரேல், யூத மக்களுக்கு மட்டுமேயான தனி நாடாகவே தன்னை

உருவாக்க முனைந்தது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் நாடுகளுக்கு வன்முறையின் மூலம் உரிய பாதுகாப்பு கிடைக்காது. தனது வரலாற்றிலேயே மிகவும் அபாயகரமான காலகட்டத்தில் இஸ்ரேல் இருக்கிறது. இராணுவமயமாக்கப்பட்டும், தனிமை படுத்தப்பட்டும், அதிகமான விரோதிகளை உருவாக்கியும், வெல்லமுடியாத போர்களில் சிக்கியும், வன்முறை மற்றும் பகிஷ்கரிப்புக்கு உள்ளாகியும் உழன்று கொண்டிருக்கிறது இஸ்ரேல். தென் ஆப்பிரிக்க நாட்டில் நடந்த மாற்றங்கள் போன்று இங்கும் நடந்தால் தீர்வுக்கு வழிபிறக்கலாம்.

இஸ்ரேலின் நிரந்தரமற்ற நிலைமைகள்

i இஸ்ரேல் நாட்டின் ஆன்மீக மூலதனம் வெகுவாக குறைந்துகொண்டிருக்கிறது. அமெரிக்காவில் கூட அந்நாட்டிற்கான ஆதரவு குறைந்து வருகிறது.

ii இஸ்ரேல் ஒரு வித இராணுவ ஆட்சியை நடத்தி வருகிறது.

iii இஸ்ரேலிய வன்முறை செயல்பாடுகள் அரபு மற்றும் முஸ்லீம் நாடுகளுக்கிடையே பலத்த எதிர்ப்பை உருவாக்கி தீவிரவாதமாக மாறிவருகிறது.

iv வெகுவிரைவில் இஸ்ரேலில் வாழும் 18% அரபு மக்களையும் இது பாதிக்கலாம்.

v விரைவில் இலட்சக்கணக்கான அரபு பெண்கள் இஸ்ரேலின் ஆணவப்போக்குக்கு எதிராக அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபடலாம்.

vi தென் ஆப்பிரிக்கா நாட்டின் மீது சுமத்தப்பட்டது போன்ற பொருளாதாரத் தடை இஸ்ரேல் மீதும் திணிக்கப்படலாம்.

vii பொருளாதார ரீதியில் அமெரிக்காவுக்கு இஸ்ரேல் ஒரு பாரமாக மாறி வருவதால், அந்நாட்டின் கொள்கைகள் மாற்றப்படலாம். அப்போது வர்த்தக மற்றும் பெட்ரோலிய பிரச்சினைகள் அரபு நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எழலாம். இஸ்ரேலுக்கான அமெரிக்க இராணுவக் கொள்கையும், அரசியல் கொள்கையும் கூட மறு பரிசீலனைச் செய்யப்படலாம்.

இந்தச் சூழ்நிலையில் கீழ்காணும் சமாதான தீர்வு ஏற்புடையதாக அமையலாம்:

1. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் 242

மற்றும் 338ன் படி 1967 ஜூன் 4 அன்றிருந்த எல்கையுடன் பாலஸ்தீனத்தை தனிநாடாக அறிவிப்பது.

2. கிழக்கு ஜெரூசலம் நகரை பாலஸ்தீனத்தின் தலைநகரமாக அறிவிப்பது.

3. இஸ்ரேல், பாலஸ்தீனம், எகிப்து, ஜோர்டன், லெபனான், சிரியா போன்ற நாடுகளை அங்கத்தினர்களாய் கொண்ட மத்திய கிழக்கு குழுமம் ஒன்றை நிறுவி ஆயுதங்கள், தண்ணீர், வர்த்தக ஒப்பந்தங்கள் போன்றவற்றை விவாதித்து மத்திய கிழக்கு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுக்கான அமைப்பு ஒன்றினை நிறுவலாம்.

4. மேற்கண்ட குழுமத்துக்கு ஐரோப்பிய யூனியன், நார்டிக் (Nordic) கவுன்சில், ஆசியான் (ASEAN) போன்ற அமைப்புக்கள் நிதி உதவி மற்றும் நிறுவன உதவிகள் செய்து கொடுக்கலாம்.

5. எகிப்து மற்றும் ஜோர்டன் நாடுகள் பாலஸ்தீனத்துக்கு கூடுதலாக நிலத்தினை வழங்கலாம்.

6. இஸ்ரேலும், பாலஸ்தீனமும் ஒரு கூட்டமைப்பாக இயங்கலாம்.

7. இரு நாட்டின் தலைநகரங்களும் ஒரு கூட்டமைப்பாக இயங்கி பிராந்திய, பண்பாட்டு, ஐ.நா. நிறுவனங்களை தன்னகத்தேக் கொள்ளலாம்.

8. வெளிநாடுகளில் உள்ள மக்கள் இஸ்ரேலுக்கு திரும்ப வருவதை ஏற்றுக் கொள்ளலாம்.

9. இஸ்ரேலும், பாலஸ்தீனமும் சேர்ந்து சமமான பொருளாதாரத் திட்டங்களிலும், சமாதானக்கல்வி, எல்லைகாவல் போன்ற முயற்சிகளில் ஈடுபடலாம்.

10. ஐ. நா. சபையின் கண்காணிப்பு படைகளை நிறுவிக் கொள்ளலாம்.

11. உண்மை மற்றும் மீளிணக்க வழிமுறைகளைத் துவங்கலாம்.

ஒரு நாடோ அல்லது பல நாடுகள் கொண்ட அமைப்போ சமரசத்தில் ஈடுபடுவதற்கு பதிலாக ஒரு நபரோ அல்லது வல்லுனர் குழுவோ ஈடுபடலாம். 1993ல் ஆஸ்லோ (Oslo) உடன்படிக்கை

பற்றி நூலாசிரியர் கால்டுங் குறிப்பிட்ட சில கருத்துக்களைப் பார்க்கலாம்:

1. ஹமாஸ் (Hamas), லிக்குட் (Likud) போன்ற தீவிரவாத அமைப்புகளை இந்த உடன்படிக்கை சேர்த்துக் கொள்ளவில்லை. இப்படி ஒதுக்கப்பட்டவர்கள் மொத்த உடன்படிக்கையை பி.எல்.ஓ. (PLO) மற்றும் மதசார்பற்ற தொழிலாளர் கட்சிக்கும் இடையே நடந்த ஒன்று எனக்கொண்டு, தற்கொலை குண்டு வெடிப்புகளாலும், ரபீன் போன்ற தலைவர்களை கொல்லுவதாலும் தங்களது நிலையை தெளிவுப்படுத்துகின்றனர்.
2. இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனியர்கள் மத்தியிலுள்ள சமாதான சேவகர்கள் மற்றும் இயக்கங்கள் புறக்கணிக்கப்பட்டன.
3. இஸ்ரேல் நாட்டை ஆதரிக்கும் அமெரிக்கா (சமரசநாடு என்ற போர்வையில்), ஆஸ்லோ உடன்படிக்கையில் கையெழுத்து இடவில்லை.
4. இஸ்ரேல் நாட்டிலும் பாலஸ்தீனத்திலும் இருந்த எதிர்ப்பு உணர்வுகளைக் குறைத்து மதிப்பிட்டு, ஆஸ்லோ உடன்படிக்கையின் பலத்தை உயர்வாக மதிப்பிட்டது தவறு.
5. பொதுமக்களோடு எந்தவித கருத்துப்பரிமாற்றமும் நடத்தாததும் தவறு.
6. ஆஸ்லோ உடன்படிக்கையில் சமச்சீர்மை (Symmetry) இல்லாதது பெரும் குறை. உடன்படிக்கை ஒரு நாட்டிற்கும், இன்னொரு சுயாட்சி பகுதிக்கும் இடையே நடந்ததாகக் கொள்ளப்பட்டது.
7. இருநாட்டு உறவுகள் ராணுவ, அரசியல், பொருளாதார, கலாச்சார அடிப்படையில் விளக்கப்படாதது பெரும் தவறு.
8. பாலஸ்தீன அரசைப் பற்றித் தெளிவாக விவரிக்கவில்லை.
9. பொதுமக்களை சேர்த்துக் கொள்ளாது, அரசு மற்றும் நிறுவனங்களை மட்டும் சார்ந்து செயல்பட்டது தவறு.
10. மதநம்பிக்கையின் பலத்தினை குறைத்து மதிப்பிட்டு செயல்பட்டது.

11. அரசியல், பொருளாதார முக்கியத்துவங்களை மட்டுமே கணக்கிட்டு, பல பகுதிகளின் புனிதத் தன்மையை கணக்கில் எடுக்காமல் புறக்கணித்தது தவறு.
12. யூதர்கள், முஸ்லீம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இடையே சர்வமத சமாதான பணிகளை செய்யத் தவறியது தவறு. இப்படியாக பல குறைகள் உள்ள 1993 உடன்படிக்கை ஒரு தோல்விகரமான தகராறுத் தீர்வாக முடிந்துவிட்டது.

தென்னாப்பிரிக்கா **(South Africa):**

1652ஆம் வருடம் நெதர்லாந்த் நாட்டிலிருந்து வந்துசேர்ந்த கிறிஸ்தவ அடிப்படைவாதிகள் தோற்றுவித்த அரசியலமைப்பு, கிட்டத்தட்ட 350 வருடங்களுக்குப் பிறகு தோற்கடிக்கப்பட்டு 1994ஆம் ஆண்டு ஒரு மாறுபட்ட தென்னாப்பிரிக்காவாக உருவாகியது. பலமிக்க மேற்கத்திய நாடுகள் ஆதரவோடும், இன வன்முறை, அரசு வன்முறை, சித்திரவதை போன்ற உபாயங்களால் கொடூரமாக ஆட்சிபுரிந்த வெள்ளையின மக்கள் தோற்றுப்போய், மண்ணின் மைந்தர்களான கருப்பு இன மக்கள் வெற்றி பெற்றனர். வெள்ளையின மக்களின் வன்முறை மனித உயிர்களைத் தாக்கிய அதே வேளையில், கருப்பு இன மக்களின் வன்முறை மின்நிலையங்கள் போன்ற கட்டுமானங்களையேக் குறிவைத்தது. இந்தக் கொடூரமான கடந்த காலத்தை முறைப்படி எதிர்கொள்ளாது, ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்குவது என்பது இயலாது. அதிபர் பதவியிலிருந்து இறங்கிய டிகிளார்க்கும் (De Klerk) புதிய அதிபராக பதவியேற்கவிருந்த நெல்சன் மண்டேலாவும் (Nelson Mandela) கடந்தகால வன் முறைகளை அலசும் போது, இனவெறிக்கு இடம் கொடுக்கலாகாது என்பதில் உறுதியாக இருந்தனர். மண்டேலாவைப் பொறுத்த வரை, சனநாயகம் தோய்ந்த சட்ட ரீதியான அரசினை ஏற்படுத்தும் போது, வன்முறையாளர்கள் அனைவரும் கூண்டி லேற்றப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என விரும்பினார்.

ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் வெள்ளையின மக்கள் என்பதால், அவர்கள் இந்த தீர்வுக்கு உடன்படமாட்டார்கள் என்றும், அனைவருக்கும் ஒட்டுமொத்த மன்னிப்பு வழங்குவதுதான் ஒரே வழி என்றும் டிகிளார்க் வாதிட்டார். அதனை கருப்பு இனமக்கள் ஏற்றுகொள்ள மாட்டார்கள் என்றும், பல மோசமான நிகழ்வுகள் நடந்திருக்கும்

நிலையில் அவற்றை மறைக்க முடியாது என்றும், பாதிக்கப்பட்டவர்களின் குறைகள் கேட்கப்பட வேண்டுமென்றும் மன்டேலா கருதினார்.

வெள்ளையின மக்களும் ஒரு கொள்கைக்காக போராடியதாகவே கருதியதால், அவர்களும் தங்கள் நிலையை தண்டிக்கப்படும் அச்சம் ஏதுமின்றி தெரிவிக்கும் நிலை வேண்டுமென டிகிளார்க் விரும்பினார். சட்டம் ஒழுங்கு ஒருபக்கமும், ஒட்டுமொத்த மன்னிப்பு மறுபக்கமும் என்னும் நிலை முரண்பாடாக இருந்தது. ஆனால் கடந்தகால கொடுமைகளை எதிர்கொள்ளாது, ஒதுங்கிப் போகும் நிலையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக இருந்தது. சமரசம் என்னும் போர்வையில் கொடுமைகள் புரிந்த குற்றவாளிகளை தண்டிக்காது விட்டுவிடமுடியாது. இரு தலைவர்களும் தொடர்ந்து கருத்துப்பரிமாற்றங்களில் ஈடுபட்டு, முழுமையான உண்மைப் பகிர்வுக்கு ஒட்டுமொத்த விடுதலை, அதனைத் தொடர்ந்து மீளிணக்கம் என்ற ஓர் உன்னதமானத் தீர்வினை அடைந்தார்கள்.

ஆர்ச்பிசப் டெஸ்மன்ட் டுட்டு (Archbishop Desmond Tutu) தலைமையின் கீழ் “உண்மை மற்றும் மீளிணக்கக்குழு” செயல்பட்டது. பாதிக்கப்பட்டோர் தவறு செய்தவர்கள் முழு உண்மையையும் சொல்லி மன்னிப்புக் கோருகின்ற நிலையில், அவர்களை மன்னிக்க வேண்டும் என்று முடிவாயிற்று. புதிய அரசு தவறுகள் செய்தோரை தண்டிக்கும் உரிமையினை விட்டுக்கொடுத்தது. ஒப்புக்கொள்ளலும், மன்னிப்புக் கோருதலும் எளிய காரியங்களாகத் தோன்றினாலும், கொடூரமான குற்றங்கள் செய்தோருக்கு குற்ற உணர்வும், சமூகத்தில் அவமானமும் பெரிய தண்டனைகளாய் அமைந்தன. உண்மை மற்றும் மீளிணக்கம் போன்றவற்றை தொடர்பு படுத்தும்போது மனரீதியிலும், ஆன்மரீதியிலும், மக்கள் குணப்படுத்தப்படுகின்றனர். தகராறும் முடித்து வைக்கப்படுகிறது. ஒரு குற்றத்தினை ஒப்புக்கொள்ளும்போது, செய்த குற்றம் மன்னிக்கப்படுவது எளிதாகிறது. ஆனால் அவர் செய்த பாவவினை மறக்கப்படுவதில்லை. பழிவாங்கும் நடவடிக்கைகளோ, தனிப்பட்ட முறையில் கோபதாபங்களைத் தீர்ததுக் கொள்வதோ நடக்கவிடாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டது. அரசுக்கும், அநீதிகள் இழைத்தோருக்குமான உறவுக்கிடையே, பாதிக்கப்பட்டவர்கள் மறக்கப்படாத நிலையினை உருவாக்க

முடிந்தது. மக்களே தங்கள் பிரச்சினைகளை நேரடியாகக் கையாண்டதால், சங்கிலித் தொடர் வன்முறை துண்டிக்கப்பட்டு சமாதானம் உருவானது. சிறைச்சாலைச் சுவர்களுக்குள் அரசினால் உருவாக்க முடியாத உறவுகளை, மக்கள் தங்களுக்குள் உருவாக்கிக் கொள்ள முடிந்தது.

நமது சமூகங்களில் வேர்விட்டு நிற்கும் மரபுவழி நீதி முறைகள் குற்றவாளிகள் தண்டிக்கப்படாது விடப்படுவது நீதியாகுமா என்றெல்லாம் வினவக்கூடும். குற்றத்திற்கான தண்டனை “கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்” என்ற ரீதியில் அமையும்போது, தண்டிக்கப்படுபவரின் அவமானம், பாதிக்கப்பட்டவரின் துன்பத்துக்கு சமமாகும் என்று கொள்ள முடியாது. தென் ஆப்பிரிக்காவில் தகராறைக் கடந்து சென்ற வழிமுறைகள், நீடித்த நிலைத்தத் தீர்வினை ஏற்படுத்தி, இரு அரசியல் தலைவர்களின் காலத்திற்குப் பிறகும் சமாதானத்தைப் போற்றுகின்ற வகையில் அமைந்தது. வெற்றி, தோல்வி என்னும் வார்த்தைகள் நமது கலாச்சாரத்தில் விளையாட்டு போட்டிகளில், சந்தைகளில், நீதிமன்ற வழக்குகளில், போர்களில் என அனைத்துத் துறைகளிலுமே வேரூன்றி நிற்கின்றன.

நூலாசிரியர் ஒருமுறை அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் வீட்டிற்கு சென்றபோது, அவரது வரவேற்பு அறையில் அவரது வழக்கறிஞர் கல்வி சான்றிதழ், அமெரிக்க கால்பந்து அணியின் சீருடை அணிந்த படம், இரண்டாம் உலகப்போரில் இராணுவ வீரராக அவர் பணியாற்றிய படம், இவைகள் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்தன. அவரது தகராறு தீர்க்கும் முறை “வெற்றி கிட்டும் வரை போராடு” என்பதாகத் தான் இருக்க முடியும். இம்மாதிரியான வெற்றிக்கான வெறி எனும் மனப்போக்கில் நாம் பல தோல்வியாளர்களையே உருவாக்குகின்றோம். இப்படித் தோல்வியடையும் ஒருவர் முற்றிலுமாக அழிக்கப்படும் அபாயம் எழுகிறது. பால், இனம், வகுப்பு, தலைமுறை, நாடு, அரசு, பிராந்தியம், நாகரீகம் என பல்வேறு அமைப்புக்கள் சிதைக்கப் படுகின்றன.

நேர்மறையான, எதிர்காலம் சார்ந்த தகராறினைக் கடந்து செல்லும் வழிமுறைகளே நாசகரமான கடந்தகாலம் சார்ந்த தீர்வுகளை விடச் சிறந்தவை. தண்டனை என்பது கடந்த காலத்தை உற்று நோக்கி, ஓர் இழப்பினை ஏற்படுத்தி, எதிர்காலத்தில் குற்றங்கள் செய்வதை அது தவிர்க்கும் என்ற எண்ணத்தில்

அமைக்கப்படுகின்றது. தண்டனையின் மூலம் ஒருவர் அடைந்திருக்கும் தோல்வி என்னும் வெந்தபுண்ணின் மீது வேல் பாய்ச்சுவதால், பழிவாங்கும் எண்ணமும் போக்கும் மேலோங்கும் வாய்ப்புள்ளது. நாடுகளுக்கு யானைகளை விட ஞாபகசக்தி அதிகமாக இருக்கிறது. டென்மார்க் நாட்டு சமாதான ஆராய்ச்சியாளர் யான் ஒபார்க் (*Jan Oberg*) சொல்வது போன்று, மீளிணக்கம் என்பது பழிவாங்கும் உணர்வுக்கு விடை சொல்வதுதான். தகராறு கல்வி தகராறுகளை பரிவுணர்வு, அகிம்சை மற்றும் படைப்புத் திறனோடு அணுக உதவுகிறது. இக்கல்வி சமாதான ஆய்வு, சமத்துவக் கொள்கை மற்றும் நேர்மை மூலம் வன்முறையினைத் தவிர்க்க உதவுகிறது. மீளிணக்கக் கல்வி ஆற்றுப்படுத்துதல் மற்றும் கடந்த கால வன்முறையை முடித்துக் கொள்ளுதல் மூலம், எதிர்காலத்தில் வன்முறை தலைதூக்கா வண்ணம் தடுத்துக்கொள்ள உதவுகிறது. ஒரு தகராறினை மாற்றி அமைப்பதும், கடந்துச் செல்வதும் போன்றதே வன்முறைக்குப்பின் ஆற்றுப்படுத்துதலும், முடித்துக்கொள்ளுதலும். அடக்கப்படுதல், பிரித்தாளுதல், ஒதுக்கப்படுதல் என்பன போன்ற கட்டுமான வன்முறைகள் குறைவான சமூகத்தில், கலாச்சார வன்முறைகளும் குறைவாகவே இருக்கும். ஒரு சமுதாயத்தில் சமாதானம் நிலவும் போது, புதிய தகராறுகளை செம்மையான முறையில் கையாள அது ஏதுவாக இருக்கும். கட்டுமான கலாச்சார வன்முறைகளற்ற சமுதாயம் மக்கள் பெருவாழ்வு வாழ உதவும்.

# 4

## மாபெரும் தகராறுகள்:

### பிராந்தியங்களுக்கும், நாகரீகங்களுக்கும் இடையேயான சண்டைகள்

பிராந்தியம் என்பது அடுத்தடுத்துள்ள நாடுகளை உள்ளடக்கிய பகுதி. 1949 முதல் 1989 வரை நடந்த முதலாம் பனிப்போர் கிழக்கு-மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையே மூண்டது. அமெரிக்கா, நேட்டோ (NATO) போன்றவை யூரேஸியா (Eurasia) பகுதியுடன் தொடுத்து வரும் இரண்டாம் பனிப் போரும் இரு பிராந்தியங்களுக்கிடையே நடக்கிறது. வகுப்பு அடிப்படையிலும் பிராந்தியங்களைக் கணக்கிடலாம். உதாரணமாக, வடக்கு, தெற்கு என பொருளாதார அடிப்படையில் உலகைப் பிரிக்கலாம்.

நாகரீகம் என்பது அடுத்தடுத்து வாழுகின்ற பல்வேறு மக்களை உள்ளடக்கியது. உதராணமாக, பல்வேறு கிறிஸ்தவர்களையும், இஸ்லாமியர்களையும் கூறலாம். பல பிராந்தியங்களிலும், நாகரீகங்களிலும் அங்கம் வகிக்கும் நாடுகள்தான் இன்றைய உலக மயமாக்கப்பட்ட உலகின் அடிக்கற்கள். தீர்வு செய்யப்படாத தகராறுகள் நாடுகளின் மேல், நாடுகளுக்கிடையே உள்ள உறவுகளின் மேல், மொத்த உலகத்தின் மேல் ஒரு வித தடையாகவே உள்ளன. பால், தலைமுறை, இனம், வகுப்பு, தேசியம், அரசு, நாகரீகம், பிராந்தியம் போன்ற அம்சங்களை

பொருட்படுத்தாது, அனை வருக்கும் கண்ணியமான வாழ்க்கையினை உருவாக்க முயல்கின்ற மக்கள், தகராறுகளினாலும் அதன் தாக்கங்களினாலும் தடுமாறிப் போகிறார்கள். தகராறுகளை மாற்றி அமைப்பதும், கடந்து செல்வதும் உலக இயந்திரத்திற்கு உயவிடுதல் (oiling) போன்றதாகும்.

உதாரணத்திற்கு, முதலாம் பனிப்போரை எடுத்துக்கொள்ளலாம். கிழக்கே எழுந்த அரசியல் எதிர்ப்பு இயக்கங்களாலும், மேற்கே இயங்கிய சமாதான இயக்கங்களாலும், சாதாரண மக்கள் ஒன்றுகூடி அமைதியான முறையில் இந்தப்போரை முடித்து வைத்தார்கள். அணு ஆயுதக் கொடுவாளுக்குக் கீழே வாழ்ந்த வாழ்க்கை சாதாரணமாக வாழ்ந்த வாழ்க்கையாக இருக்கவில்லை. தமது நாடு கதிரியக்கம் தோய்ந்த உபயோகமற்ற நிலமாக மாறிப்போகும், எதிர்காலம் இருண்டுபோகும் என்ற பயத்தில் வாழ்ந்த மக்கள் சுதந்திரமாக வாழவில்லை. அதில் இழக்கப்பட்ட படைப்பாற்றல் ஒரு பேரிழப்பாகும். சோவியத் கம்யூனிசத்தைப் பொறுத்தவரை, ஒரு சமூகம் லௌகீகத் தேவைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டது. மேற்கத்திய முதலாளித்துவத்தைப் பொறுத்தமட்டில், படைப்பாற்றலை சந்தை ஊக்குவிக்கிறது என்றக் கொள்கையின் மேல் அமைந்துள்ளது அது. இந்த இரண்டு சித்தாந்தங்களும் இணைந்து செயலாற்றி இருக்கலாம். மாறாக வரம்புகளற்ற சந்தையும், கோடிக்கணக்கான வேலையற்ற, நம்பிக்கையற்ற, எதிர்காலமற்ற மக்களையே உலகம் பெற்றது.

இரண்டாம் பனிப்போரை எடுத்துக்கொண்டால் ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா ஒரு புறமும், அமெரிக்கா இன்னொரு புறமும் இயங்குவதாக அமையும். இதன் விளைவாக எந்தவித நலனும் பெறாது, உலகம் இன்னொரு அணு ஆயுத ஆபத்தை எதிர்நோக்கி அரிய செல்வங்களை அதனில் தொலைக்க வேண்டியிருக்கும். உலகமயமாக்கலுக்கும், நீடித்த நிலைத்த வளர்ச்சிக்குமாய் நடக்கும் வடக்கு, தெற்கு தகராறும் அப்படியேதான் அமையக் கூடும். சந்தைப் பொருளாதாரத்தில் ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் குறைந்த வருமானத்தில் வாழும் வாழ்க்கை சிறப்பானதாக இருக்காது. சுமார் 500 வருடங்களுக்கு முன்னால் ஒரு ஸ்பானிய போப்பாண்டவர் பிற்காலத்தில் நிகழ்ந்த காலனி ஆதிக்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும், சொல்லொணாத்

துயரங்களுக்கும், படுகொலைக்கும் வித்திட்டார்.

ஒரு தனிநபர் இன்னொருவரின் சொத்தைத் திருடுவதை நாம் ஏற்றுக்கொள்வதில்லை. அதுபோல ஒரு தனிநபர் இன்னொரு நபரைத் திருடி அடிமையாக்கிக் கொள்வதையும் நாம் ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் ஒரு நாடு இன்னொரு நாட்டை திருடிக்கொள்வதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தகராறுகள் மூலம் அவற்றில் எழும் வன்முறையின் மூலம் சிலர் இலாபம் பெற முனையலாம். அதன் காரணமாக தகராறுகளை மாற்றி அமைப்பதற்கும், கடந்து செல்வதற்கும் தடையாகக் கூட இருக்கலாம்.

சர்வதேச வகுப்பு தகராறுகளுக்குப் பின்னால், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என்னும் நாகரீகங்களுக்கு இடையேயான தகராறும் நிலவிக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவ ஸ்பெயின் நாட்டை இஸ்லாம் படையெடுத்து ஆக்கிரமித்தது. கிறிஸ்தவர்கள் இஸ்லாமுக்கு எதிராக சிலுவைப்போர் ஒன்றை 200 வருடங்களாக நடத்தினர். இந்தத் தகராறில் இதுவரை எந்த அமைதி உடன்படிக்கையும் கையெழுத்திடப்படவில்லை. ஒரு பெரிய புனித போருக்காகவோ அல்லது ஒரு பெரிய புனித சமாதானத்துக்காகவோ கோடிக்கணக்கான மக்கள் காத்திருக்கும் நிலையில், 2001 செப்படம்பர் மாதம் 11ஆம் தியதி ஒரு கொடிய நிகழ்வு அமெரிக்க நாட்டில் நிகழ்ந்தது.

இதனால் பதிலடி, பழிவாங்குதல் என தீவிரவாதம், அரசுதீவிரவாதம் தோய்ந்த வகுப்பு மற்றும் நாகரீகத் தகராறுகளை உலகம் எதிர்நோக்கி நிற்கிறது. அதிர்ஷ்டவசமாக காந்தி, மன்டேலா, டீ கிளார்க் போன்றோரும் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை, தீர்வு செய்யப்படாத தகராறு மற்றும் வன்முறை மனித வளத்தை வீணாக்குவதாகவேக் கருதுகிறார்கள். அவர்கள் பிராந்தியங்களையும், இனங்களையும், நாடுகளையும் சமாதான நீரோட்டத்திற்குள் கொண்டுவர முனைந்தார்கள்.

முதலாம் பனிப்போர்

முதலாம் பனிப்போரில் பங்குபெற்றக் கட்சிகளுக்கு பறவைகளின் பெயர்களைப் பொருத்தினார்கள். கழுகு, ஆந்தை, புறா எனப் பெயரிட்டனர். சனநாயகம்எதேச்சாதிகாரம், பாசிச எதிர்ப்பு ஏகாதிபத்தியம் போன்ற போராட்டங்களில் சமரசம் என்ற

பேச்சிற்கே இடம் இருப்பதில்லை. எதிர்தரப்புத் தோற்கும் வரை நாம் கடினமாகப் போராடுவது முக்கியம். பனிப்போர் என்பது இரு தரப்புகள் எதிரெதிர் துருவங்களாக மாற்றப்படுவதாகும். ஆயுதப் போட்டியும் கலக்கப்பட்டு, மனித குலத்தையே அழித்துவிடும் போரினை உருவாக்குவதே இந்த துருவமயமாக்கல். இத்துருவங்களை நீக்கி, ஆயுதங்களையும் நீக்குவதே நமது குறிக்கோள். இப்படிப்பட்ட எதிரெதிர் நிலைகள் அணிகளுக்கு கிடையிலும், நாடுகளுக்கிடையிலும், தேவாலயங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் காணப்படுகின்றன. தனிமனிதனுக்குள்ளும் இந்த இருதுருவ பிரச்சனை இருந்துகொண்டுதான் இருக்கிறது.

அமெரிக்க நாடு சண்டை பற்றியும், துருவ நிலைகள் பற்றியும் பேசும் போது, சோவியத் நாடு சமாதானம் பற்றியும், துருவங்கள் நீக்கம் பற்றியும் பேசியது. இதில் சமரசத்துக்காக உச்சநிலை சந்திப்புகள் நடைபெற்றன. எதிர்கட்சி நம்மை தோற்கடித்தேத் தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பதால், அவர்கள் நம்மை தாக்கிவிடாது, அப்படியே தாக்க முனைந்தால் துரத்தியடிக்கும் அளவிற்கு பலம்பெற்று இருப்பதுமே இந்த துருவ சித்தாந்தம். நமது தலைவர்களை மட்டுமே நம்ப முடியும் என்பதாகவே உச்சக்கட்ட சந்திப்புகள் நடைபெற்றன.

1967ஆம் ஆண்டு ஐரோப்பிய குழு (Council of Europe) என்ற நிறுவனத்திற்காக, 19 வெளியுறவு அமைச்சகங்களில் நூலாசிரியர் ஓர் ஆய்வினை மேற்கொண்டார். ஐரோப்பியக் கண்டத்தை கூட்டுறவான வாழ்க்கைக்காக எப்படி மாற்றி அமைப்பது என்பதே அந்த ஆய்வின் நோக்கம். பல்வேறு கூட்டுறவுக் கொள்கைளும், அமைப்பு மாதிரிகளும் விவாதிக்கப்பட்டன, பல கருத்துப் பரிமாற்றங்கள் நடத்தப்பட்டன. ஐரோப்பாவிற்கான ஐ. நா. பொருளாதாரக்குழு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுறவு மாதிரியாக அமைந்தது. இதில் பங்குபெற்ற பல உயர் அதிகாரிகள் பாதுகாப்பு பற்றியே சிந்தித்தார்கள். ஒருசிலர் எதிர்தரப்பு தோற்றோடும் வரை இம்முயற்சியைத் தள்ளிவைப்பதே சிறந்தது என வாதிட்டார்கள். வேறுசிலர் பரஸ்பரம் ஆயுதக் குறைப்பு செய்தவாறே விலகி இருக்கலாம் என்றனர். இன்னும் சிலரோ ஒரு தலைப்பட்சமாக ஆயுதக்குறைப்பு செய்ய கேட்டுக்கொண்டார்கள். ஆனால் யாருமே முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையேயான தகராறைத் தீர்ப்பதில் ஆர்வம்

காட்டவில்லை. இரண்டிற்கும் இடையேயான ஒரு மையப்புள்ளியை நோக்கியே அவர்கள் நகர்ந்தனர்.

ஐரோப்பாவிற்கான நிரந்தர ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழு ஒன்றை நிறுவி, அனைத்து நாடுகளின் அனைத்து பாதுகாப்புப் பிரச்சினைகளையும் நிர்வகிக்கலாம் என்று நூலாசிரியர் சொன்னக் கருத்தை பலர் தீவிரமாக எதிர்த்தனர். பிரான்சு நாட்டு பிரதிநிதி கம்யூனிஸ்ட்களோடு ஒன்றாய் அமர்ந்து ஐரோப்பிய பிரச்சினைகளை அலசச்சொல்பவரும் கம்யூனிஸ்ட்டாகவே இருப்பார் என்று நூலாசிரியர் மீது குற்றம் சாட்டினார்.

எதிரும் புதிருமான கருத்துப்பரிமாற்றத்தை உபயோகித்து, எதிரணியில் இருப்போரை இருவரின் பொதுநலத்திற்காக இணையச் செய்வதுதான் தகராறுகளைக் கடந்து செல்லும் முறையாக நூலாசிரியருக்கு தோன்றியது. உச்சக்கட்ட சந்திப்புக் களைவிட, அனைத்து நாடுகளும் பங்கேற்கும் ஓர் ஆணையம் மாறுபட்டதாய் இருக்கும். ஆயுதங்கள் பற்றியே விவாதிக்கும் ஆயுதக் குறைப்பு மாநாடுகள்போல் அல்லாமல், தகராறுகளையே இந்த ஆணையம் அதிகமாக விவாதிக்கும். அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியப் பன்னிலை கருத்துப்பரிமாற்றங்களே இதன் அடிப்படை. இந்தத் திட்டத்தில்தான் இருபது வருடங்களுக்கு பின்பு பலன் தந்த டிரன்சென்ட் இயக்கத்தின் விதைகள் தூவப்பட்டன எனக் கூறலாம்.

## இரண்டாம் பனிப்போர்

19ஆம் நூற்றாண்டில் வேர்விட்டிருந்த அமெரிக்காவின் உலகக்கொள்கை 21ம் நூற்றாண்டுக்குள் நேட்டோ (NATO) விரிவாக்கம் என உருவெடுத்தது. ஆம்போ (AMPO) உடன்படிக்கை, அமெரிக்க, ஜப்பான் பாதுகாப்பு உடன்படிக்கை என அது விரிந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, யூரேசியா கண்டம் பிரச்சனைகளின் ஊற்றிடமாகத் தெரிகிறது. லத்தீன் அமெரிக்கா தனது கொல்லைப்புரம் என்பதால் எளிதாக கட்டுப்படுத்திவிடலாம் என்றும் நினைக்கிறது. ஆப்பிரிக்காவை ஒரு பொருட்டாகக் கொள்வதில்லை. யூரேசியாவில் சண்டையும், அடிப்படைவாதமும், தீவிரவாதமும், மாற்றுச்சிந்தனை கொண்ட மக்கள் அதிகமாய் வாழ்வதும் அமெரிக்காவுக்கு இனிமை பயப்பதாய் இல்லை.

தெற்காசியாவில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் என இரு அணு ஆயுத நாடுகள் இருப்பதும் மகிழ்ச்சியளிக்கவில்லை. மத்திய ஆசியா, தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளும் பிரச்சினைக்குரியனவாகவேத் தென்படுகின்றன. ரஷ்யா, சீனா, கொரிய தீபகற்பம், தென்கிழக்கு ஐரோப்பா என அனைத்துப் பகுதிகளுமே அமெரிக்காவுக்கு ஏற்புடையனவாக இல்லை. உலகுதழுவிய ஈடுபாடுகள் கொண்ட உலக வல்லரசு, இவ்வுலகினை கத்தோலிக்கர்கள் பிராட்டஸ் டன்ட்கள், ஸ்லாவியர்கள்ஆர்த்தடாக்ஸ், ஷின்டோ ஜப்பான்ஏனைய ஆசியா எனப் பிரிப்பதற்கு காரணம் இருக்கிறது. யூரேசியாவின் இரு பக்கங்களிலும் அமெரிக்கா துருக்கிஇஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஜப்பான் தென் கொரியா என இரு கூட்டணிகளை உருவாக்கி, அமெரிக்க முன்னாள் அதிபர் ரூஸ்வெல்ட்டின் திட்டப்படி அமெரிக்கா இயங்கி வருகிறது. உலக வரைபடத்தை உற்று நோக்கினால் , அமெரிக்காவின் இந்த இருபுற விரிவாக்கம் ரஷ்யா, இந்தியா, சீனா என்னும் 40% உலக மக்கள் தொகையை ஒரு மாபெரும் இடுக்கியை வைத்து நெருக்குவது போன்றேத் தோன்றும்.

முதலாம் பனிப்போர் அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ (NATO) நாடுகளுக்கும், சோவியத் யூனியன் தலைமையிலான வார்சா ஒப்பந்த (Warsaw Pact) நாடுகளுக்கும் இடையே நடந்தது. இறுதியில் சோவியத் யூனியன் கலைக்கப்பட்டது. அமெரிக்கா இதனை ஒரு பெரும் வெற்றியாகக் கொண்டாடியது. இரண்டாம் பனிப்போர் அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்புக்கும், ரஷ்யா, இந்தியா, சீனா என்ற மூன்று நாடுகளுக்கும் இடையே எழலாம்.

தற்போது அமெரிக்கா மேற்கண்ட மூன்று நாடுகளையும் செச்சன்யா (Chechnya), காஷ்மீர், சிங்யாங் (Xinjiang) என்னும் பகுதிகளில் முஸ்லீம் சிறுபான்மையருடன் மோதவிட்டு வேடிக்கைப்பார்க்கிற இந்த இரண்டாம் பனிப்போர், ஒரு பெரும் தகராறாக மாற வாய்ப்பு உள்ளது. ரஷ்யாவும், சீனாவும் தங்களது தகராறை தீர்ததுக் கொண்டு, ரஷ்யா இந்தியா வுடனும், சீனா பாகிஸ் தானுடனும் ஒப்பந்தம் செய்து, அமெரிக்கா சண்டியர்கள் என அழைக்கும் செர்பியா, லிபியா, ஈராக், ஈரான், வட கொரியா ஆகிய நாடுகளையும் சேர்த்து கொண்டால் , அமெரிக்கா மற்றும் நேட்டோவுக்கு எதிராக ஒருபலம் வாய்ந்த அணி அமைந்துவிடும்.



போலந்து-யுக்ரேயின் (Ukraine) நாடுகளின் சர்வதேச எல்லையிலோ, அல்லது வட கொரியா, தென் கொரியா, ஜப்பான் என்னும் முக்கோணப்பகுதியிலோ எங்காவது ஒரு இடத்தில் ஒரு பிரச்சினை எழுமானால், அது எரிமலையாய் வெடித்து, அணு ஆயுத நாடுகளுக்கிடையே எழும் ஒரு பெரும் போராக உருவெடுக்கலாம். முதலாம் பனிப்போரின் போது நடுநிலை நாடுகளாக பின்லாந்து (Finland), சுவீடன், ஆஸ்திரியா, யூகோஸ்லாவியா பெரும் பணியாற்றியது போன்று, இரண்டாம் பனிப்போரின் போது நடுநிலை நாடுகள் இருக்காது. இந்தச் சூழ்நிலையில், இத்தகராறைக் கடந்து செல்லும் முறை பின்வருமாறு அமையலாம்:

1. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ (veto) வாக்குமுறையை நீக்கிவிடலாம். ஐரோப்பிய யூனியன் மற்றும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பினை (OIC) பாதுகாப்புச் சபையில் உறுப்பினர்கள் ஆக்கலாம்.
2. ஐ. நா. மக்கள் பாராளுமன்றம் ஒன்றை நிறுவி, 10,00,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதியை ரகசிய வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கலாம்.
3. ஐ. நா. சபையை அமெரிக்காவில் இருந்து வெளியே கொண்டு வந்து, உலக அளவிலான சனநாயக ஏற்பாடுகளை அமெரிக்கா ஒத்துக் கொள்ளாத பட்சத்தில், ஐ. நா. வில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றி விடலாம்.

வடக்கு-தெற்கு

ஒரு நவீன சமுதாயம் அரசு இயந்திரம் (State), பொருளாதாரம்

(economy), மக்கள் சமூகம் (civil society) என்னும் மூன்று தூண்களின் மேல் எழுப்பப்படுகிறது. இம்மூன்றும் வளர்ச்சியை நோக்கியே நகர்கின்றன. அரசு இயந்திரம், அரசியல், பொருளாதார, இராணுவ, கலாச்சார வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. பொருளாதாரம், செல்வம், இலாபம், முன்னேற்றம் இவற்றை நோக்கி நகர்கிறது. மக்கள் சமூகம் அடிப்படைத் தேவைகள், கண்ணியமான வாழ்க்கை மற்றும் முன்னேற்றம் நோக்கி நகர்கிறது.

உயிர்வாழ்தல், நல்வாழ்வு, சுதந்திரம் மற்றும் அடையாளம் என்பவை அடிப்படைத் தேவைகள். அரசு மற்றும் பொருளாதார அமைப்புக்கள் இல்லாத காலத்திலும், இயற்கையின் உதவியோடு மனிதன் வாழ முடிந்தது. எனவே இயற்கையே அனைத்தையும் விட முக்கியத்துவம் பெறுகின்றது. மனித குலத்தின் தேவைகள், அரசு, பொருளாதாரம் என எல்லாமே பின்னர் வருபவைகள் தான். வளர்ச்சி சித்தாந்தத்தை இயற்கை மற்றும் மனித குலத்தோடு இணைத்து பார்க்கும் போது, இரண்டுமே மலர்கள் போல மலர்ந்து விரியும் நிலையினைக் காணலாம்.

மனித உயிர்களுக்குத் தேவையானவை உணவு, தண்ணீர், காற்று, உடைகள், உறைவிடம், உறக்கம், உடல்நலம், காமம், குழந்தைகள், கல்வி ஆகும். சுதந்திரமும், அடையாளமும், ஒரு சமூகத்தின் கட்டுமானத்தோடும், கலாச்சாரத்தோடும் இணைந்திருக்கின்றன. மனித குலம் நிலைத்து நிற்பதற்கான ஆதாரம் வன்முறைகளைத் தவிர்த்து தகராறுகளை மாற்றி அமைக்கும் திறமையில் உள்ளது. ஆனால் அரசு இயந்திரம் விலைமதிப்பற்ற அரண்மனைகளிலும், இராணுவங்களிலும், ஆயுதங்களிலும் பலத்தைக் காண்கிறது. பொருளாதாரம் பொருள்களை வாங்குவதிலும், விற்பதிலும், இலாபம் ஈட்டுவதிலும், செல்வம் சேர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. இவை இரண்டும் வலுவானவை. தமக்கு வேண்டியவற்றை இயற்கையிலிருந்தும் மனிதர்களிடமிருந்தும் எடுத்துக் கொள்ளலாம். இதன் பலன் துன்பமும், மரணமும் தான். பிரச்சினை வடக்கு-தெற்கு நாடுகளின் உறவில் எழுவதல்ல. அரசு இயந்திரம், பொருளாதாரம் மற்றும் இயற்கை-மனிதர் உறவில் எழுவது. உலகின் வடக்குப் பகுதியில் அரசு-பொருளாதாரம் பலமாக இருப்பதற்கு காரணம், அது தமக்கு வேண்டிய ஆதாரங்களை தெற்கு பகுதியில் உள்ள இயற்கை மனிதர்களிடமிருந்து சுரண்டிக்

கொள்கிறது. பொருளாதாரம் அரசுக்கு வரிகட்டுகிறது. அரசு பதிலாக இராணுவ, காவல்துறை உதவியுடன் பாதுகாப்பு வழங்குகிறது. ஆனால் மனிதர்களும், இயற்கையும் இன்றைய சமூகத்தில் இணைந்து செயல்பட முடியவில்லை.

இன்றைய சமூகத்தில் அரசு இயந்திரமும், பொருளாதாரமும் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்கின்றன. இயற்கை மாசுபடுத்தப்பட்டு அழிக்கப்படுகிறது. மனிதர்கள் இதனால் துன்புறுகிறார்கள். அரசு இயந்திரமும், பொருளாதாரமும், சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்தாலும், இன்றைய பொருளாதார நிபுணர்களின் வளர்ச்சி சித்தாந்தம் வர்த்தகத்துறையிடமிருந்து பெறப்பட்ட கணக்கியலைச் சார்ந்தே இருக்கிறது. மனிதர்களின் அடிப்படைத் தேவைகள் வெறும் பத்து ஆண்டுகளுக்கு முன்புதான் ஐ.நா.சபையினால் சுட்டிக் காட்டப்பட்டன.

இத்தகராறைக் கடந்து செல்வது என்பது அரசு இயந்திரம், பொருளதார சக்தியுடன் இணைந்து மக்கள் தேவைகளையும், திருப்தியையும் மையப்படுத்திய ஒரு ‘சமூக ஒப்பந்தத்தை’ ஏற்படுத்திக்கொள்வதே ஆகும். கண்ணுக்குப் புலப்படாத அரசு இயந்திரத்தின் சக்தி மற்றும் பொருளாதாரத்தின் செல்வம் போன்றல்லாமல், மனித உயிர்களும் அவர்களது தேவைகளுமே அனைத்து விடயங்களிலும் அடிப்படையாய் அமைதல் வேண்டும். இதற்கு மனித சமூகம் அரசு இயந்திரத்தையும், பொருளாதாரத்தையும் கட்டுபடுத்துதல் இன்றியமையாதது.

உலகின் வடக்குப் பகுதியிலுள்ள அரசு இயந்திரமும், பொருளாதாரமும், தெற்குப் பகுதியிலுள்ள அரசு இயந்திரம், பொருளாதாரத்துடன் இணைந்து செயல்பட்டால், வறுமைக்கு எதிரான போரில், வறுமைக்கும், வளமைக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்து விடலாம் என்பது யூகம். ஆனால் உண்மையில், அரசு இயந்திரத்தையும், பொருளாதாரத்தையும் இயக்கும் வளமானவர்கள் இன்னும் அதிகமாக வளம் பெறுவதற்கே இந்த தகராறு உதவி செய்கிறது. இந்தப் பனிப்போர் ஏழைகளுக்கும், இயற்கைக்கும் எதிரான போராகவே அமைகிறது.

வடக்கிலுள்ள அரசுகள், தெற்கிலுள்ள அரசுகளுக்கு ‘வளர்ச்சி உதவி’ என்ற பெயரில் ஏராளமான பொருளைக் கொடுத்து, தெற்கிலுள்ள அரசுகள் மனிதர்கள் மற்றும் இயற்கைக்கு உதவுவது

ஒரு சமரசத்தீர்வு. ஆனால் தெற்கிலுள்ள பொருளாதாரம், வடக்கிலுள்ள பொருளாதாரத்திற்கு கடத்துகின்ற செல்வம் பல மடங்கு அதிகமானதாக இருக்கிறது. இந்தத் தகராறுக்கு தீர்வு, வடக்கிலுள்ள மக்கள் சமூகத்திற்கும், தெற்கிலுள்ள மக்கள் சமூகத்திற்கும் இடையே ஒரு நேரடி ஒத்துழைப்பினை உருவாக்குவதுதான். உள்ளூர் அமைப்புகளும், மனித தேவைக்கான அவர்களது உற்பத்தித் திறன்களும் பலப்படுத்தப்பட வேண்டும். அரசுசாரா நிறுவனங்களின் உதவியுடன் இந்த நடவடிக்கைகளை மேம்படுத்த முடியும்.

உலகமயமாக்கல்

பொருளாதாரம் அரசு இயந்திரத்தை கட்டுப்படுத்தி, இரண்டும் சேர்ந்து பூட்டப்பட்ட அறைகளுக்குள்ளே ரகசியமாக நடக்கும் கூட்டங்களில் மனிதர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் போது, என்ன நடக்கும் என்பதை இன்றைய உலகமயமாக்கல் தெளிவுபடுத்துகிறது. உலகப் பொருளாதாரம் உள்ளூர் சந்தைகளை அறவே நீக்கி, உலகம் முழுவதையுமே ஓர் எல்லையற்ற சந்தையாக மாற்றிவிடுகிறது. அரசு இயந்திரத்தின் பொருளாதார நடவடிக்கைகளைத் தனியார்மயமாக்கல் என்ற பெயரில் தனதாக்கிக் கொள்கின்றன பலம் பொருந்திய கம்பெனி குழுமங்கள். மனிதர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளை, தங்களது உழைப்பின் மூலமாக பெறமுடியாமல் போய் துன்பம் அதிகரிக்கிறது. தேவைகள் அனைத்தையும் பணமயமாக்கலின் மூலமே பெறும் சூழ்நிலை உருவாகிறது.

முதலீடுகளுக்கும், முதலீடுகளுக்கும் இடையே நிகழும் போட்டியில், பொருட்களின் விலைகள் குறைகின்றன. ஆனால் தொழிலாளர் சம்பளங்கள் குறைக்கப்படுகின்றன. வேலையில்லா திண்டாட்டம் உருவாக்கப்படுகிறது. இம்மாதிரியான நிகழ்வுகள் அனைத்தும் சேர்ந்து மக்களின் வாங்கும் திறன் குறைக்கப்படுகிறது. பணவீக்கம் அதிகரிக்கிறது. பல நிறுவனங்கள் திவால் ஆகின்ற நிலையும் எழுகிறது. வடக்குப்பகுதியைவிட தெற்குப்பகுதியில் இவை அதிகம் நிகழ்கின்றன. பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே உள்ள இடைவெளி விரிந்துகொண்டேப் போகிறது. சுற்றுச்சூழல், பொருளாதார, அரசியல், ராணுவ மற்றும் கலாச்சார அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டேப் போகிறது. வரும் 2030ம் ஆண்டிற்குள் பணக்கார நாடுகளுக்குள்ளேயும், அவற்றைச்

சுற்றிலும் கிட்டதட்ட 1000 மில்லியன் மக்கள் இப்படி அகதிகளாவார்கள் என்று ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. குறைந்த வரிகளாலும், வரிநீக்கம், ஊக்குவிப்புக்கள் போன்றவைகளாலும் உள்ளூர் அரசுகளின் வருமானத்தைக் குறைத்து, பொருளாதார முதலீட்டாளர்கள் பெரும் செல்வந்தராகின்றனர். மக்கள் பங்கு வர்த்தகத்தில் நுழைந்து, பங்குச்சந்தைகள் தகரும்போது வீதிக்குத் தள்ளப்படுகின்றனர்.

சர்வதேச நிதிமையம் (IMF) ஒரேயொரு மருந்து மட்டுமே தெரிந்த மருத்துவர் போல் இயங்குகிறது. வர்த்தக நிறுவனங்கள் தனியார் மயம், குறைந்த வரிகள், பணமதிப்புக்குறைப்பு போன்றவற்றின் மூலம் அரசின் பிடியிலிருந்து சுதந்திரமாக இயங்க அறிவுறுத்துகிறது. ஒப்பந்த வேலைகள் போன்றவற்றின் மூலமாக தொழிலாளர்களிடம் இருந்து விலகி, லாபத்தை எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம் என்ற நியதியின் படி லாபம் ஈட்டிய நாடுகளிடமிருந்தும் விலகி, அடிப்படைத் தேவைகளுக்கு அரசு உதவிகளை நீக்க வலியுறுத்தி, சாதாரண மனிதர்களிடமிருந்தும் பொருளாதாரக் குழுமங்கள் விலகியிருக்க அந்த மையம் அறிவுறுத்துகிறது. மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கு எதிராக ஓர் அநியாயமான பொருளாதார அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

நியாயமான உலகமயமாக்கல் ஆண், பெண் இருபாலரையும், அனைத்து தலைமுறையினரையும், அனைத்து இன மக்களையும், அனைத்து வகுப்பாரையும், அனைத்து தேசங்களையும், மற்றும் அனைத்து அரசுகளையும் ஒன்றாய் கூடி அனைவரின் உயர்ந்த நல்வாழ்விற்காக உழைக்கச்செய்யும். மேம்படுத்தப்பட்ட ஐ. நா. சபை மட்டுமே இதைச் செய்ய முடியும், ஓரளவு செய்தும் வருகிறது. ஆனால் தற்போது நடப்பது நடுத்தர வயது கொண்ட வெள்ளையின ஆண்களால் பொருளாதார மேட்டுக்குடியைச் சார்ந்த மக்களுக்காக, அமெரிக்கா, உலகவங்கி, சர்வதேச நிதிமையம் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் நடத்தும் பொருளாதார பரிபாலனம்.

இதுபோன்ற நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் இடையே நடக்கும் தகராறுகளில் கடந்து செல்லலைவிட, உரிய மாற்றுவழிகளைத் தேடுவதுதான் தேவை.

1. உள்ளூர் சமூகங்களை மீட்டெடுப்பது: அடிப்படைத்

தேவைகளுக்கான உற்பத்தித்திறனை உள்ளூரிலேயே உருவாக்குவது, உள்ளூர் சமுதாயங்களில் கூட்டுறவு அமைப்புக்களை நிறுவி அடிப்படைத் தேவைகளை பூர்த்திச் செய்வது, உள்ளூர் படைப்புத் திறனை ஊக்குவிப்பது, உள்ளூர் வலைப்பின்னல்களை உருவாக்கி, மாசுபடுத்தலைக் குறைக்க வழிச் செய்தல்.

2. அரசு இயந்திரத்தை மீட்டெடுப்பது: நிர்ணயிக்கப்பட்ட பொருட்களை ஒரு நாட்டிற்குள்ளேயே அல்லது சில நாடுகளின் கூட்டமைப்புக்குள் உற்பத்தி செய்து, திறமையாக வினியோகித்து, மாசுப்படுத்தலை குறைத்து, திறமையான பகிர்தலை உருவாக்கிக் கொள்வது.

3. நிறுவனங்களை மீட்டெடுப்பது: வர்த்தக நிறுவனங்கள் அடிப்படைத் தேவைகளை உற்பத்தி செய்து, உரியவிலையில் விற்று, சமூக பொறுப்புக்களைப் பூர்த்தி செய்யும் போது, அதன் அடிப்படையில் இந்நிறுவனங்களை ஆதரிப்பதும், எதிர்ப்பதும்.

4. பொருளாதாரக் கொள்கையினை மீட்டெடுப்பது: தேவை மற்றும் இலாபத்தை மட்டுமே நோக்காமல், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்துவது.

5. மக்கள் சமூகத்தை மீட்டெடுப்பது: உள்ளூர் ஆட்சி அமைப்புக்களுடனும், அரசு இயந்திரம் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனும் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு, நுகர்வோர் விழிப்புணர்வுடன் வர்த்தக நிறுவனங்களை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது.

6. ஊடகங்களை மீட்டெடுப்பது: அரசு மற்றும் பொருளாதார ஈடுபாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்து ஊடகங்களை விடுவிப்பது, பங்குச்சந்தைகள் இலாபம் மற்றும் வளர்ச்சி பற்றி மட்டுமே கவனம் செலுத்தாது, மக்களின் அடிப்படைத் தேவைகள், அவற்றின் வினியோகம் பற்றி கவனம் செலுத்துவது.

7. உலக நிர்வாகத்தினை மீட்டெடுப்பது: பங்குச்சந்தைகளின் மேல் அதிக வரிவிதித்து, அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது மனித உரிமை எனக் கொள்வது மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படும் ஐ. நா. மக்கள்

பாராளுமன்றத்தை உருவாக்குவது.

நீடித்த நிலைத்த வளர்ச்சி **(Sustainable Development)**

ஒரு மலர் தன் இதழ் விரித்து மலர்வது ஒரு மாபெரும் மலர்ச்சி மிக்க பூவாக உருவெடுப்பதற்காக அல்ல. அதே போன்று ஒரு மனிதன் வளர்வதும் அதிக எடையுடன் உலகிலேயே மிகப் பெரிய மனிதனாக மாறுவதற்கும் அல்ல. மலராக இருந்தாலும், மனிதனாக இருந்தாலும் எப்போதுமே வளர்ந்து கொண்டே இருக்க முடியாது. வளர்ச்சிக்கும் எல்லை உண்டு. மனித இனம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த மனிதஇன வளர்ச்சி எங்கே போய் முடியும் என்பது நமக்கு தெரியாவிட்டாலும், இதன் பயணம் நல்லபடியாகத் தொடர உதவுவது நமது கடமை. எதிர்கால சந்ததியினர் வாழும் பொருட்டும், இன்னும் உயர்ந்த இலக்குகளை அவர்கள் எட்டிப் பிடிக்கும் பொருட்டும் வளர்ச்சி நீடித்த நிலைத்தத் தன்மையதாய் இருக்க வேண்டியது அவசியம். நம்மை நாமே மாற்றி அமைத்துக் கொள்ளும் திறமையும், நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் கடமையும் நமக்கு இருக்கிறது. தலைமுறைகளுக்கிடையே எழும் தகராறுகள் காலத்தினூடே நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தலைமுறையும் தமது நல்வாழ்வையே அடிப்படை குறிக்கோளாகக் கொண்டு அமைகிறது. ஓவ்வொரு தலைமுறையும் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனைகிறது. இந்த நிகழ்காலத்துக்குள் நாம் அனைவரும் சிக்கிக் கொள்கிறோம். ஒரு தலைமுறை எதிர்காலத் தலைமுறைகளின் நல்வாழ்வுக்கு தடையாக நிற்கும் போது தகராறு எழுகிறது. பொருளாதார ரீதியில் இயற்கை வளங்களை அழித்தும் மாசுபடுத்தியும் தடைகளை ஏற்படுத்தலாம். இராணுவ ரீதியில் தொடர் வன்முறையைத் தூண்டி, புகழ் மற்றும் பழிவாங்குதல் போன்ற உணர்வுகளின் மூலம் தடைகளை ஏற்படுத்தலாம். மேற்கண்ட விளைவுகளை ஏற்படுத்தும் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்வதன் மூலம் கலாச்சார ரீதியான தடைகளை உருவாக்கலாம்.

“நீடித்த நிலைத்த வளர்ச்சி” என்பது பொருளாதாரம், சுற்றுச்சூழல் போன்றவற்றைக் கடந்து, ஓர் உன்னதமான நிலையினைச் சுட்டிக்காட்டுகிறது. பன்மையும், ஒருங்கிணைப்பும் கொண்ட, சுற்றுச்சூழல் வன்முறையினால் புண்படுத்தப்படாத மக்கள் அகிம்சை, படைப்புத்திறன், மீளிணக்கத்தோடு தகராறு களைக் கையாண்டு, இவை போன்ற அம்சங்கள் உள்ளடக்கிய

உலகக் கலாச்சாரங்கள் வளர்த்து நமது உலகை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்வதுதான் அந்த உன்னத நிலை.

ஆனால் உண்மையில் நடப்பது என்னவென்றால், மாசுப்படுத்துதலும், இயற்கை வளங்களை அழித்தலும், வன்முறையும், தகராறுகளைக் கையாளும் திறமைக் குறைவும் தான். எதிர்கால சந்ததியினரின் மேல் ‘தீர்க்கப்படாத பிரச்சினைகளின்’ மூலம் நாம் சுமத்தும் பாரம் அதிகமாகிக் கொண்டே போகிறது. வன்முறையும், இடப்பெயர்ச்சியும், படையெடுப்புகளும், போர்களும், நோய்களும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. இந்த தான்தோன்றித் தனம் எதிர்கால சந்ததியினரின் நலத்திற்கு தீங்குவிளைவிக்கும்.

அமெரிக்க செவ்விந்தியர்கள், “உங்கள் செயல்பாடுகளினால் அடுத்த ஏழு தலைமுறைகளுக்கு எழும் விளைவுகள் பற்றி சிந்தித்துப் பாருங்கள்”, என்று அறிவுரைக்கிறார்கள். இதற்கான பயிற்சி பெற சிறந்த இடம் மூன்று நான்கு தலைமுறைகள் சேர்ந்து வாழும் குடும்பம் தான். இதே போன்று சமூகங்களிலும், உலக சமூகத்திலும் அடிப்படைத் தேவைகளை மதிக்கும் தொலைநோக்குப் பார்வை, உலகளாவிய சிந்தனைகள் அடங்கிய பரிபூரணப் பார்வைகள் கொண்ட ஏற்பாடுகளை செய்து கொள்ளலாம். இந்நடவடிக்கைகள் முதியோர்களையும், பெண்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பரந்துபட்ட கல்வி மற்றும் ஆன்மீக இயக்கங்களின் உதவியோடு தலைமுறைகளுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். குறுகியகால தன்னலமான வினைப்பலன் அலசல்கள் தலைமுறைகளுக்கிடையே எழும் கொடுக்கல் வாங்கல்களைப் புரிந்துக் கொள்ள உதவாது. எதிர்கால தலைமுறைகள் நமக்கு பெரிதாகத் தீங்குகள் எதுவும் செய்ய இயலாது. ஆனால் அதே வேளையில் நாம் அவர்களின் நல்வாழ்வை மட்டுமின்றி, உயிர்வாழும் உரிமையைக் கூட பறிக்க இயலும். மனிதநேயத்தின் மூலம் ஒருவருக்கொருவர் தேவை என்ன என்பதையும், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் இவை மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதையும் நாம் உணர வேண்டும்.

## கிறிஸ்தவமும் மதநம்பிக்கையற்றவரும்

1493 ம் ஆண்டு மே மாதம் 4ம் தேதி ஸ்பெயின் நாட்டு ஆட்சியாளர்கள் பெர்டினன்ட் (Ferdinand) மற்றும் இசபெல்லாவை

(Isabella) போப் அலெக்சாண்டர் கீழ்காணுமாறுப் புகழ்ந்தார்:

1. காட்டுமிராண்டி நாடுகளை தூக்கி எறிந்து, மத நம்பிக்கையைக் கொண்டுவரும் பொருட்டு கிறிஸ்தவத்தைப் பரப்பினீர்கள்.
2. கிரானடா (Granada) அரசாட்சியை சராசன்ஸின் (Saracens) பிடியிலிருந்து இருந்து விடுவித்து திருப்பெயருக்கு புகழ் சேர்த்தீர்கள்.
3. இதுவரை யாரும் சென்றிராத நிலங்களுக்கும், தீவுகளுக்கும் நமது மண்ணின் மைந்தன் கிறிஸ்டோபர் கொலம்பசை அனுப்பி தேடச் செய்தீர்கள்.
4. தொலைதூர நாடுகளைக் கண்டுபிடித்து, அங்கே வாழ்ந்த பண்படாத மக்களை கத்தோலிக்க மதத்திற்கு மாற்றி நல்லொழுக்கம் கற்பித்தீர்கள்.
5. பலமிக்க கோட்டையினைக் கட்டி, கிறஸ்தவர்களைப் பாதுகாப்பிற்கு அனுப்பி, புதிய தேசங்களைக் கண்டுபிடித்து, கண்டுபிடித்த தேசங்களில் தங்கம், வாசனைப் பொருட்கள் என்னும் அரியப் பொருட்களை கண்டுபிடிக்கச் செய்தீர்கள்.
6. கண்டுபிடித்த தேசங்களில் உள்ள மக்களைக் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றி, தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தீர்கள்.

இப்படி ஸ்பெயின் ஆட்சியாளர்களைப் புகழ்ந்த போப், அவர்களை புதிதாகக் கண்டுபிடித்த பகுதிகளுக்கு அனைத்து உரிமைகளும், சக்திகளும் கொண்ட பிரபுக்களாக பறைசாற்றினார். சுருக்கமாக சொல்லப் போனால், இவரது சிந்தனையோட்டத்தில் பூமி கடவுளுக்கு சொந்தமானது; போப் கடவுளின் சித்தத்தை நிர்வகிப்பவர்; ஸ்பெயின் நாட்டு மன்னருக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கும் தகுதி படைத்தவர். இப்படி காலனி ஆதிக்கத்தையும், ஏகாதிபத்தியத்தையும் நியாயப்படுத்திய அலெக்சாண்டர் ஒரு பெரும் தகராறினை உருவாக்கிச் சென்றார். இந்தத் தகராறினை கடந்து செல்ல முனைவதை விட, இதற்கொரு மாற்று கண்டுபிடிப்பதே சிறந்தது. போப் அலெக்சாண்டர் கீழ்காணும் வகையில் சிந்தனையோட்டத்தை மாற்றி அமைத்திருக்கலாம்:

“பரந்த கடல்களின் வழியாக இறைவன் படைத்த நட்சத்திரங்களின் உதவியோடு, கப்பலில் பயணம் செய்து ஐரோப்பாவை போன்றல்லாத தொலைதூர நாடுகளை, தீவுகளை, அங்கே வாழும் ஐரோப்பியர் அல்லாத மக்களை கண்டுபிடிக்கும் பெரும் வாய்ப்பு நமக்கு அருளப்பட்டுள்ளது. இதற்காக எங்கள் தாயும் தந்தையுமாக இருக்கும் இறைவனை, அவர் புத்திரனை, பரிசுத்த ஆவியை நன்றியுடன் வணங்குகிறோம். வேற்று மனிதர்களை சந்தித்து, கலந்துரையாடி, வேற்றுமைகளைக் கொண்டாடி, எங்களைச் சுற்றியுள்ள மிருகங்கள், பறவைகள், செடிகொடிகள், சூரியனின் வெளிச்சத்தினால் ஒளிமயமாக்கப்பட்ட வானத்தின் கீழ் நிற்கும் மலைகள், கடல்கள், கரைகள் இவற்றைக் கொண்டாடுகின்ற வாய்ப்புக்கு நன்றிக் கூறுகிறோம்.

பிறமக்களின் உண்மைகளிலிருந்து பயிலுவதற்கும், அவர்கள் எப்படி இந்த உலகை கண்ணுறுகிறார்கள் என்பதை எல்லாம் தெரிந்து கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்கள் உண்மைகளை அவர்கள் புரிந்து கொள்ளும் பொருட்டு விளக்கவும் முனைகிறோம். நாங்கள் அனைவருமாக ஒன்று சேர்ந்து, ஆன்மீக, பௌதீக கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபட்டு, தொடர்ந்து முன்னேற ஆயத்தமாய் இருக்கிறோம். ஒரு சாரார் மட்டுமே தனித்து முயற்சிப்பதைவிட, நாங்கள் அனைவருமே சேர்ந்து இவ்வுலகின் ஆழமான உண்மைகளை அறிய முற்படும் முயற்சி இனிமையானதாக இருக்கிறது.

போப்பாண்டவராகிய நான், ஸ்பெயின் நாட்டின் மன்னருக்கு கீழ்காணுமாறு, ஆணையிடுகிறேன். நம்மால் கண்டுபிடிக்கப்பட்ட மக்களை அணுகி, அவர்களை ஆக்கிரமிக்க எண்ணாது, நட்பு ரீதியில் அவர்களோடு கலந்துறவாடுங்கள். அவர்கள் விரும்பவில்லை என்றால், அவர்களை சமாதானமாக வாழ விட்டுவிடுங்கள். சமாதானமாய் வாழும், உடைகள் அணியாத, புலால் உண்ணாத இம்மக்களிடமிருந்து, அவர்களை வழி நடத்தும் அவர்களின் அறிவினை, விவேகத்தை பற்றிப் படியுங்கள். உங்களுக்கு ஆசிரியர்களாக இருந்து, இந்த சமாதான கலையைப் பயிற்றுவிக்கும்படி பணிவுடன் கேளுங்கள்.

கோட்டை கொத்தளங்களைக் கட்டுவதை விடுத்து, அவர்கள் மத்தியில் நீங்கள் வாழ அனுமதி கோருங்கள். இஸ்லாமிய சராசன்ஸ் மக்களையும், யூத மோரிஸ்கோஸ் (Moriscos) மக்களையும் உங்கள் நிலங்களை சட்டத்திற்கு புறம்பாக அவர்கள்

ஆக்கிரமித்து இருக்கிறார்கள் என்று விரட்டி அடித்தீர்கள். அவர்களில் எத்தனை பேர் உங்கள் மத்தியில் திரும்பிவந்து வாழ விரும்புகிறார்களோ, அத்தனை பேரையும் உங்கள் நாட்டில் குடியேறச் செய்து, அவர்களது கருத்துக்களைப் பரப்பி, கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்தி, இறைவனின் படைப்பினை இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.”

1493ம் ஆண்டு போப் இப்படி ஒரு வாதத்தை முன் வைத்திருக்க முடியாது. ஆனால் அண்மையில் காலமான போப் இரண்டாம் ஜான் பால் இப்படிச் சொல்ல முயன்றிருக்கலாம். எதிர்கால போப்பாண்டவர்கள் என்ன சொல்வார்கள் என்பது தெரியாது.

கிறிஸ்தவமும்**,** இஸ்லாமும்

கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் தாங்கள் மட்டுமே உண்மையான வேதத்தை கொண்டிருக்கிறோம் என்று எப்படி கூறுகிறார்கள்? ஒரு தீவிர கிறிஸ்தவர் சொல்வார்: “கடவுள் தன்னை மோஸசுக்கு (Moses) அடையாளம் காட்டி, பத்துக் கட்டளைகளை அவரிடம் கொடுத்து, நம்மையெல்லாம் ரட்சிக்கும் பொருட்டு அவரது குமாரனை உலகிற்கு அனுப்பினார். ஆனால் இஸ்லாம் இயேசு கிறிஸ்துவை நிராகரிக்கிறது.” ஒரு தீவிர முஸ்லீம், “அல்லா முகமது நபிக்கு தன்னை அடையாளம் காட்டி குரானை வழங்கினார். மூசா (மோசஸ்) மற்றும் ஈசா (ஜீசஸ்) என்பவர்கள் தூதுவர்கள் (நபி) ஆனால் முகமது கடவுளின் ஒரே இறைத்தூதர் (ரசூல்)” என்பார். ஆனால் மிதவாத கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் ஏசுநாதரைப் பற்றிய போதனைகளைத் தவிர பிறவற்றில் ஒருமித்த கருத்துக்களையேக் கொண்டிருக்கின்றனர்.

யூத மதம் கிறிஸ்தவத்தின் அடிப்படை என்பதையும், இவ்விரு மதங்களும் இஸ்லாமோடு தொடர்புக் கொண்டவை என்பதையும், இம்மூன்று மதத்தினருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். 1095 ம் ஆண்டு நவம்பர் 27 அன்று பிரெஞ்சு நகரமான கிளர்மான்டில் (Clermont) வைத்து போப் அர்பன் II (Urban) புனித நிலத்தை விடுவிக்க கிறிஸ்தவர்களைப் போர் தொடுக்குமாறுப் பணித்தார். 1291ம் ஆண்டு சிலுவைப்போர் முடிவடைந்து, கிறிஸ்தவர்கள் பின்வாங்கினார்கள். சமாதான உடன்படிக்கை எதுவும் ஏற்படவில்லை. சிலுவைப் போர் மதத்தினை உபயோகித்து, அரசியல் பொருளாதார காரணங்களுக்காக போர் புரிவதற்கு ஓர் உதாரணமாக விளங்கிற்று.

சிலுவைப் போரில் 1258ம் ஆண்டு ஹூலகு (Hulaku) என்னும் ஜெங்கிஸ்கானின் (Genghiskhan) பேரன் முஸ்லீம் மக்களை பாக்தாத் நகரில் கொன்று குவித்தார். கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் இரு மதங்களும் ஒரே மாதிரியானவை. அடிப்படைவாதிகள் தாங்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்த விரும்புகின்றனர். மிதவாதிகள் மற்றவர்களை சகித்துக் கொள்ளும் தன்மை கொண்டிருக்கின்றனர். இந்த தகராறில் "எதிர்மறைக் கடந்து செல்லல்" என்பது மதச்சார்பின்மை அல்லது மூன்றாவது மதம் ஒன்றிற்கு மதம் மாறுவதாக அமையும். "நேர்மறைக் கடந்து செல்லல்" எப்படி இருக்கும் என்று பார்ப்போம்.

ஒன்பது நூற்றாண்டுகளுக்கு பிறகு 1995 ம் ஆண்டு நவம்பர் 26, 27, தியதிகளில் ஸ்விட்சர்லாந்தில் ஒரு கருத்துப் பரிமாற்றம் நடத்தப்பட்டது. பல கிறிஸ்தவ, இஸ்லாமிய தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். போப் இரண்டாம் ஜான் பால் அவரது வாழ்த்துக்களை அனுப்பியிருந்தார். கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் சேர்ந்து சமாதானம், விடுதலை, சமூகநீதி மற்றும் ஒழுக்கம் இவற்றைப் பேணிட அறிவுரைத்தார். கூட்டத்தில் பங்கேற்ற இரு மதத்தலைவர்களும் தங்கள் வழி நடப்பவர்களுக்கு கீழ்வருமாறு அறிவுரைத்தனர்:

1. பிறமதத்தவர் நம்மைப்பற்றி புரிந்துகொண்டிருப்பது போலவே, பிறமதங்களைப்பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும்.
2. வரலாறு, குடியுரிமையியல் (civic education), மதக்கல்வி போன்ற பாடப்புத்தகங்களில் இரு மதங்களைப் பற்றியும் விவாதிக்கலாம்.
3. பிற மதங்களைப்பற்றி பேசும்போதோ, எழுதும்போதோ, பேச்சு சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தக் கூடாது.
4. அனைவரும் ஒன்றாய் சேர்ந்து எழுச்சியூட்டும் சமாதானம், விடுதலை, சமூகநீதி, மனித உரிமைகள், வன்முறையற்ற தகராறு தீர்வு இவற்றை மேம்படுத்த வேண்டும்.
5. பரஸ்பரம், மரியாதையையும், புரிதலையும் ஏற்படுத்தும் சர்வமத குழுக்கள் உருவாக்கலாம்.
6. அனைத்து மத்தினரும் ஒன்றாய் சேர்ந்து பாஸ்னியா (*Bosnia*) நாட்டைத் திரும்பவும் கட்டி எழுப்பலாம்.

7. ஊடகங்களில் பணிபுரிவோரிடம் பொறுப்பான, சமாதானம் போற்றும் இதழியல் மலர முயற்சிக்கலாம்.

சிலுவைப் போருக்கு அழைப்பு விடுத்த அதே நாளில், அனைத்து மதத்தினரும் தங்கள் இதயங்களையும், மனங்களையும், திறந்து வைத்திருக்கக் கோருகிறோம். மாறுதலான ஒருவரை பார்க்கும்போது, அபாயமானவர் எனும் உணர்வுக்கு ஆளாகாமல், புதிதாக ஒன்றைக் கற்கவும் நம்மை வளப்படுத்திக் கொள்ளவும், சமாதானத்தை உருவாக்கவும் உன்னதமான வாய்ப்பு என்று மகிழ்ச்சி கொள்ள வேண்டும். நம் மதங்களின் அடிப்படைச் செய்திகளை அப்படியே வைத்துக்கொண்டு, புதிய வழிகளை, வார்த்தைகளை, செயல்முறைகளை உருவாக்குவோம். நமது மதத்தினைச் சுதந்திரமாக அலசி ஆராயும்போது மற்ற மதங்களின் மீது தானாகவே மரியாதை எழும். அடுத்த 900 வருடங்களும், அதற்குப் பிறகும் நமது இதயங்களிலும், மனங்களிலும், செயல்பாடுகளிலும் சமாதானம் தழைத்தோங்கட்டும். கிறிஸ்தவத்திலிருந்து மூன்று சிறந்த கருத்துக்களை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

பாவம் மற்றும் பாவிக்கு இடையே உள்ள வேறுபாடு, தள்ளி வைப்பதற்கு பதிலாக மன்னித்து அன்பு செலுத்துவது, ஒவ்வொரு தனிமனிதனும் தனிப்பட்ட பொறுப்புணர்வு கொள்வது என்பவையே அவை. இதேபோன்று, இஸ்லாமிலிருந்தும் கீழ்காணும் நல்ல கருத்துகளை நாம் எடுத்துக் கொள்ளலாம்; துன்பத்தில் உழலும் மக்களுக்கு ஜக்காத் (தானம்) கொடுப்பது, எதிர்தரப்பு சமாதானகரமாக இருந்தால் நாமும் அதையே செய்வது, சமாதானத்திற்கு தம்மை அர்ப்பணித்துக்கொள்வது (சலாம்-இஸ்லாம்-முஸ்லீம்). அவரவர் தமது தேவைகள் மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப, நல்ல உரிய கருத்துக்களைத் தேர்ந்தெடுத்து கொள்ளலாம். பல மதங்களின் கருத்துக்களைக் கலந்து கொள்வது பாவச்செயல் அல்ல என்பதுதான் முக்கியம். இப்படி மொத்த உலகத்திடமிருந்தும் ஏற்புடைய கருத்துக்களைத் தேர்ந்து நம்வாழ்வில் சேர்த்துக் கொள்வது தான் “கடந்து செல்லலின்” முக்கியமான அம்சம்.

அமெரிக்கா, மேற்கத்திய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகள்

அமெரிக்காவையும் மேற்கத்திய நாடுகளையும் பொறுத்தவரை 2001ம் ஆண்டு செப்டம்பர் 11 ஒரு திருப்புமுனையான நாள்.

தீவிரவாதத்திற்கு எதிரான போரைத் துவக்க உதவிய நாள். 1914ம் ஆண்டு ஜூன் 28 அன்று நடந்த சம்பவம் முதலாம் உலகப்போரைத் துவக்கியது போன்றே தற்போதைய நிகழ்வும் அமைந்துள்ளது. இந்நிகழ்வுகளில் தீயசக்தியைக் கண்டுவிட்டதாக கோரும் மேலை நாடுகள் அதனை அழித்து ஒழிப்பதிலேயே குறியாக இருக்கின்றன. தமக்கு ஏதும் பொறுப்பில்லை, அனைத்துமே எதிர் தரப்பின் தவறுதான் என நினைக்கின்றன இந்நாடுகள்.

9/11 நிகழ்விற்குப் பிறகு அமெரிக்கத் தொலைக்காட்சியில் தோன்றிய ஒரு குழந்தை, "தீவிரவாதிகள் நம்மை இவ்வளவு தூரம் வெறுத்து இப்படி ஒரு தாக்குதல் நடத்தும் அளவிற்கு நாம் என்ன செய்தோம்?" எனக் கேட்டது. இந்த கொடுமையைச் செய்தவர்களில் பெரும்பாலோர் சவுதி அரேபியர்கள். இந்த வகாபி (Wahhabi) மக்கள் அமெரிக்கர்கள் தங்களது புண்ணீய பூமியை பொருளாதார, இராணுவ ரீதியில் அவமதித்ததாகவும், பிற மதங்களை நுழைத்து அரச குடும்பத்தினரின் ஊழல்களில் உதவியதாகவும் கருதினர். அமெரிக்கர்களோ 1945ம் ஆண்டு அதிபர் ரூஸ்வெல்ட் மற்றும் மன்னர் இபின்சவுத் (Ibn Saud) ஆகியோர்களிடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி, அரச குடும்பத்தைப் பாதுகாத்து அதற்கு பதிலாக எண்ணெய் வளத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் என வாதிட்டனர். அமெரிக்கர்களின் இலக்கு எல்லைகளற்ற சுதந்திர வர்த்தகம், அவர்கள் பார்வையில் சுதந்திரம் என்பது எதை வேண்டுமானாலும், எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் வாங்கி விற்பதுதான்.

ஆனால் முஸ்லீம்களுக்கு தமது மதத்திற்கான மரியாதையை உறுதிப்படுத்துவதே இலக்கு. கண்ணோடு கண் நோக்காது, பணத்திற்காக பொருட்களைக் கைமாற்றிக் கொள்வது வர்த்தகம் அல்ல என நினைக்கின்றனர் அரேபிய மக்கள். வர்த்தகம் என்பதை ஓர் ஆழமான மனித உறவாகவே காண்கின்றனர். 9/11 நிகழ்விற்கு தீர்வு, உலக சமுதாயம் அந்தக் குற்றவாளிகளைத் தண்டிப்பதும், அமெரிக்கா மன்னிப்புக் கோரி, பொருளாதார இராணுவ ரீதியில் சவுதி அரேபியாவில் இருந்து வெளியேறுவதும் தான். ஆனால், இந்த தகராறு சுதந்திரமான வர்த்தகம் மற்றும் மரியாதைக்கு இடையேயான ஒன்று என்பதைப் பெரும்பாலோர் உணரவில்லை. ஆனால் தகராறு கட்சிகள் அழிவு, படுகொலை என்னும்

பாதையிலேயே சென்று கொண்டு இருக்கின்றனர். இந்நிலை அடுத்த 500 வருடங்களுக்குத் தொடரலாம். இது எப்படி முடிவடையும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும் எங்கே வன்முறை நிகழ்கிறது, யார் வெற்றி பெறுகின்றார்கள் என்பது பற்றியே சிந்தித்திருப்பார்கள்.

இந்த தகராறு உண்மையில் எதைப் பற்றியது, அனைத்து கட்சிகளுக்கும் ஏற்புடைய, நீடித்த நிலைத்த தீர்வுகள் உள்ளனவா என்பது பற்றி சிந்திக்கலாம். பின்லேடன் (Bin Laden) வெற்றி பெற்றால், சவுதி அரேபியப் பாலைவனங்களிலும், கடற்கரையோரங் களிலும், ஆன்மீகப் பாரம்பரியங்களுடன் மக்கள் ஆங்காங்கே வாழ நேரிடும். அம்மக்களுக்கு இந்தத் தீர்வு ஏற்புடையதாக இருந்தாலும், பெண்ணுரிமைப் பேசும் உலகம் அதனை ஏற்றுக் கொள்ளாது. அமெரிக்கா வெற்றி பெற்றால், பௌதீகத்தேவைகளிலும், பொருட்களிலும், சொத்துக்களிலும், நுகர்விலும், இராணுவத்தினால் பாதுகாக்கப்படும் விற்பனை அங்காடிகளிலும் ஆதிக்கம் செலுத்தும்.

சுதந்திர வர்த்தகம் சமுதாயத்தின் அடிமட்டத்தில் உள்ளோரின் உணவு மற்றும் உடல் நலத் தேவைகளை பூர்த்திச் செய்யத் தவறுவதால், படுகொலைகள் நிகழ ஏதுவாகிறது. இதை எதிர்ப்போர் பாதுகாப்பு என்றப் பெயரில் கொல்லப்படுகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு, உலகமயமாக்கல் இல்லாத பகுதிகளை உருவாக்கி, தனியார் மயமாக்கலுக்கும், பணமயமாக்கலுக்கும் தயாராக இல்லாத அல்லது விரும்பாத மக்களை அவர்கள் போக்கில் விடுவதுதான்.

“நேர்மறை கடந்து செல்லல்” மதங்களின் நேர்மறை அம்சங்களையும், வர்த்தகத்தின் நேர்மறை அம்சங்களையும் ஒன்று சேர்த்து, மனிதர்களை இணைப்பதாகவே இருக்கும். மதங்களின் தீமைகளையும், வர்த்தகத்தின் தீமைகளையும் நீக்கி, உயிர்வாழ்தல், நல்வாழ்வு, சுதந்திரம் மற்றும் அடையாளத்திற்கான அடிப்படைத் தேவைகளையும் மேம்படுத்துவதுதான் சிறப்பு.

தகராறு கட்சிகள் மற்றும் தகராறு கள்வர்கள்

தகராறுகளை எப்படி திறம்படக் கையாள்வது அல்லது தீர்வு காண்பது என்பது பற்றியே பல தகராறுகள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்று உட்கட்சிகளுக்கும் வெளிக்கட்சிகளுக்கும்

இடையே உள்ள ஒரு வேறுபாடு. உட்கட்சிகள் தங்களால்தான் ஒரு தகராறைத் திறம்படக் கையாள முடியும் என வாதிடுகின்றனர். உண்மையான பிரச்சினை என்ன என்பதைத் தெரிந்தவர் களுக்குத்தான் அதற்கு எது தீர்வாக அமையும் என்று கணக்கிட முடியும் என்பது பலர் கருத்து. வெளியிலிருந்து வந்து தகராறைத் தீர்க்க முயலுபவர்கள், உண்மையான கட்சிகளிடமிருந்து அதை திருடிச் செல்லவே முயலுகிறார்கள் என்பார்கள். ஆனால் வெளிக்கட்சிகளோ தகராறுகள் வெளியாட்களாலேயே திறம்பட புரிந்து கொள்ளப்பட முடியும் காரணம், உட்கட்சிகள் குறுகிய பார்வையுடனையே இருப்பார்கள் என்கிறார்கள். வேகமாக சுருங்கிக் கொண்டிருக்கும் உலகில், தகராறுகள் அனைவரையும் உள்ளடக்குகின்றன என்பதுதான் உண்மை. உட்கட்சிகள் தங்களது உணர்வுகளாலும், இயலாமையாலும், திறமையின்மையினாலும் பாதிக்கப்படுகிறார்கள் எனக் கூறலாம்.

மேற்கண்ட இரு வாதங்களுமே நியாயமானவை. தனி மனிதருக்கிடையே எழும் தகராறு முதல், நாகரீகங்களுக்கிடையே எழும் தகராறு வரை உற்று நோக்கினால், தகராறு சக்தி வெளிக் கட்சிகளுக்கே அதிகம் இருப்பதைக் காண முடியும். வல்லரசுகள் தாங்கள் தான் பெரும் தகராறுகளைத் தீர்க்க முடியும் என நினைக்கின்றனர். இப்பேரரசுகள் சுயாட்சி பற்றிய தகராறுகள் தம்மிடையே உள்ள சிறுபான்மை இன மக்களைத் தூண்டலாம் என்றும், தற்போதைய உலகின் அஸ்திவாரமாக திகழும் நாடுகளின் இறையாண்மைச் சரிந்துவிடக் கூடாது என்றும் நினைக்கின்றனர். இராணுவ முகாம், சந்தைகள் என தமக்குத் தேவையானவற்றை தகராறுத் தீர்வுகள் வழியாக எடுத்துக் கொள்ளலாம் என்றும் நினைக்கின்றன. வன்முறையை தொடரச்செய்து, உட்கட்சிகள் வெளிக்கட்சிகளிடம் உதவிகோரச் செய்து தமது முக்கியத்துவத்தை நிலைநிறுத்துகின்றன.

இரண்டு கட்சிகளின் வாதங்களுமே சரியானவைதான். வெளிக்கட்சிகள் தகராறை மாற்றி அமைப்பதற்கு பதிலாக தங்கள் சுயலாபத்திற்காக தவறான திசையில் திருப்பி விடுகின்றன. உட்கட்சிகள் தனித்து ஒரு தகராறை மாற்றியமைக்கவோ, கடந்து செல்லவோ இயலாது என்பதும் உண்மை. உட்கட்சிகளுக்கிடையே படைப்பாற்றலின் மூலம் கடந்து செல்லலை சாதிக்க முடியும். பேச்சு வார்த்தைக்கான சூழ்நிலை சாதகமாக இருந்து, தகராறு கட்சிகள் அதிக விரோதம் காட்டாமல்

இருந்தால், “நேரடி மென் முறை பேச்சுக்கள்” பலன் அளிக்கலாம். ஆழமான உணர்வுகளும், அழிவுசக்தியில் அதிகம் கவனம் செலுத்துவதும் பெரும் பிரச்சனைகளாகவே இருக்கின்றன. தகராறுகளை திசை திருப்பாத, திருடிச் செல்லாத வெளிக்கட்சிகளே தேவை. தகராறு கட்சிகளுக்குள் கருத்துப் பரிமாற்றங்களை உருவாக்கி, படைப் பாற்றலை ஊக்குவித்து, தீர்வு காணவே டிரான்செண்ட் முயல்கிறது. சமாதான சேவகர் தீர்வுநோக்கி நடத்தி செல்வதிலும், தகராறு கட்சிகள் ஒருவரையொருவர் நேர்மறையாகக் கண்ணுறுவதற்கும் உதவுகிறார். கட்சிகள் தாங்களேக் கண்டுபிடிக்காத புதுவிதத் தீர்வினை முன்மொழிய தயங்குகிறார். புதிய கருத்துக்களைத் தெரிவித்து, ஊக்குவித்து, தமது விருப்பு வெறுப்புகளை அழுத்திச் சொல்லாது, ஒரு கேள்விக் குறியுடனேயேக் குறிப்பிடுகிறார். தீர்வினைப் பறைசாற்றுவதைவிட, தேடல் மிகுந்த கருத்துப் பரிமாற்றங்களே உபாயமாக அமையும். தகராறு தீர்க்கும் செயல்முறையை ஆக்கிரமிக்காது, ஊக்குவிப்பதே குறிக்கோளாயிருக்க வேண்டும்.

தகராறுக் கட்சிகள் சமரசம் செய்பவரோடு தனியாக மனம் விட்டுப் பேசிய பின்னரே இறுதிகட்ட பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும். சமாதான சேவகரின் பணி தகராறு கட்சிகள் அவர்களின் நிலைப்பாடுகளை விட்டுவிட்டு விலகிச்செல்ல வைப்பதல்ல. எந்தவித படைப்பாற்றலுமின்றி, யதார்த்தத்தை மாற்றி அமைக்கும் புதினங்கள் ஏதுமின்றி, ஒரு வெற்று சமரசத்தை உருவாக்கிக் கொள்வதை தவிர்ப்பதுதான். சமாதான சேவகர் இரண்டு கட்சிகளின் நிலைப்பாடுகளையும் தெரிந்து, அவர்களின் இலக்குகளுக்கு இடையே பாலம் கட்டுவதாய் அமையும், “நேர்மறை கடந்து செல்லலையோ” அல்லது இரு கட்சிகளின் இலக்குகளையும் நிராகரிக்கும் “எதிர்மறை கடந்து செல்லலையோ” ஆமோதிப்பார். சமாதான சேவகரின் கடமை புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் கட்சிகள் அடைந்து, ஒரு புதிய துவக்கத்தை உருவாக்கி, அதனில் தங்களது இடங்களைத் தாங்களே தீர்மானித்து கொள்ள உதவுவதும், உற்சாகப்படுத்துவதும்தான். அனைத்துக் கட்சிகளின் இலக்குகளையும் அவற்றிற்கான காரணங்களையும் புரிந்து, படைப்பாற்றல் மற்றும் அஹிம்சை வழி அனைவருக்கும் ஏற்புடைய “நீடித்த நிலைத்த தீர்வினை” ஏற்படுத்துவதே குறிக்கோள். இதற்காக தேவையற்றப் பழமைக் கைவிடப்பட

வேண்டும். வன்முறையின் தாக்கங்கள் இருந்தால், அவை தவிர்க்கப்பட வேண்டும். அந்த இடத்தில் எழும் புதுமை பயமுறுத்தும் அளவிற்கு ஏற்கத் தயங்கும் விதத்தில் புத்தம் புதியதாகவும் இருக்கக் கூடாது. இந்த புதிய பிறப்பு அன்பின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு தகராறிலும் ஏராளமான சக்தி புதையுண்டு இருக்கிறது. அதைக்கொண்டு அந்தத் தகராறை மேல் நோக்கி மாற்றியமைத்து, படைப்பாற்றலுக்கும் அஹிம்சைக்கும் இட்டுச்செல்லலாம். தகராறைக் கீழ் நோக்கி மாற்றியமைத்து, கோபம், வன்முறை போன்ற எதிர்மறை உணர்வுகளுக்கு இட்டு செல்லக் கூடாது. சிசிலியின் (Sicily) காந்தி டேனிலோ டோல்சி (Danilo Dolci) கூறியது போன்று, மேற்கண்ட சமாதான பிறப்பின் தாதியாக சமாதான சேவகர் பணியாற்ற வேண்டும்.

காந்தியின் அஹிம்சை

சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud) எனும் மனோதத்துவ நிபுணர் தகராறுகள் நமக்குள்ளிருந்து எழுவதாகச் சொல்கிறார். கடவுளுக்கும், சாத்தானுக்கும் நிகழ்கின்ற போட்டியாக அன்றி, நமது உளத் தேவைகளுக்கும், வெளியிலிருந்து திணிக்கப்படும் கொள்கைகள், கோட்பாடுகளுக்குமிடையே நடக்கும் ஒரு போராட்டமாகவேக் கருதினார். நமது ஆழ்மனதில் பதிந்திருக்கும் இந்தப் போராட்டத்தின் வரலாற்றுச் சுவடுகளை அழிக்கும் போதுதான், நமது உள்மனத் தகராறுகளை திறமையாகக் கையாள முடியும்.

காரல் மார்க்ஸ் (Karl Marx) இரு வகுப்பாரிடையே உள்ள உறவுகளில் தகராறுகள் தொக்கி நிற்பதைக் கண்டார். ஹேகல் (Hegel) குறிப்பிட்டது போன்று நிலக்கிழாரும் அவரது அடிமைகளும் ஒருவரோடொருவர் எப்படி கலந்துறவாடுவது என்பதல்ல கேள்வி. மாறாக இந்த உறவினை எப்படி மாற்றியமைப்பது என்பதுதான் முக்கியம். நமது சமூகத்தின் சமூகக்கட்டுமானங்களை மொத்தமாக சுத்தப்படுத்துவதன் மூலமே, நமது சமூக தகராறுகளைத் திறம்படக் கையாள முடியும்.

மண்டேலா மற்றும் டிகிளார்க் ஆகியோர் வன்முறையினை உருவாக்கிய தகராறுகள் மீது கவனம் செலுத்தினர். உண்மை மற்றும் மீளிணக்கத்தின் மூலம் குற்றம் புரிந்தவர் பாதிக்கப்பட்டவர் உறவை சுத்தம் செய்துதான் எதிர்காலத்தை

உன்னதமானதாக ஆக்க முடியும். மேற்கத்திய நீதித்துறைக்கு அருமையானதோர் மாற்றத்தை அவர்கள் கண்டுபிடித்தார்கள்.

காந்தி தன் வாழ்நாள் முழுவதும் பெண்ணுக்கெதிரான வன்முறைகள் மறைய, இனவெறி மற்றும் சாதியத்திற்கு எதிராக, தொழிலாளர் விவசாயி உரிமைகளுக்காக, கிராமத்தவர் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே சமாதானம் மற்றும் மீளிணக்கம் பிறக்க அயராது பாடுபட்டார். ஆங்கிலேய மேற்கத்திய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுயாட்சிக்காக அல்லலுற்றார். ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திற்கும், சுயாட்சிக்கும் இடையேயான முரண்பாடுகளை பஞ்சாயத்து ராஜ்ஜியம் மற்றும் ராமராஜ்யம் எனும் கோட்பாடுகள் மூலம் மாற்றியமைத்தார். இப்படியாக சிறு, குறு, பெரும், மாபெரும் தகராறுகள் அனைத்தையுமே திறம்படக் கையாண்டவர் காந்தி. காந்தியின் பிரச்சினை மனித உயிர்களைப் பாதுகாத்து, அதே நேரத்தில் தனக்குள்ளும், மற்றவர்களுக்குள்ளும், சமூகங்களிலும், அரசுகள், தேசங்கள், நாகரீகங்கள் இவை அனைத்திலுமே உள்ள தீமைகளை எப்படி எதிர்ப்பது என்பதுதான். மனித சமூகத்தின் அனைத்து அங்கங்களிலுமே நன்மையும், தீமையும் விரவிக் கிடக்கின்றன. மனிதனை முழுக்க நல்லவனென்றும், அல்லது முற்றிலுமாக தீயவனென்றும் அல்லது இவற்றிற்கிடையேயுள்ள நிலைகளிலும் பார்க்கலாம். ஆனால் காந்தியின் "நேர்மறை கடந்து செல்லல்" அஹிம்சை என்பது தான். அது அநியாயத்துடன் ஒத்துழையாமை, மனித நலத்தினைப் பேணுதல் போன்ற அம்சங்களைக் கொண்டது. உதாரணமாக, காலனி ஆதிக்க ஆங்கிலேய அதிகாரிகளோடு ஒத்துழைக்க மறுத்த அவர், மனிதநேய அடிப் படையில் அவர்களோடு உறவாடினார். ஆங்கிலேயத் துணிகளை புறக்கணித்த அவர், அவ்வியாபாரிகளின் குடும்பங்கள் பாதிக்கப்படாதிருக்க நிதி திரட்டி உதவினார்.

அடக்குமுறை ஏற்பாடுகளுக்கு எதிராக போராடும் அதே நேரத்தில், மனித அடிப்படைத் தேவைகளை வன்முறையிலிருந்து பாதுகாத்து, எதிர்த்தரப்பாரின் நியாயமான தேவைகளுக்கு ஆதரவு அளிப்பதுதான் அவரது கொள்கை. 'தீங்கு' 'தீயவர்கள்' போன்ற வார்த்தைகளை எதிர்கட்சி மீது உபயோகப்படுத்துவதால், எதிர்தரப்பை, அவர்தம் சிந்தனைகள், செயல்பாடுகள் அனைத்தையுமே மோசமானவையாக எடுத்துக் காட்டுகிறோம்.

அந்தத் தீமையை ஒழிக்க அத்துமீறிய அனுமதி கொடுக்கிறோம். நம்மை நல்லவர்கள் என்று கொள்வதன் மூலம், கடவுள் தகுதிக்கு உயர்த்தி விடுகிறோம். மேற்கத்திய கலாச்சாரம் இந்த மனப்பாங்கை ‘யதார்த்தம்’ என்று சொல்லி, காந்தியைக் ‘கனவுலகவாதி’ என்று முத்திரைக் குத்துகிறது. யார் யதார்த்தவாதி? ஆதிக்கத்தை எதிர்த்து, அதே நேரம் ஆதிக்கம் புரிபவரை பாதுகாத்து, தனது குறைபாடுகளைத் தெரிந்து, அவற்றைக் களைய வாழ்நாள் முழுவதும் உழைத்தவரா? அல்லது அடக்குமுறை, சிறைவாசம் என வன்முறையை நம்பிய காலனியாதிக்கத்தவரா?

காந்தி சத்தியாகிரகத்தையே உபயோகித்தார். அவரைப் பொறுத்தவரை உண்மை, அன்பு, கடவுள் அனைத்தும் ஒன்றாகவே தோன்றின. உண்மை என்பது அவரது கொள்கையையும், அன்பு என்பது எதிர்தரப்போடு உள்ள உறவினையும், கடவுள் என்பது நம் அனைவரையும் ஒரே மனித நேயத்துக்குள் பிணைப்பதுமாய் தோன்றின. தகராறு தனது வாழ்க்கைத் துணையோடு ஆனாலும் சரி, இன்னொரு வகுப்பு அல்லது இன்னொரு நாட்டோடு ஆனாலும் சரி, வன்முறையை முற்றிலும் தவிர்ப்பதுதான் சிறப்பு. மற்றவரைத் துன்புறுத்துவதன் மூலம் நம்மையே நாம் துன்புறுத்துகிறோம்; காரணம் நாம் அனைவருமே ஒரே மனித சமூகத்தின் பல அங்கங்கள். ஒருவரை தீர்த்துக் கட்டுவதன் மூலம் அவரது இலக்குகளை அடைய முடியாமல் செய்துவிடலாம். ஆனால் அடிமட்டத்தில் உள்ள முரண்பாடுகள் உங்கள் இருவர் காலங்களையுமே கடந்து நிற்கும் தன்மையன.

கத்தோலிக்க கிறிஸ்தவம் பாவம், பாவம் செய்தவர் என தெளிவாகப் பிரிக்கிறது. சிந்தனை, பேச்சு, செயல் என அனைத்திலுமான பாவம் நிராகரிக்கப்படுகிறது. பாவம் செய்தவர் தவறை உணர்ந்து, பிராயச்சித்தம் செய்து, செய்த பாவத்தை உதறித்தள்ள முற்படுவாரேயானால், அவர் மன்னிக்கப்படுவார். ஒதுக்கித்தள்ளுவது, மரணதண்டனை, கொலை, போர், தீவிரவாதம் மற்றும் அரசு தீவிரவாதம் இவற்றால் கொல்லப்படுவதைவிட மன்னிக்கப்படுவது மிகவும் சிறந்தது. நீதிமன்றங்களைவிட தேவாலயம் இதனைத் திறம்பட செய்கிறது. தவறு இழைத்த நபரைவிட, அவர் செய்த தவறைக் கையாள்வதே சிறந்தது. போராட்டம் பகையோடுதானே தவிர, பகைவரோடு

அல்ல; எதேச்சாதிகாரத்தோடே தவிர, ஏதேச்சாதிகாரியோடல்ல; முதலாளித்துவத்தோடே தவிர, முதலாளிகளுக்கு எதிராக அல்ல; தவறான கருத்துகளுக்கு எதிரே தவிர, அந்த கருத்துக்களைக் கொண்டிருப்போருக்கு எதிராக அல்ல என்பதை உணர வேண்டும்.

நேரடி வன்முறையை எதிர்க்கும் ஆனால், கட்டுமானச் சுரண்டலை எதிர்க்க மறுக்கும் தாராளவாதிகள்; கட்டுமானச் சுரண்டலை எதிர்க்கும் ஆனால் புரட்சிகர வன்முறையை ஆதரிக்கும் மார்க்சீயவாதிகள் போன்றோரை காந்தி அருமையாகக் கடந்து செல்கிறார். வன்முறை, சுரண்டல் போன்ற தீமைகளை எதிர்க்கும் காந்தி, 'சர்வோதயா' எனும் தனது கொள்கையின் மூலம் அனைத்து மனிதர்களையும் பாதுகாக்க முனைகிறார். மனித நேயத்திற்குள் நாம் அனைவரையும் ஒன்றாய் இணைப்பது கடவுள் என்றால், அந்தக் கடவுளின் செய்தியிலும் ஓர் ஒற்றுமை இருக்க வேண்டும். அப்படியென்றால் கடவுளும் அன்பும் ஒன்றாகி விடுகின்றன. கடவுளை இப்படி பார்க்கும் போது, ஒரு குறிப்பிட்ட மக்களை மட்டுமே தேர்ந்தெடுத்து, அவர்களோடு ஒரு குறிப்பிட்ட மொழியில் மட்டுமே கருத்துப்பரிமாற்றம் செய்து, மற்றவர்களை ஒதுக்கி வைக்கும் எதிர்மறைக் கடவுள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவராகிறார். காந்தியைப் பொறுத்தவரை, தள்ளிவைக்கும் கடவுள் தவறானவர். பகவத் கீதை, பைபிள், குரான் என அனைத்து மத நன்னூல்களிலிருந்து மிதவாத, வன்முறையற்றக் கருத்துகளை ஏற்றெடுத்து கடவுளை சேர்த்து வைக்கும் சக்தியாகவேக் கொண்டாடுகிறார். ஆங்கிலம், சமஸ்கிருதம், ஹிந்தி, உருது மற்றும் குஜராத்தி மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற காந்தி, மேற்கண்ட சர்வமதக் கூட்டுறவு என்னும் மாபெரும் பணிக்கு தகுதியானவராகிறார். வாழ்வின் ஒற்றுமை, மனிதத்தின் ஒற்றுமை, தாம் பகரும் செய்தியிலும் ஓர் ஒற்றுமையினைக் கொண்டிருந்தால், தகராறு கட்சிகள் ஒருவரையொருவர் புனிதமானவர்களாக, கண்ணியமானவர்களாகக் கருத முடியும். எனவே ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளாது, ஒன்றாய் சேர்ந்து, தமது முரண்பாடுகளை திறம்படக் கையாளலாம். ஒருவரையொருவர் தள்ளிவைக்கும் மதங்களை, கடினப் போக்குகளை ஒதுக்கிவிட்டு, அனைவரையும் ஒன்றாய் இணைத்து வழிநடத்தும் மென்மையான அம்சங்கள் வழி நடக்கும் காந்தி, மேற்கத்திய நாடுகளின் சர்வமத இயக்கங்களைவிட சாதுர்யமாக செயல்படுகிறார். "கடவுள் நமக்குள் இருக்கிறார்; நாம் அனைவரும் கடவுளுக்குள் இருக்கிறோம்" எனும் கூற்றுக்கள்

காந்தியைப் பொறுத்தவரை ஒரே தன்மையன. பன்மொழிப் புலமை கொண்ட காந்தி பலமதவித்தகர். அனைத்து மதங்களிலிருந்தும் கருத்துக்களை எடுத்துச் சேர்த்து உருவாக்கும் ஓர் அவியல் மதத்தை விட, மத வேறுபாடுகளை அழகாகக் கடந்து செல்கிறார். அவரின் எல்லைக்கோடுகள் மதங்களுக்கு இடையே செல்லவில்லை. மாறாக ஒவ்வொரு மதத்தின் கடினமான மற்றும் மென்மையான அம்சங்களுக்கு இடையேதான் செல்கிறது.

# 5

## ஆழ்கலாச்சாரம், ஆழ்செயல்பாடு, ஆழ்கட்டமைப்பு

ஒரு தகராறில் மாட்டியிருக்கும் ஒருவர் அந்த தகராறைப் பற்றிப் பேசும் போது ஒருவித கதைச் சொல்லலில் ஈடுபடுகிறார். அப்போது இலைமறைக் காய்மறையாக வெளியாகும் கருத்துக்கள் (undertext), வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள் (overtexts), சந்தர்ப்ப சூழ்நிலை உதவியுடன், அந்தக் கதையினை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக, அண்மையில் கோசோவோ நாட்டில் உள்ள அல்பேனிய மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவவேண்டும் என்ற வேண்டுகோள் எழுந்தது. அப்போது மறைமுகமாகச் சொல்லப்பட்ட கருத்து, இராணுவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு காஸ்பீயன் (Caspian) கடல் பகுதியிலிருந்து அட்ரியாடிக் (Adriatic) கடல் பகுதிக்கு எண்ணெய் குழாய்கள் போடுவதுதான். அதேபோன்று நேட்டோ அமைப்பு மற்றும் அமெரிக்காவிற்கு ஆதரவாக செயல்பட்டு, இவர்களுக்கு புதிய பொறுப்புக்களை வழங்குவது வெளிப்படைக் கருத்தாக இருந்தது. யூரேசியா பகுதியின்மேல் ஒரு கட்டுப்பாடு வைத்துக் கொள்வது சந்தர்ப்ப சூழ்நிலை அம்சமாக இருந்தது.

நேர்மையான பேச்சு என்பது மேற்கண்ட அனைத்துக் கூற்றுகளையும் உள்ளடக்கிய கதையாகத்தான் இருக்க முடியும்.

ஆனால் இன்றைய அரசு இயந்திரங்கள் நேர்மையின்மையையே தங்களது செயல்பாடுகளாகக் கொண்டிருக்கின்றன. ஒரு வெளியுறவுத் துறை அமைச்சரின் பேச்சு யதார்த்தத்தோடு ஒத்திருந்தால், அது தற்செயலாக நிகழ்ந்த ஒரு செயலாகத்தான் இருக்க முடியும். ஏனென்றால், இன்றையப் பேச்சுக்களெல்லாம் உண்மை நிலையை உரைக்காது, யதார்த்த தேவைகைளுக்கேற்றபடி திரித்தும், மறித்தும் உருவாக்கப்படுகின்றன.

நம்மைப் பொறுத்தவரை ஆழ்மனதில் உறைந்திருக்கும் ஆழமானக்கதைகள் (Deep texts) பற்றியே அறிய விரும்புகிறோம். நமக்குள் புதைக்கப்பட்டு, நமது பழக்க வழக்கங்களுள் ஒன்றிப்போன இந்த ஆழ்கதைகள்தான், நம்மை அறியாமலேயே நம்மை இயக்குகின்றன. இந்தப் புத்தகத்தில் ஒரு தகராறின் மூன்று அம்சங்கள் குறித்து நாம் விவாதிக்கிறோம். அவை மனப்பாங்கு, செயல்பாடு மற்றும் முரண்பாடு என்பன. இம்மூன்றைத் தவிர ஆழமான மனப்பாங்கு, ஆழமான செயல்பாடு மற்றும் ஆழமான முரண்பாடுகளும் நம்மில் இருப்பதாகக் கொள்ளலாம். இவைகள் பொதுவாக பேசப்படுவதில்லை. ஒரு தகராறைப் புரிந்து, மாற்றியமைத்து, கடந்து செல்ல இந்தப் புரிதல் மிக முக்கியம். சில சூழ்நிலைகளில் எப்படி நடந்து கொள்வது என்பதை தனிநபரின் மனப்பாங்காக மட்டும் அல்லாமல், ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில் உள்ள அனைவருக்குமே பொருந்தும் பொது நியதியாகவேக் கொள்ளலாம். மனிதகுலம் பல நாகரீகங்களாகவும், அவை பல கலாச்சாரங்களாகவும் பிரிக்கப்பட்டு, அவையனைத்தும் மனித விடயங்களைத் தத்தம் வழிகளில் காணுகின்றன. உதாரணமாக, சில கலாச்சாரங்களில் எல்லா உயிர்களும் புனிதமானவையாகப் போற்றப்படுகின்றன.

ஆழ் கலாச்சாரம் **(Deep Culture)**

உளவியலாளர் சிக்மன்ட் பிராய்ட் (Sigmund Freud) தனிமனிதனின் மனப்பாங்கிற்குக் கீழே, ஆழமான மனப்பாங்கு ஒன்று இருப்பதாகச் சொல்கிறார். காரல் யங் (Carl Jung) என்பவர் குழுக்களின் மனப்பாங்கிற்குக் கீழே, ஆழமான ஒன்றுபட்டக் குழுமனப்பாங்கு ஒன்று இருப்பதாகச் சொல்கிறார். இந்த ஆழ் மனப்பாங்குகளைத் தனிமனித ஆழ்மனம் என்றும், குழும ஆழ்மனம் என்றும் அழைக்கலாம். ஒரு குழுமத்தில் நிலவும் ஒரே மாதிரியான எண்ணப்பதிவுகள் அம்மனிதர்களைக் கிட்டத்தட்ட

ஒரே மாதிரியாக உருவாக்குகின்றன. இந்தக் குழும ஆழ்மனதை ஆழ்கலாச்சாரம் என்று நாம் அழைக்கலாம். இந்த ஆழ்கலாச்சாரம் தகராறுகள் பற்றிய மனப்பாங்குகளையும், செயல்பாடுகளையும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

அதாவது, ஒரு தகராறில் உள்ள கலாச்சார அம்சங்களை நாம் முக்கியமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஐபீரியன் (Iberian) தீபகற்பத்தில் எழுந்த, மூன்று மக்களை உள்ளடக்கிய அடையாளத் தகராறுகளை எடுத்துக் கொள்ளலாம். மட்ரீட் (Madrid) நகர் மற்றும் காஸ்டில் (Castile), பார்சிலோனாவை (Barcelona) மையப்படுத்திய கட்டலோனியா (Catalonia), பாஸ்க் (Basque) பகுதியை உள்ளடக்கிய யூஸ்காடி (Euskadi) எனும் மக்களின் இரண்டு தகராறுகளைப் பார்க்கலாம். இந்த இரண்டு தகராறுகளிலுமே, ஒரு கட்சியாக இருக்கும் காஸ்டில் மக்களின் ஆழ்கலாச்சாரத்தை முதலில் காண்போம்.

இடைநிலை காலகட்டத்தில் வாழ்ந்த (middle ages) நிலச்சுவான் தார்களின் சண்டையும் சச்சரவுமான ஆட்சிகலாச்சாரத்தில் தோய்ந்ததுதான் காஸ்டில் கலாச்சாரம். இந்த கலாச்சாரத்தின் இன்னொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் கவர்ந்திழுக்கும் சக்தி கொண்ட ஒரு பிரபலமானவர், அனைத்து அதிகாரங்களையும் பெற்று ஆட்சி புரிவது. யார் வெற்றி பெறுபவர் என்பதை மையப்படுத்தியே, தகராறுகள் தீர்த்துவைக்கப்படுகின்றன. இந்த ஆழ்கலாச்சாரத்தில் எந்தத் தீர்வானாலும் அதில் கடவுளின் நீதி தெளிவாகப் பேசுகிறது என்ற நம்பிக்கை முக்கியமானது. மேலும் தகராறு தீர்வுகளில் இரண்டு பார்வைகள் மட்டுமே அடங்கியிருக்கும். இந்த ஆழ்கலாச்சாரத்தை காளை அடக்குதலில் இன்றும் காணலாம். இந்தச் சண்டையில் இரண்டு கட்சிகளே உள்ளன. ஒன்று, முரட்டுக்காளை; இரண்டு, அடக்கும் வீரர். தீர்வுகளும் இரண்டாகவே இருக்கின்றன. ஒன்று, வீரர் காளையைக் கொல்வதும், காளை கசாப்புக்கடைக்கு அனுப்பப்படுவதும். இரண்டு, வெகுசில தருணங்களில் மட்டும் காளை வீரரைத் தாக்குவதும், வீரர் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்படுவதும்.

காளையும் வீரரும் சண்டையிட மறுத்து உட்கார்ந்து கொண்டால், இந்த பின்வாங்கல் தீர்வை, வீரரின் கோழைத்தனம் என்றே கொள்வோம். காளை காயப்படும் வரை மட்டுமே சண்டையிடுவது, பலவீனமானவர்களின் சமரசத் தீர்வாகவே

கருதப்படும். காளையும் வீரரும் ஒருவரோடொருவர் எதிரெதிராக மோதிகொள்வது ஒருவித தற்கொலைச் செயலாகவே அமையும். காளையும் வீரரும் சேர்ந்து நடுவரைத் தாக்குவது நடைமுறைக்கு ஒவ்வாத தீர்வு. இப்படியாக, காளையடக்குதல் ஒரு கலாச்சாரக் கதையினை சொல்கிறது. அதாவது காஸ்டில் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை, ஒரு தகராறில் இரண்டு கட்சிகளும், இரண்டு தீர்வுகளும் மட்டுமே இருக்க முடியும், அதுதான் இயற்கை என்று கருதப்படுகிறது.

இந்தக் காளை அடக்குதலில் காளையும், வீரரும் இருவருமே ஆண்வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால், சண்டை என்பது ஆண்களுக்குள்ளே நடப்பதாகக் கொள்ளப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்னால், மிகுந்த திறமையான ஒரு பெண் வீரர் காளையை அடக்க முயன்றபோது, கூச்சலிட்டு துரத்தப்பட்டார். இன்னொரு கலாச்சார செய்தி, கொடூரமான முரட்டுத்தன்மை கொண்ட சாத்தானின் நிறமான கருப்புக் காளையை, அழகான, கவர்ச்சியான ஓர் ஆண் அடக்குவதுதான். “மிருகத்திற்கு எதிராக மனிதன்” என்பது மட்டுமன்றி, “இயற்கைக்கு எதிராகக் கலாச்சாரம்” என்றும் இந்த சண்டை நோக்கப்படுகிறது.

அடுத்ததாக, காட்டலோனியாவை எடுத்துக் கொண்டால், அவர்களும் ஸ்பானிய மக்கள்தான். ஆனால் தகராறுகளைப் பொறுத்தவரை, வித்தியாசமான ஆழ்கலாச்சாரத்தைக் கொண்டிருக்கிறார்கள். சமரசத்தீர்வுகளே இங்கு பெரிதும் விரும்பப்படுகின்றன. இந்த ஆழ்கலாச்சாரத்தைப் பரப்புகின்ற வர்கள் வியாபாரிகள். பொருட்களை வாங்கி, விலைபேசி, பேச்சுவார்த்தை நடத்தி, விற்று லாபம் அடையப் பார்க்கும் இவர்களது கலாச்சாரத்தில், மிரட்டலுக்கோ, பலவந்தத்திற்கோ இடமேயில்லை. இரு தரப்புமே வெற்றியாளர்களாக வெளியே வரும் இவர்கள் வணிகத்தில், தற்காலிக பின்வாங்கல்கள் இருக்கலாமேயொழிய, பகுத்தறிவே மிஞ்சி நிற்கிறது. இனி, பாஸ்க் மக்களை எடுத்துக் கொள்வோம். இவர்கள் ஸ்பானிய அரசிற்கு எதிராக கார்குண்டுகளை வெடித்து, கடுமையாகப் போராடி வருபவர்கள். இவர்களது கலாச்சாரம், வன்முறையுடன் சுதந்திரத்திற்காக எதிர் துருவமாக இருந்து போரிடும் கலாச்சாரம், தகராறுக்கட்சிகள் கோடிமுனை நிலைகளையேப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும், பின்வாங்குவது கோழைத்தனம் என்றும், சமரசம் செய்து கொள்வது துரோகச்

செயலென்றும் நினைப்பவர்கள்.

“கடந்து செல்லல்” என்பதற்குத் தேவை, படைப்பாற்றல் மட்டுமல்ல எதிர்கட்சியின் நியாயத்தினையும் புரிந்து கொள்ள முயல்வதுதான். தகராறு கலாச்சாரத்தின் மேல் ஆழ்கலாச்சாரம் கொண்டுள்ள இறுகலானப் பிடியே தீர்வுக்கான தடைகளாக இருக்கின்றன. ஆழ்கலாச்சாரத்தைப் பற்றிய விழிப்புணர்வு, ஒரு தகராறைத் திறம்படக் கையாள மிகவும் உதவும்.

பாஸ்க் பகுதிக்கும், கட்டலோனியாவிற்கும் இடையே பிறனீஸ் (Pyrenees) மலைப்பகுதியிலுள்ளது அன்டோரா (Andorra) எனும் சிறிய நாடு. பல நூற்றாண்டுகளாக இந்த நாடு பிரஞ்ச் அதிபராலும், ஸ்பெயின் நாட்டிலுள்ள செயோதெ உர்ஹெல் (Seode Urgel) என்னும் நகரத்தின் பிஷப்பாலும் ஆளப்பட்டது. இன்று ஐ. நா. சபையின் அங்கத்தினராகி இந்த நாடு சுதந்திரமாக இயங்கி வருகிறது. பாஸ்க் மக்களுக்கு ஒரு சிறந்த உதாரணமாக இந்த நாடு விளங்கி வருகிறது. தகராறுக் கலாச்சாரம் மிகவும் இன்றியமையாதது என்பதற்கு இன்னொரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம்.

தங்களை கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களென்றும், தங்களுக்கு உன்னதமான வரலாறும், எதிர்காலமும் உண்டு என்றும், தாங்கள் எண்ணிலடங்கா துன்பங்களையும் துயரங்களையும் அடைந்திருக்கிறோம் என்றும், ஒருவித அடிப்படை எண்ணவோட்டத்தினை சில கலாச்சாரங்கள் கொண்டிருக்கின்றன. பல குறுந்தகராறுகளிலும் மற்றும் பெருந்தகராறுகளிலும், மேற்கண்ட மனநிலை மேலோங்கி நிற்பதைக் காணலாம். ஒரு தனிமனிதன், தான் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்றும், எதிர்காலத்தில் பெரும் புகழ்வரப் போகிறது என்றும், உண்மையான அல்லது கற்பனையான பல காயங்கள் தம்மை பாதித்திருப்பதாகவும் கருதும் போது, அம்மனிதன் மமதையாலும், பீதியினாலும் துன்புறுவதாகவேக் கருதப்படுவான்.

மனநோய் மருத்துவம் செய்யப்பட வேண்டிய நிலையும் வரலாம். ஆனால் ஆளும் வர்க்கத்தினரிடையே, இந்தமாதிரியான மனப்பேய் தேசப்பற்று என்றும், தாய்நாட்டின் மீதான அன்பு என்றும் போற்றப்படுகிறது. இந்த ஆழ்கலாச்சாரம் பெரும் பிரச்சினைகளை உருவாக்குகிறது. இத்தகைய மனப்போக்கினைத்

தனது ஆழ்கலாச்சாரத்தில் கொண்டிருக்கும் ஆதிக்க சிந்தனை பெற்ற மக்களின் அரசு இயந்திரம், பிறமக்களை அடிமைப் படுத்துவதாகவே இருக்கும்.

வளைகுடாப் போரை எடுத்துக்கொண்டோமானால், ஈராக் நாட்டின் பெடுவின் (Bedouin) கலாச்சாரம் ஒரு முக்கியமான அம்சம். போரில் வெற்றிபெறுவதும், தனது இலக்குகளை எந்த வழியிலாவது அடைவதும், இதை நடக்கவிடாமல் எதிரி தடுப்பதைத் தவிர்ப்பதும் இந்த கலாச்சாரத்தின் முக்கிய அம்சங்கள். 1991ஆம் ஆண்டு நடந்த வளைகுடாப் போரில் குவைத் நாடு விடுவிக்கப்பட்டு, அமெரிக்கர்கள் தமது வெற்றியைக் கொண்டாடினார்கள். 1991 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஈராக்கியர்களும் தங்கள் வெற்றியினைக் கொண்டாடினார்கள்.

இரு அணிகளுமே எப்படி போரில் வெற்றியடைய முடியும்? இரண்டும் வெவ்வேறு கலாச்சாரங்களால் வரையறுக்கப்பட்டப் போர்களை நடத்தியதால், இரு அணிகளுமே வெற்றியைக் கொண்டாடின. அமெரிக்கத் தலைமையிலான அணி ஒரு நவீனப் போரை நடத்தி வெற்றி பெற்றது. ஈராக் நாடு தமது ஆழ்கலாச்சாரத்தில் வேரூன்றிய ஒரு பாரம்பரியப் போரை நடத்தி வெற்றி பெற்றதாகக் கருதியது. அவர்களைப் பொறுத்தவரை, இராணுவ வெற்றியுடன், தங்களது வீரத்தைக் காண்பிப்பதும், பெருமையும், கண்ணியமும் பெறுவதையும் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர்.

இராணுவ வெற்றி கிடைத்தாலும் கிடைக்காமல் போனாலும், மற்ற மூன்றும் பெரும் வெற்றிகளாக அவர்களுக்குத் தோன்றின. எதிர்த்தரப்பில் அதிகமான நாடுகளும், அதிகமான வீரர்களும், அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களும் இருக்கும் போது, அதிக வீரத்தைக் காட்டி, அதிக பெருமையையும், அதிக கண்ணியத்தையும் பெறலாம் என்பது இவர்களது நிலை. இந்த கலாச்சாரப் பார்வையில், ஈராக், செர்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் ஆயுதம் ஏந்தாத அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவிக்கும் நவீனப் போர்வீரர்கள் கோழைகளாகவேக் கருதப்படுகின்றனர். இப்படியாக, தகராறு செயல்பாட்டின் பின்னணியில் ஆழ்கலாச்சாரம் முக்கியமான அம்சங்களுள் ஒன்றாக திகழ்வதைக் காணலாம்.

ஆழ்கலாச்சாரத்தில் இன்னொரு அம்சமாக உள்ளது, இருமை

(dualism). அதாவது தர்மம், அதர்மம் எனும் இரண்டுக்கு இடையேயானப் போட்டி, இறுதிப்போர், பைபிளைப் பொறுத்தவரை, உலகில் நன்மை தீமை என இருசக்திகள் இருக்கின்றன. கடவுளும், சாத்தானும் தலைமை தாங்கும் இந்த இரு அணிகளுக்கிடையே, தீர்க்க முடியாத கருத்து வேறுபாடுகள் இருப்பதால், ஓர் இறுதிப்போர் எழுந்தே தீரும் எனக் கூறப்படுகிறது. தகராறு கலாச்சாரத்தை இணைத்துப் பார்த்தால், பின்வாங்குதல், சமரசம், கடந்து செல்லல் போன்றவை அர்த்தமற்றவைகளாகத் தோன்றும். இறுதிப் போர் மட்டும்தான் இந்த தகராறின் ஒரே கடந்து செல்லலாக அமையும். யூதமதம், கிறித்தவம், இஸ்லாம் மூன்று மதங்களுமே இதே சிந்தனையோட்டத்தைக் கொண்டிருக்கின்றன.

நீ அல்லது நான் என எதிரெதிராய் பார்க்கும் இந்த பார்வையில், இறுதி முடிவை எடுப்பது வன்முறைதான். இந்த மூன்று மதங்களின் அடிப்படைவாதிகளானாலும் சரி மதச்சார்பற்றவர்களானாலும் சரி, இந்தத் தகராறு கலாச்சாரத்தை மாற்றியமைப்பதைத் தடுக்கவே முனைவார்கள். இதே போன்று, இரு துருவங்களாக நிற்கும் இரண்டு அணிகள், தம்மைப் பற்றி நன்றாக மட்டுமே பேசிக் கொண்டு, எதிர்தரப்பைப் பற்றி மோசமாகவே பேசும் நிலையில், அந்த தகராறு நீண்ட நெடிய ஒன்றாகவே இருக்கும். இந்த இருமைப் பார்வையினால் ஏற்கனவே ஒரு துருவத்திற்கு தள்ளப்பட்டிருப்பவருக்குத் தேவை ஒரு எதிரி மட்டுமே. எதிரி கிடைத்து விட்டால், ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து, ஒரு நீண்ட நெடிய தகராறுக்குள் தம்மை திணித்து கொள்வார்கள்.



இந்த இருமைப்பார்வையினால், எதிர்கட்சி மனிதப் பண்புகளற்ற, ஒரு கொடிய மிருகமாக பார்க்கப்படுகிறது. இத்துருவமயமாக்கல், அம்மிருகத்தின் மீது வன்முறை இழைப்பதை, விரைவுபடுத்துகிறது. எதிரியான அந்த தீய சக்தி தனக்கு எதிராக வன்முறை இழைக்கும் போது, அச்செயல் தனது நல்லியல்பினை உறுதிபடுத்துவதாகவே கொள்ளப்படுகிறது. எதிர்தரப்பு ஒரு தீய சக்தியாக கொள்ளப்படும் போது, அவரது இலக்குகளைப் புரிந்து கொள்ளும் தேவைக்கே இடமில்லாமல் போகிறது. அந்த தீய சக்திக்கு, ஒரு குரலோ, முகமோ கொடுப்பது தவறாகப்படுகிறது. இப்படி ஒதுக்கித்தள்ளுவதால், அவர் நீதிக்கு புறம்பாகி, வன்முறையில் இறங்கும் போது, அது நமக்கு ஏற்கனவே தெரிந்த “உண்மையை” உறுதிபடுத்துவதாகக் கொள்ளப்படுகிறது. அவர் ஒரு தீய சக்தியேதான் என முடிவு செய்து விடுகிறோம். இப்படியாக, ஒரு மோசமான, பிரச்சினைக்கிடமான தகராறு சுழற்சி உருவாக்கப்படுகிறது.

## ஆழ்செயல்பாடு (Deep Behaviour)

எங்கோ ஆழத்தில் தூங்கிக் கிடக்கும் இந்த ஆழ்செயல்பாடு, உரிய நேரத்தில் மேல்நோக்கி வருகிறது. அடிப்படைத் தேவைகளில் இருந்து எழும் செயல்களில், ஆழ்செயல்பாட்டினை காணமுடியும். 1970துகளில் ஒரு சோவியத் அதிகாரியுடன் இராணுவ கொள்கைப் பற்றி நூலாசிரியர் பேசிக்கொண்டிருக்கும்போது, அவர் நூலாசிரியரின்

கைகடிகாரத்தை உற்றுநோக்குவதைக் கவனித்தார். சற்று நேரத்திற்கு பிறகு, அடக்கமுடியாத அந்த அதிகாரியின் கேள்வி வெளிவந்தது. "அந்தக் கைகடிகாரத்தை எங்கே வாங்கினீர்கள், அது என்ன விலை" என்று கேட்டார். அப்போதுதான் வெளிவந்திருந்த டிஜிட்டல் கைகடிகாரம் அது. அந்தக் கைகடிகார ஈடுபாடு அவ்வதிகாரியின் அடையாளத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை நூலாசிரியர் உணர்ந்தார். மேற்கத்திய நாடுகளில் பிரபலமாக இருந்த அந்தக் கைகடிகாரம் சோவியத் அதிகாரியை கவர்ந்ததில் வியப்பு ஏதும் இல்லை. இதயத்தில் நிறைந்திருப்பதை வாய் எப்போதாவது வெளியே சொல்லிவிடும் என்பது மிகவும் உண்மை.

ஆழ்செயல்பாடு மேலோட்டச் செயல்களை பாதிக்கிறது என்பதும் உண்மை. ஆழ்செயல்பாடு தாரிட்ட சாலைக்கு கீழே இருக்கும் விதை போன்று, வெடித்து வெளிக் கிளம்புவது இயல்பு. ஆனால் வன்முறை ஆழ்செயல்பாட்டின் அடிப்படைத் தேவையாக அமைய முடியாது. அப்படி இருந்திருந்தால், நம்மைச்சுற்றி இன்னும் பெரிய அளவில் வன்முறைகள் நிகழ்ந்திருக்கும். துருவமயமாக்கல் ஒருவரை செவிமடுக்கும் தன்மையற்றவராகச் செய்வதால்தான், இருமைப்பார்வையால் வன்முறை எழுகிறது. சமாதானத் தீர்வு வேண்டுமென்றால், கருத்துப் பரிமாற்றம் மிகவும் இன்றியமையாதத் தேவையாகிறது. ஒரு தகராறினைக் கடந்துசெல்லலின் முக்கிய அம்சங்கள் என்னவென்றால், அனைத்து தகராறுக் கட்சிகளின் தரப்பு வாதங்களை கேட்பது அவர்களை மதிப்பது மற்றும் அவர்களைப் பேசவிடுவதுதான்.

## ஆழ் கட்டமைப்பு **(Deep Structure)**

ஆழ்கட்டமைப்பில் ஆழமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. உற்பத்தித் திறன் கொண்டோர் மற்றும் இல்லாதார் எனும் பொருளாதார வகுப்புகளுக்கு இடையே உள்ள முரண்பாட்டின் உதவியோடு, சமுதாய கட்டமைப்பைப் புரிந்து கொள்ள காரல் மார்க்ஸ் முயன்றார். இதைப் போன்று இதர முரண்பாடுகளையும் உற்றுநோக்கி, சமூக நிலநடுக்கங்களை உருவாக்கும் நிலஅடுக்குகளைப் பார்ப்போம் (அட்டவணையைக் காண்க). கட்டுமான வன்முறைகளைத் தாங்கி நிற்கும் பல முரண்பாடுகளை இதில் காணலாம்.

அட்டவணை

ஆழ்கட்டுமானத்தின் முரண்பாடுகளைச் சார்ந்தே, தகராறு களைப் புரிந்து கொள்ள முடியும். உதாரணமாக, தம்மோடும் தமது சூழ்நிலைகளோடும் பெரும் பிரச்சினைகளை சந்தித்த, மனநலம் பாதிக்கப்பட்டப் பெண்களை ஆய்வு செய்த பிராய்டு (Freud) அவர்களின் ஆத்மாக்களின் ஆழ்கட்டமைப்பினை உற்று நோக்கினார். ஆனால் அப்பெண்கள் வாழ்ந்த சமுதாயத்தின் ஆழ்கட்டமைப்பினை அவர் பார்க்கவில்லை. இளம் பெண்கள் தங்கள் பதினைந்தாவது வயது வரை மட்டுமே கல்வி கற்பிக்கப்பட்டார்கள். பின்னர் தையல் கற்றுக் கொள்வதும், திருமணம் செய்து கொள்வதும் தான் அவர்களின் தலையெழுத்து என்று இருந்தது அச்சமுதாய நிலை. ஆனால் அவளின் சகோதரன் தகுதி குறைந்தவனாய் இருந்தாலும், தொடர்ந்து கல்வி கற்க இயன்றது. திருட்டுத்தனமாய் அவன் அறைக்குள் புகுந்து, அவர்கள் பெற்றோர் தூங்கும்போது, அவனது புத்தகங்களைப் படிக்க வேண்டிய நிலையிலிருந்தனர் இளம்பெண்கள். அறிவுவழி அடையாளம் பெறும் முயற்சியை ஆண்கள் மத்தியில் தடுத்திருந்தால், அது பெரும் வன்முறைக்கு வழிகோலியிருக்கும். ஆனால் பெண்களோ, அந்த வன்முறையை தம் மேலேயேத் திணித்துக் கொண்டனர். பிராய்ட் அதைத்தான் ஹிஸ்டீரியா (hysteria) என்னும் மனநோய் என்று அழைத்தார்.

| நில அடுக்கு | தனிநபர் நிலையில் | அரசுகள் நிலையில் |
|---|---|---|
| இயற்கை | வீணாக்குதல், நாசமாக்குதல் | வீணாக்குதல், நாசமாக்குதல் |
| பால் | ஆதிக்கம் | ஆதிக்கம் |
| தலைமுறை | முதியோர், நடுத்தரம், இளைஞர் | முதியோர், நடுத்தரம், இளைஞர் |
| இனம் | வெள்ளையர், மற்றவர் | வெள்ளையர், மற்றவர் |
| வகுப்பு | அதிகாரமுற்றோர், அதிகாரமற்றோர் | அதிகாரமற்றோர் அதிகாரமுற்றோர், |
| சமூக வாழ்வு | இயல்பானோர், | இயல்பானோர், |

| | | |
|---|---|---|
| | எதிமறையானோர் | எதிமறையானோர் |
| மக்கள், நாகரீகங்கள் | மேலை நாடுகள், மற்றோர் | மேலை நாடுகள், மற்றோர் |
| நாடுகள் | மைய நாடுகள், விளிம்புநிலை நாடுகள் | மைய நாடுகள், விளிம்புநிலை நாடுகள் |

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர், செர்பியாவுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்த நார்வேயும், எந்தத் தொடர்பும் இல்லாத ஸ்பெயின் நாடும், திடீரென செர்பியாவை எதிர்த்து நின்றன. இரண்டு நாடுகளுமே நேட்டோ அமைப்பில் முக்கியமற்ற நாடுகள். ஐரோப்பிய யூனியன் அமைப்பில் ஸ்பெயின் அங்கம் வகித்தாலும், நார்வே உள்ளே வர முயன்று கொண்டிருக்கிறது. வல்லரசு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப் புகளிட மிருந்து தங்கள் நாடுகளுக்கு ஒரு வகையான ஏற்பு அல்லது ஒப்புக் கொள்ளுதலுக்காகப் (recognition) போராடினார்கள் எனக் கூறலாம். இந்த ஆழ்கட்டு மானங்களால் எழுந்த சுய உணர்வுகளினால், இந்த இரு நாடுகளும் நேட்டோ, ஐரோப்பிய யூனியன் அமைப்பு களில் சிறந்த உறுப்பினர்களாக இருக்க எத்தனித்தனர். அதன் விளைவாக, செர்ப் மக்களைக் கொல்லவும் துணிந்தனர். தாங்கள் அடுத்து என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்க செர்பியாவிற்கு பதிலாக, வாஷிங்டன் மற்றும் பிரஸ்சல்ஸ் நகரங்களை நோக்கி நின்றனர்.



பாலியல் ஆழ்கட்டுமானம் (gender deep structure) என்பது இன்னொரு விடயம். 1994ம் ஆண்டு பாரிஸ் நகரத்தில் இரு குர்டு (Kurd) மக்களின் குழுக்களுக்கிடையே நடுநிலையாளராக நூலாசிரியர் பணியாற்றினார். குர்டு பெண்கள் கருப்பு

உடையணிந்து, துருக்கி தலைநகர் அங்கராவில் (Ankara), அஹிம்சை முறையில் பேரணி நடத்தியது அவ்வின ஆண்களை மிகவும் பாதித்திருந்தது. "ஆண்களாகிய எங்களுக்கு என்ன நடக்கும்? பெண்கள் கை ஓங்கிவிடுமோ!" என அவர்கள் பயந்தனர்.

ஆழ்கலாச்சாரம் மற்றும் ஆழ்கட்டமைப்பு போன்றவைகளைக் கால அவகாசம் பிடிக்கும் நடவடிக்கைகள் மூலம் மாற்றலாம். ஆனால் ஆழ்செயல்பாடு மனிதனின் அடிப்படைத் தேவைகளிலிருந்து எழுகின்றது. இந்தத் தேவைகளை மாற்றுவது கடினம். ஆனால் உண்மையில், இந்தத் தேவைகளின் சக்தியை புரிந்துகொள்வதுதான் வழியே தவிர, அதை நீக்க முயல்வது அல்ல. தகராறு கட்சிகள் தங்களது சூழ்நிலையின் ஆழ்நிலைகளைப் பற்றி சரிவர அறிந்திராதவர்களாக இருப்பதால், சமாதான சேவகர்களின் உதவியை நாடவேண்டியிருக்கிறது.

தகராறு சேவகர்கள் இந்தக் கட்சிகளின் கூற்றுக்களை சிரத்தையுடன் கேட்டுணர்ந்து, தகராறின் ஆழ்நிலை அம்சங்களை அவர்கள் அறிந்திட வழிவகைச் செய்யவேண்டும். கருத்துப்பரிமாற்றங்களில், கட்சிகள் தகராறுகளை எப்படிக் கண்ணுறுகிறார்கள் என்று பார்த்தால், நமக்கு மிகத் தெளிவான பதில்கள் கிடைக்கும். "நாங்கள் ஒரு சமரசத்தை அடையாவிட்டால், போர் வெடித்து எழும்" என்றே பெரும்பாலானோர் சொல்வார்கள். நீண்ட சொற்பொழிவு நிகழ்த்துவதற்குப் பதிலாக, அந்த நபரின் கலாச்சாரத்திலிருந்தே மாற்று வழிகளுக்கான சிறந்த உதாரணங்களைச் சுட்டிக்காட்டுவது சிறப்பாக இருக்கும். அவர்களது தீர்வுகளுக்கானத் தேவைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகப்படுத்தி, அதன் மூலம் எதிர்தரப்பின் தேவைகளையும், அவர்கள் மதிக்கச் செய்வது நல்ல முடிவினைத் தரும். கருத்துப்பரிமாற்றங்களின்போது "உங்களுக்கு முக்கியமானதாக இருக்கும் விடயம் எதிர் தரப்பிற்கும் முக்கியமானது தானே?" என்ற கேள்வி மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தகராறுக் கட்சிகளின் கண்களைத் திறக்கும் இந்த கேள்வி அவர்களைச் சிந்திக்கத் தூண்டும். இதனால் அமைதியை ஏற்படுத்தும் வழிவகைகள் உருவாகலாம்.

# 6

# படைப்பாற்றல், கருத்துப்பரிமாற்றம், பேச்சுவார்த்தை

## படைப்பாற்றல்


அறிவுக்கும் உணர்வுக்கும் இடையேயுள்ள எல்லைக்கோட்டில் அமைவதுதான் படைப்பாற்றல். அறிவும் உணர்வும் ஒன்றுசேர்ந்து உந்தும்போது, அதனில் எழும் கடந்து செல்லல்தான் படைப்பாற்றல் எனலாம். ஒரு நல்ல கருத்து ஓர் ஆழமான உணர்வாகத் தோன்றி, மூளைக்குச் சென்று, வார்த்தைகளால் வடிவமைக்கப்பட்டு, மிகுந்த சக்தியுடன் வெளிப்படுத்தப்படுகிறது. உண்மையான காதல் போன்று இதுவும் அடிக்கடி நடப்பதில்லை. ஆனால் நடக்கும் போது, மிகுந்த சக்தி வாய்ந்ததாய் இருக்கிறது. உணர்வுகள் உந்தும் சக்தியாகவும், அறிவுத்திறன் எந்திரமாகவும் பயன்படுகின்றன. தகராறுத் தீர்வினைப் பொறுத்தவரை, முரண்பாடுகள் கொண்ட எதிர்தரப்பை புரிந்துக்கொள்வது போன்ற செயல்வினைகளிலும், அகிம்சை என்னும் கொள்கைகளின் மூலமும் படைப்பாற்றல் செயல்படுகிறது. உணர்வுகளற்ற தகராறு சேவகர் தன் கடமையைச் செவ்வனே செய்ய முடியாது. உந்து சக்தியற்ற அவர் மிகவும் பலவீனமாகவேக் காணப்படுவார். சமரசம் போன்ற செயல்களை ஆர்வம் இல்லாதவர்கள் திறம்பட செய்யமுடியாது.

உதாரணத்திற்கு, இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, தகராறுகளை மாற்றி அமைத்துக் கடந்து செல்வதற்கான 40 உதாரணங்களை எடுத்துக் கொள்வோம். அவை உங்களுக்கு இலகுவாகத் தோன்றலாம். இவற்றில் படைப்பாற்றல் எங்கே இருக்கிறது என்ற ஐயம் கூட எழலாம். "தகராறு கட்சிகள் தாமாகவே ஒரு தீர்வுக்கு வரவேண்டும்" எனச் சொல்வது எளிதானது. இது மோசமாக நோய்வாய் பட்டிருக்கும் ஒருவரிடம் "உங்களைத் திடமாக வைத்திருங்கள்" என்று அறிவுரைப்பதுப் போலாகும். தகராறுகளில் சிக்கியிருப்பவர்கள் அனைத்துத் தீர்வுகளையுமே அலசிப் பார்த்து, சோர்ந்திருக்கும்போது இம்மாதிரியான அறிவுரைகள் பலன் அழிக்காது. நம்பிக்கையூட்டி, இந்தத் தகராறை தீர்த்துக்கொள்ளலாம் என ஊக்குவிப்பதே தகராறு சேவகரின் முக்கிய பொறுப்பாகிறது. ஆற்றில் விழுந்து மூழ்கி கொண்டிருக்கும் ஒருவரிடம், உங்களுக்கு நீச்சல் தெரிய வேண்டும் எனச் சுட்டிக்காட்டுவது உதவாது. தகராறு தீர்வினில் என்ன தேவை என்பதை அறிந்து, நம்பிக்கையை உருவாக்கும் விதத்தில் நடந்து கொள்வது அவசியம்.

சில தகராறுகள் பற்றி பேசும்போது, தகராறை தீர்த்துக்கொள்ளும் அரசியல் உந்துசக்தி இல்லையென்றும், ஒருவர் மேல் ஒருவருக்கு நம்பிக்கை இல்லையென்றும் சொல்வது வாடிக்கை. இந்தத் தகராறு கட்சிகள் தொடக்கநிலையிலேக் குறைபாடுகள் உள்ளவர்களாக இருக்கவில்லை. மாறாக, தகராறுதான் அவர்களின் உன்னத குணங்களை மழுங்கச்செய்து, முடக்கி வைத்திருக்கிறது. நல்லக் கருத்துகள் இல்லாமையே இந்தத் தேக்க நிலைக்கு ஒரு முக்கியமான காரணம். சில நேரங்களில், உயர்ந்த கருத்துக்கள் இருந்தாலும், தீர்வு ஏற்படுவதில்லை. அதற்கு காரணம், ஒரு தரப்புக்கு அந்த தீர்வில் விருப்பம் இல்லாமல் இருக்கலாம். அவர் தனது விருப்பத்திற்கு ஏற்றவாறு வெற்றியடைய முடியும் என எண்ணிக் கொண்டிருக்கலாம். அவரிடம் அவரது விருப்பமான வெற்றிக்கு மிக அதிகமான விலை கொடுக்க வேண்டியது இருக்கும் எனச் சுட்டிகாட்டி, எதிர்தரப்பும் தாம் விரும்பியதை அடையச்செய்யும் கடந்து செல்லல் முறைதான் சிறந்தது என எடுத்துரைக்கலாம். சில அமெரிக்கர்கள் உபயோகிக்கும் "வெற்றி-வெற்றி" என்ற சொற்றொடர் மேற்கண்ட நிலையை அரையும் குறையுமாகச் சுட்டி காட்டுகிறது. அது "கடந்து செல்லல்" முறையில் நிகழும் திடீர் மாற்றத்தை எடுத்துரைப்பதில்லை.

இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படும் எடுத்துக்காட்டுகள் படைப்பாற்றலை வெளிக்கொணர்பவையாகவே இருக்கின்றன. நாம் முன்வைக்கும் தீர்வு தகராறுக்கு ஏற்புடையதாகவும், கட்சிகள் புரிந்து கொள்வதாகவும் இருக்கவேண்டும். தகராறு கட்சிகள் அவர்களது யதார்த்தத்தை உணரவேண்டும். “பழையன கழிதலும், புதியன புகுதலும் காலத்தின் கட்டளை” என்றாலும், புதுமையில் பழமையும், பழமையில் புதுமையும் கலந்திருப்பது அவசியம். சில நேரங்களில் தகராறு வரைபடத்தைப் பார்த்து, அதற்கானத் தீர்வுகளை எளிதில் அட்டவணை இடமுடியும். தகராறு வரைபடம் (Map) என்பது தகராறில் சிக்கியிருக்கும் கட்சிகள், பின்னணியில் இருப்பவர்கள் முக்கியமானப் பிரச்சினைகள், போன்ற அனைத்து நபர்களையும், விடயங்களையும் குறியீடு செய்யும் படம். மேற்கண்டபடி அட்டவணையிட்டாலும், பல நேரங்களில் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் சில அம்சங்கள் அங்கே தொக்கி நிற்பது இயல்பு.

படைப்பாற்றலைக் கற்றுக்கொள்ள முடியுமா என்ற கேள்வி நமக்கு எழலாம். ஒரு குறிப்பிட்ட நிலை வரை எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். கற்றுக்கொள்ள முடியும் விடயம், அனைவராலும் செய்யப்படக் கூடியதாகவே இருக்கும். அனைவராலும் செய்யப்படும் செயலை, படைப்பாற்றல் கொண்ட செயல் என்று சொல்ல முடியாது. எல்லாவற்றிக்கும் மேலாக, எதிர்காலத்தை நோக்கி நிற்கும் ஏதோ ஓர் அம்சம் படைப்பாற்றலில் இருப்பதைப் பார்க்கலாம். படைப்பாற்றல் என்பது ஒருவிதமான அறிவுபூர்வமான உந்துதல். இந்தத் திறமை நீண்ட, தகுந்த அனுபவத்தின் மூலமாக வருகிறது.




நினைவாற்றல் என்பது நமது சொந்த அனுபவங்களிலிருந்தும், பிறரின் அனுபவங்களிலிருந்தும் எழுவது. நமது இனம் மற்றும் பண்பாடுகளின் அடையாளங்களின் மூலமாகவும், சமூக கட்டுமான அடையாளத்தின் மூலமாகவும் நாம் நினைவுகளைப் பெறுகிறோம். ஒரு சமூகம் ஒரு நாட்டிடமிருந்து சுயாட்சியோ அல்லது சுதந்திரமோ கோரும்போது, இம்மாதிரியான நினைவுகளுக்காக வரலாற்றுப் பக்கங்களைத் தேடுகிறது. வேறுபாடுகளும் ஒற்றுமைகளும் அலசப்படுகின்றன. ஒரு விடயத்தை அல்லது கருத்தை மாதிரியாகக் கொள்ளும்போது, அதன் அனைத்து அம்சங்களையும் அலசிப் பார்ப்பது அவசியம். இது என்னென்னத் தாக்கங்களை உருவாக்கும் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். கலாச்சாரம், மொழி போன்ற அடையாளங்களை எடுத்துக் கொண்டால், அவை தகராறு கட்சிகளுக்கு உள்ளே இருப்பவையல்ல, அவர்தம் உறவினில் இருப்பவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இரு நாடுகள் தங்களது எல்லைத் தகராறினை, தமது எல்லையில் பொதுவான ஒரு நிலப்பகுதியை அமைத்து பிரச்சினையைத் தீர்த்துக் கொள்கின்றன. அதே பாணியில், இரு பக்கத்துச் சொத்துக்காரர்களும் தங்கள் எல்லைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கலாம். ஆனால், ஒரு சிலர் தெளிவான எல்கை இருப்பதையே விரும்புவர். ஒரே தீர்வினைக்

கொண்டிராது, மாற்றுத் திட்டங்களையும் கொண்டிருப்பது மிகவும் சிறந்தது. நல்ல தீர்வாகத் தோன்றும் ஒன்றினை, ஒத்தத் தராறுகளோடு பொருத்திப் பார்த்து, தெளிவு பெறுவதும் நல்லது. எந்த பயிற்சியும் பெறாத பொதுமக்கள், இப்படி பல்வேறுக் கருத்துக்களை உருவாக்கி படைப்பாற்றல் மிகுந்தவற்றை உபயோகிக்கின்றனர் என்பது நடைமுறை உண்மை. ஒரு தகராறின் தீர்வை இன்னொரு தகராறுத் தீர்வோடு சேர்த்து பார்க்கும்போது, கட்சிகளுக்குள் ஒருவித கருத்துப்பரிமாற்றம் எழுகிறது. அதுவே ஒரு நல்ல தீர்வினைத் தேடிக்கொள்ள உகந்த துவக்கமாகவும் அமைகிறது.

வன்முறை தோய்ந்த பெருந்தகராறு ஒன்றில் வன்முறை நிறுத்தம், பேச்சுவார்த்தை, தொலைநோக்குப் பார்வை என்னும் அம்சங்கள் தகராறுத் தீர்வுக்கான மேலாண்மைக்கு மிகவும் உதவும். இவ்வம்சங்களை மேற்கண்ட வரிசையில் உபயோகிக்காது, மாற்றியமைத்து எதிர்வரிசையில் உபயோகிப்பது அதிகமாக உதவலாம். அதாவது தொலைநோக்குப் பார்வையை ஏற்படுத்திக் கொண்டு, பேச்சுவார்த்தைகள் மூலம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, பின்னர் வன்முறை நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தினால் மிகவும் சிறப்பானதாக இருக்கும். அதை விட சிறப்பு சூழ்நிலைகள் சாதகமாக இருந்தால், இம்மூன்றையுமே ஓரே நேரத்தில் ஒருசேரச் செய்வதாக இருக்கும். சுருங்கச் சொன்னால், படைப்பாற்றல் என்பது சில நேரங்களில் நாமெடுக்கும் நடவடிக்கைகளின் வரிசையை மாற்றி அமைப்பதாகக்கூட இருக்கலாம். நேரவரிசையை மாற்றி அமைப்பது போன்றே, இடத்தையும் மாற்றி அமைக்கலாம். உதாரணமாக, சில ஆண்டுகளுக்கு முன்னர் கழிவறை வீட்டிற்கு வெளியே கொல்லைப்புரத்தில்தான் இருக்கும். ஆனால் தற்போது வீட்டின் மத்தியிலே கழிவறை அமைப்பது வழக்கமாகிவிட்டது.

தகராறுக் கட்சிகளின் அடிப்படை நம்பிக்கையில் உள்ள ஒற்றுமைகளை அலசுவதும், தகராறு படைப்பாற்றலுக்கு உதவலாம். அவர்கள் பகிர்ந்து கொள்ளும் நம்பிக்கைகளின் அடிப்படைகள் பற்றி தெரிந்திருப்பது அவசியம். இரு கட்சிகளுமே தாங்கள் “கடவுளின் புத்திரர்கள்” என்றும் தான் கடவுள் வழி நடப்பவர், மற்றவர் சாத்தானின் கைக்கூலி என்றும் நம்பிக்கை கொண்டிருந்தால், எதிர்காலம் இருண்டதாகவே அமையும்.

இவர்களின் மூடநம்பிக்கைகளையும், அவர்கள் பகிர்ந்து கொள்ளும் மடமையையும் சுட்டிக்காட்டினால், இது மற்றவரின் பிரச்சினை என்றே வாதிடுவர். ஒரு சிறந்த நாடக ஆசிரியர் போல சமாதான சேவகர்கள் இந்தக் குறையைக் கட்சிகளுக்கு அழகாக சுட்டிக்காட்ட வேண்டும்.

இம்மாதிரியான தவறான நம்பிக்கைகள் பலமாக அசைக்கப்பட வேண்டும். ஆனால் ஆழமான நம்பிக்கைக் கொண்டோரை அசைப்பது கடினமானது. அவர்கள் வாழ்வின் ஒரே ஒரு அம்சத்தை பிடித்து வைத்துக் கொண்டு, பிற விடயங்கள் அனைத்தையுமே அந்த பூதக்கண்ணாடி வழியாகப் பார்க்கின்றனர். அவர்களிடமிருந்து அந்த ஓர் அம்சக் கோட்பாட்டைப் பறித்து விட்டால், அவர்கள் வாழ்வின் மகிழ்ச்சியையே அழித்துவிட்டது போன்று முடங்கிப்போவர். மார்க்சியத்தின்படி, உலகம் முதலாளி வர்க்கம் என்றும், தொழிலாளி வர்க்கம் என்றும் இருகட்சிகளாக ஒரு பெரும் தகராறில் சிக்கி இருக்கிறது. இந்தத் தகராறின் இறுதியில், உலகப்புரட்சி என்ற இறுதிப் போர் நடந்து முடியும். அதன் பின்னர் பூமியிலே சொர்க்க வாழ்க்கையே நிகழும் என்பதாகும். யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களின் அடிப்படைக் கோட்பாட்டினை இங்கே காணமுடிகிறது.

கருத்துப்பரிமாற்றம்:

கருத்துப்பரிமாற்றம் என்பது கேள்வி கேட்பதன் அடிப்படையில் அமைவது. எதிர்தரப்பைக் கேள்வி கேட்கும் தன்மையதாக்குவதற்கு காலஅவகாசம் தேவைப்படலாம். ஒரு தகராறின் தீர்வுக்கான காலம் கனியும்போது, தகராறு கட்சி தனது ஆய்ந்தறிதல் (diagnosis) மற்றும் எதிர்தரப்பின் ஆய்ந்தறிதல் (diagnosis) பற்றி சிந்தித்தே ஆகவேண்டும். தகராறின் கடந்த காலத்தின் தீர்வுகளிலிருந்து சிந்திக்கத் துவங்குவது உதவிகரமாக இருக்கலாம். இந்தப் பிரச்சினை எப்போதிலிருந்து தவறான வழியில் தடமாறிச் சென்றது அந்த நேரத்தில் வேறு என்னச் செய்திருக்கலாம் என்பது போன்றக் கேள்விகளைக் கேட்பது உதவிகரமாக இருக்கும். இந்த மாதிரியான கருத்துப்பரிமாற்றங்கள் ஓரளவு இலகுவானவை. ஏனென்றால், நம் கண்முன் நடப்பவற்றை விட, கடந்த கால நிகழ்வுகள் குறைவாகவே அச்சுறுத்துகின்றன. என்ன செய்திருக்கலாம் என்பது பற்றிய ஒத்தக்கருத்துக்களை உருவாக்குவது எளிது.

இந்தத் தகராறு எப்படி மாறப்போகிறது, செய்ய வேண்டிய எதனை நாம் செய்யாது விட்டோம் என்றெல்லாம் கேள்விகள் கேட்கும்போது, நாம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கத் துவங்குகிறோம். என்ன நடந்தது எனும் மோதலிலிருந்து விலகி, எதைச் செய்திருக்கலாம் என்று சிந்தித்து, நாம் செய்யத் தவறியவற்றின் மீது கவனம் செலுத்தலாம். இதனால், இனி என்ன செய்ய முடியும் என்பது பற்றி சிந்திப்பது எளிதாகிறது.

இந்தப் புத்தகத்தில் விவாதிக்கப்பட்டுள்ள 40 தகராறு விவரணங்களும் இப்படியாக கடந்த காலத்துக்கும்-எதிர் காலத்துக்குமிடையே, விளக்கத்திற்கும் விருப்பமான நெறிமுறைகளுக்கிடையே, நடக்கும் விவாதமே ஆகும். இரு தகராறு கட்சிகளும், அவர்களது கருத்துப்பரிமாற்றங்களும், இந்த இரு துருவங்களுக்கு இடையேதான் இயங்குகின்றன. போதிய காலஅவகாசம் எடுத்துக்கொண்டு, தகராறின் அனைத்து அம்சங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அலசி, முழுவதுமாக விவாதிப்பது நன்மை பயக்கும். இப்படி பரிமாறப்பட்டக் கருத்துக்களின் அடிப்படையில், ‘முன்னர் என்ன செய்திருக்கலாம்’ என்றக் கேள்வியை இரண்டாவது சுற்றில் விவாதிக்கலாம்.

அப்போது தகராறை மாற்றி அமைப்பதற்கும், கடந்து செல்வதற்கும் தேவையானப் படைப்பாற்றலுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். தகராறு சேவகர் இத்தருணத்தில் தகராறு தீர்வுக்கான படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு விரிவுரையாற்றலாம். அதாவது, தகராறுத் தீர்வில் ஒரு சில துருவநிலைகளை நாம் கண்டுணரும்போது, அவற்றை வன்முறையால் மட்டுமே அடைய முடியும் என்பதை அறிகிறோம். அவை மட்டுமே தீர்வாக அமையும்போது, தகராறு வன்முறை வயப்படுவது உறுதி. சுருங்கச் சொன்னால், தகராறு கட்சிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உன்னதமான மாற்றுத் தீர்வுகளை நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

தகராறு வரைபடத்தின் உதவியோடு, நாம் இதை எப்படிச் செய்யலாம் என்று ஆய்வது மிகவும் உதவும். போதிய தகவல்களுடனும் மற்றும் கருத்துக்களுடனும் தொடர்ந்தால், அந்த உன்னதத் தீர்வுக்கான தேடல் எளிதாகவே அமையும். இந்த கருத்துப்பரிமாற்றத்தின் உச்சம், கடந்த காலத்தின் ஆய்ந்தறிதல் (*diagnosis*) மற்றும் நிவாரணம் (*therapy*), எதிர்காலத்தின் ஆய்ந்தறிதல் மற்றும் நிவாரணம் எனும் நான்கு நிலைகளையும்

இணைக்கும்போது எழுகிறது. தகராறு சேவகர் இவை அனைத்தையுமே மனதில் நிறுத்தி வைத்துக்கொள்வது நல்லது. தகராறு கட்சிகள் ஒத்துக்கொள்ளாத பட்சத்தில், குறிப்பு எடுப்பது ஏற்புடையதல்ல. எந்தச் சூழ்நிலையிலும் கருத்துப்பரிமாற்றங்களை ஒலிநாடாவில் பதிவு செய்வதோ, ஆய்வாளர்கள் மூலம் ஆய்வு செய்வதோ நல்லதல்ல. காரணம், எதிர்கால நல்லுறவுக்கானப் பார்வைகள் பற்றிய நுட்பமான விடயம் இது. இனி என்ன நடக்கலாம், பிற கட்சிகள் என்ன எதிர்பார்க்கிறார்கள், தகராறை எப்படி மாற்றியமைத்துக் கடந்து செல்லலாம் என்பது பற்றியெல்லாம் தகராறுகட்சிகள் பேசுவதால், கவனமானக் கையாளல் தேவை. இருகட்சிகளுமே தங்களது முன்னறிவித்தல்களை எதிர்தரப்பின் எதிர்பார்ப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர்.

இத்தருணத்தில், இது ஒரு கருத்துப்பரிமாற்றமேயொழிய விவாதம் அல்ல என்பதை மறந்துவிடக்கூடாது. தகராறு சேவகர் கேட்கும் பல கேள்விகளுள் முக்கியமான கேள்வி இதுதான்: “நீங்கள் நினைப்பது போலவே தகராறின் தீர்வு நடந்து முடிந்து நீங்கள் வெற்றிபெறும் பட்சத்தில், மற்றவர்கள் அதை எப்படி எடுத்து கொள்வார்கள்? உங்கள் வெற்றியை ஒத்துக் கொள்வார்களா? அல்லது பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவார்களா?” எதிர்தரப்பு தகராறு சூழ்நிலையை நீண்டகால அடிப்படையில் எப்படி உணர்கிறது, அது அவரது முன்னறிவித்தலை (Prognosis) எப்படி பாதிக்கிறது என்பது குறித்து சிந்திப்பது அவசியம்.

இருக் கட்சிகளுமே தொடர் போராட்டம், பின்வாங்கல், சமரசம் என்பவற்றை விட “கடந்து செல்லல்தான்” சிறந்தது என தீர்மானித்தால் அதுவே உகந்தது. கடந்து செல்லும் தீர்வு மிகச் சிறந்ததாக அமைந்து, மற்றத் தீர்வுகள் கேட்பாரற்று போனால் அது இன்னும் உயர்ந்தது. இவை அனைத்துமே உள்மனதின் உறுதியான நம்பிக்கைகளிலிருந்து வந்தால் சிறப்பாக அமையும். மூன்றாவது நபர் ஒருவர் தனது நம்பிக்கைகளைக் கட்சிகளின் மீது திணிப்பாரேயானால், அது கடந்து செல்லும் தீர்வாக அமையுமென்று கருதமுடியாது. அதுபோல, தகராறு கட்சிகள் வன்முறையைத் தவிர்த்து படைப்பாற்றலுடன் வாழ்வார்கள் என்றும் கொள்ளமுடியாது.

இந்த கருத்துப்பரிமாற்றத்திற்கு தகராறு சேவகர் தனது பரந்த

பொது அறிவினைக் கொண்டுவர வேண்டும். தகராறுக் கட்சிகள் அவர்களது தகராறு பற்றிய நுணுக்கமான அறிவினைக் கொண்டு வருகிறார்கள். கட்சிகள் ஒருவரோடு ஒருவர் தகவல்கள் பரிமாறுகின்றனர். இவை அனைத்துமே வார்த்தைகள் மூலம் நடத்தப்படும் பரிமாற்றங்கள். எளிய மொழியில், சீரான குரலில் நடக்கும் இந்தப் பரிமாற்றத்தின் அடிப்படை, கேள்வி கேட்பதே தவிர விசாரணை நடத்துவது அல்ல. இந்தப் பரிமாற்றத்தில் எதிர்மறை வார்த்தைகளான “இல்லை, ஆனால், இருந்தாலும்” போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. இவை ஒருவித தற்காப்பு பதிலையேத் தருவதால், இவற்றை நாம் புறக்கணிப்பது சிறந்தது. அதேபோன்று, உடல் அசைவினால் உணர்த்தப்படும் உள்ளக் கிடக்கைகளையும் நாம் கவனிக்கவேண்டும். கைக்கடிகாரத்தை அடிக்கடிப் பார்த்து சலிப்பினை உணர்த்துவது, முதுகினை நிமிர்த்தி ஆசிரியர் போன்ற தோற்றத்தினைத் தருவது, கண்ணுக்குள் உற்று நோக்கி ஒருவரைக் குறிப்பிட்டு பேசுவது, இரையைப் பிடித்து வைத்திருக்கும் இன்னொரு மிருகம் போல முன்னோக்கிக் குனிந்து அமர்வது இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டியவை. கால்களை சேர்த்து வைத்து, அல்லது காலின் மேல் காலை போட்டுக்கொண்டு, பின்னால் சாய்ந்து, ஆயாசமாக அமர்வதே சிறந்தது. ஆடையைப் பொறுத்தவரை, மிதமான உடை அணிவது சிறந்தது. சிக்கல்களை தவிர்ப்பதற்கு, கருத்துப் பரிமாற்றங்கள் ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் நடத்தப்படலாம்.

உதாரணமாக, ஓர் இந்தோனேசிய உயர்மட்ட இராணுவ அதிகாரிக்கும், நூலாசிரியருக்கும் நடந்த கருத்துப்பரிமாற்றத்தைக் கீழே காணலாம்.

ஆசிரியர் : இந்த கருத்துப்பரிமாற்றத்திற்கு என்னை அழைத்ததற்கு நன்றி. இந்தோனேசியாவின் எதிர்காலம் பற்றிப் பேசலாமா?

அதிகாரி : எதிர்காலம்!! நீங்கள் வார்த்தைகளோடு விளையாடுகிறீர்கள்! இந்தோனேசி யாவிற்கு எதிர்காலம் இல்லை.

ஆசிரியர் : எதிர்காலமே இல்லையா?

அதிகாரி : எங்கேப் பார்த்தாலும் கம்யூனிஸ்ட்டுகள் நாட்டைப்

பிரிக்கிறார்கள்!

ஆசிரியர் : கம்யூனிஸ்ட்டுகள்! கிழக்கு தைமூரில் (East Timor) நடந்த வாக்கெடுப்பில் பெரும்பான்மையான மக்கள் சுதந்திரத்திற்கு வாக்களித்தனர். அவர்களெல்லாம் கம்யூனிஸ்ட்டுகளா?

அதிகாரி : எல்லோரும் இல்லாமல் இருக்கலாம். கம்யூனிஸ்ட்டுகள் அங்கோலா (Angola), மொசாம்பிக் (Mozambique) போன்ற நாடுகளில் தொடங்கி லிஸ்பன் (Lisbon) நகர் வழியாக இங்கே வந்து சேர்ந்துவிட்டார்கள்.

ஆசிரியர் : இந்தோனேசியாவின் இராணுவ எதிர்காலம் எப்படித் தோன்றுகிறது?

அதிகாரி : அமெரிக்கர்கள் வந்து கொண்டிருக் கிறார்கள்! போருக்குப் பின் நடந்த கென்னன் திட்டம் (Kennan Plan) போல, இந்தோனேசியாவில் உள்ள அமெரிக்கக் கடற்படை தெற்கு ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆசியாவை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். கிழக்கு தைமூர் சுதந்திரம் பெறும் அன்றே, அமெரிக்காவுக்கு இராணுவ தளம் கிடைக்கும். என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்!

ஆசிரியர் : சரி, இதற்கு மாற்று?

அதிகாரி : இந்தத் தீவுக் கூட்டத்தின் பாதுகாப்பு எங்கள் பொறுப்பு!

ஆசிரியர் : இந்தோனேசியாவின் பொருளாதார எதிர்காலம் எப்படி இருக்கும்?

அதிகாரி : ஆஸ்திரேலியர்கள் வருகிறார்கள்! "அமைதி காப்போர்" என்று அவர்கள் சொன்னாலும், உண்மையில் அவர்கள் "எண்ணெய் காப்போர்". தைமூர் முதல் டார்வின் (Darwin) வரை உள்ள எண்ணெய் அவர்களுக்குத் தேவை. சுதந்திரத்திற்கு அடுத்த நாள், அவர்கள் எண்ணெய் கிணறுகளைத் தோண்டிக் கொண்டிருப் பார்கள். என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்!

ஆசிரியர் : சரி, இதற்கு மாற்று?

அதிகாரி : இந்தத் தீவுக்கூட்டத்தில் உள்ள அனைத்து வளங்களுமே எங்களுக்குச் சொந்தமானவை!

ஆசிரியர் : இந்தோனேசியாவின் கலாச்சாரம் எப்படி இருக்கும்?

அதிகாரி : மதத்தைக் குறிப்பிடுகிறீர்களா? நான் ஒரு முஸ்லீம், ஆனால் அடிப்படை வாதிகளை நான் விரும்புவதில்லை. மதம் தேவை தான், என் இராணுவ வீரர்களை அது ஒழுங்குபடுத்துகிறது. என்னையும் கூட! மதம் பரப்புவோர் பிறர் மீது தங்கள் மதத்தைத் திணிப்பதை நான் விரும்ப வில்லை. கிழக்கு தைமூர் சுதந்திரம் அடைந்ததும், வாடிகன் (Vatican) அனை வரையும் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றப் போகிறது. என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்!

ஆசிரியர் : சரி, இதற்கு மாற்று?

அதிகாரி : முடிந்தவரை சேர்ந்து வாழ்வது ஒருவரையொருவர் சகித்துக்கொள்வது.

ஆசிரியர் : நாட்டின் அரசியல் எதிர்காலம் என்னவாகும்?

அதிகாரி : எல்லாமே தகர்ந்து கொண்டிருக்கின்றன. எங்களுக்கு எதிர்காலம் இல்லை! கிழக்கு தைமூர், அச்சே (Aceh), மலாக்கா (Malakkas), பாப்புவா இரியன்ஜெயா (Papua-Irian Jaya) இன்னும் சில பகுதிகளில்! எத்தனையோ நூற்றாண்டுகளாக சேர்ந்து வாழ்ந்திருக்கி றோம். அதே சதையும், இரத்தமும்! எங்களுக்குள் ஆழமான உறவுகள் உள்ளன, மணம் புரிந்து கொள்கிறோம். இவையெல்லாமே ஒரு சில கம்யூனிஸ்ட்டு களாலும், அடிப்படை வாதிகளாலும் அழியப்போகின்றன.

ஆசிரியர் : சரி, இதற்கு மாற்று?

அதிகாரி : இந்தத் தீவுக்கூட்டத்தில் அனைவருமே சேர்ந்து வாழலாம்.

ஆசிரியர் : கூட்டமைப்பு சிறப்பாகயிருக்கலாம். ஒவ்வொரு அங்கமும் அதன் கலாச்சாரத்தை வைத்துக் கொள்ளலாம். திறந்த எல்லைகள், இணைந்த வெளி நாட்டு, பாதுகாப்பு, நிதிக்கொள்கை களுடன்?

அதிகாரி : சோவியத் யூனியன் போலவா? அங்கே என்ன நடந்தது என்பது நாமெல்லோருக்கும் தெரியும்!

ஆசிரியர் : அது ஒருக் கூட்டமைப்பு அல்ல. ரஷ்யா அனைத்து அதிகாரங்களையும் வைத்திருந்தது. நான் கூறுவது சுவிட் சர்லாந்து போன்றக் கூட்டமைப்பு?

அதிகாரி : ஆனால், கிழக்கு தைமூர் சுதந்திரம் வேண்டுமென்கிறதே?

ஆசிரியர் : அவர்கள் சுதந்திரமாகவும் இருக்கலாம், இந்தோனேசிய கூட்டமைப்போடு சேர்ந்தும் இயங்கலாம். சுவிட்சர்லாந்து அல்லது லிக்டன்ஸ்டைன் (*Liechtenstein*) போல மென் எல்லைகளுடன் வாழலாம்.

அதிகாரி : கூட்டமைப்பு? சேர்ந்திருப்பது? ம்..ம்..ம். நாளை காலை எட்டு மணிக்கு எனது அலுவலகத்திற்கு வரமுடியுமா உங்களால்? எனது நண்பர்கள் சிலருடன் நாம் பேசலாம்.

தகராறு சேவகரான நூலாசிரியர் கேள்விகள் கேட்டவண்ணம் அமைதியாக இருக்கிறார். இராணுவ அதிகாரி சொன்ன கம்யூனிஸம் பற்றியக் கருத்துக்களை எல்லாம் பிடித்துக் கொண்டு பின்தொடர்ந்து செல்லவில்லை. தகராறு கட்சியான இராணுவ அதிகாரி முற்றும் தெரிந்தவராய் ஆச்சரியக் குறியுடன் பேச ஆரம்பிக்கிறார். அவர் கேள்விக் குறிக்கு மாறும்போது, திருப்பு முனை எழுகிறது. அந்தக் கட்டத்தில் கருத்துப்பரிமாற்றம், தேடல், கண்டுகொள்ளல் தொடங்குகின்றன. இது ஒர் உன்னதமான அனுபவமாக அமையும்.

பேச்சுவார்த்தை

பேச்சுவார்த்தைக்கான மேசை அமைப்பு பல வடிவங்களில் இருக்கலாம். எதிரெதிர் தரப்புக்கள் மேசையின் இருபக்கமும் உட்காரலாம். குழுக்களின் தலைவர்கள் மத்தியிலே அமர்வது மரபு.

நடுநிலையாளர் மேசையின் இறுதியில் உட்காரலாம். வட்ட மேசையாக இருந்தால், இடை, இறுதி என எதுவும் இல்லாது அனைவருமே சமம் என்ற உணர்வு எழும். மொழி பெயர்ப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோர் அறையின் மத்தியில் அமரலாம். மேசைகளுக்கு வெளிப்பகுதியில் ஆலோசகர்கள் அமரலாம். மூன்று, நான்கு, ஐந்து, ஆறு கட்சிகள் இருந்தால், அத்தனைப் பக்கங்கள் கொண்ட மேசைகளை உபயோகிக்கலாம்.

மேலும் பல கட்சிகளுடன் ஐ.நா.சபை மற்றும் தேசீய பாராளுமன்றங்கள் போன்றவற்றில் பேச்சுவார்த்தை நடந்தால், மாநாட்டுத் தலைவருக்கு சொற்பொழிவு மேடையும், மற்றவர்களுக்கு கீழ் இருக்கைகளும் வழங்கப்படும். இதைத் தவிர, பல்வேறு விதமான மேசைகளுடன் பல்வேறு கமிட்டி அறைகளும் அமைந்திருக்கும். இவை அனைத்தையும் விட, பேச்சுவார்த்தைக்கான சிறந்த இடம் சிறிய மேசைகள் கொண்ட தேனீர் விடுதிகள்தான் எனலாம். டிரான்சென்ட் இயக்கத்தைப் பொறுத்தவரை மேசைகளை தவிர்ப்பதையே விரும்புகிறோம். கருத்துப்பரிமாற்றம் என்பது ஒருவரோடு ஒருவர் நடத்துகின்ற கலந்துரையாடல் என்பதால், எதிரெதிராக போடப்பட்டிருக்கும் இரு நாற்காலிகளே போதுமானது. ஆனால் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டிருக்கும் நாற்காலிகள் "கருத்து-எதிர்கருத்து" என்னும் நிலையினைக் குறிப்பதால், இந்த ஏற்பாடும் பேச்சுவார்த்தைக்கு ஒரு தடையாகவே அமைகிறது. "ட" வடிவத்தில் போடப்பட்டுள்ள இரண்டு சாய்வு இருக்கைகளும், அவற்றுக்கு இடையே சிறிய மேசையும் போடுவது ஏற்ற அமைப்பாக இருக்கும். அடுத்ததாக, அந்த அறை எப்படி அழகுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது முக்கியம். சில நேரங்களில் பிறரும் இந்த கருத்துப்பரிமாற்றத்தில் கலந்து கொள்ள வேண்டியதிருக்கும் என்பதால், அரை வட்ட வடிவில் சிறிய மேசைகள் போடப்பட்டு, அனைவரும் அனைத்தையும் பார்க்கும், கேட்கும், மேலும் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் அமைப்பினை உருவாக்கலாம். இப்படிபட்ட நிலையில் கருத்தரங்குக்கும், பேச்சுவார்த்தைக்கும் இடையே உள்ள எல்கைக் கடந்து செல்லப்படுகிறது. ஒரு சிறந்த கருத்தரங்கு உயரிய கருத்துப் பரிமாற்றத்தின் மாதிரியாக அமைகிறது.

கடினமான, மென்மையான பேச்சுவார்த்தைகள் என இரண்டு பிரிவுகளைக் காணலாம். பேச்சுவார்த்தையின் செயல்நுட்பம் பற்றி

ரேமன்ட் சேனர் (*Raymond Saner*) என்னும் அறிஞர் குறிப்பிடுகிறார்: “எந்த ஓர் இராணுவ தளபதியும் தனது எதிரியை நேரடியாக தாக்கமாட்டார். அப்படிச் செய்வது முட்டாள்தனமான செயலாகவோ, தற்கொலைக்குச் சமமானதாகவோ அமையும். அதைவிடச் சிறந்த வழி, பாதுகாப்பற்ற பக்கவாட்டு படைகளைத் தாக்குவதுதான். முடியும் பட்சத்தில், எதிரியின் வினியோக வழிகளைத் தாக்கலாம். இராணுவத்தில் இந்தப் பணி ஏவுகணைகள் மூலமாகவோ, இராணுவ வீரர்கள் மூலமாகவோ செய்யப்படுகிறது. பொதுமக்கள் வாழும் பகுதிகளில் வானொலி அறிவிப்புக்கள் மூலமாகவோ அல்லது துண்டுப் பிரசுரங்கள் உதவியுடனோ, ஒரு மனோதத்துவப் போரை நடத்துவது நல்ல பலன் தரக்கூடியதாக அமையும். ஒரு பேச்சுவார்த்தையில் இதைப் போன்ற தந்திரமான ஒரு செயல் எதிர்தரப்பின் ஆதரவாளர்களைத் தாக்குவதாகவோ அல்லது எதிரிகளை பலப்படுத்துவதாகவோ அமையும்.”

இந்த மாதிரியான எண்ணங்களினாலும், காரணங் களினாலும்தான், பேச்சுவார்த்தைகள்பற்றி மக்கள் மத்தியில் ஒருவித நம்பிக்கையின்மை ஏற்படுகிறது. பேச்சுவார்த்தைகளின் மூலம் அதிகபட்சமாகக் கிடைப்பது, உயிரோட்டமில்லாத வெறும் சமரசத் தீர்வுதான் என நினைக்கிறார்கள். கடினமானப் பேச்சுவார்த்தைக்கு மேற்கூறிய இராணுவ அதிகாரியோடானக் கருத்துப்பரிமாற்றமே சிறந்த உதாரணம். கடினமானப் பேச்சுவார்த்தை என்பது பேச்சின் மூலம் போர் நடத்துவது போன்றதுதான். இதன் சாராம்சம், கட்சிகளின் நிலைப்பாடுகள் போர்முனைகளாகி எங்கும், எதிலும் சண்டை நடப்பதைப் பார்க்கலாம். ஒரு தரப்பு எவ்வளவு விட்டுக்கொடுக்க முடியும், எவ்வளவு பின்வாங்க முடியும் என்பன போன்ற தகவல்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. பேச்சுவார்த்தையின் முடிவு எந்தத் தரப்பின் துவக்க நிலைப்பாட்டிற்கு அருகே அமைகிறதோ, அந்தத் தரப்பு வெற்றி பெற்றதாகக் கொள்வார்கள்.

“பேச்சுவார்த்தையாளர்களின் கையேடு” என்றப் புத்தகம் தகராறுக் கட்சிகளின் வாதங்களை பலன் மிக்கதாகச் செய்யக் கீழ்காணும் ஆறு வழிகளை அட்டவணையிடுகிறது:

1. உங்கள் வாதங்களை தகுந்த ஆதாரங்களுடன், குறிப்பாக அச்சிட்ட ஆதாரங்களுடன், எடுத்துவையுங்கள்.

2. உங்கள் நிலைப்பாட்டை ஆதரிக்க வல்லுநர்களைக் கொண்டு வாருங்கள்.

3. ஆதாரமற்ற கோரல்களைத் (Claims) தவிர்த்து விடுங்கள்.

4. எதிர்தரப்பு சுட்டிகாட்டும் முன்னரே, உங்களின் பலவீனமான அம்சங்களை ஒத்துக் கொள்ளுங்கள்.

5. சொல்லப்பட்டக் கருத்தினை மறுதலிக்க முடியாத பட்சத்தில், கவனத்தை வேறொரு விடயத்தின்மீது திருப்புங்கள்.

6. உடன்படிக்கை ஏற்படுத்த, சீரிய மனநிலையிருக்கும் உரிய கால கட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்.

மேலே காண்பவை உண்மைகளும் அற்பத்தனமான தந்திரங்களும் கலந்தவை. ஒரு புதிய யதார்த்தத்தைச் சேர்ந்து உருவாக்குவதற்கு எந்தவிதத்திலும் உதவாதவை.

மிகவும் பிரசித்தமான, ஆவலைத் தூண்டுகிற ஹார்வர்ட் பேச்சுவார்த்தை திட்டத்தைச் (Harvard Negotiation Project) சார்ந்த ராஜர் பிஸ்ஷர் (Roger Fisher) மற்றும் வில்லியம் யூரி (William Ury) என்பவர்கள் எழுதிய "Getting to Yes" எனும் புத்தகத்தை எடுத்துக் கொள்வோம். ஏகாதிபத்திய அமெரிக்காவின் மூளையாகச் செயல்படும் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்ட புத்தகம் என்பதால், ஐயத்துடனேயே இப்புத்தகத்தை அணுகுவது நல்லது.

உலகின் எதிர்முனைகளில் பணியாற்றும் இரு தகராறு சேவகர்கள் என்னிடம் சொன்னது இதை உறுதிப்படுத்துகிறது. அவர்கள் சொன்னார்கள்: "பிஸ்ஷர் இங்கே வந்திருந்தார். அவரது பேச்சுவார்த்தை மாதிரியை, அவரது புத்தகத்தை பயன்படுத்தினால், அமெரிக்கத் தூதரகத்திலிருந்து பணம் வாங்கித் தருவதாகக் கூறினார்." அந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்படும் உதாரணங்களுள் ஒன்று, 1980ஆம் ஆண்டு ஈரான் நாட்டு மாணவர்கள் பிடித்து வைத்திருந்த 52 அமெரிக்கத் தூதரகப் பிணைக்கைதிகளை விடுவிக்க நடந்த பேச்சுவார்த்தை. பிணைக்கைதிகளை விடுவிக்க வேண்டுமென்னும் அமெரிக்க நிலைப்பாட்டை விவரிக்கும் இந்த வல்லுநர்கள், ஈரான் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தொடர்ந்து தலையீடு செய்ததைக் குறிப்பிடத் தவறிவிட்டார்கள்.

மேற்கண்டப் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள பேச்சுவார்த்தை

பற்றியக் கருத்துக்கள் இன்னும் விசித்திரமானவை. அதன்படி கட்சிகளின் ஆர்வம்தான் (interest) முக்கியமே தவிர, அவர்களின் நிலைப்பாடுகள் (position) அல்ல. பிஸ்ஷர், யூரி எண்ணப்படி, மனித அடிப்படைத் தேவைகள்தான் ஆழமான ஆர்வங்கள். நிலைப்பாடுகள் வளைந்து கொடுக்கும் தன்மையற்றவை. ஆனால் நல்வாழ்க்கை, அடையாளம் ஆகியவை வளைந்து கொடுப்பவை. அவை பாதிக்கப்படும் போது அல்லது புறக்கணிக்கப்படும் போது, பேச்சுவார்த்தைகள் முறிந்து, பாதுகாப்பற்ற தன்மை எழுகிறது. அடிப்படைத் தேவைகள் பூர்த்திச் செய்யப்படும்போது, பொதுவான பாதுகாப்பு உணர்வு தோன்றுகிறது. கட்சிகள் தமது நிலைப்பாடுகள் தங்களது ஆர்வங்களை பூர்த்தி செய்கின்றன என்பதை நியாயப்படுத்த வேண்டும். இப்படிச் செய்யும்போது, தகராறு இரண்டு நிலைப்பாடுகளுக்கிடையேயான மோதலாக மாறுகிறது. ஒரு கட்சி இன்னொரு கட்சியின் நிலைப்பாடுகளைத் தெளிவுப்படுத்த உதவுவதற்கு பதிலாக, ஆர்வங்களையும் நிலைப்பாடுகளையும் குழப்பிக்கொண்டு, அடிப்படைக் கொள்கையின் பலவீனமான அம்சங்களைத் தொற்றி நிற்பார். ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் அங்கத்தினருக்கு ஒருக்கால் இது ஏற்றதாக அமையலாம்.

அடிப்படைக் கொள்கைகள் தகராறு கட்சிகளின் நிலைப்பாடுகளையும், ஆர்வங்களையும் தாங்கிநிற்க முடியாத பட்சத்தில், கட்சிகள் தங்களது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளலாம் என்று பிஸ்ஷர் மற்றும் யூரி கருதுகிறார்கள். அடிப்படைக் கொள்கைப் பற்றி அமெரிக்கர்களும், ஐரோப்பியர்களும் கொண்டுள்ள கருத்துக்கள் முக்கியமானவை. அமெரிக்கர்களை பொறுத்தவரை, அடிப்படைக் கொள்கையினை ஒரு கருவியாகவே கருதுகின்றனர். ஒரு கருவி உதவாத பட்சத்தில், இன்னொரு கருவியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே அவர்களின் நிலை.

ஆனால் ஐரோப்பியர்களோ, குறிப்பாக ஜெர்மன் மற்றும் பிரஞ்சு நாட்டவர், வேறு பார்வையைக் கொண்டிருக்கின்றனர். ஆர்வங்களில் இருந்துதான் நிலைப்பாடுகள் எழுகின்றன எனும் அவர்கள் கொள்கையினை எதிர்த்தால், கொள்கை முரண்பாடு ஏற்பட்டு உண்மை நிலைப்பாடுகள் மறக்கப்படும். நிலைப்பாடுகளை கையில் எடுத்துக் கொண்டு, அவற்றை சற்றே மாற்றியமைத்து, கடந்து செல்வது எனும் நமது அணுகுமுறை

மேற்கண்ட நடைமுறைக்கு முற்றிலும் மாறானது. டிரான்சென்ட் கொள்கை ஆழமான, தேடல் மிகுந்த கருத்துப்பரிமாற்றத்தினை அடிப்படையாக கொண்டது.

இன்னும் ஒரு முக்கியமான புத்தகம், எட்வர்டு டி போனோ (Edward de Bono)என்பவர் எழுதிய “Conflicts: A Better Way to Solve Them”. இவரது தீர்வு, சுதந்திரமான பன்னாட்டுச் சிந்தனை நிறுவனம் ஒன்றைத் துவக்கி, தகராறு கட்சிகள் ஒருவரோடொருவர் நிரந்தரமாக பேசிக் கொள்வதுதான். அமெரிக்கா, ஈரான் பிரச்சினையில் உங்களது தீர்வு என்ன என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டபோது, அவர் சொன்னார்: “இந்தப் பிரச்சினையால் அமெரிக்கா கடும் கோபம் கொண்டிருக்கிறது. தம்மை இப்படி மிரட்ட முடியாது, எனவே பொறுமையாகவே இருக்கப் போகிறோம் என அமெரிக்கா உணர்த்தினால், ஈரான் மாணவர்கள் பிணைக்கைதிகளை பிடித்து வைத்திருப்பது அர்த்தமற்றதாகிவிடும். ஆனால் சிறைபிடிக்கப்பட்டிருப்பவர்களுக்கோ, அந்தப் பொறுமை இரக்கமற்ற செயலாகத் தோன்றலாம். எனவே அமெரிக்க அரசு சிறைபிடிக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் ஒரு நாளுக்கு ஆயிரம் டாலர் வீதம் உதவித்தொகை கொடுக்க வேண்டும். அப்படிச்செய்தால், அமெரிக்கா பொறுமைகாக்குந்தோறும் நமக்கு புண்ணியம் இருக்கிறது என்று பிணைக்கைதிகள் அமைதி அடைவார்கள்.” இம்மாதிரியானத் தீர்வினை முன்வைத்து, “சமாதான ஆய்வு” (Peace Research) என்னும் துறையை விட்டு மிக தூரத்தில் போய் விடுகிறார் டிபோனோ. பிஸ்ஷர் யூரி போன்றே, ஈரானிய மாணவர்களுக்கு இலக்கு ஏதும் இருக்க முடியாது என்றே இவரும் எண்ணுகிறார்.

மார்ஷல் ரோசன்பர்க் (Marshall Rosenberg) என்பவர் எழுதிய “Nonviolent Communication” எனும் புத்தகத்தில், பெத்லகேமில் (Bethlehem) உள்ள ஒரு மசூதியில் சுமார் 170 பாலஸ்தீன முஸ்லீம் ஆண்களுக்கு தான் நடத்திய வகுப்பு ஒன்றினைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அமெரிக்கர்கள் மீது வெறுப்பு கொண்ட ஒருவர் ரோசன்பர்க்கைப் பார்த்து “கொலைகாரர்” என கத்தினார். வேறு சிலர், “குழந்தையைக் கொன்றவர், சதிகாரர்” என்றெல்லாம் திட்டினார்கள். ரோசன்பர்க் கூச்சலிட்டவர்களின் உணர்வுகள் பற்றியும், தேவைகள் பற்றியும் சிந்தித்த வண்ணம், கீழ்காணும் கேள்விகளைக் கேட்டார்.

கேள்வி : எங்கள் நாடு எங்கள் தேசிய வளங்களை, அதிகாரங்களை உரிய வழியில் உபயோகிக்க வில்லையே என்று கோபப்படுகிறீர்களா?

பதில் : ஆமாம், நாங்கள் கோபத்தில் இருக்கிறோம்! அமெரிக்காவில் தயாரித்த கண்ணீர் புகைக் குண்டு எங்களுக்குத் தேவையில்லை! எங்களுக்கு வீடு வேண்டும்! எங்களுக்கு தனி நாடு வேண்டும்!

கேள்வி : உங்கள் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும், நீங்கள் அரசியல் சுதந்திரம் பெறவேண்டும் என விரும்புகிறீர்கள். அதனால்தானே கோபம் வருகிறது?

பதில் : எனது குடும்பத்துடன், குழந்தைகளுடன் நான் கடந்த 27 வருடங்களாக வாழும் துன்ப வாழ்வைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?

கேள்வி : நீங்கள் நம்பிக்கையற்றவராய் இருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையைப் பற்றி யாராவது புரிந்துகொள்கிறார்களா என வேதனைப்படுகிறீர்கள்?

ரோசன்பர்க் இந்தத் தகராறில் ஒரு தனிப்பட்ட நிலையினை எடுக்காமல், வன்முறை தோய்ந்த மொழியினை, மென்முறை உணர்வுகளின் மொழியாக மாற்றுகிறார். அவர் சொல்கிறார்: "கோபமாகக் கத்தியவர் அவரது நிலையினை நான் புரிந்து கொள்கிறேன் என அறிந்ததும், நான் விளக்கியவற்றைப் பொறுமையாகக் கேட்டார்? ஒருமணிநேரம் கழித்து, என்னை கொலைக்காரர் எனத் திட்டியவர் ரமதான் விருந்து சாப்பிடு வதற்காக தன் வீட்டிற்கு என்னை அழைத்தார்". இப்படியாக, அந்த இரு தனிநபர்களுக்கு இடையே எழுந்த சிறு தகராறு சுமுகமாக தீர்த்துக் கொள்ளப்பட்டது. ஆனால், அமெரிக்காவிற்கும், பாலஸ்தீனத்திற்கும் இடையே உள்ள பெருந்தகராறு தொடப்படவே இல்லை. ஒரு பெரும் தகராறு, சிறுந்தகராறாக குறைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, அவ்வளவுதான்!

டிரான்சென்ட் இயக்கத்திற்கு ஏற்புடைய பேச்சுவார்த்தை முறையினை மென்முறைப் பேச்சுவார்த்தை என அழைக்கலாம். தகராறுக் கட்சிகளுக்கு இடையே, தகராறு சேவகர் என்ற

இணைப்பை நீக்கி, கட்சிகள் இருவரும் ஒருவரோடு ஒருவர் நேரடியான கருத்துப்பரிமாற்றம் செய்வதே, மென்முறை பேச்சுவார்த்தை. இந்த கருத்துப்பரிமாற்றம் இருவருக்கிடையே நிகழ்வது என்றாலும், நான்கு பேர் வரை கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு தரப்பிலும் ஐந்து உறுப்பினர்கள் இருந்தால், ஐந்து ஜோடிகளாகப் பிரிந்து, கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடலாம். மறுநாள், புதிய கூட்டாளி ஒருவரோடு கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடலாம். இப்படி நடத்தப்படும் கருத்துப்பரிமாற்ற ஓடைகள் அனைத்தும் சேர்ந்து, ஒரு புதிய நதியாக உருவெடுக்கக் கூடும். பேச்சுவார்த்தையில் இன்னும் அதிகமானவர்கள் ஈடுபடுவதாகயிருந்தால், நிலைத்த அதிகார மையமோ அல்லது ஓரங்கட்டபட்டவர்களோ இல்லாத முறையில், வட்டமேசைகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தலாம். கால அவகாசம் குறைவாகயிருந்தால், பல மேசைகளில் உறுப்பினர்கள் அமர்ந்து, ஒவ்வொரு குழுவிலும் ஒரு தலைப்புப் பற்றி பேசி, ஒரு பிரதிநிதியின் மூலம் தாம் பேசியவற்றை மொத்தக் குழுவோடு பகிர்ந்து கொள்ளலாம். இந்தப் பேச்சுவார்த்தை நடத்த ஒரு கூட்ட அரங்கம் வசதியாக இருக்கும். பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டால், தகராறு விடயத்தை தற்காலிகமாக தள்ளிவைத்துவிட்டு, வேறு ஏதாவது ஒரு செயல்பாட்டினை செய்து, மொத்தக் குழுவையும் ஒரு நெருக்கத்திற்குள் கொண்டு வருவது சிறப்பாகயிருக்கும்.

ஆப்கானிஸ்தானிலும் அதைச் சுற்றியும் நடக்கும் தகராறுகளைப் பற்றி அலசுவதற்கு பதிலாக, டிரான்சென்ட் பயிலரங்கங்களில் “ஆப்கானிஸ்தானின் எதிர்காலம்” பற்றிப் பேசுகிறோம். இதேபோன்று, மத்திய கிழக்கு தகராறு பற்றி இஸ்ரேல், பாலஸ்தீனம், ஜோர்டான் மற்றும் எகிப்து நாட்டு பத்திரிகையாளருடன் விவாதிப்பதற்கு பதிலாக, நாங்கள் “நான் வாழ விரும்பும் மத்திய கிழக்கு எப்படி இருக்க வேண்டும்” என்னும் தலைப்பில் கருத்துப்பரிமாற்றம் நடத்தினோம். தகராறுகளின் வேதனை ஆன்மாவை அழுத்திக் கொண்டிருக்கும்போது, கடந்தகாலத்தைப் பற்றி அழிவுபூர்வமாக பேசுவதைவிட, எதிர்காலத்தைப் பற்றி ஆக்கபூர்வமாக பேசுவது நல்லது. கடந்தகாலத்தை, சற்றே தாமதித்து காலம் கனியும்போது கவனித்துக் கொள்ளலாம்.

பெரிய இடத்துப் பேச்சுவார்த்தைகளில் உறுப்பினர்கள் இப்படி

செயல்பட விரும்புவார்களா? அல்லது அவர்களால் முடியுமா? இம்மாதிரி பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது, தங்கள் தகுதியை விடத் தாழ்ந்தது என அவர்கள் கருதமாட்டார்களா? சாதாரண இராஜதந்திர உபாயங்களைக் கையாண்டு, கடினமான முறையில் பேச்சுவார்த்தை நடத்துவதே சிறந்தது என அவர்கள் நினைக்கலாம். பேச்சுவார்த்தைகளில் வெற்றி பெறுவதுதான் தமது குறிக்கோளேத் தவிர, கனவுலகில் சஞ்சரிப்பது அல்ல என்று அவர்கள் வாதிடலாம். இம்மாதிரியான மனப்போக்குகள் இருந்தால், தகராறு சேவகரின் உதவியுடன் ஒரு செயல்திட்டம் தயாரிக்கும் கூட்டத்தை நடத்துவது சிறப்பாக இருக்கும்.

ஒருவரையொருவர் தன் வழிக்குக் கொண்டுவர முயற்சிப்பதை விடுத்து, ஒருங்கே பயன்பெறுவதில் தகராறுக் கட்சிகள் கவனம் செலுத்துவது நல்லது. விவாதத்திலிருந்து கருத்துப்பரிமாற்றத்திற்கும், ஆச்சரியக் குறியிலிருந்து கேள்விக் குறிக்கும் மாறுவது குறிக்கோள்களாக அமைய வேண்டும். தனிமனித அடிப்படையில் இது சாத்தியமானதுதான். ஆனால் குழுக்களாக செயல்படும்போது, விரோதத்திலிருந்து ஒற்றுமைக்குச் செல்லமுடிகிறதா என்பது முக்கியமானது.

கருத்துப்பரிமாற்றத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினைக் கடந்து செல்வதுதான் நமது குறிக்கோள். ஓரு நேரத்தில் ஒரு தரப்போடு மட்டும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவது, மற்றும் வெற்றி பெறுவதற்காக கடினப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது எனும் இரு மாறுபட்ட நிலைகளை நாம் காணலாம். இதில் "கடந்து செல்லல்" என்பது ஒருவரோடொருவர் நேரடி கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட்டு, வெற்றி பெறுவதற்காக அன்றி, புதியக் கருத்துகளை உருவாக்குவதற்காக, தனிநபர் நிலையைத் தாண்டி, குழுக்களாக முயற்சிப்பதுதான்.

இந்தக் கருத்துப்பரிமாற்றம் பல்கலைக்கழகக் கருத்தரங்கு போன்றோ அல்லது ஒரு சிறந்த உரையாடலாகவோ அமையலாம். கடினப் பேச்சுவார்த்தையைவிட மென்முறைப் பேச்சுவார்த்தை சிறந்தது. ஆனால், வன்முறையை விட கடினப்பேச்சு வார்த்தை சிறந்தது எனலாம். ஏனென்றால், வார்த்தைகள் கடினமானவையாக, புண்படுத்துபவையாகயிருந்தாலும், அவை உயிருக்கு சேதம் விளைவிப்பதில்லை. பிரச்சினை என்னவென்றால், பேச்சுவார்த்தை நடக்கும்போது, பலரும்

தவறான எதிர்பார்ப்புக்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். அதேபோல, பேச்சுவார்த்தையாளர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தத் தவறுவதும் பிரச்சினையாக இருக்கிறது. சிலநேரங்களில் உணர்வுகள் வெளிப்படுத்தப்படுவது நன்மையாகக்கூட அமையலாம். தகராறுகளை அறிவு ஜீவித்தனமாக மட்டுமே பார்ப்பது சிறந்ததல்ல. இந்த அணுகுமுறை தகராறின் முரண்பாடுகளை நெறிப்படுத்தத் தவறிவிடுகிறது. அதுபோல புரிந்து கொள்ளல் மற்றும் படைப்பாற்றலுக்கும் இதில் இடமிருப்பதில்லை.

# 7

## டிரான்செண்ட் முறை:

### ஒரு மேலோட்டப் பார்வை

ஒரு கிராமப்புற சந்திப்பில் இரு வயோதிகப் பெண்கள் ஒரு லாரியால் இடித்து தள்ளப்படுகிறார்கள். லாரி டிரைவருக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஓரிடம் போய்சேர வேண்டும். அந்தப் பெண்கள் எல்லோரையும்போல சுக வாழ்க்கை வாழ வேண்டும் என விரும்புகின்றனர். இந்தப் பிரச்சினையை நாம் எப்படி எதிர்கொள்வது? கீழ்காணும் நிகழ்வுகளும் வழிகளும் தோன்றுகின்றன:

1. ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் அந்த இரண்டு பெண்களும் இறந்து விடுகின்றனர். நீதிமன்ற வழக்கில் ஓட்டுநர் தண்டிக்கப்பட்டு, விபத்து நடந்த சந்திப்பில் போக்குவரத்துக் குறியீடுகள் பொருத்தப்படுகின்றன.

2. சாலைப் பொறியாளர் வரவழைக்கப்பட்டு, பாதசாரிகள் சாலையைக் கடக்க ஒரு பாலமும், வண்டிகள் பாதுகாப்பாய் செல்ல போக்குவரத்து வளையமும், வேகத் தடைமேடுகளும், புறவழிச்சாலையும் அமைக்கப்படுகின்றன.

3. மொத்த சமூகத்தின் அமைப்பு பற்றி விவாதிக்கப்படுகிறது.

முதலாளித்துவத்தின் அம்சங்கள், குறிப்பாக சாலை வாகனங்கள் பற்றிய விடயங்கள், நுகர்வு கலாச்சாரம், நேரமின்மையின் தாக்கம் போன்றவை விவாதிக்கப் படுகின்றன.

டிரான்சென்ட் முறை இம்மாதிரிச் சூழலை எப்படிக் கையாளும்? இரண்டாவது தெரிவுதான் நமக்கு விருப்பமானதாக இருக்கும். முதலாவது தீர்வு எந்தத் தகராறையும் முழுமையாகத் தீர்க்கவில்லை, வன்முறை நிகழ்ந்த பின்னர், வெறும் சுத்தம் செய்வதில்தான் கவனம் செலுத்துகிறது. மூன்றாவது தெரிவு குறிப்பிட்ட காலவரையறைக்குள் திடமாக எதையும் சாதிக்க உதவும் என்றால், சிறப்பாகவே இருக்கும். ஆனால் இரண்டாவது தெரிவுதான் இங்கேயே இப்போதே ஒரு நிலையான தீர்வுக்கு வழிவகுக்கிறது. இந்த சாலைத் தகராறு கட்சிகளான ஓட்டுநர்களும், பாதசாரிகளும், பொதுத்துறை நிறுவனங்களும், அரசியல் கட்சிகளும் என அனைவருமே ஏற்றுகொள்ளும் தீர்வாக அமைவது நல்லது. நவீன சமூகத்தில், மேற்கண்ட தரப்புக்கள் ஒருவரோடொருவர் நேரடி கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட வாய்ப்பே இல்லை. எதிர்மறைத் தொடர்புகள்தான் விரும்பப்படுகின்றன. இந்நிலையில், “கடந்து செல்லல்” முறைதான் ஒரு பாலமாக அமைகிறது. மேற்குறிப்பிட்ட இரண்டாவது தீர்வில் போக்குவரத்து வேகம் குறைக்கப்படுகிறது, சுற்றுச்சூழல் போற்றப்படுகிறது, செலவு மிச்சப்படுத்தப்படுகிறது, வாகனங்களுக்கு மாற்றுவழிகள் அமைக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட சிறிய வழிகளைப் பெரிதும் ஊக்குவிக்கிறது டிரான்சென்ட். “கடந்து செல்லல்” மற்றும் வாத-எதிர்வாதங்களின், முரண்பாடுகளின் மேல் கட்டப்படுவதால் டிரான்சென்ட் ஒரு மார்க்சீய அமைப்பு போன்றது எனக் கொள்ளலாம். மனித அடிப்படைத் தேவைகளே தம்மை வழிநடத்தும் ஆதாரம் எனக்கொள்வதால் புத்தமத தாக்கமும் டிரான்சென்டில் உள்ளது. பெருந்தகராறுகளுக்கு வழங்கப்படும் தீர்வுகள்கூட புரட்சிகரமானவைகளாக இல்லாமல், படைப்பாற்றல் மிக்கவைகளாகவே உள்ளன. இதன் பின்னணியிலுள்ள மனப்பாங்கு, உலகம் ஒரு மாற்றத்திற்காக ஏங்கி நிற்கும்போது, அதன் பிரச்சினைகளைத் தீர்க்க நல்ல தீர்வுகள் உள்ளன எனக் கொள்வதுதான். தீர்வுகளும் கூட சில சமயங்களில் வேறு பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே, கவனமாக சிறிய

நடவடிக்கைகள் மூலம் உலகை மாற்றுவதுதான் சரியாக இருக்கும் எனத் தோன்றுகிறது. கால அவகாசம் அதிகம் எடுக்கும், மொத்த உலகையும் மாற்ற எத்தனிக்கும் பெரிய திட்டங்கள் சோதிக்கப்படாதவை. அம்முயற்சிகளில் நாம் தவறிழைக்க வாய்ப்புகள் அதிகம். எனவே சிறு நடவடிக்கைகளே சிறந்தவை எனக் கொள்ளலாம்.

உலோகத்தில் பொறிக்கப்பட்ட அல்லது கல்லில் செதுக்கப்பட்ட ஒப்பந்தம் நடைமுறைக்கு ஏற்புடையது அல்ல. ஒரு சிறந்த ஒப்பந்தம் மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு கூட்டமைப்பிலிருந்து உரிய கால அவகாசம் கொடுத்து விட்டு, ஒரு நாடு விலகிச்செல்ல வாய்ப்பளிக்க வேண்டும். அதேபோன்று, கூட்டமைப்புகள் உருவாக்கப்படும்போது, வெளியே செல்லும் வழிமுறைகளும் இணைத்து கொள்ளப்பட வேண்டும்.

இலட்சியங்கள் அடிப்படையானவை. அவைகள்தான் நாம் பயணம் செய்யவிருக்கும் வழிகளை அமைக்கின்றன. ஒரு சிறந்த வரைபடம் போன்று, கொள்கைளும் தேவைப்படுகின்றன. நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள, உரிய தகவல்களும் நமக்குத் தேவை. உண்மையான ஆராய்ச்சி என்பது செயல்பாட்டு ஆராய்ச்சிதான். அரசியல் என்பது மனிதகுல நலத்துக்காக இலட்சியங்களும், கொள்கைகளும் தோய்ந்த ஒரு செயல்பாட்டினை தகுந்த தகவல்களோடு அமைத்துக்கொள்ளும் நடைமுறைதான். இதன் மும்முனைகளாக இலட்சியங்கள், கொள்கைகள், தகவல்கள் அமைகின்றன.

உன்னதமான தகராறு தீர்வுகள் நடைமுறை சாத்தியமா என்று சிலருக்கு சந்தேகம் ஏற்படலாம். எக்குவதார்-பெரு மற்றும் முதலாம் பனிப்போர் போன்ற பல தகராறுகளை இப்படி ஐயத்துடனேயே பலரும் அணுகினர். ஒரு தகராறு மாற்றி அமைக்கப்பட உரிய காலஅவகாசம் தேவை. அடிப்படைமனிதத் தேவைகளில் ஊன்றப்பட்டிருக்கும் தகராறுகள் ஆழமான வேர்களைக் கொண்டவையாக இருக்கும். ஒரு தகராறு சேவகர் தகராறுகளைக் கடந்து செல்லும் நல்ல விதையினைத் தூவி, மாற்றுக் கருத்துக்கள் கொண்ட செடியாக அதனை ஓங்கி வளரச் செய்து, அத்தகராறின் முரண்பாடுகளை நீக்க முயல்கிறார்.

கருத்துக்கள் விதைகள் போன்றவை தகராறு கட்சிகளின் சீரிய

உலகிலிருந்து இவை எழுகின்றன. தகராறு சேவகர் இவற்றை ஒருங்கிணைத்து, புதிய கலப்பினை உருவாக்குகிறார். இம்முயற்சியில் சமாதான இதழியல் மற்றும் சமாதான கல்வி போன்ற முயற்சிகளில் தண்ணீர் ஊற்றப்படுகிறது. புரிந்துகொள்ளலுடன் கூடிய படைப்பாற்றல் மிக்க ஒரு கருத்து, அஹிம்சை வழியில் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், அந்த கருத்தும் அதைச் சார்ந்த சரத்துக்களும் பொதுவாழ்வில் இடம்பெறக் கூடியத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். பொது விவாதத்தினால் அது பயன்பெற வேண்டும். மூடப்பட்ட கதவுகளின் பின்னால் உருவாக்கப்படும் கருத்துக்கள் சிறந்தவையாக இருக்க வாய்ப்பில்லை. பொதுவாழ்விலும், ஊடகங்களிலும், சட்டமன்றங்களிலும் மற்றும் நாடாளுமன்றங்களிலும் புது கருத்துக்கள் மலர, அவை முறையாகத் தோற்றுவிக்கப்பட்டு முழுமையாக விவாதிக்கப்பட வேண்டும். தகுந்த வார்த்தைகளால் அவைச் செதுக்கப்பட வேண்டும். ஷோப்பன்ஹாவர் (*Schopenhaver*) என்பவர் சொன்னது போல, எந்த ஒரு புதிய சிந்தனையும் முதலில் கேலி செய்யப்பட்டு, பின்னர் எதிர்க்கப்பட்டு, அதன் பிறகுதான் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தப் புத்தகம் எதிரும் புதிருமான இரண்டு எதிர் கோடி நிலைகளை ஒதுக்கிவிட்டு, இடைப்பட்ட நிலைகளை மாற்றியமைத்து, தகராறைக் கடந்து செல்வது பற்றியதாகும். தகராறுகள் எப்போதுமே இரண்டு கட்சிகளை மட்டுமேக் கொண்டிருப்பதாக பாவிக்காது, எதிர்கோடி நிலைகளை வரைப்படத்தில் குறியிட்டு, பிற நிலைகளில் எப்படி படைப்பாற்றலுடன் தீர்வுகள் காணலாம் என்பதைப் பற்றி சிந்திப்பதே சிறந்தது.

ஒரு தகராறில், தீவிரவாதிகள் தெளிவான இலக்குகள் கொண்டவர்களாகத் தோன்றுகின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் நிலையில் வன்முறை எளிதில் தலைதூக்கி விடுகிறது. தீவிரவாதிகள் அளிக்கும் தீர்வினைத் தாண்டி செல்வது இன்றியமையாதது. வன்முறை நீடித்த நிலைத்த தீர்வுக்கு உதவாது. தகராறை மாற்றியமைத்து கடந்து செல்வது முக்கியமாகிறது.

இதற்கு தன்னம்பிக்கையும், சீரிய சிந்தனையும், நடைமுறை யதார்த்தமும், படைப்பாற்றலும், காலக்கண்ணோட்டமும் தேவை.

டிரான்செண்ட் கொள்கைப்படி, தன்னைத்தவிர, பிறரையும், பிறவற்றையும் மட்டும் மாற்றியமைத்து கடந்து செல்லும் கொள்கையுடையவர் சிறந்த தகராறு சேவகராக விளங்க முடியாது. யதார்த்தத்தைக் கண்டறிந்து, சமூகவியல் கோட்பாடுகளை உபயோகித்து, ஒரு புத்தக வடிவில் அறியத்தருபவர் ஓர் அறிவுஜீவியாக இருக்கலாமேயொழிய தகராறு சேவகராக இருக்க முடியாது. தகராறு தீர்க்கும் பயிற்சியில் நிச்சயமாக செய்யப்படவேண்டிய வேலை, புதிய யதார்த்தங்களை உருவாக்கு வதுதான். இதற்கு கூரியநோக்கும், நீண்டதூரப் பார்வையும் தேவை. சர்வதேச நல்லுறவு பற்றிய ஆராய்ச்சியாளர், உலகில் எண்ணற்ற தரப்புகள் இருப்பதையும், அவற்றுள் அரசு இயந்திரங்கள் சிறுபான்மைதான் என்பதையும், பெரும்பான்மையோர் சாதாரண மக்கள் என்பதையும் உணரவேண்டும்.

2002ஆம் ஆண்டு, ஜனவரி 19ம் தேதி டென்மார்க் நாட்டின் பத்திரிகை ஒன்றில் ஒரு செய்தி வெளிவந்தது. ஐரோப்பிய யூனியன் அமைப்பிற்கு டென்மார்க் தலைமைதாங்கவிருப்பதால், அங்கு நடைபெறும் கூட்டங்களை எதிர்த்து வன்முறை போராட்டங்கள் நடக்கலாம். அதனை எதிர்கொள்ள 4000 காவல்துறை அதிகாரிகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். ஏராளமான பொருட்செலவில் அதற்கான உபகரணங்கள் வாங்கப்படவிருக்கின்றன என்று அந்த செய்தி கூறியது. உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், ஐரோப்பிய யூனியன், வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஜி8 போன்ற அமைப்புக்கள் நடத்தும் கூட்டங்களின் முன்னால் ஏன் இத்தனை வன்முறைப் போராட்டங்கள் நடக்கின்றன? ஏனென்றால், அவை அனைத்தும் பணக்காரர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளும் இரகசியக் கூட்டங்கள். அவர்கள் அமைதியாக செயல்பட விரும்பும் அதேநேரத்தில், அவர்களால் ஆளப்படும் அல்லது ஆட்டுவிக்கப்படும் மக்கள் தங்கள் கருத்துக்களும் கேட்கப்பட வேண்டும் என விரும்புகிறார்கள். இந்தப் பிளவினை அல்லது கொள்கை வேறுபாட்டை எப்படி இணைப்பது? 1972ம் ஆண்டு ஸ்டாக்ஹோம் (Stockholm) நகரில் நடந்த சுற்றுச்சூழல் மாநாட்டிலிருந்து, ஐக்கிய நாடுகள் சபை ஒரு சிறந்த முறையைப் பின்பற்றி வருகிறது. அதாவது, அரசாங்கங்களின் மாநாடு நடக்கும் போது, அதேத் தலைப்பில் பொதுமக்கள் மாநாடு ஒன்றையும் ஐ.நா நடத்துகிறது. ஆனால் இந்த ஐ. நா. முறையினை

உலக வங்கி நடைமுறைப்படுத்த மறுக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை சனநாயகம் வளர உதவும்போது, உலக வங்கியும், உலக வர்த்தக நிறுவனமும், ஐரோப்பிய யூனியனும், வளர்ச்சியடைந்த நாடுகளின் G-8 கூட்டமைப்பும், நிலபிரபுத்துவ முதலாளித்துவ கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

இன்னொரு உதாரணத்தைப் பார்ப்போம். கத்தோலிக்க கிறிஸ்தவமும், புராட்டஸ்டண்ட் கிறிஸ்தவமும் நீண்ட நெடுங்காலமாக மோதிக் கொண்டிருக்கின்றன. கத்தோலிக்கர்கள் இரட்சிப்புக்கு வழி கடவுள் நம்பிக்கையும், நற்செயலும்தான் என்று நம்புகிறார்கள். ஆனால், புராட்டஸ்டண்ட் மதம் போப்பாண்டவருக்கு எதிராக அணித்திரண்டது. இவர்களின் விரோதம் 1618ம் ஆண்டு முதல் 1648ம் ஆண்டு வரை 30 ஆண்டுப் போராக நடந்தது. இந்த மதத் தகராறு கடவுளின் சித்தத்தை சரியாக தெரிந்து கொள்வது எப்படி என்பது பற்றியதாகும்.

இந்தத் தகராறுகள் மூலம் நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால் பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமோ, உட்பக்கத்தையோ, வெளிப்பக்கத்தையோ பார்ப்பதற்கு பதிலாக, மேலிருந்து மொத்தத்தையும் பார்ப்பதற்கு நாம் பழக வேண்டும். டிரான்சென்ட் முறை சமாதானத்தின் வழியாக சமாதானத்தை உருவாக்க முயல்கிறது. பத்து வருட அனுபவத்தின் மூலமாக, கீழ்காணும் அம்சங்கள் கண்டுணரப்படுகின்றன. ஒரு தகராறில் வன்முறை நிகழ்வதற்கு முன்பு துருவமயமாக்கலும், கட்சிகளின் மனிதாபிமானம் மறுக்கப்படுவதும் நிகழ்கின்றன. வன்முறை, மேலும் வன்முறைக்கு வழிவகுக்கிறது. பழிவாங்கும் உணர்வுகளை தவிர்த்து, இந்தத் தொடர் நிகழ்வுகளை நிறுத்துவது எப்படி என்பதைப்பற்றி சிந்திக்க வேண்டும் டிரான்சென்ட் அமைப்பில் கீழ்காணும் நான்கு திட்டங்கள் இடம் பெறுகின்றன:

1. தகராறு மாற்றியமைத்தல்.
2. துருவமயமாக்கலுக்கும், மனிதநேய மறுத்தலுக்கும் எதிரான சமாதானக் கட்டுமானம்.
3. வன்முறையை தவிர்த்து, மென்முறைகள் மூலம் சமாதானம் பேணல்.
4. வன்முறையை தவிர்த்து ஆற்றுபடுத்துதல், மீளிணக்கம் ஏற்படுத்துதல்.

இந்த குறிக்கோள்களுக்காக பாடுபடும் உபகரணங்களாக சமாதான இதழியல், சமாதான கல்வி போன்றவை அமைகின்றன. இந்தத் தகராறு தீர்க்கும் பணி மிகவும் ஈடுபாடு உடையது என்றும் இதில் அனைவரும் பங்கேற்கலாம் என்றும் நூலாசிரியர் உறுதியாக நம்புகிறார். மேலும் விவரங்கள் www.transcend.org எனும் இணையதளத்தில் உள்ளன.

இறுதியாக ஒரு முக்கியமான விடயம். அனைத்து முரண்பாடுகளையும், ஒவ்வாமைகளையும் நாம் கடந்துசெல்ல முடியாது. இரண்டு ஒவ்வாத கருத்துக்களோடு மோதிக்கொள்ள நேரும்போது, மூன்றாவது வாய்ப்பினைப் பற்றி சிந்திக்கலாம். அதாவது, இந்த முரண்பாட்டோடு தொடர்ந்து வாழ்ந்து, அதற்கு பலியாகாமல் “கடந்து செல்லல் நோக்கி” பயணிக்கலாம்.

இவ்வுலகில் இத்தனை தீமைகளை கடவுள் ஏன் உருவாக்கினார்? நம்மை தண்டிப்பதற்காகவா? அல்லது ஏதாவது கற்பிப்பதற்காகவா? அல்லது இவையனைத்தும் சாத்தானின் செயல்பாடுகளா என சிந்திக்கத் தோன்றுகிறது. ஒரு புத்தமதகுரு, புத்த மதத்தில் இருவேறு கொள்கைகளின் முரண்பாடு இருப்பதைச் சுட்டிக் காட்டினார்: “ஒருவருக்கு நிரந்தர ஆன்மா இல்லை என்று போதிக்கும் புத்தமதம், மரணத்திற்கு பின்பு மறுபிறவி இருக்கிறது என்றும் சொல்கிறது. இந்த முரண்பாட்டோடு தொடர்ந்து வாழ்ந்து, கடந்து செல்லலுக்கு முயல வேண்டும். ஆனால் எளிதான பதிலுக்கு இரையாகக் கூடாது. நிரந்தர ஆன்மா கிடையாது என நம்பினால், நாம் கடவுள் நம்பிக்கை அற்றவராக ஆகிவிடுகிறோம். மறுபிறவி குறித்து ஆழமாக நம்பினால், சொர்க்கம் நரகம் இவற்றில் நம்பிக்கைக் கொள்ளும் கிறிஸ்தவ, முஸ்லீம் மத நம்பிக்கைக்கு மாறுகிறோம்.” இதிலிருந்து நாம் படிக்கும் பாடம், முரண்பாடுகளுடன் மனிதர்கள் வாழமுடியும் என்பதுதான்.

ஒருவர் தனது குழந்தைகள் மூலமும், தனது உழைப்பின் பலன்கள் மூலமும், தான் விட்டுச்செல்லும் நினைவுகளின் மூலமும், பிற மனிதர்களுக்கு அவர் வழங்கிய உந்து சக்தியின் மூலமும் திரும்பப் பிறக்கிறார். இந்த மறுபிறப்பு உயர்ந்த நிலையிலோ, அல்லது தாழ்ந்த நிலையிலோ நடக்கலாம். மனிதர்களின் கடமை உயர்ந்த நிலையில் திரும்பப் பிறக்க முயல்வது தான்.

தகராறு கடக்கும் பயிற்சி உயர்ந்த நிலையில் அமைகிறது.

ஏனென்றால் இது மனித குலத்தின் தகராறுகளை சுமூகமாக, வன்முறையின்றி தீர்த்துவைக்கும் ஓர் உன்னதமான மக்கள் பணியை மேற்கொள்கிறது. தகராறுகளை எப்படிக் கையாளலாம் என அறிந்திருக்கும் நீங்கள், இப்போதிருந்தே இந்த சீரிய பணியைத் துவங்குங்கள்.

# 8

## திருக்குறளும் தகராறுத் தீர்வுகளும்... வள்ளுவரோடு ஓர் அளவளாவல்

சுப. உதயகுமாரன்

உதயகுமாரன்: வணக்கம் அய்யனே! தமிழகத்தின் தென்கோடியில் வாழும் ஒரு தமிழ்மைந்தன் நான். சமூகநீதி, தகராறு, சமாதானம் பற்றியெல்லாம் பயிலும் ஒரு மாணாக்கன். இவை பற்றி தமிழ்மறையாம் தங்கள் நூலின் கருத்துக்களைக் கற்றுணர்ந்து தமிழ் இளைஞர்களுக்கு சொல்லும் ஆவலோடு தங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

வள்ளுவர்: வாருங்கள், மகனே! வணக்கம்! வழக்கும், பிணக்கும், சண்டையும், சமரும் நிறைந்து கிடக்கும் இன்றைய உலகுக்கு உங்கள் முயற்சி உத்தமமானதுதான்.

உதயகுமாரன்: மனக்கிலேசங்களும், கருத்து வேறுபாடுகளும், கொள்கை மோதல்களும், வாழ்வின் இலக்குகளில் தர்க்கங்களுமாய், எங்கு நோக்கினும் ‘தகராறு’ தனிமனித வாழ்வை நிழலாய் தொடர்கிறதே?

வள்ளுவர்: “ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.” (கு.662)

அதாவது அப்பனே,



வினைத்திட்பம் பற்றி ஆய்ந்தவர் கொள்கை இடையூறு வருவதற்கு முன்பே நீக்குதல், வந்தபின் தளராமை ஆகிய இரண்டினது வழியேயாகும்.

உதயகுமாரன்: ‘செய்வதா, வேண்டாமா’ என்பது போன்ற தனிமனித தர்மசங்கடங்களால் இடையூறு வராமல் செய்வது எப்படி ஐயா?

வள்ளுவர்: மிக எளிது.

“குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்”. (கு.504)

குணங்களையும், குற்றங்களையும் தெரிந்து, எது அதிகமெனத் தெளிந்து, மிகுந்திருப்பவற்றால்

தேர்ந்து கொள்க.

உதயகுமாரன்: கேட்பதற்கு எளிதாகத் தோன்றினாலும், ஒரு செயலின் குணம் குற்றம் எவையென எப்படித் தெரிவது?

வள்ளுவர்: “முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.” (கு.676)

செயலை முடிக்கும் வகையும், வரக்கூடிய இடையூறும், முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயனும் எவையென ஆராய்ந்து செய்ய வேண்டும். அதே போன்று

“பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.” (கு.675)

வேண்டிய பொருள், ஏற்றக் கருவி, தக்கக் காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

உதயகுமாரன்: “வினைத்திட்பம் வேண்டாரை வேண்டாது உலகு.” (குறள்:670) எனத் தாங்கள் சொன்னாலும் செய்யும் வினைகளால் சில சமயம் விபரீதங்கள் எழுகின்றனவே?

வள்ளுவர்: “ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.” (கு.656)

பெற்றத் தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக்கூடாது.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதாக இருந்தால், சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா செய்யாமை மாசற்றார் கோள்.” (கு.311)

சிறப்பைத் தருகின்ற பெருஞ்செல்வத்தைப் பெறுவதாக இருந்தாலும் பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே மாசற்றவரின் கொள்கையாகும்.

உதயகுமாரன்: சான்றோர் வழிநின்று, பிறருக்கு இன்னா செய்யாமல் வாழ்ந்தபோதும், பிறர் இன்னா செய்யும்போது என் செய்வது அய்யனே?

வள்ளுவர்: "இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்." (கு.314)

இன்னா செய்தவரைத் தண்டித்தல், அவரே நாணும்படியாக அவருக்கு நல்லுதவி செய்து, அவருடைய தீமையையும், நன்மையையும் மறந்து விடுதல் ஆகும்.

"செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை." (கு.488)

பகைவரைக் கண்டால் பொறுத்துச் செல்ல வேண்டும்; அப்பகைவருக்கு முடிவுகாலம் வந்தபோது அவருடைய தலை கீழே விழும்.

உதயகுமாரன்: இந்த சிறுமதி செறுநரின் சச்சரவுகளும், சவால்களும், சண்டைகளும், தொந்தரவுகளும் துன்புறுத்தும்போது நன்னயம் செய்வதும் வாளாவிருப்பதும் எப்படி முடியும்?

வள்ளுவர்: "உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்." (கு.160)

உணவு உண்ணாமல் நோன்பு கிடப்பவர், பிறர் சொல்லும் கொடுஞ்சொற்களைப் பொறுப்பவருக்கு அடுத்த நிலையில் தான் பெரியவர் ஆவார்.

பொறுமையாக இருப்பது போலவே,

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு." (கு.190)

அயலாருடையக் குற்றத்தைக் காண்பது போல் தம்குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர்வாழ்க்கைக்கு துன்பம் உண்டோ?

உதயகுமாரன்: தகராறினைக் கடந்து பொருந்துமாறு போக கருத்துப் பரிமாற்றம் தேவையெனில், அதன்

அடிப்படைகள் பற்றி சொல்வீர்களா ஐயா?

வள்ளுவர்: "சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்." (கு.200)

சொற்களில் பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும், பயன் இல்லாதவைகளாகிய சொற்களை சொல்லக் கூடாது.

"திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல்." (கு.644)

சொல்லின் திறத்தை அறிந்து சொல்லை வழங்க வேண்டும் அத்தகைய சொல்வன்மையை விடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

உதயகுமாரன்: பயனுடைய திறனுடையச் சொற்கள்...

வள்ளுவர்: பொறுங்கள், பொறுங்கள்! முகனமர்ந்து 'இன்சொலனாக' இருப்பது இன்றியமையாதது.

"அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின்." (கு.92)

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது." (கு.99)

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றிற்கு மாறான வன் சொற்களை வழங்குவது என்ன பயன் கருதியோ?

உதயகுமாரன்: தாங்கள் கூறியபடி பயனுடைய, திறனுடைய, இன்சொல் கூற என்ன செய்ய வேண்டும் அய்யனே?

வள்ளுவர்: "நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய வாயின ராதல் அரிது." (கு.419)

நுட்பான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத

மற்றவர், வணக்கமான சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.

உதயகுமாரன்: கேட்பது அவ்வளவு இன்றியமையாததா?

வள்ளுவர்: "செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை". (கு.411)

செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும் அச்செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

உதயகுமாரன்: கேட்பதற்கும் அறிவுக்கும் என்ன தொடர்பு?

வள்ளுவர்: "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (கு.423)

எப்பொருளை யார் யாரிடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

உதயகுமாரன்: பிறர் கருத்துக்களைக் காண்பது எப்படி நமது அறிவாகும்?

வள்ளுவர்: "நுண்ணியம் என்பார் அளக்குங்கோல்
காணுங்கால் கண்ணல்லது இல்லை பிற." (கு.710)

"யாம் நுட்பமான அறிவுடையேம்" என்று பிறர் கருத்தை அறிபவரின் அளக்குங் கோல், ஆராய்ந்து பார்த்தால் அவருடைய கண்களே அல்லாமல் வேறு இல்லை.

"பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம் கண்ணோட்டம் இல்லாத கண்." (கு.573)

பாடலோடு பொருந்துதல் இல்லையானால் இசை என்ன பயனுடையதாகும்? அதுபோல், கண்ணோட்டம் இல்லா விட்டால் கண் என்ன பயனுடையதாகும்?

உதயகுமாரன்: ஒரு தகராறினைக் கடந்து செல்வதற்கு வேறென்ன திறமைகள் வேண்டும்?

வள்ளுவர்: “இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.” (கு.308)

பல சுடர்களை உடைய பெருநெருப்பில் தோய்வது போன்ற துன்பத்தை ஒருவர் செய்தபோதிலும், கூடுமானால் அவர்மேல் சினங் கொள்ளாதிருத்தல் நல்லது.

“நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.” (கு.304)

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?

“உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.” (கு.596)

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும் அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

உதயகுமாரன்: குறள் 35ல் தாங்கள் சொல்லியிருப்பதுபோல, “அழுக்காறு, அவாவெகுளி, இன்னாச்சொல்” (பொறாமை, ஆசை, கோபம், தவறான வார்த்தைகள்) இவை நான்கிற்கும் இடம்கொடாமையே அறமாகிவிடுமா?

வள்ளுவர்: “நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.” (கு.324)

நல்ல வழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எதுவென்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

“தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.” (கு.327)

தன் உயிர் உடம்பிலிருந்து நீங்கிப் போவதாக நேர்ந்தாலும், அதைத் தடுப்பதற்காக வேறோர்

உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது.

“உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.” (கு.261)

தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்தலும், மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும்.

“அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.” (கு.501)

அறம், பொருள், இன்பம், உயிர்க்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே ஒருவன் (ஒரு தொழிலுக்கு உரியவனாகத்) தெளியப்படுவான்.

உதயகுமாரன்: சொல்லாமை, உயிரச்சம் தவிர அகிம்சையின் அம்சங்கள் என்னென்ன?

வள்ளுவர்: “அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.” (கு.151)

தன்னை வெட்டுவோரையும், விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

“திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.” (கு.157)

தகுதி அல்லாதவைகளைத் தனக்குப் பிறர் செய்த போதிலும், அதனால், அவர்க்கு வரும் துன்பத்திற்காக நொந்து, அறம் அல்லாதவைகளைச் செய்யாதிருத்தல் நல்லது.

“இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.” (கு.987)

துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யாவிட்டால், சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்.

உதயகுமாரன்: கொல்லாமை, பொறையுடைமை, சான்றாண்மை உதவியுடன் தகராறுகளைக் கடந்து உறவுகள் பொருந்துமாறு வாழ வேறு என்னென்ன செய்ய வேண்டும் ஐயா?

வள்ளுவர்: முதலாவதாக, பிறர்க்கு தீயவை செய்யாதிருக்க வேண்டும்.

“அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.” (கு.203)

தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யமலிருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவர்.

“மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.” (கு.204)

பிறனுக்குக் கேட்டைத் தரும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக்கூடாது. எண்ணினால், எண்ணியவனுக்குக் கேடு விளையுமாறு அறம் எண்ணும்.

“தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.” (கு.464)

இழிவு தருவதாகிய குற்றத்திற்கு அஞ்சுகின்றவர் (இன்ன ஊதியம் பயக்கும் என்னும்) தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார்.

“செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.” (கு.302)

(தன்னைவிட வலியவரடங்கிய) பலிக்காத இடத்தில் சினம் கொள்வது தீங்கு (மெலியவரை உள்ளடக்கிய) பலிக்கும் இடத்திலும் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்கவேண்டும்.

மூன்றாவதாக, தனது இலக்குகள் பூர்த்திச் செய்யப்படும் பட்சத்தில் (குறை பெறின்), வலியாரொடு சமரசமாகப் போய்விடுவது சிறப்பு.

“உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக்

குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.” (கு.680)

வலிமை குறைந்தவர், தம்மைச் சார்ந்துள்ளவர் நடுங்குவதற்காகத் தாம் அஞ்சி, வேண்டியது கிடைக்குமானால் வலிமைமிக்கவரைப் பணிந்தும் ஏற்றுக்கொள்வர்.

நான்காவதாக, பழிநாணுதல் ஓர் இன்றியமையாத அம்சமாகும்.

“தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்

கொள்வர் பழிநாணு வார்.” (கு.433)

பழி நாணுகின்ற பெருமக்கள் தினையளவாகிய சிறு குற்றம் நேர்ந்தாலும், அதைப் பனையளவாகக் கருதிக் (குற்றம் செய்யாமல்) காத்துக்கொள்வர்.

உதயகுமாரன்: ஒரு தகராறைக் கடந்து செல்லும்போதோ, பொருந்துமாற்றுக்கு மாற்றியமைக்கும் போதோ தடைகள் வந்துற்றால் என்ன செய்வது?

வள்ளுவர்: நான்கு விடயங்களைச் சொல்லலாம். ஒன்று, தகராறை முற்றிலுமாகத் தீர்த்துக் கொள்ளவேண்டும்.

“வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.” (கு.674)

செய்யத் தொடங்கிய செயல், கொண்ட பகை என்று இவ்விரண்டின் குறை, ஆராய்ந்து பார்த்தால், தீயின் குறை போல் தெரியாமல் வளர்ந்து கெடுக்கும்.

இரண்டு, தகராறின் வலிமை, கட்சிகளின் வலிமை பற்றியெல்லாம் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.” (கு.471)

செயலின் வலிமையும், தன் வலிமையும்,

பகைவனுடைய வலிமையும் இருவர்க்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

மூன்று, உரிய காலத்தினை தேர்ந்து செயல்படுவது மிக முக்கியம்.

"பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது." (கு.481)

காக்கை தன்னைவிட வலிய கோட்டானைப் பகலில் வென்று விடும். அதுபோல் பகையை வெல்லக் கருதும் அரசர்க்கும் அதற்கு ஏற்ற காலம் வேண்டும்.

நான்கு, எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்களையும் அறிந்து காத்துக்கொள்வது சிறப்பானது.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்." (கு.429)

வரப்போவதை முன்னே அறிந்து காத்துக் கொள்ளவல்ல அறிவுடையவர்க்கு, அவர் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஒன்றும் இல்லை.

உதயகுமாரன்: தகராறு கடந்து பொருந்துமாறு போகும்போது என்னென்ன செய்ய வேண்டும்?

வள்ளுவர்: இதற்கும் நான்கு அம்சங்களைச் சொல்லலாம். ஒன்று, தீங்குகளை மறந்து விடுவது.

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று." (கு.152)

வரம்பு கடந்து பிறர் செய்த தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்துவிடுதல் பொறுத்தலைவிட நல்லது.

இரண்டு, நன்றி பாராட்டி, நன்மைகளை நினைத்துக் கொள்வது.

“கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.” (கு.109)

முன்பு உதவி செய்தவர் பின்பு கொன்றாற் போன்ற துன்பத்தைச் செய்தாரானாலும், அவர் முன் செய்த ஒரு நன்மையை நினைத்தாலும் அந்தத் துன்பம் கெடும்.

மூன்று, மனதில் மாசற்றவராய் இருப்பது.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீர பிற.” (கு.34)

ஒருவன் தன் மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை.

நான்கு, பகைவரை பொருந்துமாறு சேர்த்துக் கொள்வது.

“நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஓட்டாரை ஒட்டிக் கொளல்.” (கு.679)

பகைவராக உள்ளவரைப் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளல், நண்பர்க்கு உதவியானவற்றைச் செய்தலைவிட விரைந்து செய்யத்தக்கதாகும்.

உதயகுமாரன்: தகராறு தீர்ப்பார் என்னென்ன குணங்கள் பெற்றிருக்க வேண்டும்?

வள்ளுவர்: ஒரு பக்கமும் சாயாது, நடுநிலை தவறாது, ஆராய்ந்தறிந்து, எதிர்காலத்தை மனதிற்கொண்டு செயல்பட வேண்டும் தகராறு தீர்ப்பவர்.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.” (கு.118)

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர் தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து, ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

“நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.” (கு.113)

தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவுநிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.” (கு.541)

யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல், நடுவுநிலைமை பொருந்தி, (செய்யத்தக்கதை) ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும்.

“அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.” (கு.427)

அறிவுடையவர் எதிர்காலத்தில் நிகழப்போவதனை முன்னே எண்ணி அறியவல்லார்; அறிவில்லாதவர் அதனை அறிய முடியாதவர்.

“உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து” (கு.950)

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அருகிருந்து கொடுப்பவன் என்று மருத்துவ முறை அந்த நான்குவகைப் பாகுபாடு உடையது. தகராறு தீர்ப்பார் மருத்துவராகவும் (தீர்ப்பான்), அருகிருந்து மருந்தினைக் கொடுப்பவராகவும் (உழைச் செய்வான்) செயல்பட வேண்டும்.

உதயகுமாரன்: நாடுகளுக்குள்ளும், நாடுகளுக்கிடையேயும் எழும் தகராறுகள் பற்றி தங்கள் கருத்து என்ன?

வள்ளுவர்: “பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு.” (கு. 735)

பலவகையாக மாறுபடும் கூட்டங்களும்,

உடனிருந்தே அழிவு செய்யும் பகையும், அரசனை வருத்துகின்ற கொலைத் தொழில் பொருந்திய குறுநில மன்னரும் இல்லாதது நாடு.

“உறுபசியும் ஒவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.” (கு.734)

மிக்க பசியும், ஓயாத நோயும், (வெளியே இருந்து வந்து தாக்கி) அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல வகையில் நடைபெறுவதே நாடாகும்.

“பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.” (கு.738)

நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.

உதயகுமாரன்: தமிழ் கலாச்சாரத்தின் ‘வீரம்’ தகராறு-பொருந்து மாறு தொடர்பில் என்ன பங்களிக்க முடியும்?

வள்ளுவர்: “பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.” (கு.773)

பகைவரை எதிர்க்கும் வீரத்தை மிக்க ஆண்மை என்று கூறுவர். ஒரு துன்பம் வந்தபோது பகைவர்க்கும் உதவி செய்தலை அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.

உதயகுமாரன்: இல்வாழ்க்கையில் தகராறு (துனி, புலவி) பற்றி அறிவுரை சொல்வீர்களா ஐயா?

வள்ளுவர்: இல்வாழ்வில் பிணக்குகள் தேவை. உப்பைப் போன்று உபயோகித்து, ஊடியவரிடத்து அன்பு செய்து, தேவையற்ற நேரத்தில் பிணக்குகள் தவிர்த்து வாழ்வதே சிறப்பு.

“துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.” (கு.1306)

பெரும்பிணக்கும் சிறுபிணக்கும் இல்லாவிட்டால்,

காமம் மிகப் பழுத்த பழமும் முற்றாத இளங்காயும் போல் பயன்படாததாகும்.

“உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.” (கு.1302)

உப்பு, உணவில் அளவோடு அமைந்திருப்பதைப் போன்றது ஊடல்; ஊடலே அளவுகடந்து நீட்டித்தல், அந்த உப்பு சிறிதளவு மிகுதியாக இருப்பதைப் போன்றது.

“ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.” (கு.1304)

பிணங்கியவரை ஊடலுணர்த்தி அன்பு செய்யாமலிருத்தல், முன்னமே வாடியுள்ள கொடியை அதன் அடியிலே அறுத்தல் போன்றது.

“தினைத்துணையும் ஊடாமை வேண்டும்
பனைத்துணையும்
காமம் நிறைய வரின்.” (கு.1282)

காமம் பனையளவாக நிறைய வரும்போது காதலரோடு தினையளவாகச் சிறிதேனும் ஊடல் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

உதயகுமாரன்: இறுதியாக, தகராறு குறித்த தங்கள் அறிவுரைகள் என்ன?

வள்ளுவர்: “இளைதாக முள்மரம் கொல்க களையுநா
கைகொல்லும் காழ்த்த விடத்து.” (கு.879)

முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்ட வேண்டும், காழ்ப்பு ஏறி முதிர்ந்தபோது வெட்டுகின்றவரின் கையையே அது வருத்தும்.

“அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.” (கு.75)

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.” (கு.80)

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்; அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும்.

உதயகுமாரன்: குறள் வழிநின்று, தகராறுகளைக் கையாள்வது குறித்து அறிவுரைத்தமைக்கு மிக்க நன்றி, ஐயனே!

வள்ளுவர்: வாழ்க!

“செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி.” (கு.40)

ஒருவன் வாழ்நாளில் முயற்சி மேற்கொண்டு செய்யத்தக்கது அறமே. செய்யாமல் காத்துக் கொள்ளத் தக்கது பழியே.

(உரை நன்றி: டாக்டர் மு. வரதராசனார், திருக்குறள் தெளிவுரை. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1949.)

# அருஞ்சொற்றொடர்

| | |
|---|---|
| Arbitration | - நடுவர் மன்றம் |
| Attitude | - மனப்பாங்கு |
| Behavior | - செயல்பாடு |
| Closure | - முடித்துக்கொள்ளுதல் |
| Compromise | - ஒத்திசைவு |
| Conciliation | - இணக்கம் |
| Conflict | - தகராறு |
| Meta-conflict | - மேல்மட்டத் தகராறு |
| Root-conflict | - அடிப்படைத் தகராறு |
| Micro-conflict | - சிறுதகராறு |
| Meso-conflict | - குறுந்தகராறு |
| Macro-conflict | - பெருந்தகராறு |
| Mega-conflict | - மாபெரும் தகராறு |
| Conflict management | - தகராறு மேலாண்மை |
| Conflict resolution | - தகராறு தீர்வு |
| Conflict transformation | - தகராறு மாற்றியமைத்தல் |
| Conflict worker | - தகராறு சேவகர், தகராற்று வல்லுநர் |

| | |
|---|---|
| Contradiction | - முரண்பாடு |
| Creativity | - படைப்பாற்றல் |
| Deep behavior | - ஆழ்செயல்பாடு |
| Deep culture | - ஆழ்கலாசாரம் |
| Deep structure | - ஆழ்கட்டமைப்பு |
| Diagnosis | - ஆராய்ந்துணர்தல் |
| Dialogue | - கருத்துப்பரிமாற்றம் |
| Dualism | - இருமை |
| Empathy | - பரிவுணர்வு |
| Freedom | - சுதந்திரம் |
| Goal | - இலக்கு |
| Healing | - ஆற்றுப்படுத்துதல் |
| Identity | - அடையாளம் |
| Interest | - ஆர்வம் |
| Litigation | - வழக்காடுமன்றம் |
| Mediation | - சமரசம் |
| Negotiation | - பேச்சுவார்த்தை, பேரப்பேச்சு |
| Peacekeeping | - சமாதானப்பேணல் |
| Peace research | - சமாதான ஆய்வு |
| Position | - நிலைப்பாடு |
| Prognosis | - முன்னறிவித்தல் |
| Reconciliation | - மீளிணக்கம் |
| Referendum | - கருத்துக்கணிப்பு |
| Survival | - உயிர்வாழ்தல் |
| Symmetry | - சமச்சீர்மை |
| Therapy | - நிவாரணம் |

| | | |
|---|---|---|
| Transcend | - | கடந்து செல்லல் |
| Transcendence | - | காலாதீதம் |
| Wellbeing | - | நல்வாழ்வு |

# பிறநூல்கள்


Edward E. Azar, and John W. Burton, eds., International Conflict Resolution: Theory and Practice. Boulder, CO: Rienner, 1986.

David Barash and Charles Webel, Peace and Conflict Studies. Thousand Oaks, CA: Sage Publications, 2002.

Benyamin Chetkow-Yannov, Social Work Approaches to Conflict Resolution: Making Fighting Obsolete. Binghamton, NY: The Haworth Press, 1996.

Adam Curle, Another Way: Positive Response to Contemporary Violence. Oxford: Jon Carpenter, 1995.

Edward de Bono, The Use of Lateral Thinking. London: Penguin, 1971.

Edward de Bono, Conflicts, A Better Way to Solve Them. London: Penguin, 1985.

Dietrich Fischer, Nonmilitary Aspects of Security: A Systems Approach. Aldershot: Dartmouth, 1993.

Roger Fisher and William Ury, Getting to YES: Negotiating Agreement without Giving in. New York: Penguin, 1991.

George Fuller, The Negotiator's Handbook. Paramus, NJ: Prentice Hall, 1991.

Johan Galtung, There Are Alternatives! Four Roads to Peace and Security. Nottingham: Spokesman Press, 1984.

Johan Galtung, Peace By Peaceful Means. Thousand Oaks, CA: Sage Publications, 1996.

Johan Galtung, Conflict Transformation By Peaceful Means: the TRANSCEND Approach. Geneva: United Nations, 2000.

Johan Galtung, Searching for Peace: The Road to TRANSCEND, (With Kai-Frithj of Brand-Jacobsen). London: Pluto Press, 2002.

Johan Galtung, Transcend and Transform: An Introduction to Conflict Work. London: Pluto Press, 2004.

Louis Kriesberg, Constructive Conflicts: from escalation to resolution. Lanham, MD: Rowman and Littlefield Publishers, 1998.

Michelle LeBaron, Bridging Troubled Waters: Conflict Resolution from the Heart. San Francisco: Jossey-Bass, 2002.

John Paul Lederach, Preparing for Peace: Conflict Transformation Across Cultures. Syracuse, NY: Syracuse University Press, 1995.

John Paul Lederach, Building Peace: Sustainable Reconciliation in Divided Societies. Washington, D.C.: United States Institute of Peace Press, 1997.

Hugh Miall, Oliver Ramsbotham and Tom Woodhouse, Contemporary Conflict Resolution. Cambridge: Polity Press & Oxford: Blackwell Publishers Ltd., 2000.

Christopher Mitchell and Michael Banks, Handbook of Conflict Resolution: The Analytical Problem-Solving Approach. London: Printer, 1996.

Arne Naess, Gandhi and Group Conflict. Oslo: Universitetsforlaget, 1974.

Richard Price and Cynthia Dunnigan, Toward an Understanding of Aboriginal Peacemaking. Victoria, Canada: UVic Institute for Dispute Resolution, 1995.

Anatol Rapoport, The Origins of Violence: Approaches to the Study of Conflict. New York: Paragon House, 1989.

Marshall B. Rosenberg, Nonviolent Communication: A Language

of Compassion. Del Mar, CA: Puddle Dancer Press, 1999.

Marc Howard Ross, The Management of Conflict: Interpretations and Interests in Comparative Perspective. New Haven: Yale University Press, 1993.

Ranabir Samaddar, ed., Peace Studies: An Introduction to the Concept, Scope and Themes. New Delhi: Sage Publications, 2004.

Raymond Saner, The Expert Negotiator. Haag: Kluwer Law International, 1997.

Ken Sande, The Peacemaker: A Biblical Guide to Resolving Personal Conflict. Grand Rapids, MI: Baker Book House, 2004.

Dennis J.D. Sandole and Hugo van der Merwe, Conflict Resolution Theory and Practice: Integration and Application. Manchester: Manchester University Press, 1993.

W.S. Thompson and K. M. Jensen, eds., Approaches to Peace: An Intellectual Map. Washington DC: United States Institute of Peace, 1992.

Mark S. Umbreit, The Impact of Restorative Justice and Mediation. Monsey, NY: Criminal Justice Press, 1994.

William Ury, Getting Past No: Negotiating in Difficult Situations. New York: Bantam Books, 1993.


William Ury, Must We Fight? From the Battlefield to the Schoolyard - A New Perspective on Violent Conflict and Its Prevention. San Francisco: Jossey-Bass, 2001.

Raimo Väyrynen, New Directions in Conflict Theory: Conflict Resolution and Conflict Transformation. Newbury Park, CA: Sage Publications, 1991.

Peter Wallensteen, Understanding Conflict Resolution: War, Peace and the Global System. London: Sage Publications, 2001.

Paul Wehr, Heidi Burgess, Guy Burgess, eds., Justice without Violence. Boulder and London: Lynne Rienner, 1994.

பேராசிரியர் யொஹான் கால்டுங்
**(Johan Galtung)**



1954-ம் ஆண்டு சர்வதேச சஞ்பதான ஆய்வு ஞைந்யத்தைத் துவக்கினார். எண்ணற்ற புத்தகங்களும் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். சரியான வாழ்க்கை முறை பரிசு (Right Livelihood Award), நார்வே நாட்டு ஞ்னிதநேயப் பரிசு (Norwegian Humanist Prize) உட்பட பல பரிசுகளும் பட்டங்களும் பெற்றவர். டிரான்சென்ட் எனும் சஞ்பதான வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குனராக இயங்குகிறார்.

முனைவர் சுப.உதயகுஞ்பரன்
**(S.P.Udayakumaran)**



நாகர்கோவிலில் உள்ள தெற்காசிய கல்வி ஞ்ற்றும் ஆய்வுக்கான

சமூக ஊைநந்யத்தின் (Soth Asian Community Centre for Education and Research - SACCER) நிர்வாகி. ஆவ்திரிய நாட்டில் உள்ள ஐரோப்பிய சஞ்பதான பல்கலைக்கழகம், ருமீஞ்னியாவில் உள்ள டிரான்செண்ட் சஞ்பதான பல்கலைக் கழகம், தில்லியில் உள்ள லேடி ஸ்ரீராம் கல்லூரி, அமிஞ்ரிக்க நாட்டு பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு கல்வி நிறுவனங்களில் தகராறு, சஞ்பதானம், அகிம்சை, ஞ்னித உரிஊைநங்கள், எளிணக்கம், எதிர்காலவியல் போன்ற விஷயங்களில் வகுப்புகள் கற்பித்து வருகிறார்.

இவர் எழுதியிருக்கும் புத்தகங்களுள் சில: *Handcuffed to Histroy: Narratives, Pathologies and Violence in South Asia* (Westport, CT: Praeger Publishers, 2001); *Presenting the Past: Anxious History and Ancient Future in Hindutva India* (Westport, CT: Praeger Publishers, 2005); Co-author with Johan Galtung, *More than Curriculum: Education for Peace and Development* (2008); *Anu Aattam* (2011); *Puyalukkupinnae Poonthendral* (2012).

விகடன்
பிரசுரம்

- காந்தி, ஆங்கிலேய மேற்கத்திய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சுயாட்சிக்காக அல்லலுற்றார். ஆங்கிலேய காலனி ஆதிக்கத்திற்கும், சுயாட்சிக்கும் இடையேயான முரண்பாடுகளை பஞ்சாயத்து ராஜ்ஜியம் மற்றும் ராமராஜ்யம் எனும் கோட்பாடுகள் மூலம் மாற்றியமைத்தார். இப்படியாக சிறு, குறு, பெரும், மாபெரும் தகராறுகள் அனைத்தையுமே திறம்படக் கையாண்டவர் காந்தி.
- மண்டேலா மற்றும் டிகிளார்க் ஆகியோர் வன்முறையினை உருவாக்கிய தகராறுகள் மீது கவனம் செலுத்தினர். உண்மை மற்றும் மீளிணக்கத்தின் மூலம் குற்றம் புரிந்தவர் பாதிக்கப்பட்டவர் உறவை சுத்தம் செய்துதான் எதிர்காலத்தை உன்னதமானதாக ஆக்க முடியும். மேற்கத்திய நீதித்துறைக்கு அருமையானதோர் மாற்றத்தை அவர்கள் கண்டுபிடித்தார்கள்.
- சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freud) எனும் மனோதத்துவ நிபுணர் தகராறுகள் நமக்குள்ளிருந்து எழுவதாகச் சொல்கிறார். கடவுளுக்கும், சாத்தானுக்கும் நிகழ்கின்ற போட்டியாக அன்றி, நமது உளத் தேவைகளுக்கும், வெளியிலிருந்து திணிக்கப்படும் கொள்கைகள், கோட்பாடுகளுக்குமிடையே நடக்கும் ஒரு போராட்டமாகவே கருதினார். நமது ஆழ்மனதில் பதிந்திருக்கும் இந்தப் போராட்டத்தின் வரலாற்றுச் சுவடுகளை அழிக்கும் போதுதான், நமது உள்மனத் தகராறுகளை திறமையாகக் கையாள முடியும்.
- காரல் மார்க்ஸ் (Karl Marx) இரு வகுப்பாரிடையே உள்ள உறவுகளில் தகராறுகள் தொக்கி நிற்பதைக் கண்டார். ஹேகல் (Hegel) குறிப்பிட்டது போன்று நிலக்கிழாரும் அவரது அடிமைகளும் ஒருவரோடொருவர் எப்படி கலந்துறவாடுவது என்பதல்ல கேள்வி. மாறாக இந்த உறவினை எப்படி மாற்றியமைப்பது என்பதுதான் முக்கியம். நமது சமூகத்தின் சமூகக்கட்டுமானங்களை மொத்தமாக சுத்தப்படுத்துவதன் மூலமே, நமது சமூக தகராறுகளைத் திறம்படக் கையாள முடியும்.

ISBN 978-81-8476-528-1
9788184765281
Printed Books
THAGARARU
₹ 85